From 9 7$

Kanthasamy Visuvalincam
106 Vellore Ave
Woodbridge, ON L4H 2W7

# புலம் பெயர்ந்த தமிழன்



JPL
C10147

அப்பாத்துரை

அப்பா
7,உ

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி

# புலம் பெயர்ந்த தமிழன்

From

Kanthasamy Visuvalincam
106 Vellore Ave
Woodbridge, ON L4H 2W7

KOHA JPL



10147 C.C
PUBLIC LIBRARY
SPECIAL COLLECTION

PUBLIC LIBRARY
JAFFNA

225280

சாமி அப்பாத்துரை

கனடா ஈழநாடு வெளியீடு

225,280 CC

*முதற் பதிப்பு ஆனித் திங்கள்  1995*

*உரிமை ஆசிரியருக்கு*

305.906914

*விலை $ 7*

*கனடா ஈழநாடு வெளியீடு:*

*ஆசிரியர் சாமி அப்பாத்துரை*
12 Horse Shoe Crescent
Scarborough, On
Canada
M1B 4S5

# காணிக்கை

என்னைப் பெற்ற தாய் அமரர் அழகம்மா
இரத்தினசாமிக்கும், நான் பிறந்த
பொன்னாடு தமிழீழத்திற்கும்
இந்நூலைச் சமர்ப்பிக்கிறேன்.

KOHA
JPL



பொதுசன நூலகம்
விசேட சேர்க்கைப் பகுதி

# ஆசியுரை
## அமரர்.தி.மாணிக்கவாசகர் BA., P.G.T. Dip
## முன்னாள் கல்விப் பணிப்பாளர்

என் மதிப்புக்குரிய சாமி அப்பாத்துரை சிறந்த பேச்சாளன் மட்டுமல்ல. பல துறைகளில் பாண்டித்யம் பெற்ற அறிவாளியும்கூட என்பது பலரும் அறிந்த உண்மை. அவரது பேச்சுக்கள் பல கேட்டுள்ளேன். ஆழமான கருத்தும் உறுதியான கொள்கைப் பற்றும் சிறியவர்களிலிருந்து முதியவர்கள் வரையும் கவரும் நாவன்மை கொண்டவர். அவரது எழுத்துக்கள் செயல் வன்மையும் அற்புதமானவையும். அவரது கட்டுரைகள் பலவற்றைப் படித்திருக்கிறேன். அவர் அரசியல், சமயம், பொருளாதாரம் எனப்பல துறைகளில் மிகவும் திறம்பட எழுதி வருகிறார். அவரது கருத்துக்களில் ஆழம் இருக்கிறது. தனக்கென உரிய பாணியில் பலரையும் நன்கு கவரக்கூடிய வகையில் எழுதுகிறார் என்பதை நான் நன்கு அறிந்திருக்கிறேன். அவர் எழுத்துக்கள் காற்றோடு ஒட்டிச் செல்கிறது.

அவர் தனது பாதிக் காலத்தை வெளிநாடுகளில் கழித்து வந்த போதிலும் தன் தாய் நாட்டிலும், தமிழ் மொழியிலும் பெரும் பற்றுக் கொண்டிருப்பது எங்களுக்கு ஒரு முன்மாதிரியாக இருக்கிறது. அவரது இன்றைய ஈழத்து நிலை பற்றிய ஆய்வுக் கட்டுரைகள் அவர் அண்மைக்காலம் வரை அங்கிருந்தவர் போல எண்ணத் தோன்றுகிறது. அது ஒரு எழுத்தாளனின் திறமை என்றே கூறலாம்.

அவரது "புலம் பெயர்ந்த தமிழன்" எனும் அரிய நூல் ஒவ்வொரு தமிழனாலும் நன்கு வாசிக்கப்படவேண்டிய தொன்று. அவர் இந்நூலின் முதற் பாகத்தில் உலகின் பல நாடுகளிலும் எவ்வாறு அகதிகள் கடினமான நிலையில் இருக்கிறார்கள் என்பதை அலசி ஆராய்ந்திருக்கிறார். இவரது ஆய்வு முறை எனது உள்ளத்தை மிகவும் கவர்ந்துள்ளது. இந்த விடயத்தில் அவரது கூர்மையான கருத்துக்கள் அழகாகத் தரப்பட்டிருக்கிறது. இரண்டாம் பாகம் புலம் பெயர்ந்த மக்கள் வாழ்வை நன்கு எடையிட்டு வழிகாட்டும் முறையில் அமைந்திருக்கிறது. எங்கள் வாழ்வில் மிகவும் அவசியம் தேவைப்படும் விடயங்களை மிகவும் அற்புதமான முறையில் எழுதியுள்ளார். அவர் ஆபிரிக்காவில் அதிபராக இருந்தாலோ என்னவோ பிள்ளைகளின் எதிர்காலம்பற்றி மிகவும் அக்கறை காட்டியிருக்கிறார்.

சாமி அப்பாத்துரையின் எழுத்து ஆற்றலை இந்நூல் மிகவும் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. அவர் சமூக சேவைகளில் ஈடுபடுவதினால் பொது மக்கள் நாடித்துடிப்பை நல்ல முறையில் சித்தரித்துக் காட்டியிருக்கிறது.

எங்கள் தமிழினம் வெளிநாடுகளிலும், நம் தாய் நாட்டிலும் வளர வேண்டும் என்பது எனது விருப்பமும் கூட. சாமி அப்பாத்துரையின் பலவகை அனுபவங்களைக் கொண்டு எழுதப்பட்ட இந்நூல் ஒவ்வொரு தமிழ் குடும்பத்தினாலும் வாங்கி வாசிக்கப்படவேண்டிய தொன்றாகும். அவர் மேலும் பல நூல்களை வெளியிட்டுத் தமிழ் மக்களுக்குத் தொடர்ந்தும் சேவை செய்ய முன்வர வேண்டும் என்பது எனது பேரவா. அவர் உள்ளத்தில் தோன்றியிருக்கும் "தமிழ் தெரியாத் தமிழினம்" ஒன்று தோன்றிவிடுமோ என்ற பயம், எதிர்காலத் தமிழினத்தினைப் பற்றிய அக்கறை என்பனவற்றை இந்நூல் வெளிப்படுத்திக் காட்டியிருக்கிறது. அவர் சுமார் இருபத்தைந்து வருடங்கள் வெளிநாடுகளில் வசித்து வந்தபோதும் ஆழமான தமிழில் பேசி எழுதி வருவதைப் பார்க்கும் போது தமிழ் தெரியாத தமிழினம் நிச்சயம் இங்கு தோன்றாது என்பது எனக்கு நன்கு தெரிகிறது.

சாமி அப்பாத்துரை மேலும் பல பணிகள் புரிந்து எமது இனத்துக்கு நல்ல சேவைகள் செய்ய எல்லாம் வல்ல இறைவன் துணை நிற்பார் என நம்புகிறேன்.

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்"

KOHA JPL

# அணிந்துரை

## பேராசிரியர் டாக்டர் கே.பி. அறவாணன்
## பாண்டிச்சேரிப் பல்கலைக் கழகம்

அன்பிற்குரிய திரு. சாமி அப்பாத்துரை, தற்போது கனடா வாழ் தமிழர் கல்வித்துறைப் பட்டதாரியான இவர், எதியோப்பியா, நைஜீரியா ஆகிய நாடுகளில் கல்வி நிறுவன ஆட்சிப் பணிகளிலும், ஆசிரியப் பணிகளிலும் தொண்டாற்றிவிட்டு இருபதாம் நூற்றாண்டுப் பழமரமாகவும், ஆலமரமாகவும் விளங்கும் கனடாவில் குடி பெயர்ந்தவர். கனடா தமிழீழச் சங்கநிறுவனம் ஒன்றில் ஒருங்கிணைப்பாளராக உழைப்பவர்.

சொந்த நாட்டில் சிறந்த பேச்சு வல்லவராகவும் எழுத்து வல்லவராகவும் விளங்கிய இவர், வந்த இடத்திலும் தமிழ் வாசகர்களிடையே கருத்து மழையைப் பேச்சிலும் எழுத்தாலும் கொடையளிப்பவர்.

"புலம் பெயர்ந்த தமிழன்" என்ற இவர் தம் நல்ல படைப்பு, பிறந்த மண்ணைவிட்டுப் பெயர்ந்த தமிழர் தம் வரலாற்று ஆளுமையும் வாழ்க்கைப் போராட்ட ஆளுமையும் பண்பட்ட முறையில் இந்நூல் எடுத்துரைக்கிறது.

தலைமுறை தலைமுறையாகப் பேணிவந்த தமிழ் மொழி, தமிழ்ப் பண்பாடு, நாகரிகம் முதலானவை வந்த மண்ணில் வாழும் மண்ணில் வினாவிற்குள்ளாகியுள்ளன. அயலார் மட்டுமன்றி இவற்றிற்கு உரியார் தமக்குரிய வேர் மூலகங்களை வெட்டிக் கொண்டால் என்ன என்று நினைக்கிறார்கள். சொல்கிறார்கள், செய்கிறார்கள். இதுவே இப்படைப்பு எடுத்துக் கொண்ட கரு. :இவர்கள் (தமிழர்கள்) வழிவந்த சந்ததியினர் இன்று நன்கு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்......

பண்டைய கிரேக்கர் போல் வீரமும் காமமும் தலையெடுக்கத் தமக்கொரு வாழ்வை அமைத்துக் கொள்கிறார்கள்"

இவை நூலாசிரியர் வாசகம். புலம் பெயர்ந்த தமிழர் பாதை மாறிப் போய் விடுவரோ என்ற கவலை , தாய்க்குரியது போல ஆசிரியரால் எடுத்துக் காட்டப்படுகிறது. காசு, கார், தொலைபேசி, வீடு வசதி வாய்ப்புகள் என்பன நாடு பெயர்ந்த நற்றமிழருக்கு வாய்ந்ததும் தமிழர் மரபைக் காலப் போக்கில் இழந்து விடுவரோ என்ற மெய்யான அச்சம் படைப்பு முழுவதும் பரவியிருக்கிறது.

உலகளாவிய அகதி பற்றிய செய்திகள் பல நூலில் இடம் பெற்றுள்ளன. தமிழ் அகதிகளின் நிலை பற்றியும் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. வெளிநாடு வாழ் தமிழ் அகதிகள் குளிரிலும் பனியிலும் உழைத்துப் பெற்றோருக்காகவும் மாற்றாருக்காகவும் இலங்கைக்கு அனுப்பும் அயல் நாட்டுக் காசு எம் தமிழரை அழிக்க அந்நாட்டு (சிறிலங்கா) அரசுக்கும் பயன்படுகிறது என்ற மறுபக்கச் செய்தியையும் நூலாசிரியர் தெளிவாக எடுத்தளிக்கிறார்.

இப்படி இன்னும் பலப்பல நூல்களை வாசிப்போர், அயல் நாடு வாழ் தமிழ் அகதிகளின் சுக வாழ்வையும், சுமை வாழ்வையும் முற்றாகப் புரிந்து கொள்ளலாம். சிக்கல் தெரியும் போது அதற்குரிய தீர்வும் தெரிய வரும்.

நண்பர் திரு.சாமி அப்பாத்துரையை மிகவும் பாராட்டுகிறேன்.அவர் நிறைய எழுதட்டும்! நம் நெஞ்சம் நிறையட்டும்! நிமிரட்டும்!

## அணிந்துரை
## கலைமாமணி பெருங்கவிக்கோ
## டாக்டர் வா.மு. சேதுராமன் (எம்.ஏ, பி.எச்.டி.)

*இக்காலக் கட்டத்தில் இப்படிஓர் நூல்வேண்டும்.*
*தக்கறிவுச் சான்றோர் சளைக்காமல், எக்கணமும்*
*தொண்டுக் குழைக்கும் தூயதமிழ் வாழ்சாமி*
*தண்டமிழ் தந்த தவம்!*

*ஒவ்வொரு நாட்டிலும் உள்ள புலம்பெயர்ந்த*
*செவ்விய நற்றமிழர் செய்திகளை - எவ் எவரும்*
*ஏற்கும்படியாக எண்ணிஎண்ணி நன்றுரைக்கப்*
*போற்ற எழுதியுளார் போற்று!*

*ஈழத்து தமிழர் இடரேற்கும் சங்கடத்தை*
*ஆழ நினைத்துருகி அச்சச்சோ - வாழவகை*
*வேண்டு சாமி அப்பா வினைதுரை ஆதங்கம்*
*காண்டு மனம் நோகும்' கனம்*

*இனவெறியைச் சாடுகிறார்! ஏகஎகத் தாளம்*
*நனவாக வாழ்ந்திட நம்மோர் - கனவான*
*வாழ்வெடுத்துக் காட்டிவகை மோசம் வந்ததினால்*
*தாழ்வினைச் சுட்டுகிறார் தந்து.*

*கொடி கட்டி வாழ்ந்தபுகழ்க்கோபுர வாழ்க்கை*
*மடிதட்டிப் பறித்தாரே மண்ணில் - அடிதட்டிப்*
*போராடும் வாழ்வையே போக்கடிக்க மாட்டோமோ*
*பாராடும் தீராப் பழி*
*கனடா பனி நாட்டில் கண்ணிய மாக*
*மனத்தார் புலம் பெயாந்தோர் மாசில் - தனம்தேடி*
*மற்றைய நாட்டை விட மானமாய் வாழ்கின்ற*
*நற்றவம் போற்றுகிறார் நன்று.*

*என்னதான் இன்பம் இருந்தாலும் எந்நாட்டுக்*
*கன்னல் அழித்த வெறிக் காடையர்கள் - வென்றுவாகை*
*தான் சூடவேண்டும் அத்தாக்கம் புலிகளினால்*
*வான்சூட வெல்லும் வளம்!*

*ஐக்கிய நாடுகள் ஆக்கிய சட்டங்கள்*
*வைக்கும் நடைமுறை வம்புகள் - தைக்கமனம்*

*வீற்றிருக்க வைத்த தமிழ் வேந்து!*

*புலம்பெயர்ந்தார் கல்வி புறசுகம் காணும்
நிலம்பெயர்ந்தார் ஏற்கும் நிலைகள் - தலமெல்லாம்
ஓடிஓடி சென்றிடரும் உண்மை அகதிகளை
நாடிநாடி நன்றுதந்தார் நம்பு*

*கூர்மை அறிவும் குறிக்கோள் அடக்கமும்
சீர்மை நெறியும் சிறப்புமுடை - வேர்போன்ற
சாமிஅப்பாத்துரையார் தண்டமிழ் நூலிதனால்
பூமிபுகழ் பூத்துவாழியென!*

## பதிப்புரை
## ஐ.என்.ரஞ்சன்

### கனடா ஈழநாடு நிறுவனத்தில் இருந்து சில வார்த்தைகள்

சாமி அண்ணாவின் "புலம் பெயர்ந்த தமிழன்" எனும் அரிய நூலைக் கண்டு பெருமைப்படுபவர்களில் நானும் ஒருவன். அவருக்கு நேரம் இருக்குமேயானால் பல புத்தகங்களை எழுதியிருப்பார். அவருக்கு என்று ஒரு வாசகர் கூட்டம் இருக்கிறது. அவர் கனடா ஈழநாடு என்னும் பத்திரிகையில் எழுதி வரும்போது அவரது கட்டுரையை வாசித்து, தொலைபேசியிலும், கடிதத்திலும் பாராட்டி னோர் பலர். அவரது பல கட்டுரைகட்கு கனடாவில் மட்டுமல்ல ஐரோப்பாவிலிருந்தும் பல பாராட்டுக்கள் வந்திருக்கின்றன.

சாமி அண்ணாவின் பாணி தனித்துவம் வாய்ந்தது. அவர் நடையை ரசித்துப் பலர் பாராட்டியிருக்கிறார்கள். தமிழகத்தில் அவர் கட்டுரை களை வாசித்த பிரபல எழுத்தாளர்களில் ஒருவர் ,

"தமிழை நல்ல முறையில் நீட்டி வளைத்து எடுத்து, ஆழமாகக் கருத்துக்களைச் சுவையான முறையில் தரும் அனுபவம் மிக்க எழுத்தாளன்" எனக் குறிப்பிட்டார்.

கனடா ஈழநாடு நிறுவனம் சாமி அண்ணாவின் நூல்களைத் தொடர்ந்தும் வெளியிடுவதில் மிகவும் பெருமைப்படுகிறது. அவரது கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடவும் நாம் முன்வந்துள்ளோம். அவர் தன் சொந்தப் பெயரிலும் பல புனை பெயர்களிலும் எழுதிய கட்டுரைகள் எங்களிடம் இருக்கின்றன. இவற்றைவிட ஆங்கிலத்தில் எழுதிய கட்டுரைகளும் மொழி பெயர்த்து உள்ளன. சாமி அண்ணாவின் இந்நூல் எங்கள் தமிழினத்தின் விடுதலைக்கு நல்லதொரு பங்களிக்கிறது என்பதைக் காணுவதில் நாம் பூரிப்படைகிறோம்.

# என்னுரை

"தரணியில் தமிழன் என்றொரு இனம் உண்டு. அவனுக்குச் சிறப்பான வீரமும் கல்வித் திறனும் உண்டு" என்ற கோட்பாட்டில் நான் அசையாத நம்பிக்கை கொண்டவன். பாரெங்கிலும் பரந்து பட்ட தமிழன் தனக்கென, ஒரு நாடு இல்லையே என இன்று கலங்குகிறான். வரலாறு படைத்த தமிழன் மேலும் வரலாறு படைக்காமலா விடப்போகிறான். அதற்கு நாம் இனிமேலும் பொறுத்திருந்து பார்ப்பதை விட எழுந்து நின்று செயற்படுவோம்.

தமிழை வளர்க்கத் தமிழகமும் தமிழீழமும்தான் பண்பட்ட தரைகள் அல்ல. எங்கெங்கு தமிழன் வாழ்கிறானோ அங்கங்கெல்லாம் தேமதுரத் தமிழோசை பரவவேண்டும். தமிழன் தொகையில் எத்தனை கோடி என எண்ணிக் கணக்கிட்டுப் பெருமைப்படுவதை விடஎவ்வளவு தூரம் பழமைக்குப் பழமையாய் புதுமைக்குப் புதுமையாய் சீரும் சிறப்புடனும் வளர்கிறான் என்பதே முக்கியம்.

இத்தகைய சிறப்பு மிக்க தமிழினத்தில் பிறந்ததையிட்டு நான் மிகவும் பெருமைப்படுகிறேன். தழிழன் என்று பெருமைப்படும் அளவிற்குத் தமிழை, தமிழ்ப் பண்பாட்டை வளர்த்துப் பேணிக்காத்த, காக்கின்ற மூதறிஞர்கள், அவர்கட்கு ஆதரவு நல்கி வரும் தமிழ்ப் பெரும் புதல்வர்கள் அனைவரும் போற்றப்பட வேண்டியவர்கள்.

இன்று தமிழர்களிற் பலர் தமது விருப்பத்திற்கு மாறாகச் சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாகப் புலம் பெயர்ந்து பல நாடுகளில் குடியமர்ந்து வாழ்கிறார்கள்.

அவர்கள் பற்றி இந்நூலை எழுதத் தூண்டிய தமிழ் அன்பர்கள் திரு. இ. நிமலரஞ்சன், திரு. வே. தங்கவேலு, திரு. சாம் துரைசுவாமி, திரு. சு.இராசரத்தினம். திரு. எஸ்.எஸ்.அச்சுதன், திரு. நடா ஆர். ராஜ்குமார். திரு. ஜோசப்ரத்தினம்(ஜோர்ஜ்), திரு.எம்.பி. கோனேஸ், திருமதி. வசந்தா நடராஜன் அவர்களுக்கும் எனது உள்ளம் கனிந்த நன்றிகள்.

இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிய அமரர். தி. மாணிக்கவாசகருக்கு எனது இதய பூர்வமான நன்றிகள்.

இந்நூலை அச்சு வடிவமைத்துத் தந்த திருமதி. ஆர். இந்திரலிங்கம் அவர்கட்கும் அச்சிட்டு உதவிய குவாலிட்டி பிறின்ரர்ஸ் ஸ்தாபனத்திற்கும் அன்பு கலந்த நன்றிகள்.

முக்கிய புள்ளி விபரங்கள் தந்துதவிய கனடிய குடிவரவுத் திணைக்களத்திற்கும் குறிப்பாக, திரு. ரொபேட் மில்ரன் பெஸ்ட் அவர்கட்கும், மற்றும் பல விபரங்களைத் தந்துதவிய சர்வதேச மனித உரிமை நிறுவனங்கள், ஐக்கிய நாடுகள் சபை நிறுவனங்கள் ஆகியனவற்றிற்கும் அன்பு கலந்த நன்றிகள்.

இறுதியாக, ஆனால் மிக முக்கியமாக அறிஞர் கலாநிதி அறவாணர் அவர்கள் எனது பேச்சுக்களைக் கேட்டு, வெகுவாகப் பாராட்டிப் பலருக்கு கூறியதோடல்லாமல் இந்நூலை வரிக்குவரி வாசித்து அணிந்துரை தந்தமைக்கு எனது அன்பும் பணிவும் கலந்த நன்றிகள் உரித்தாகுக. பெருங்கவிக்கோ வ.மு. சேதுராமன் அவர்கள் இந்நூலுக்கு வாழ்த்துக் கவி தந்துள்ளார். அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக.

**சாமி அப்பாத்துரை**

# பொருளடக்கம்

## பாகம் 1

| | |
|---|---|
| அகிலமெங்கிலும் அருந்தமிழ் அகதிகள் | 1 |
| உலகரங்கில் அகதிகள் | 10 |
| கனடாவும் அகதிகளும் | 21 |
| குடிவரவுச்சட்ட அமுலாக்கம் பற்றிய பேட்டி | 27 |
| 21ம் நூற்றாண்டில் கனடியக் குடிவரவு | 38 |
| இனவெறியைச் சாடுவோம் | 47 |


## பாகம் 2

| | |
|---|---|
| புகுந்தகத்தில் புதுவாழ்வு | 53 |
| அகத்துள்ளே அடைபட்டிருக்கும் அருந்தமிழ் | 63 |
| தமிழ் மொழியை எதற்காகக் கற்க வேண்டும் | 68 |
| எவ்வாறு தமிழ்க் கல்வி புகட்டலாம் | 74 |
| தமிழ்மொழிக் கல்வி | 82 |
| தேங்கிக் கிடக்க வேண்டிய தேசப்பற்று | 95 |
| உக்ரேனியரின் உதாரணம் | 97 |
| தமிழ்ப்பிரதேசங்களூல் குடியேற்றத் திட்டங்கள் | 100 |
| உலகிற்கு உணர்த்தப்படும் உண்மைகள் | 107 |
| போராட்டம் அவசியம்தானா? | 111 |
| கல்வித்துறையில் பாரபட்சம் | 119 |
| பொறுத்ததுபோதும் பொங்கியெழு தமிழா | 123 |

# அகிலமெங்கிலும் அருந்தமிழ் அகதிகள்

நம்மவர்கள் நாடு இருந்தும் நாடற்றவர்களாய் நானிலமெங்கும் அலைகிறார்கள். திரைகடல் ஓடித் திரவியம் தேடவல்ல தமிழர், திரை கடலிலும் உடலையும் உயிரையும் இணைத்து வைக்கத் துடியாய்த் துடிக்கிறார்கள். விண்ணில் பட்டம் விட்ட பையன்கள் இன்று விமானத்தில் திக்குத் திசை தெரியாது சிதறிச் செல்கிறார்கள். "காகம் பறக்காத ஊரில்லை" எனப் பாட்டி சொல்லக் கேட்ட காலம் போய் தமிழ் அகதிகள் அலையாத இடம் இல்லையெனக் கேட்கும் காலம் வந்துவிட்டது. இன்று, நம்மவர்களிற் பலர் வானம் போட்டதே பூமி தாங்கியதே! என்று, ஊர் பெயர் தெரியாத மண்ணில் உடலை, உள்ளத்தை உருக்கி வாழ்கிறார்கள். சில கட்டங்களில் அவர்கள் மனதில் "கூடு விட்டுக் கூடு பாய்கிறது உயிர்" என்ற வேதாந்தம் "நாடு விட்டு நாடு செல்கிறது நடைப் பிணங்கள்" என்று மாற்றி எழுதப்படுகிறது.

அன்னை மண்ணில் அல்லோல கல்லோலப்பட்டு ஆறாத்துயருடன் அகிலமெங்கிலும், சுமார் பத்துலட்சம் தமிழீழ மக்கள் அலைந்து திரிகிறார் கள். வையகத்து வாழ் வாங்கு வாழ்ந்த நம் இனம், இன்று தரணியெங்கி லும் தற்பாதுகாப்பு நாடி, தவியாய்த் தவிக்கிறது. அண்ணன் அமெரிக்கா வில் அப்படியும் இப்படியும் என அலைகிறான். "தங்கச்சி" எனப் பெருமை-யோடு அழைக்கப்பட்ட இளையவள் இங்கிலாந்தில் இருக்கிறாள். சின்ன வன் சுவிஸில் சுழல்கிறான். பெரியக்கா பிரான்சில் முடங்கிக் கிடக்கிறாள். நடுவன் நாடு காக்க இயக்கத்தில் சேர்ந்து விட்டான். குடுகுடு பாட்டனும் பாட்டியும் அச்சுவேலி ஆவரங்கால் எனப் பாத யாத்திரை செல்கிறார்கள்.

இவ்வேளை, ஸ்பொன்சரில் வந்த அம்மா ரெயில் வண்டியில் பிரயா ணம் செய்யும்போது, தன் குடும்பம் இணைந்து வாழ்ந்ததைப் படம்போல் மனதில் பார்க்கிறாள். பத்து இறாத்தல் மண்வெட்டியால் அறுகம் புல்லைக் கொத்தியெடுத்துக் காணியில் களைக்க வேலை செய்துவிட்டு வந்த அப்பா என்ற ஆண் சிங்கம் நடுவேயிருக்க முற்றத்தில் முழுக்குடும்பமும் பலாவி லையை மடக்கி ஈர்க்கால் குத்தி வளைத்தெடுத்த கிண்ணத்தில் கூழைச் சுடச்சுடக் குடித்து மகிழ்ந்த காட்சி, சொந்த மண்ணின் சுகம், சுடும் கூழ், பலாமரத்துக் குயில்களின் இசைவிருந்து, அக்கம் பக்கத்துப் பூவரசு மரங்க ளினைத் தடவி வரும் தென்றல், எப்போதுதான் திரும்பக்கிடைக்குமோ என அவள் உள்ளம் ஏங்குகிறது.

சுவிஸில் சுழலும் சின்னவன் குளிர் காலத்தில் பிரான்சுக்கும், கோடை காலத்தில் சுவிஸிற்குமாகச் செல்லும்போது, அவன் புவியியல் ஆசிரியர் மனக் கண்முன் வந்து கம்பீரமாய் நிற்கிறார். அன்று, புவியியற் பாடத்தில் பிரான்சை உலகப் படத்தில் காட்டும்படி கேட்டபோது தென்னமெரிக்கா வைக் காட்டியவன் இன்று, அந்த நாடுகளுக்கு அடுத்த ஊருக்குச் செல் வது போலச் செல்லும் நிலையை எண்ணி ஒருபுறம் வெட்கம், மறுபுறம் பூரிப்பும் அடைகிறான்.

நம்மவர்களிற் பலர் வீடு வாசல், சொந்தம் பந்தம், இனம் சனம், எனப் பந்தபாசக் கயிற்றால் இணைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் குலம்

கோத்திரம் பார்த்துச் செம்பில் தண்ணீர் குடிக்கக்கூட ஏற்ற இறக்கம் பார்த்தனர். நம்மவர்களிற் சிலர் புதுக்குடியிருப்பிற்குப் புலம் பெயர்ந்தவர்களைப் பார்த்து எள்ளி நகையாடியவர்கள், ஊருக்கு ஊர் ஏற்றத் தாழ்வுகள் கற்பித்து உறவு கொண்டாட மறுத்தவர்கள், கொக்குவிலில் இருந்து கல்முனை வரை பிரயாணம் செய்ய நாள், நட்சத்திரம், சகுனம் பார்த்தவர்கள் இன்று, "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என வாழ வேண்டிய நிலையை வெறுத்து ஒதுக்க முடியாமல் ஏற்று வாழ்கிறார்கள்.

மற்றுமொரு பகுதியினர் பெற்ற தாயையும் பிறந்த பொன்னாட்டையும் நன்கு நேசிப்பவர்கள் மட்டமல்ல, கூடியவரை விட்டு விலக விரும்பாதவர்கள். அவர்கள் தம் நாட்டை மட்டுமல்ல, தன் கிராமத்தை அதனுள்ளும் குறிப்பாகத் தம் குறிச்சியை நேசித்து வந்தவர்கள், சொந்த மண்ணைப் பெருமையாகப் பேசும்போது தம் "குறிச்சி" கிணற்று நீருக்குத் தனிச்சுவை உண்டெனச் சுவை கற்பித்தவர்கள், தம் மண்ணில் உற்றார், உறவினர் புடைசூழ வாழ்ந்து பழகியவர்கள், இலங்கைத் தீவின் பல பகுதிகளுக்குச் சென்று உழைத்தாலும், உள்ளத்தால் தம் "குறிச்சி"யை நேசித்தவர்கள், தமது பாரம்பரியத்தில் உறுதியும் அசையாத நம்பிக்கையும் கொண்டவர்கள், இன்று இக்கட்டான நிலையில் வாழ்கிறார்கள். இவர்களைப் பொறுத்தவரை யூதர்களைப்போல் என்றோ ஒரு நாள் எமது மண்ணில் மடிவோம் என உள்ளத்துறுதி இருக்கிறது.

நிந்திக்கப்பட்ட கூட்டம் ஒன்று நம்முள் இருக்கின்றது. இவர்கள் பெரும் உள்ளத் தாக்குதலுக்கு உள்ளானவர்கள். இவர்கள் தமது உழைப்பிலும், திறனிலும் அசையாத நம்பிக்கை கொண்டவர்கள். தாமும் பிறரைப்போல் கசடறக் கற்று, தொழில் புரிந்து வாழத் துடியாய்த் துடித்தவர்கள், அரசியல் மேல் ஆர்வம் அற்றிருந்தவர்கள், சிறிலங்கா அரசின் கெடுபிடியால் தாக்கப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டவர்கள். இவர்கள் உளரீதியில் உறுத்தப்பட்டு மன எழுச்சிச் சிக்கலுக்குள்ளாக்கப்பட்டார்கள். இவர்கள் தாம் செய்யாத குற்றங்களுக்குத் தண்டனை வழங்கப்பெற்று மானபங்கப்படுத்தப்பட்டார்கள். இவர்கள் வேதனைப்படுத்தப்பட்டு கொடுமையின் உச்சிக்கு எடுத்துச் செல்லப்பட்டதுடன் துன்பக்கடலில் தள்ளப்பட்டார்கள். மனமுடைந்த இவர்கள் உள்ளம் கருங்கல்போல் உறுதியானது. முள்ளை முள்ளால்தான் எடுக்க வேண்டும் என்ற நிலைக்குத் தள்ளப்பட்ட இவர்களது மனத் திண்மையானது அநீதி, அக்கிரமம், அதர்மம் ஆகியவற்றை எதிர்த்துப் பேச வேண்டும் என்னும் எரிமலைக் குழம்பை உள்ளத்தே ஓடவிட்டுக் கொண்டிருந்தது. முள்ளை முள்ளால்தான் எடுக்க முடியும் என உறுதி கொண்டிருக்கும் அவர்கள், தாம் பட்ட துன்பம் தம் இனம் படக்கூடாது எனத் தவிக்கிறார்கள். அவர்கள் உள்ளத்துணர்ச்சிகளைச் சுக போகங்கள் அணுக முடியாதளவிற்கு இரும்புத் திரையிட்டு உறுதியோடு உழைக்கிறார்கள்.

மற்றும் சிலர் புதிய வாழ்வில் மோகம் கொண்டு பெருமளவு காலத்தை, தம்மை மினுக்கி மெருகூட்டி நாலுபேர் மத்தியில் நாகரீகமாக வாழ முனைகிறார்கள். இவர்கள் சிந்தனை செயற்பாடுகளில் சின்னச்சின்ன ஆசைகள் நிறைந்திருக்கின்றன. இப்புதுமை விரும்பிகள் நான் முந்தி நீ முந்தி என மேற்குலக வாழ்வு முறையில் தம்மைத் தயார்ப்படுத்துவதில் பெருமிதம் கொள்கிறார்கள். மேலை நாடுகளில் களிப்பூட்டும் வாய்ப்புக்

கள், கொள்ளை கொள்ளையாகக் கொட்டப்பட்டிருக்கின்றன. அதனைக் கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என அனுபவிப்பதில் இவர்கள் காணும் திருப்தி அளப்பரியது. இவர்களிற் சிலர் தம்மை, தமிழர் என அழைப்பதில் பெருமைப்படுகிறார்களா? என்பது கேள்விக்குறியாகிவிடுகிறது. இந்நிலையில், இவர்கள் தமிழனாகப் பிறந்ததையிட்டு மனம் தளராமல் இருப்பார்களா என்று எண்ணக்கூடத் தோன்றுகிறது. ஒரு சில சந்தர்ப்பங்களில் தாய் நாட்டு நிலைகள் பற்றி எடுத்துரைக்கப்படும்போது "உதுக்கெல்லாம் எங்களுக்கு எங்கே நேரம். பெடியளின்ரை கதையை விட்டுவிட்டு என்ன சாமான் சேலிலை போகுது எண்டு சொல்" என்கிறார்கள். இவர்களைப் பொறுத்தவரை பையன்கள் சண்டை பிடிக்கிறார்கள். நாம் நல்லதொரு சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அகதிகளாக வெளிநாடுகளுக்கு வந்துவிட்டோம். அத்துடன் எமக்கும் எம் தாயகத்திற்கும் உள்ள தொடர்பு முடிந்த கதையாகிவிட்டது. எமது சொந்த முன்னேற்றத்தைப்பற்றி அக்கறை கொண்டு செயற்படுவோம் என்று எண்ணத் தலைப்படுகிறார்கள்.

தமிழரின் இறுக்கமான பண்பாட்டுக் குட்டையில் ஊறிய, மரபு முறையில் வாழ்ந்து பழக்கப்பட்டவர்களும் கணிசமான அளவில் இங்கு இருக்கிறார்கள். இவர்களைப் பொறுத்தவரை நடப்பது அத்தனையும் கலியுகக் கோளாறு போலத் தெரிகிறது. வாய்மையே நன்மை பயக்கும் என வாழ்ந்தவர்கள் எதை எதையோ எல்லாம் சொல்லி வாழ வேண்டிய நிலை ஏற்பட்டதினை எண்ணி மனச் சங்கடப்படுகிறார்கள். தாயகத்தில், பக்கத்து வீட்டில் பத்துக்காசு கைநீட்டி வாங்கிய மகளை நையப் புடைத்தவர்கள், லட்சக் கணக்கில் கடன் வாங்கி வருகை தரவேண்டி நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். பக்கத்து வீட்டு பரிமளத்திடம் ஒரு கொத்து அரிசி கடன் கேட்ட மனைவியை அச்சுறுத்திய கணவன் இன்று இங்கு அயலூர்க்காரனிடம் தன் மானத்தை அடகு வைத்துத் தங்குகிறார்கள். நொந்து பட்ட நாகம்மா தபாற்கந்தோரில் படிப்பணம் வாங்கச் செல்லும் போதெல்லாம் "அவளைப் பார் எடுக்கிறது பிச்சைப் பணம் உடுக்கிறது பட்டுப் பிடவை" என எள்ளி நகையாடியவர்கள் இங்கு இன்று சமூகநலநிதி உதவி பெற தலைகுனியவில்லை. வாய்மையில் ஊறித் திழைத்தாலும் வாழ்க்கைப் போராட்டத்தில் தகுதியானவரே வாழமுடியும் (Fittest of the survival) என்ற கோட்பாடு ஒன்றையே அவர்கள் உணர்கிறார்கள். அவர்கள் உள்ளத்தில் ஏற்படும் மனச் சிக்கல்கள் அளவற்றவை. மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது வறட்டுக் கௌரவத்தை எண்ணிக் கவலைப்படுகிறார்கள் என்று எண்ணத் தோன்றலாம். ஆனால், அவர்கள் வாழ்ந்த விதம், வாழ்ந்தமாதிரி, அவர்கள் சிந்தனையை, செயற்பாட்டை இவ்வாறு வழிநடத்திவிட்டதென்றே கூறலாம்.

சமுதாயத்தின் உயர்ந்த நிலையில் வாழ்ந்தவர்கள் பலர். அவர்கள் இன்று அப்படியும் இப்படியும் வாழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். கற்று, பட்டம் பதவிகள் பெற்று, தொழில் துறைகளில் உயர்ந்த ஸ்தானங்களை வகித்தவர்கள் இங்கு பல படி இறங்கி வாழ வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். இவர்கள் திறமை, தகுதிகளைத் தகுந்த முறையில் மேலை நாடுகள் பயன்படுத்தவில்லை என மனம் உடைந்திருக்கிறார்கள். நூற்றைம்பது நாடுகளுக்கு மேல் இருந்து கணிசமான அளவு மக்கள் கனடா போன்ற மேற்கத்தைய நாடுகளில் புதிய குடிவரவாளராகக் குடி

யேறியிருக்கிறார்கள். இந்நாடு தனக்கென ஒரு திட்டத்தின் கீழ் அவர்கள் அனைவரையும் கொண்டுவராவிடின் நாடு, நாலு திசைக்கும் இழுத்துச் செல்லப்படும் எனக்கருதுகிறது. இதைவிட, வேறு பல காரணங்களால் கற்றாருக்குச் சென்ற இடமெலாம் சிறப்பு என்ற கோட்பாட்டிற்கு முரணான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். இவர்களுக்குத் தம் தரத்தில் தகுதியில் குறைந்தவர்கள் எனக் கருதப்படுபவர்கள் சமமான அந்தஸ்தை, ஊதியத்தைப் பெறுவதைப் பார்க்க ஒரு வகையில் மனச் சங்கடமாகத்தான் இருக்கிறது. அவர்கள் அப்படி உயர்ந்துவிட்டார்களே என்று பொறாமைப் படுகிறார்கள் என்பதை விடத் தம்மால் அந்நிலையைக் கூட எட்டிவிட முடியவில்லையே என்ற உணர்வு அவர்களை உறுத்துகிறது எனலாம்.

தாயகத்தில் வாணிபம் புரிந்து வளமாக ஊர் அறிய வாழ்ந்தவர்கள் பலரும் இந்நாடுகளில் வாழ்கிறார்கள். இவர்களுக்கு மற்றுமொரு மனக் கஷ்டம் அதாவது, தாம் எறும்புபோல் சேர்த்த சொத்துக்களை இழந்து விட்டோம் என்பதாகும். மறுபுறம் அவற்றை இழந்த நிலையில் இன்று அவர்கள் சாதாரணமாக வாழவேண்டுமே என்ற கவலை இவர்கள் உள்ளத்தை உறுத்துகிறது. இவர்களிற் சிலர் சிறிலங்காவின் பல பிரதேசங்களில் வாணிபம் புரிந்த கால கட்டங்களில் காலாகாலம் கப்பங் கட்டியது போல் கலவரப் பேயை, சிங்களத் தலைவர்கள் சிலர் கிளப்பிவிட்டபோது உழைத்த ஊதியத்தின் தேடலை வாரி வழங்கிய அனுபவமும் உண்டு. இதனால், இவர்கள் மனம் ஓரளவு பக்குவப்பட்ட நிலையில் சமாளித்துக் கொள்ளப் பார்க்கின்றது.

"நைஜீரியாக் கூட்டம்" என அழைக்கப்படும் கற்றறிந்த தமிழர்கள் பலரும் பல நாடுகளில் அகதிகளாக வாழ்கிறார்கள். இவர்களிற் பலர், தமிழீழ விடுதலையில் அக்கறையும் ஆர்வமும் காட்டி வருகிறார்கள். சிலர் தமது தாய்நாடான தமிழீழத்துடன் தொடர்பு குறைந்த நிலையில் இருக்கிறார்கள். கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக மருத்துவம், தொழில் நுட்பம், கட்டிடக்கலை, ஆசிரியத் தொழில்களைப் புரிந்த தலைசிறந்த கல்விமான்கள் உட்படப் பலர், ஆபிரிக்காக் கண்டத்தின் பல நாடுகளுக்கும், புறுனாய் போன்ற கிழக்கிந்தியத் தீவுகளுக்கும் சென்று தொழில் புரிந்து வந்தனர். இவர்கள் கனடாவிற்குள் அகதிகளாய் அரவணைக்கப்பட்டனர். இவர்களிற் பலர் கூடிய பணச்செலவின்றி, அதிக சிரமம் இன்றி வந்தவர்கள். இவர்கள் குறிப்பாகத் தம் பிள்ளைகளின் கல்வி வளத்தைப் பெருக்கித் தம் சந்ததியின் எதிர்காலத்தைப் பிரகாசமாக்கத் துடியாய்த் துடிக்கிறார்கள். இவர்களால் புதிய சூழலுக்கேற்ப தம்மை மாற்றி வாழ்வதில் கடினம் இருக்கவில்லை. இவர்கள் கூடியளவு ஒரே தராதரத்தில் உள்ள கூட்டமாக வாழ்ந்து வந்திருக்கிறார்கள். ஒரே விதப் பிரச்சினைகள் உள்ள சூழலில் வாழ்ந்து வந் திருக்கிறார்கள். இங்கு இவர்களுக்கு, தமிழ் சமூகத்தின் பலதரப்பட்ட தகுதிகளைக் கொண்ட மக்களோடு பழகும்போது சற்று சிரமமாகத் தெரிகிறது. இவர்கள் தொகையில் குறைந்தாலும் கணிசமான செல்வாக்குக் கொண்டவர்கள் என்பது மறுக்கமுடியாது.

இவ்வாறாகப் பலதரப்பட்ட தமிழ் மக்கள் அகதிகளாக உலகின் பல பாகங்களுக்கும் சென்றிருக்கிறார்கள். இவர்கள் அவுஸ்திரேலியா, பிலிப்பைன், மலேசியா, சிங்கப்பூர், இந்தியா, அமெரிக்கா, கனடா, நோர்வே, சுவீடின், டென்மார்க், ஜேர்மனி, ஹொலன்ட், பிரான்ஸ், இத்தாலி, பெல்ஜியம், சுவிஸ், ஸ்பெயின், இங்கிலாந்து, அயர்லாந்து போன்ற பல நாடுகளில் அகதியாக இருக்கிறார்கள். இதைவிட, ரஷ்யா, போலந்து, தாய்லாந்து மத்திய கிழக்குத் தேசங்கள் போன்ற நாடுகளில் தற்காலிகமாகப் பல தமிழர்கள் அலைகிறார்கள். மற்றும் சிலர் தென்னமெரிக்கக் கண்டத்திலும் இருக்கிறார்கள். இவர்களை விட, கணிசமான அளவு தமிழர் சிறிலங்காவிலும் அகதிகளாக வாழ்கிறார்கள்.

தமிழர்களுக்கு அகதிகளாக அகிலமெங்கிலும் அலைய வேண்டிய நிலை ஏற்பட்டதனால் பல வகைகளில் அவர்களின் இன, மொழி, பண்பாடு, நாகரீகம், கல்வி, தொழில், பழக்கவழக்கங்கள் ஆகியன பாதிக்கப்பட்டுள்ளன. இப்பாதிப்பை நாம் முன் கூட்டியே அறிந்து, உணர்ந்து ஆவன செய்தல் எமது தலையாய கடமை என்பதையும் நாம் உணர வேண்டும்.

## கொழும்பிற்குப் புலம் பெயர்வு

இலங்கைத் தீவிலுள்ள முப்பத்தைந்து லட்சம் தமிழர்களில் சுமார் பத்து லட்சம் தமிழர் தற்காலிகமாகவும் ஓரளவு நிரந்தரமாகவும் புலம் பெயர்ந்துள்ளார்கள். இவர்களிற் சுமார் ஐந்து லட்சம் தமிழர் தற்காலிகமாகத் தம் பாரம்பரிய மண்ணை விட்டு இலங்கைத் தீவின் வேறு பகுதிகளில் குடியேறியிருக்கிறார்கள். இவர்கள் தொகை காலத்துக்குக் காலம் ஏறி இறங்கிய வண்ணம் இருக்கிறது. இவர்கள் ஒரு வகையில் வெளிநாடுகளில் உறவினர்களின் ஆதரவால் அங்கு குடியிருக்கிறார்கள். அல்லும் பகலும் வெளி நாடுகளில் அயராது உழைப்பவர்களில் பலர் தம் பெற்றோர், சகோதரர்களில் பெரும் அக்கறை கொண்டவர்களாக இருக்கிறார்கள். தான் தப்பினால் மட்டும் போதாது தன்னைச் சேர்ந்தவர்களையும் கவனத்தில் எடுக்க வேண்டும் என இவர்கள் துடியாய்த் துடிப்பதைப் பார்க்குமிடத்து நம் பண்பாட்டு முத்திரை அங்கு குத்தப்பட்டிருப்பதைக் காண முடிகிறது. மற்றுமொரு பகுதியினர் தமது முதலீடுகளை வடகிழக்குப் பகுதிகளிலிருந்து எடுத்து வந்து கொழும்பில் முதலிட்டுள்ளனர். இன்னுமொரு பகுதியினர் வெளிநாடுகளுக்குச் செல்லும் நோக்குடன் சென்றிருக்கிறார்கள். இவர்களைத் தவிர, தலைமுறை தலைமுறையாகக் கொழும்பிலிருந்து வந்தவர்களும் இருக்கிறார்கள். இவர்கள் குடியேறியவர்கள் என்று வெளிப்படையாகத் தோன்றினாலும் உள்ளார்ந்த ரீதியில் அகதிகளாகவே கணிக்கப்படுகிறார்கள். "கொழும்புத் தமிழர்" எனச் செல்லமாக அழைக்கப்பட்டுவரும் கணிசமான அளவினர் தம்மை நகர்ப்புறத்தில் வாழும் நவீன நாகரிகம் தெரிந்தவர்கள் எனப் பெருமிதத்துடன் கூறிக் கொள்கிறார்கள்.

தமிழன் தன் பாரம்பரிய மண்ணிற்கு வெளியே இலங்கைத் தீவில் பல இன்னல்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகிறான். கடந்த நாற்பது ஆண்டுகளாக, சிறிலங்கா மண்ணில் தமிழர்கள் பலமுறை தாக்கப்பட்டிருக்கிறார்கள்.

1958, 1977, 1983 எனப்பல ஆண்டுகளில் ஏற்பட்ட கலவரங்களின்போது பல தமிழர் தாக்கப்பட்டும், கொல்லப்பட்டும், பல பெண்கள் கற்பழிக்கப்பட்டும், அங்கவீனப்படுத்தப்பட்டும், உடமைகள் பறிக்கப்பட்டும், பல அழிவுகள் செய்யப்பட்டும் இருக்கிறார்கள். இதைத் தவிர, உளரீதியாகவும் உணர்வு பூர்வமாகவும் அடிப்படையில் பெருமளவு பயமுறுத்தப்பட்டிருக்கிறார்கள். இதனால், கொழும்பில் வாழும் அகதிகள் நிலை இரும்புச் சட்டியில் இருந்து நெருப்புக்குள் விழ இருக்கும் நிலை போலாகிவிட்டது. உதாரணமாக: அமெரிக்காவில் சிக்காக்கோ நகரை அண்டிய பகுதிகளில் உள்ள சோழவலயத்திற்குக் கால் நடைகள் கொழுக்க அனுப்பப்படுவதுமுண்டு. ஆடு, மாடுகள் நன்கு உண்டு கொழுக்கின்றோம் எனப் பெருமிதப்படுவது முண்டு. ஆனால், இறுதியில் கொழுக்க வைக்கப்பட்ட கால் நடைகள் மனித ஊன் பெருக்க அறுக்கப்படும் கால் நடைகளின் ஊன் வியாபாரத்திற்குப் பலியாகின்றன. அக்கதிகூட பல கொழும்பு வாழ் தமிழருக்கு ஏற்பட்டுள்ளது.

ஒருவன் பிறந்து தான் சுதந்திரமாக, மரியாதையாக, பாதுகாப்பாகப் பண்டு தொட்டு வாழ்ந்து வரும் பிரதேசமே அவனது தாய்நாடு. தன் தாய் நாட்டில் அனுபவிக்கும் சுதந்திரத்தை அந்நிய மண்ணில் தாம் உரிமை கொண்டாடினாலும், அவன் அவர்களுக்கு அதனை வழங்கப் போவதில்லை. இலங்கைத் தீவில் சிறிலங்கா அரசு தமிழரை நடத்தும் பாணி, தமிழருக்கு அந்நிய நாட்டில் வாழ்கின்ற பிரமையை ஏற்படுத்தியிருக்கிறது. சிறிலங்கா அரசில் தமிழர் முழு உரிமையுடன் இருக்க முடிவதில்லை என்பது மறைக்க முடியாத உண்மையாகிவிடுகிறது. எக்கால கட்டத்தில் சிங்கள இராணுவத்தினர் தமிழீழ விடுதலைப் புலிகளால் நன்கு தாக்கப்படுகின்றார்களோ, அப்போதெல்லாம் கொழும்பு வாழ் தமிழர் தம் உயிரைக் கையில் வைத்துக்கொண்டே வாழ்கிறார்கள். பயம் என்ற பீதியால் சூழப்பட்ட தமிழர் கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாகக் கொழும்பில் கலகமற்று வாழ்கிறார்கள் என ஓர் சித்திரத்தைச் சிறிலங்கா அரசு வரைந்திருக்கிறது. ஆனால், உள்ளே மறைந்திருக்கும் நச்சுத் தன்மையும் மறைக்கப்பட்டிருக்கும் உண்மைகளும் வரலாறு திரும்பி வருகிறது (History repeats) என்ற உண்மையை உணர்த்தியிருக்கிறது. பல இளைஞர்கள் சிறிலங்காவில் கைது செய்யப்பட்டார்கள். அவர்கள் எங்கே போனார்கள், என்ன ஆனார்கள் என யாருக்கும் தெரியாது என்ற உண்மையை சர்வதேச மனித உரிமைப் பிரகடன அமைப்பின் அறிக்கை காலநேரம் ஊர்ப்பெயர்களுடன் தெட்டத் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருக்கிறது. இக்கால கட்டத்தில் தமிழர் புலம் பெயர்ந்து கொழும்பு வந்ததில் எந்த விதப் பாதுகாப்பும் இல்லை என எண்ணவும் தோன்றுகிறது. கிட்டத்தட்ட நாலாயிரம் ஆண்டு வரலாறு படைத்த தமிழீழத்தில் கடந்த சில சகாப்தங்களாகத் தமிழர் திட்டமிட்டுத் தாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது வரலாறு நல்கும் கசப்பான உண்மையாகும்.

மறுபுறம் தமிழர் பற்றி, சிறிலங்கா அரசின் ஜனாதிபதி டி.பி.விஜயதுங்க ஐக்கியதேசியக் கட்சியின் 39 வது வருடாந்த மகாநாட்டில் உரையாற்றுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார். "வடக்கிலும் கிழக்கிலும் உள்ளவர்கள் எமது மக்கள், எமது உறவினர்கள், நண்பர்கள். அவர்களுடன் எமக்குக் கோபமில்லை. தமிழ் மக்கள் இன்று எம்முடன் ஐக்கியமாக வாழ்கிறார்

கள்". இதன் அர்த்தம் என்ன? ஆடு நனைகிறது என்று ஓநாய் அழுததாம். இங்கே நனையும் ஆட்டிற்கு ஓநாய் குடை பிடிப்பதுபோல் நடக்கிறது. ஒரு-முறை சிறிலங்கா அரசின் பிரதிநிதி ஒருவர் "சிறிலங்கா அகதிகளை .உருவாக்கும் நாடல்ல" என்று அழகாகக் குறிப்பிட்டார். படிப்பது தேவாரம் இடிப்பது சிவன் கோவிலா?

கிளாலிப் போருக்குப் பின் பாடசாலைகள், மத ஆலயங்கள், வைத்திய சாலைகள் எனப் பல பொதுமக்கள், சிறார்கள், வயோதிபர்கள் இருக்கும் இடங்களெல்லாம் குண்டு மாரி பொழிந்து விட்டு மறுபுறத்தில் உறவு கொண்டாட எத்தனிப்பது, சிறிலங்கா அரசு, அகதிகளை உருவாக்கவில் லை என்று முழுப் பூசனிக்காயை ஒருபானை சோற்றில் அல்ல ஒரு அகப்பை சோற்றில் மறைக்க முனையும் கதையாகத்தான் இருக்கிறது.

1993ல் கலவரம் வரவில்லையே என்று ஆச்சரியம் இருக்கலாம். சோழியன் குடுமி சும்மா ஆடுமா? உலக அரங்கில் கடனுதவி வழங்கும் நாடுகளுக்கிடையில் நல்லதொரு அபிப்பிராயத்தை சிறிலங்கா அரசு ஏற்ப டுத்த கொழும்பு வாழ் தமிழர்களைப் பகடைக்காய்களாகப் பயன்படுத்தப் பார்க்கிறது. தமிழீழத்தில் நடப்பதெல்லாம் விடுதலைப் புலிகளின் பயங்கர வாதமே தவிர, தமிழர் சுதந்திரமாகவும் சுபீட்சமாகவும் கொழும்பிலும் ஏனைய பகுதிகளிலும் வாழ்கிறார்கள் என்ற ஒரு உண்மைக்குப் புறம்பான கருத்தைத் திரித்துப் பரவிவிட்டிருப்பதுதான்.

***எடுத்துக்காட்டாக முன்பெல்லாம் கொழும்பில் இருந்த தமிழர் தாக்கப்பட்டார்கள் என்று 1983ஆம் ஆண்டை அண்டிய காலகட்டங்க ளில் கனடா போன்ற நாடுகள் அவர்களுக்கு அகதி உரிமை வழங்கி யது. 1993ல் சுமார் பத்து ஆண்டுகளுக்குப் பின் தமிழர் கொழும்பில் வாழலாம் எனக் கூறிப் பல அகதி உரிமைக் கோரிக்கைகளை நிராக ரித்திருக்கிறது. ஆனால், தமிழரைப் பொறுத்தவரை கொழும்பு வாழ்க் கை திடீரென வெடிக்கும் எரிமலை. அது சில காலம் வெடிக்கவில்லை என வெற்றிவிழாக் கொண்டாடுவது புத்திசாலித்தனமல்ல.***

நாமெல்லாம் உடலை உறுத்தி, உவகையைக் கட்டுப்படுத்தி அனுப் பும் சிறிய பணத் தொகை ஒருபுறம் நம் உற்றார் உறவினரை வாழவைப்ப தாகத் தோன்றினாலும், மறுபுறம் அப்பணம் சிறிலங்கா அரசிற்கு வெளி நாட்டு நாணயமாக ஆயுதங்கள் வாங்கவும், நம் உடன் பிறப்புக்களை உருக்குலைக்கவும், கடனுதவி பெறவும் மையமாக அமைகிறது என்ற கசப்பான உண்மையை நாம் பல சந்தர்ப்பங்களில் உணரத் தவறுகின் றோம். கொழும்பில் பாதுகாப்பாக வாழலாம் என்பது தடி கொடுத்து அடி வாங்கிய கதையாகத்தான் முடியும். கொழும்பில் தமிழர்கள் தங்காமல் வெளிநாடுகள் போவதா? தமிழீழம் போவதா? என்று எண்ண வேண்டிய நிலை பலருக்குண்டு. இக் கேள்விக்கு விளக்கமான பதில் காணவேண்டின் தமிழீழத்தின் வரலாறு பற்றி நாம் அறிந்திருத்தல் அவசியம்.

## இந்திய மண்ணில் தமிழீழ அகதிகள்

உலகில் சுமார் எழுபது மில்லியன் அதாவது ஏழு கோடி தமிழர் வாழும் இவ்வேளை அவர்களில் 65 மில்லியன் தமிழர் இந்தியாவில் குறிப்

பாகத் தமிழ் நாட்டில் வாழ்கிறார்கள். நம்மவர்கள், நீண்டகாலமாகத் தமிழகம் என்ற பெரும் சக்தி என்றும் எம்மைக் காக்கும் என எண்ணியிருந்தார்கள். பாரெங்கும் பரந்துபட்ட தமிழன் சக தமிழனைத் தட்டிக் கொடுத்து வளர்ப்பான் என்று கருதினானே தவிர, கைவிடுவான் என்று எண்ணியது கிடையாது.

நம்மவர்கள் எப்போதும் ஈழத் தமிழரை, சிறிலங்காப் படைகள் தாக்கும் போதெல்லாம், இந்திய அரசு தமிழருக்குக் கைகொடுத்துதவும் என்ற கானல் நீரை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். இந்தியா புவியியல் ரீதியில் எமக்கு மிக அண்மையில் உள்ளது. சுமார் இருபது மைல் பாக்கு நீரிணை நம் தேசத்தை இந்தியாவில் இருந்து பிரித்துள்ளது. நாம் நிலத்தால் பிரிந்தாலும் மொழியால், மதத்தால், பண்பாட்டால் இணைந்துள்ளோம் என்று இறுமாப்புடன் இருந்தோம்.

தமிழ் அகதிகளை இந்தியா ஆரம்பத்தில் இரு கரங்களும் நீட்டி வரவேற்றது. இந்திரா காந்தியின் ஆட்சியில் தமிழரை, சிறிலங்கா அரசு கடுமையாகத் தாக்கியபோதெல்லாம் இந்திராகாந்தி எச்சரிக்கை செய்திருந்தார். ஏறத்தாழ மூன்று லட்சம் தமிழர் அகதிகளாக வள்ளங்கள், கப்பல்கள், விமானமூலம் இந்தியா சென்றடைந்தனர். இவர்களைத் தவிர, பல அரசியல் தலைவர்கள், இயக்க உறுப்பினர்கள் இந்தியாவிலிருந்து இயங்கினர். இந்தியாவின் தமிழக அரசின் ஒரு காலகட்டத்தில் தமிழீழத் தமிழருக்கு உதவ வேண்டும் என்ற உணர்வு குறிப்பாக, எம்..ஜி.ஆர். காலத்தில் தெளிவாகத் தென்பட்டது. திரு. கருணாநிதி காலத்தில் அக்கருத்துக்கு கூடியளவு அரசியல் சாயம் பூசப்பட்டிருந்தது. ஜெயலலிதாவின் காலத்தில் நிலைமை படுமோசமாகிவிட்டது. இந்தியாவின் மத்திய அரசைப் பொறுத்தவரை தமிழீழ அகதிகள் நுழைவு, அரசியல் சதுரங்க ஆட்டத்தின் ஓர் காய் நகர்வாகவே இருந்து வருகிறது.

இந்தியா தென்னாசியாவில் பிராந்திய வல்லரசு என்ற நிலையை அடைய, பாகிஸ்தான், சீனா, பங்களாதேஷ், சிறிலங்கா ஆகிய நாடுகளின் அரசியல் நிலமைகளைத் தமக்குச் சாதகமாக்கிக் கொள்ளத் தன்னாலான வழிகளில் முயன்று வருகிறது. சிறிலங்கா அரசு இராணுவ பலத்தில் மிக மெலிந்திருந்தால், அமெரிக்க இராணுவ உதவிகள் பாகிஸ்தான் ஊடாக நுழைந்து இந்தியாவிற்குப் பெரும் தலையிடியைத் தரும் என்ற ஏக்கம் ஒரு புறம். மறுபுறம், தமிழீழத்தில் விடுதலைப் புலிகள் பெரும் இராணுவபலம் பெற்றுவிட்டால் தமிழீழத்தை வெகு சுலபமாக அமைத்துவிடலாம். இந்நிலையில் இந்திய மாநில அரசுகள் குறிப்பாகத் தமிழ் நாடு தலையிடி தரும் என்ற கவலை இருக்கிறது. அத்தோடு காஷ்மீர், பஞ்சாப் பிரச்சினைகளில் பாகிஸ்தானின் தலையீடுகள் அஸாம் வரை விஸ்தரிக்கப்படலாம் என்ற ஏக்கம் உள்ளது. இத்தனைக்கும் மத்தியில் தமிழீழ அகதிகள் ஓர் இக்கட்டான நிலையில் வாழ்ந்து வருகிறார்கள்.

தமிழீழ அகதிகள் இருவகைப் பட்டவர்கள். குறுகிய தொகையினர் தம் செல்வத்துடன் சென்று மட்ராஸ் போன்ற நகரங்களில் வாழ்ந்து வருகிறார்கள். மறுபகுதியினர் பெரும் திரளாகத் தமிழ் நாட்டிற்குச் சென்று பலரின் ஆதரவில் தங்கி வாழ்ந்து வருகிறார்கள். முற்பகுதியினர் தமிழ் நாட்டு நகர்ப்புறத்தார்க்கு ஒரு தலையிடியாக இருக்கிறார்கள். இவர்களிடம் வெளி

நாட்டு நாணயம் அதிகளவு இருப்பதால் விலைவாசிகளை, வீட்டு வாடகை-களை அங்கு உயர்த்தின. அதனைச் சமாளிக்க முடியாத இந்தியர்கள், தமிழீழத் தமிழர் எக்கேடு கெட்டால் என்ன, எமக்கு நல்வாழ்வு கிடைத்தால் போதும் என வாழத் தலைப்பட்டனர். இவர்கள் எதிர்ப்பில் ஒரு வகையில் அரசியல் சாயமும் பூசப்பட்டது. வசதி குறைந்த அகதிகள் பல இன்னல்கள் மத்தியில் வாழ்ந்து வருகின்றனர். சில கால கட்டங்களில் தாம் தம் நாட்டிற்குத் திரும்பிப் போகக் கூட முனைந்தனர். ராஜீவ் காந்தியின் கொலைக்குப் பின்னர் இந்தியா தமிழீழ அகதிகளை மாற்றான் பிள்ளைகளைப் போல எடுத்தெறிந்து நடக்க ஆரம்பித்தது.

இந்தியா, பாகிஸ்தான் பிரிவினையுடன் அகதிகள் பற்றி நன்கு பாடம் படித்திருந்தது. பல முஸ்லிம் மக்கள் புதிதாக 1947ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட பாகிஸ்தானிய நாட்டிற்கு அகதிகளாக அனுப்பப்பட்டனர். அதே போல பல இந்துக்கள் அகதிகளாகப் பாகிஸ்தானில் இருந்து இந்தியாவிற்குப் புலம் பெயர்ந்து வந்தனர். கிழக்கு மேற்கு என இரு துண்டுகளாக இருந்த பாகிஸ்தானுக்கிடையே பின்னர் போர் மூண்டது. இந்தோ-பாகிஸ்தானிய யுத்தத்தில் கிழக்குப் பாகிஸ்தான் அகதிகளைப் பகடைக்காய்களாக்கி இந்தியா பாகிஸ்தானைப் பிரித்து, பங்களாதேஷை உருவாக்குவதில் வெற்றி கண்டது. கிழக்குப் பாகிஸ்தான் அகதி வெள்ளத்திற்கு அணை கட்டும் செலவிலும் பார்க்க யுத்தச் செலவு குறைவெனக் கணக்கிட்ட இந்தியா போரினை ஊக்குவித்தது. இந்தியாவுடன் நீண்டகாலமாக எதிரியாக இருந்த பாகிஸ்தானைப் பிரித்து அதன் பலத்தைக்குறைக்கும் அதேவேளை பங்களாதேஷை ஒரு நல்ல நண்பனாக ஆக்கிக் கொள்ள முயன்றது. பங்களாதேஷ் அகதிகளைப் பேணிக் காக்கப் போரில் உதவிய இந்தியா, தமிழீழ விடுதலைப் போருக்கு உதவ, தமிழீழ அகதிகளை முன்நின்று காக்கத் தவறியது. இது இந்தியாவின் அரசியல் சாணக்கியத்தை நன்கு புலப்படுத்துகிறது. இந்தியாவும் புலம் பெயர்ந்த அகதிகளுக்கு ஓர் தற்காலிக இடமாகவே அமைந்துவிட்டது.

இந்தியா தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்ப ஆரம்பித்தது. சிறிலங்கா அரசின் அட்டூழியங்களை அறிந்தும் திருப்பி அனுப்பும் விடயத்தில் இந்திய அரசு மிகவும் கடுமையாக இருந்து வந்திருக்கிறது. இந்திய அரசுக்கு நன்றாகத் தெரியும், திருப்பி அனுப்பப்பட்ட சிலர் காணாமற் போனதும், பலர் கைது செய்யப்பட்டதும், அது மட்டுமன்றி சர்வதேச நிறுவனங்கள் பல சிறிலங்கா அரசின் மனித உரிமை மீறல் நடவடிக்கைகள் குறிப்பாகத் தமிழரைப் பொறுத்தவரை மிகவும் மோசமானது என்று குறிப்பிட்டபோதும், விடுதலைப்புலிகள் மீது கொண்ட ஆத்திரத்தை மையமாகக் கொண்டு அப்பாவிப் பொதுமக்களை எதுவித காரணமுமின்றி திருப்பியனுப்பியிருக்கிறது. அகதியாக இந்தியாவிற்குச் சென்றபோதிருந்த நிலையை விட இவர்கள் அகதிகளாக மீண்டும் திருப்பி அனுப்பப்பட்டபோது, இருக்கும் நிலை படு மோசமானது என்பதை இந்திய அரசு உணரத் தவறிவிட்டது.

பொதுசன நூலகம்
விசேட சேர்க்கைப் பகுதி

## உலகரங்கில் அகதிகள்

அகதிகளாகப் புலம் பெயர்வது வரலாற்றுக் காலந்தொட்டு இருந்து வருகிறது. ஆதி மனிதன் எதியோப்பியாவில் தோன்றியிருக்கலாம் என்று கூறப்படுகிறது. அங்கிருந்த மனிதன் உலகின் பல பாகங்களுக்குச் சென்று குடியேறியிருக்கிறான். வேட்டையாடிய மனிதன் எப்பிரதேசமும் தனது பிர தேசம் எனக் கருதி நாடோடியாகத் திரிந்திருக்கிறான். அவன் ஓரிடத்தில் விவசாயம் செய்ய ஆரம்பித்தபோது, நிரந்தரமாகக் குடியேறியிருக்கிறான். அவன் வரலாற்றுக்காலத்தில் வரட்சி, வெள்ளம், புயல்போன்ற மனிதனால் உருவாக்கப்பட்ட காரணிகளாலும் புலம் பெயர்ந்து வேறு இடங்களுக்குக் குடி பெயர்ந்திருக்கிறான். இதனை விட, அவன் புதுப் பிரதேசங்களைத் தன் அறிவு வளத்தாற் கண்டுபிடித்து, அங்கு சென்றும் குடியேறியிருக்கி றான். இக்கால கட்டங்களில் போர்த்துக்கேயர்கள், ஸ்பானியர்கள் தமது வளம் குறைந்த நிலத்தில் வெற்றிகரமாக விவசாயம் செய்து கொள்ள முடி யாமையால் வாணிபம் செய்யப் பல நாடுகளுக்குச் சென்றபோது அங்கு குடியமர்ந்திருக்கிறார்கள். மத சுதந்திரம் வேண்டிய ஆங்கிலேயர் பலர் இங்கிலாந்தை விட்டு வெளியெறி அமெரிக்கக் கண்டத்தில் குடியேறி இருக் கிறார்கள். இவர்கள் தம் சுதந்திரத்தை மன்னன் ஆட்சியின் கீழ், பெற்றுக் கொள்ள முடியாதெனக் கருதி, புதுக் கண்டத்தில் குடியேறியிருக்கிறார்கள். அமெரிக்கச் செவ்விந்தியரின் ஒரு பகுதியினர் கூட, இத்தகைய காரணங்க ளால் ஆசியாவிலிருந்து அலாஸ்கா ஊடாக அமெரிக்காவிற்குள் நுழைந்தி ருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

இன்றைய அகதிகள் விவகாரம் இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னரே முக்கியத்துவம் பெற்றது. இரண்டாம் உலக மகா யுத்தத்தில் ஜேர் மனியை ஆட்சி புரிந்த ஹிட்லர், யூதர்களைக் கொன்று குவித்தான். ஜேர்ம னியருக்குத்தான் முதல் உரிமை எனக் கோரிய நாசிஸக் கொள்கையின் விளைவாகச் சுமார் ஆறு மில்லியன் யூதர்கள் கொலை செய்யப்பட்டனர். வெளியேறிய யூதர்களைப் பேணிப் பாதுகாக்க 1938ஆம் ஆண்டு ஜெனிவா வில் நடைபெற்ற கூட்டத்தில் அகதிகள் வரைவிலக்கணம் வரையறுக்கப்பட் டது. அதன் பிரகாரம் அரசினால் வெளியேற்றப்பட்டவர்களே அகதிகளாவார் கள் எனக் கூறியது. 1943ஆம் ஆண்டு பேமுடா கூட்டத்தில் இவ்வரைவிலக் கணம் விரிவாக்கப்பட்டது. இவ்வரைவிலக்கணம், தமது உயிருக்கு ஆபத் தெனக் கருதப்படுபவர்களையும் தம் அடிப்படைச் சுதந்திரத்திற்கு ஆபத்தெ னக் கருதியவர்களையும் அகதிகளாக ஏற்றுக் கொள்கிறது. ("Danger to their lives or liberties") அன்றைய நிலையில் இவ்வரைவிலக்கணம் பெரும ளவு அகதிகளை உள்ளடக்கக்கூடியதாக இருந்தது. இவ்வருடமே சர்வதேச மறு குடியமைப்பு நிறுவனம் ஆரம்பமாயிற்று. (United Nations Relief and Rehabilitation Administration (UNRRA). இச்சபையின் முக்கிய குறிக் கோள், யுத்தம் காரணமாக வெளியேறிய அகதிகளை மீண்டும் தத்தம் நாடுகளில் குடியமர்த்துவதாகும். இச்சபைக்கு உலக யுத்தம் முடிந்ததும் யுத்தத்தால் புலம் பெயர்ந்தவர்களைத் தத்தம் பகுதிகளில் மீண்டும் குடியம ர ஆவன செய்வதே அடிப்படை நோக்கமாக இருந்தது.

இவ்வேளை, சோவியத் யூனியனின் கோதுமைக் களஞ்சியம் என

அழைக்கப்படும் உக்ரேனிய பிரதேசத்தில் இருந்து வெளியேறிய அகதிகள் பலர், மீண்டும் தம் நாட்டிற்குச் செல்லவிருப்பம் தெரிவிக்கவில்லை. இவர்கள் கட்டாயத்தின் பேரில் திருப்பி அனுப்ப முயற்சி எடுக்கப்பட்டன. அவர்களிற் பலர் தம் விருப்பத்திற்கு மாறாகத் திருப்பி அனுப்பப்பட்டனர்.

1947ல் சர்வதேச அகதிகள் குழு (The International Refugee Organization.IRO) ஆரம்பிக்கப்பட்டது. இக்குழு (UNRRA) யூ.என்.ஆர்.ஆர்.ஏ. குழு வின் பொறுப்பை ஏற்றுக் கொண்டது. அகதி உரிமை கோருவோர் சொந்த நாட்டிற்குத் திருப்பி அனுப்பப்படுவர், அங்கு தாக்கப்படுவர் (Persecution) என்ற பயம் இருப்பின் அவரைத் திருப்பி அனுப்பக் கூடாதென இக்குழு முடிவு செய்தது. மனிதாபிமான அடிப்படையில் இக்குழு இயங்கியது. இக் குழுவின் கண்முன் ஹிட்லரின் இனவாத சம்பவங்களிலிருந்த கவனம் விடுபட்டு, பொதுவுடமை நாடுகளுக்குச் சென்றது. அந்நாடுகளில் மனித உரிமைகள் மீறப்படுவதாகக் கருதப்பட்டது. இந்த ஐ.ஆர்.ஏ. குழுவை, பதினெட்டு நாடுகள் 1947 மே மாதத்திலிருந்து 1949 மே மாதத்திற்குள் அங்கீகரித்தன. இக்குழுவை கிழக்கு ஐரோப்பிய நாடுகள் எதுவும் அங்கீகரிக்க மறுத்தன. சில மேற்கு ஐரோப்பிய நாடுகளும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் பகைமையைச் சம்பாதிக்க விரும்பாமல் ஐ.ஆர்.ஏ.குழுவில் சேர மறுத்தன. 1951ல் ஐக்கிய நாடுகள் சபை அகதித் திட்டம் உருவாக்கப்பட்டது. இதனை உலகின் பல நாடுகள் பரவலாக அங்கீகரித்தன. அகதிகள் எனப்படுவோர் தமது உயிருக்கு ஆபத்து என நன்கு உறுதிப்படுத்தப்பட்டவராக இருத்தல் வேண்டும். அவர் உயிருக்கான ஆபத்து இன, சமய, அரசியல் கொள்கைகள் காரணமாக ஏற்பட்டதாக இருக்க வேண்டும். இக்காரணங்களால் அவர் பண்டுதொட்டு வாழ்ந்து வந்த நாட்டை விட்டு வெளியேறியவராகவும் அமைய வேண்டும். இவ்வாறு வெளியேறியவர் தம் சொந்த நாட்டிற்குத் திருப்பி அனுப்பப்பட்டால் அவர் உயிருக்கு ஆபத்து ஏற்படும் நிலையும் இருத்தல் வேண்டும் என்றும் கூறப்படுகிறது.

("Owing to well founded fears of being persecuted for reasons of race, religion, nationality, membership of a paticular socialgroup or political opinion is outside the country of his or her nationality and is unable or owing to swen fears, is unwilling to avail himself, or herself of the protection of that country, or who not having a nationality and being outside the country of his or her former habitial residence, is unable or owing to such fears is unwilling to return to it".)

இவ்வரைவிலக்கணம் உயிருக்கு ஆபத்தென்பதில் குறிப்பாக, உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் உயிருக்கு ஆபத்தென்பதினை கிழக்கு ஐரோப்பிய நாடுகள் ஏற்கத் தயங்கின. இந்நாடுகள் ஒரு வகையில் இவ்வரைவிலக்கணம் தம்மைத் தாக்குவதாகக் கருதினர். சுதந்திரத்தைப் பெரிதாக எடுத்துப் பேசும் அமெரிக்கா கூட இப்பிரகடனத்தை ஆரம்பத்தில் ஏற்று, கையெழுத்து வழங்கவில்லை. அமெரிக்கா, அகதிகளுக்கும் பொருளாதார நலன் கருதி வெளியேறுவோருக்கும் இடையில் உள்ள வித்தியாசத்தை இவ்வரைவிலக்கணம் ஏற்படுத்தத் தவறிவிட்டது என்பதால் இதனை ஏற்க மறுத்தது. அமெரிக்காவைப் பொறுத்தவரை பொதுவுடமையை எதிர்க்கும் அந்நாட்டு மக்களை,வெளியேற்ற வைத்துப் பொதுவுடமையைத் தகர்க்கும் பணிகளுக்

PUBLIC LIBRARY
JAFFNA

கு உதவும் வகையில் அதனைப் பாவிப்பதே முக்கிய உள்ளார்ந்த நோக்க மாக இருந்தது. மனிதாபிமான அடிப்படை என்ற கோதாவில் பெருமளவு அப்பாவி மக்களைப் பராமரிப்பதால் எந்தவித பெரும் அரசியல் லாபமும் இல்லையென அமெரிக்கா நன்கு உணர்ந்துள்ளது. அமெரிக்காவைப் பொறுத்தவரை மனிதாபிமானம் என்ற போர்வையில் தனது அரசியல் லாபம் பெறுவதே முக்கியமாக அமைந்தது.

அமெரிக்காவுக்கும் - சோவியத் யூனியனுக்கும் இடையில் ஏற்பட்ட பனிப்போரில் அகதிகள் அகப்பட்டுக் கொண்டார்கள். 1956ல் சோவியத் யூனியன் கங்கேரியாவை ஆக்கிரமித்தது. பல கங்கேரி மக்கள் நாட்டை விட்டு வெளியேறினர். இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின் அகதிகள் அரசினால் வெளியேற்றப்பட்டவர்களாகக் கருதப்பட்டனர். 1951ஆம் ஆண்டில் கூட வெளியேறியவர்களும், வெளியேற்றி வைக்கப்பட்டவர்களும் முக்கிய இடம் பெற்றனர். ஆனால், 1956ல் இருந்து மக்கள் அகதிப் பிரச்சினையை நேரடியாகச் சந்திக்க வேண்டி இருந்தது.

இதுவரை காலமும் பிரச்சினை ஐரோப்பியக் கண்டத்தை மையமாகக் கொண்டு சுழன்றது. அகதிகள் சம்பந்தமான ஐரோப்பாவில் ஏற்படும் மாறுதல்களும் அதனால் பாதிக்கப்பட்ட வெள்ளையரும் முக்கியமாக இடம் பெற்றனர். 1960ஆம் ஆண்டுகளில் இருந்த அகதிகள் பிரச்சினை மூன்றாம் உலகு என அழைக்கப்படும் ஆசிய ஆபிரிக்க தென்னமெரிக்க நாடுகளை மையமாகக் கொள்ளத் தொடங்கியது.

## மூன்றாவது உலகும் "அகதிகளும்"

உலகரங்கில் 1960ல் இருந்து புதிய சகாப்தமொன்று ஆரம்பமாகியது. இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின் பல நாடுகள் தமது காலனித்துவ ஆட்சியிலிருந்து சுதந்திரம் பெற்றன. இந்நாடுகள் பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியிருந்தன. அந்நியராட்சியில் அடக்கப்பட்டிருந்த பல்வேறு இன மக்கள் அந்நியராட்சியைப், பொது எதிரியாகக் கொண்டு போராடினர். அவ்வாறு பொது எதிரியை எதிர்க்கும்போது தமது சொந்தப் பிரச்சினைகளுக்கு அதி முக்கியத்துவம் கொடுக்கவில்லை.

இந்நாடுகள் சுதந்தரம் பெற்ற பின் அதிகாரப் பரவல், நாடுகளுக்கிடையேயான எல்லையமைப்புக்கள் போன்ற பல பிரச்சினைகள் பீறிட்டெழுந்தன. ஒரு இனம் மற்றொரு இனத்தின் ஆதிக்கத்திற்குக் கட்டுப்பட மறுத்தது. பல நூற்றாண்டுகளாகத் தம்மிடையே நிலவிய வழக்குகளைத் தீர்க்கவும் தலைப்பட்டனர். குறிப்பாக, பிரித்தானிய சாம்ராச்சிய காலனிகளெங்கும் பல பிரச்சினைகள் தோன்றின. அதற்கு அவர்கள் ஆண்ட முறையினால் ஏற்பட்ட விளைவுகளும் ஓர் காரணமாகும். பிரித்தானியர்கள் பிரித்தாளும் தந்திரோபாயத்தைக் கையாண்டார்கள். சிறுபான்மை இனத்துடன் அணைவதுபோல் நெருங்கி, பெரும்பான்மை சிறுபான்மை இனங்களை மோதவிட்டு, அதனால் பயனடைந்தார்கள். அவர்கள் அரசியலில் ஆழமான முறையிலிருந்து கீழ்த்தரமான முறைக்குக்கூட இறங்கியிருக்கிறார்கள். கோவில் முன் மாட்டை வெட்டிக் கொன்று போடுவதும், பள்ளி வாசல் முன்

பன்றியைக் கொன்று போடுவதும் போன்ற கீழ்த்தரமான செயல்கள் மூலம் இரு சமூகங்களையும் மோதவைப்பதுமாக இருந்தனர். இவர்களது மற்று மொரு ஆட்சித் தந்திரம், மறைமுக ஆட்சி (Indirect rule) கொள்கையைக் கடைப்பிடிப்பதாகும். பிரித்தானியர் நேரடியாகப் பிரெஞ்சு அரசு போல் மக்க ளை அணுகாமல், உதாரணமாக, இனத்தலைவர்கள், முதலியார், உடை யார்மாரை அணுகி அவர்கள் மூலம் ஆட்சி செய்து வந்தனர். இதனால், மக்களிடம் ஒருவகை உயர்வு, தாழ்வு, அந்தஸ்து பிரச்சினைகளும் தூப மிட்டு வளர்க்கப்பட்டன.

பிரித்தானியா அந்நாடுகளை விட்டு விலகும் போதும்கூட அந்நாடுகள் தொடர்ந்தும் அவர்களை அண்டித்தான் வாழவேண்டும் (Neo colonialism) என்ற ஏகாதிபத்திய கொள்கைக்கு அத்திவாரமிட்டனர். இதனால், பல முன்னாள் பிரித்தானிய காலனித்துவ நாடுகள் இன்றும் சீரழிந்த வண்ணம் இருக்கின்றன. எல்லைகளை நிர்ணயிக்கும்போது ஒரு இன மக்களை இரு நாடுகளுக்குள் செல்லக் கூடியதாக அமைத்து இரு நாடுகளிலும் பல இன மக்களை மோதவிடச் செய்தார்கள். ஆபிரிக்கக் கண்டத்தில் குறிப்பாக உகண்டா, ரன்சானிய, கெனியா, போன்ற நாடுகளின் பல எல்லைச் சண் டைக்கும் உள்நாட்டு இனக் கலவரங்களுக்கும் பிரித்தானியரே வித்திட்டுச் சென்றார்கள்.

இலங்கைத் தீவிற்கூட இதே பிரச்சினையைத்தான் உருவாக்கிவிட்டுச் சென்றார்கள். இலங்கைத் தீவில் சிங்கள அரசும் தமிழ் அரசும் பல நூற் றாண்டுகளாகச் சுதந்திரமாக இயங்கி வந்தது இவர்களுக்குத் தெரியும். பிரித்தானியர் அப்படித் தெரிந்திருந்தும் கூட 1948ல் சுதந்திரம் வழங்கும் போது இரு நாடுகளையும் ஒரே குடைக்கீழ் விட்டுச் சென்றார்கள். இதன் விளைவுகளில் ஒன்றே தமிழீழ விடுதலைப் போராட்டமும் இன்றைய அகதி கள் வெள்ளப் பெருக்குமாகும்.

பிரான்ஸ், ஜேர்மனி ஆட்சிபுரிந்த நாடுகளிலும் இதே பிரச்சினை மற்று மொரு விதத்தில் உருவாகியுள்ளது. பிரெஞ்சுக்காரர் அத்தனை காலனித் துவ நாடுகளையும் தன்குடைக்கீழ் நேரடியாக ஆட்சி புரிந்து வந்தனர். சுதந்திரம் வழங்கப்பட்டபோது இந்நாடுகள் தத்தம் உரிமைகள், தனித்துவத் தைப்பேண முயலும்போது உள்நாட்டுப் பிரச்சினைகள் தலைதூக்க ஆரம் பித்தன. இவற்றோடு, இவ் ஏகாதிபத்திய நாடுகளுடன் இந்நாடுகள் வர்த் தக, இராணுவத் தொடர்புகளைத் தொடர்ந்து வைத்திருக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டன. இச்சூழலில் பல பிரச்சினைகள் எழ, இந்நாடுக ளிலிருந்து அகதிகள் வெள்ளம் பெருக்கெடுக்கத் தொடங்கியது.

மறுபுறம் பனியுத்தத்தில் ஈடுபட்ட சோவியத் யூனியனும் அமெரிக்கா வும் நேரடியாகத் தாம் மோதாமல் தம் ஆயுதங்களை மூன்றாம் உலகிற்கு விற்று அங்கு தமது ஆயுத பலத்தைப் பரீட்சிக்கத் தலைப்பட்டனர். இரு யானைகள் மோதி வந்தன. அதன் விளைவே புற்றரையான இச்சிறு நாடு கள் பட்ட வேதனையாகும். நிக்ராவா, எல்சல்வடோர், வியட்நாம், அங்கோ ல, மொசாம்பிக், எதியோப்பியா, சாட், சூடான் போன்ற பல நாடுகளில் வறிய மக்கள் தம் உயிரை உடமைகளை இழந்து இவர்களின் பனி யுத்தத்திற்குக் களம் அமைத்துக் கொடுத்தனர்.

1969 ல் ஆபிரிக்க இணைப்புக்குழு (Organisation of African Unity)

225280

அகதிகள் வரைவிலக்கணத்தில் இன்னுமொரு அம்சத்தை வலியுறுத்தியது. "அகதியெனப்படுவோர் யாராகிலும் வெளிநாட்டு ஆக்கிரமிப்பு, வெளிநாட்டு உள்நுழைவு காரணமாகவும் உருவாக்கப்படுகிறார்கள்" என்றது. ஐம்பதுக்கு மேற்பட்ட நாடுகள் அங்கம் வகிக்கும் இச்சபையின் வேண்டுகோளை மேற்கத்தைய நாடுகள் செவி மடுக்க மறுத்தன. இன்று உலகின் பல பாகங்களிலிருந்தும் அகதிகள் வெளியேறுகிறார்கள். 150 நாடுகளிலிருந்து இடம் பெயர்ந்து, அகதிகள் இன்று கனடாவிற்கு வந்திருக்கிறார்கள். இன்று உலகில் சுமார் 25 மில்லியன் அகதிகள் புலம் பெயர்ந்துள்ளனர். இவர்களில் பெரும் பகுதியினர் மூன்றாவது உலக நாடுகளைச் சேர்ந்தவர் ஆவர். 1960ல் 1.2 மில்லியன் அகதிகள் பெருமளவு வெள்ளை நிறத்தவர்களாக இருந்த காலம் போய் இன்று சோமாலிய, இலங்கைத்தீவு, இந்தியா, பாகிஸ்தான், வடகொறியா, பிலிப்பைன், வியட்நாம், பங்களாதேஷ், நைஜீரியா, எதியோப்பியா, சைப்பிரஸ், அங்கோலா, மொசாம்பிக், உகண்டா, சாட், சூடான், கெனியா, சிம்பாவுவே, பாலஸ்தீன், ஈராக், ஈரான், எல்சல்வடோர், பீரு, வெனிசுலா, பிரேசில் எனப் பல மூன்றாவது உலக நாடுகளில் இருந்து வெளியேறுகிறார்கள். தற்போது பொஸ்னியாவிலிருந்தும் வெளியேறுகிறார்கள்.

இன்று உலகில் அகதிகளை ஏற்றுக் கொள்ளக்கூடிய நாடுகளினால் ஏற்றுக் கொள்ள விரும்பும் தொகையைவிட, பன்மடங்கு அகதிகள் இருக்கிறார்கள். இவ் அகதிகளை ஏற்றுக் கொள்ளப் பல நாடுகள் கொள்கையளவில் ஒப்புக் கொண்டாலும், நடைமுறையில் கூடியளவு தட்டிக்கழிக்கப் பார்க்கிறார்கள்.

## ஐரோப்பாவில் அகதிகள்

ஐரோப்பிய நாடுகளை இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஒன்று, முன்னாள் பொதுவுடமை நாடுகளான சோவியத் யூனியன், செகோஸ்சுலாவாக்கியா, போலந்து போன்றன. மற்றது, மேற்கத்தைய நாடுகள் எனப்படும் இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி, டென்மார்க் போன்ற நாடுகள். முன்னைய நாடுகள் பொதுவுடமை ஆட்சியின் கொடூரப் பிடியில் இருந்தன. இந் நாடுகளில் உள்ள மக்களில் பலர் சுதந்திரம், உயர் வாழ்க்கைத்தரம் நாடி வெளியேறும் நோக்குடன் இருந்தனர். 1917ல் சோவியத் யூனியனில் ஆரம்பமான பொதுவுடமை ஆட்சி பரவியிருந்த கிழக்கு ஐரோப்பிய நாடுகள் மேற்கத்தைய நாடுகளை வெறுத்து ஒதுக்கின. மேற்கத்தைய நாடுகள் என அழைக்கப்படும் முதலாளித்துவ நாடுகள் பொதுவுடமை, தத்தம் நாடுகளிலும் குறிப்பாகத் தொழிலாளர் மட்டத்தில் பரவிவிடக்கூடும் என்ற ஐயத்தால் பொதுவுடமையை அவதூறாகத் தூற்றுவதிலும் அங்குள்ள மக்கள் வெளியேற்றத்தைத் தூண்டுவதிலும் கண்ணும் கருத்துமாக இருந்து வந்தன. எமது அகதிகளை மேற்கத்தைய நாடுகள் ஏற்றுக் கொண்ட போதும் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் ஒருவகையில் மறைமுகமாக, அவர்கள் வருகையைத் தூண்டின.

பொதுவுடமை நாடுகளிலிருந்து வெளியேறும் அகதிகளை மையமாகக் கொண்டு அங்கு மனித உரிமைகள் மீறப்படுகின்றன என, அந்நாடுகளுக்

கெதிராக மேற்கத்தைய நாடுகள் கூச்சலிட்டன. மேற்கத்தைய நாடுகள் ஆரம்பகால கட்டங்களில் பொதுவுடமையைத் தகர்த்தெறியும் திட்டத்தின் ஓர் முக்கிய பகுதியாகப் பொதுவுடமை நாடுகளிலிருந்து வெளியேறும் அகதிகளை மையமாகக் கொண்டுமனித உரிமை மீறப்படுகிறது என்று பொதுவுடமை நாடுகளுக்கெதிராகக் கோஷமிட்டனர். இவர்களின் முழு நோக்கமே பொதுவுடமை நாடுகளில் மக்கள் எழுத்துச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம் முதலியன அற்று, அடிமைகளாக வாழ்கிறார்கள் என்று, பிரச்சாரம் செய்வதேயாகும். மேற்கத்தைய நாடுகள் இப்பொதுவுடமை நாடுகளின் வாழ்க்கைத்தரம் மிகவும் குறைந்திருக்கிறது என்றும், சைபீரிய குளிரில் சிலர் சிறையிடப்பட்டுக் கொலை செய்யப்படுகிறார்கள் என்றும் பல குற்றச் சாட்டுக்களை முன் வைத்துத் தத்தம் நாடுகளில் பொதுவுடமை விரும்பிகளின் கண்களில் மண்ணைத் தூவி வந்தன. அதற்கு உதவியாக இந்நாடுகளில் இருந்து வெளியேறும் அகதிகளை அரவணைத்து ஆதரிப்பதில் பெரும் அக்கறை காட்டினர்.

## இத்தாலி

இத்தாலி ஐரோப்பியருக்குத் தனிச் சலுகை வழங்கி வருகிறது. தமிழர் போன்ற ஐரோப்பியரல்லாதவர்களுக்கு அகதியுரிமை வழங்கத் தயங்குகிறது. இத்தாலியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட அகதிகளுக்குத் தற்காலிகமாக அகதியுரிமை வழங்கப்பட்டிருக்கிறது. இவர்களுக்கு அகதி உரிமைகோரும் உரிமை முற்றாக வழங்கப்படவில்லை. இத்தாலிய பாராளுமன்ற சட்ட யாப்பு 1947ல் இருந்து அகதி நிலை கோருவோருக்கு உரிய உரிமைகளைக் கட்டுப்படுத்தி வந்திருக்கிறது. ஐரோப்பியர் அல்லாத அகதிகளை, கூடியவரை இத்தாலி ஐக்கிய நாடுகள் சபையின் அகதிக்குழுக்களிடம் யூ.என்.எச்.சி. ஆர். (UNHCR) கையளித்து விடுகிறது. அகதிகள் தற்காலிகமாக வதியும் உரிமை மட்டுமே வழங்கப்பட்டுள்ளது.

## பிரான்ஸ்

பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்கள் இந்நாட்டில் அகதிகளாக வாழ்கிறார்கள். பிரான்சின் அகதிகள் நடவடிக்கைகளைக் கண்காணித்துவரும் சபை OFPRA (Office Franceis de protection de Refugies et Apatrides) அகதிகள் சமர்ப்பிக்கும் விண்ணப்பப் பத்திரங்களின் அடிப்படையில் தீர்மானம் எடுக்கக் கூடிய அதிகாரம் கொண்டிருந்தது. இச்சபையின் தீர்மானங்களில் அகதிகள் விசாரணை முக்கிய பங்கு பெறுகிறதா என்பது நன்கு உறுதிப்படுத்தப்படவில்லை.

அகதிகள் பரிசீலனை முறைகள் கனடா போன்று பெருமளவு வெளிப்படையாக இல்லை. இதனால், அகதிகள் நீண்ட காலம் மனச் சங்கடமான நிலைக்கு உள்ளாகியுள்ளார்கள். அண்மைக் காலங்களில் காலதாமதம் சற்று குறைக்கப்பட்டிருக்கிறது. தமிழர்களைப் பொறுத்தவரை மட்டுப்படுத்தப்பட்ட வதிவுரிமை வழங்கப்பட்டபோதும், பலர் பிரச்சினைகளைச் சந்திக்க

வேண்டிய நிலையில் வாழ்கிறார்கள். பிரான்ஸ் நாட்டில் வதிவுரிமை பெறாத அகதிகள் ஒரு சிக்கலான நிலையில் வாழ்கிறார்கள்.

## சுவிற்சர்லாந்து

சுவிற்சர்லாந்து பல இனங்கள் வாழும் மலைப்பிரதேசம். உலகின் பெரும் பணம் படைத்தவர்களின் முதலீடுகள் நிறையப் பெற்ற தேசம். மெல்லிய கைத்தொழில்கள் வளர்ந்ததேசம். இந்நாட்டில் உள்ள தமிழ் அகதிகள் எப்போதும் தம்மைத் திருப்பி அனுப்பக்கூடும் என்ற பயத்துடனேயே இருக்கிறார்கள். இந்நாட்டில் எல்லைப் புற அதிகாரிகள், மத்திய குடிவரவு அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு அகதிகளை விசாரணைக்குட்படுத்த அனுமதிப்பதும் தடுப்பதுமாக இருக்கிறார்கள். இந்நாட்டில் அகதியாக இருப்பவர் எக்கால கட்டத்திலும் திருப்பி அனுப்பப்படலாம் என்ற ஏக்கம் இருக்கிறது. அகதி உரிமை கோரியவரின் நாட்டில் மனித உரிமை மீறப்படவில்லை எனக் கருதப்பட்டால், அவர் திருப்பி அனுப்பப்படலாம். தனிப்பட்டவர் நிலையை விட அவர் வந்த தேசத்தின் நிலையையே சுவிஸ் கவனத்தில் எடுக்கிறது. இவர்களைப் பொறுத்தவரை அகதி என்பவர் தற்காலிகமாக வசிக்க உரிமை பெற்றவராகத் தென்படுகிறார். அகதிகள் பாதுகாப்புச் சபை சுவிஸ் நாடு கிழக்கு ஐரோப்பிய அகதிகளுக்கு அதிக அளவு சாதமாக இருக்கிறது, தமிழர் போன்ற ஆசிய ஆபிரிக்க அகதிகளைப் புறங்கணிக்கிறது எனப் பலமுறை குற்றஞ்சாட்டியிருக்கிறது.

## ஜேர்மனி

பெருந்தொகையான தமிழ் அகதிகள் உள்ள ஐரோப்பிய நாடுகளில் முன் நிற்பது ஜேர்மனி ஆகும். மேற்கு ஜேர்மனியும் கிழக்கு ஜேர்மனியும் இணைய முன்பு பெருந்திரளான தமிழ் அகதிகள் தஞ்சம் புகுந்தனர். பல மில்லியன் யூதர்களைக் கொன்ற பாவத்திற்குப் பிராயச்சித்தமாக ஜேர்மனி இன்று அகதிகளை அரவணைக்கின்றது. ஜேர்மனியைப் பொறுத்தவரை அகதிகள் வெள்ளப் பெருக்கிற்கு முன்னைய கிழக்கு ஜேர்மனி காரணமாக இருந்திருக்கிறது. கிழக்கு ஜேர்மனி "வருக! வருக" என்று நம்மவரை வரவேற்று கிழக்கு பேர்லின் நகர் ஊடாக மேற்கு ஜேர்மனிக்கு அனுப்பி வைத்தது. கிழக்கு ஜேர்மனியின் தாராள மனப்பான்மையினது மறுபக்கத்தில் அரசியல் சாயம் பூசப்பட்டிருந்தது. கிழக்கு ஜேர்மன் அரசு பேர்லின் நகரின் இணைவை விரும்பவில்லை. அகதிகள் வெள்ளத்திற்கு அணை கட்டும் முகமாக மேற்கு ஜேர்மனி பேர்லின் நகர வாயிற் கதவை மூடிவிடும் என, கிழக்கு ஜேர்மனி எதிர்பார்த்தது. பாம்பின் காலைப் பாம்பு அறியும் என்பது போல மேற்கு ஜேர்மனி அகதி வெள்ளத்தைக் கட்டுப்படுத்த மற்றுமொரு உபாயத்தைக் கையாண்டது. அகதிகள் வேலை வாய்ப்புக்கள் கட்டுப்படுத்தப்பட்டு போக்கு வரத்துக்கள் மட்டுப்படுத்தப்பட்டன. பல உரிமைகள் மறுக்கப்பட்டு திறந்த சிறைச்சாலை வாழ்வு வாழ வைக்கப்பட்டனர். இந்நடவடிக்கைகள் மறைமுகமாக அகதி வெள்ளத்திற்குக் கட்டிய அணைகளாக

அமைந்தன. "சும்மா இருக்கும் திறன் அரிது" என அறிந்த தமிழன் ஒளி மயமான எதிர்காலம் நோக்கி வெளியேற ஆரம்பித்தான்.

வட ஜேர்மனியிலுள்ள பிறேமஹவன் நகரில் (Sail 86) கப்பல் திரு விழா இடம் பெற்றது. பல்லாயிரக் கணக்கான மக்கள் கப்பல்களை அலங்க ரித்து இவ்விழாவைச் சிறப்பாகக் கொண்டாடிக் கொண்டிருந்தனர். இச்சந் தர்ப்பத்தைப் பயன்படுத்தி இதற்கு அண்மையிலுள்ள துறைமுகத்திலிருந்து புறப்பட்ட கப்பல் ஒன்று பல தமிழர்களையும் காவிக் கொண்டு கனடா நோக்கிச் சென்றதாகக் கூறப்படுகிறது. 11.08.1986 ல் நூற்றைம்பத்தைந்து தமிழ் மக்கள் நியூபவுண்லாந்தில் காலடி வைத்தனர். மற்றும் பலர் ஜேர் மனியை விட்டு வெளியேறினர். இன்னும் சிலர் ஜேர்மனிக்குப் போவதை விரும்பாதிருந்தனர்.

இன்று மேற்கு ஜேர்மனியும் கிழக்கு ஜேர்மனியும் இணைந்த நிலை யில் இருக்கிறது. பிரிந்தவர் கூடினால் குதூகலமாகக் கொஞ்சக் காலம் இருப்பது இயல்பே. இணைந்த ஜேர்மனியர் அந்நியரைச் சாடுகிறார்கள். அவர்களில் இனவாதக் கொள்கை கொண்டவர்கள் அங்குள்ள அகதிகளைச் சாடி வருகிறார்கள். ஜேர்மனியில் நல்லதொரு எதிர்காலம் இருப்பதாக நம் மவர்கள் இன்று கருதவில்லை. அங்கு பல தமிழர்கள் தாக்கப்பட்டிருக் கிறார்கள். 1991ல் சேகரம் இரத்தினேஸ் என்ற தமிழன் நையப் புடைக்கப் பட்டு ரெயில் தண்டவாளத்தில் எறியப்பட்டான். காடையர்கள், இனவாதிகள் புகைவண்டிகளில் பொது நிலையங்களில் "பட்டினிப் பட்டாளமே வெளி யேறு, ஜேர்மனி எமது நாடு" என்றெல்லாம் கோஷமிட்டார்கள். ஜேர்மனி யரைப் பொறுத்தவரை வறிய கிழக்கு ஜேர்மனின் இணைவின் தாக்கமும் பொஸ்னியா போன்ற மேற்கத்தைய நாடுகளின் போரின் தாக்கமும் இணைந்து அகதிகள் மேல் ஓர் வெறுப்புணர்ச்சியைக் கிளறிவிட்டுள்ளது. ஜேர்மனியில் அண்மைக் காலத்தில் ஏற்பட்டு வரும்சம்பவங்கள் அங்கு வசிக்கும் நம்மவரை "கிழக்கோ மேற்கோ தம் தாயகமே உயர்ந்தது" என்ற உண்மையை உணர்த்தி வருகிறது. இவர்கள் கஞ்சி குடித்தாலும் நம் தாயகத்தில் சிரட்டையில் குடிக்கும் கஞ்சிக்கு ஓர் மௌசு உண்டு என எண்ணத் தோன்றுகிறது.

## இங்கிலாந்து

:குட்டு வாங்கினாலும் மோதிரக் கையால் குட்டு வாங்க வேண்டும். போனாலும் சீமைக்குப் போக வேண்டும்" என்ற உணர்வு நம்மில் பலருக் கு இருந்திருக்கிறது. ஆங்கிலேயர் நம்மை ஆண்டு, எமது உள் பாரம்பரி யத்தைத் தெரிந்து, எம்மைச் சுரண்டி உயர்ந்த இனம். பிரித்தானியாவில் ஆசியருக்கு எதிரான நடவடிக்கைகளை எதிர்த்து நடத்தப்பட்ட கிளர்ச்சியில் எழுதப்பட்ட வாக்கியங்களில் ஒன்று "நாங்கள் இங்கே இருப்பது நீங்கள் அங்கே இருந்ததால் தான்" என்று (We are here because you were there) ஓர் முக்கிய உண்மையை உணர்த்தியிருக்கிறது.

பிரித்தானியாவில் அகதி விவகாரங்களை உள் நாட்டுத்துறை (Home office) அலுவலகம் தீர்மானிக்கிறது. அகதிகள் வருகையை, பிரித்தானிய அரசு பல யுக்திகளைக் கையாண்டு மட்டுப்படுத்த விரும்புகிறது. (The Brit-

ish Common Wealth Nations) பிரித்தானிய அரசு, தனது பொது நல நாடுகளுடன் இருக்கும் சுமூகமான உறவை அறுக்க விரும்பாததினால் சிறிலங்கா அரசின் பகைமையையும் தேட விரும்பவில்லை.

பிரித்தானிய நாட்டில் உள்ள ஒரு வசதி என்னவென்றால், சட்ட ரீதியில் போராடி விடயங்களைச் சாதிக்கலாம். பிரித்தானியர் சட்டத்தை நன்கு மதிப்பவர்கள். நாயைச் சுடும் போதும் கூட, சட்ட ஆதாரம் வைத்துத் தான் சுடுவார்கள் என்பர். உதாரணத்திற்கு, செப்டம்பர் 1987ல் ஆறு தமிழர்கள் இங்கிலாந்து சென்று அகதி உரிமை கோரினர். அவ்வுரிமைக் கோரிக்கை மறுக்கப்பட்டது. அவர்கள் சிறிலங்காவிற்கு 1988 பெப்ரவரி மாதம் திருப்பி அனுப்பப்பட்டனர். அவர்கள் அதனை எதிர்த்து மேற்கோர்ட்டில் தாக்கல் செய்தனர். சர்வதேச மன்னிப்புச்சபை இது விடயமாக அவதானித்து, விட்ட அறிக்கையின்படி கொழும்பு திரும்பிய ஆறு பேரில் இருவர் கைது செய்யப்பட்டுத் துன்புறுத்தப்பட்டனர். மூன்றாவது நபர் மூன்று மாதங்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுத் தாக்கப்பட்டார். ஒருவர் பத்து மணித்தியாலங்கள் வரை தடுத்து நிறுத்தப்பட்டார்.

இவ்வறிக்கையின்படி மார்ச் 1989ல் இங்கிலாந்து இவர்களைத் திருப்பி அழைக்க அனுமதி வழங்க முடிவு எடுத்தது. ஆனால், இந்நிலையிலும் கூட குடிவரவுத் திணைக்களம் உடனடியாக அத்தீர்ப்பை ஏற்க மறுத்தது. சில காலம் இவர்கள் விசாரணை இழுபட்டது. அதேவேளை, வேறு பல சந்தர்ப்பங்களில் அகதிகள் சட்டரீதியில் வாதாடி வதிவுரிமையும் பெற்றிருக்கிறார்கள்.

இன்றைய நிலையில் இங்கிலாந்து ஐரோப்பிய ஒன்றியத்தில் சேர்ந்து இயங்குகிறது. ஒன்றியம் வெகு விரைவில் பொது நாணயம், பொதுக் குடிவரவுத் திட்டங்களை அமுலாக்க இருக்கிறது. இதனால், காலகட்டத்தில் பிரித்தானிய ஒன்றியத்தின் அங்கத்துவ நாடுகள், தாளத்திற்கு ஆடும் நிலை ஏற்படலாம்.

இங்கிலாந்துக்கும் அயர்லாந்துக்கும் இடையில் இருக்கும் கட்டுப்பாடு குறைந்த உறவு முறையைப் பயன்படுத்தித் தமிழ் அகதிகள் இரு நாட்டிற்கும் இடையே சென்று வேலை செய்தும், வசித்தும் வருகிறார்கள். இவர்களில், தம் காலத்தைச் சரியாகப்பயன்படுத்தி உழைத்தவர்கள் சிலர் அயர்லாந்தில் நிரந்தர வதிவுரிமை பெற்றிருக்கிறார்கள்.

## அமெரிக்காவும் அகதிகளும்

"மனித உரிமை மீறல்" என்ற கோஷத்தை உரத்து ஒலிக்கும் நாடு அமெரிக்கா. மனித உரிமைகளை மீறியதாகக்கூறி, பல நாடுகளை இராணுவ ரீதியிலும், பொருளாதார ரீதியிலும் தாக்கியிருக்கிறது. ஆனால், தனக்கு லாபம் கிடைக்கும் போதெல்லாம் அதனை, கணக்கில் எடுக்காது விட்டுவிடுகிறது. கண்துடைப்பிற்கு மட்டும் எச்சரிக்கை செய்து வருகிறது. அமெரிக்கா, பிலிப்பைனில் மார்க்கோஸின் அட்டூழியத்தை மறைமுகமாக அனுமதித்துவிட்டு நீண்டகாலம் பொறுத்திருந்தது. ஆப்கானிஸ்தான் யுத்தத்தின் போது பாகிஸ்தானுக்கு கண்மூடித்தனமாக உதவியது. அதேவேளை

ஈராக்கில் கொதித்தெழுந்தது. எதியோப்பியாவை எச்சரித்தது. தென் அமெரிக்காவில் 1980ல் மனித உரிமை எல்சல்வடோரில் மீறப்பட்டது. 1981 ஜனவரி மாதம் ரேகனின் அரசு எல்சல்வடோர் அரசிற்கெதிராக உதவியது. அங்கு 1,000 பொது மக்கள் கொல்லப்பட்டனர், 10,000 பேர் 1980 லும் 13,500பேர் 1981லுமாகப் பலர் அமெரிக்க உதவி பெற்ற குழுக்களால் கொல்லப்பட்டனர். இதைவிட, பல்லாயிரக் கணக்கானவர்கள் காணாமற் போயுள்ளனர். இதனால், 5 லட்சம் மக்கள் புலம் பெயர்ந்தனர். மற்றும் ஏழரை லட்சம் மக்கள் நாட்டை விட்டு அமெரிக்கா போன்ற நாடுகளை நாடி ஓடினர். இதேபோன்று கொத்தமலாவில் இருந்தும் பல்லாயிரக் கணக்கான மக்கள் யுத்தத்தால் வெளியேறினர். அங்கு ஏற்பட்ட கொலைகள், துன்புறுத் தல்கள் காரணமாக சுமார் ஒரு லட்சம் மக்கள் மத்திய அமெரிக்காவை நோக்கி 1983ல் படையெடுத்தனர். இவர்கள் மெக்சிக்கோவை அடைந்தனர். அங்கிருக்க முடியாது அமெரிக்காவிற்குள் நுழைய வேண்டிய நிலை ஏற்பட் டது. இவர்கள் மெக்சிக்கோவிலுள்ள அமெரிக்கத் தூதுவரகத்தின் மூலம் அகதி உரிமை கோர வேண்டப்பட்டனர். நடைமுறையில் அமெரிக்காவில் அகதி உரிமை இம்முறைப்படி பெறுவது மிகக் கஷ்டமானதொன்று. விண்ணப்பப்பத்திரங்கள் தாராள மனப்பான்மையோடு விநியோகிக்கப்படு கின்றன. ஆனால், நடைமுறையில் அவை மலடியைப்பிடித்து பிள்ளைப் பெறவைத்த கதையாகத்தான் முடிகிறது. பெருந்தொகையான தென்ன மெரிக்கர்கள் எல்லையைக் கடந்து சட்டபூர்வமற்ற முறையில் அமெரிக்கா வில் இருக்கிறார்கள். இன்று அமெரிக்காவில் பல மில்லியன் மக்கள் தலைமறைவாகச் சீவிக்கின்றார்கள்.

இக்காரணங்களால் அமெரிக்கா, அகதிகளை மிகவும் கட்டுப்பாடாக வைத்திருக்கிறது. அமெரிக்காவில் அகதி உரிமை கோருபவர்களை நடத்தப்படும் முறைகளும் அவ்வளவு வரவேற்கத்தக்கதாக இல்லை. ஆனால், வருடாவருடம் அமெரிக்க ஜனாதிபதிக்கு எத்தனை அகதிகளை அமெரிக்கா ஏற்றுக் கொள்ளலாம் என முடிவு செய்யும் உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக, 1980 ல் 2,31,700 அகதிகளையும் 1985ல் 70,000 அகதிகளையும் ஜனாதிபதி ஏற்க முடிவு செய்திருந்தார். அண்மைக் காலங்களில் ஜனாதிபதியின் கவனம், அகதிகள் தொகையை விட அவர்கள் வரும் பிரதேச நாடுகளின் பின்னணியை ஆராய்வதில் செல்கிறது.

தமிழ் அகதிகள் பலர் அமெரிக்காவில் பத்திரங்கள் எதுவுமின்றி இருக்கிறார்கள். இவர்கள் ஒரு காலகட்டத்தில் வதிவிட உரிமை பெற முடியும் என்ற நம்பிக்கையுடன் இருக்கிறார்கள். அவர்கள் அங்கே வாழ்க்கையுடன் ஒத்துப் போக, செய்யும் தொழிலே தெய்வம் என நம்பி அல்லும் பகலும் அயராது உழைக்கிறார்கள். இவர்களில் கணிசமானவர்கள், காலகட்டத்தில் கனடாவிற்குள் நுழையலாம் என்ற நம்பிக்கையுடனும் இருக்கிறார்கள்.

அமெரிக்காவில் அகதிகள் விண்ணப்பப் பத்திரங்களைப் பரிசீலணை செய்யும் குடிவரவுச் சேவைத் திணைக்களம் (Immigration and Naturalization Service (INS) மனித உரிமைகளைப் பார்த்து, அகதிகள் உயிருக்கு ஆபத்து என்பதினை அறிந்தும் அகதிகள் உரிமை வழங்குவதாகத் தெரியவில்லை. அமெரிக்க ஆதரவு பெற்ற நாடுகளில், அமெரிக்க கைப்பொம்

மையான அரசுகளினால் ஆளப்படும் நாடுகளில் உயிருக்கு ஆபத்து என்று கூறினாலும் கவனத்தில் எடுக்கப்படுவதாகத் தெரியவில்லை. அகதிகளாக வருபவர்கள் அமெரிக்க அரசிற்குச் சுமையாக இல்லாமல் உழைக்கக்கூடிய திடகாத்திரமானவர்களாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறார்கள். அமெரிக்கா, மனிதாபிமானத்திலும் உள்நோக்குக் கொணடு செயற்படுகிறது. இந்நிலையில் தமிழர்கள் அமெரிக்காவில் அகதி உரிமை கோருவது சுலபமானது என்று கருத முடிவதில்லை.

இன்று உலகின் தனிவல்லரசாக அரியாசனமேறியுள்ள அமெரிக்காவுக்கு இவ்விடயத்தில் உலக நாடுகளின் பொதுஜன அபிப்பிராயம் அவ்வளவு முக்கியமாகத் தெரியவில்லை.

# கனடாவும் அகதிகளும்.

## கனடாவின் கதவுகள் மூடப்படுமா?

அகதிகளை அரவணைப்பதில் முன்னிற்கும் நாடு என பரிசு பெற்றநாடு கனடா. இருமுறை உலகின் முதற் தரமான வாழ்க்கைத்தரமுடைய நாடு என ஐக்கிய நாடுகள் சபையின் பரிசு பெற்ற நாடு கனடா. 150க்கு மேற் பட்ட நாடுகளில் இருந்து, தனது மக்கட் தொகையின் (29மில் லியன்) ஒரு வீதமளவு குடிவரவாளரை ஏற்பதில் கனடா அக்கறை காட்டி வருகிறது. கனேடிய புதிய குடிவரவாளர் தொகை வருடா வருடம் இரண்டு லட்சம். அதில் சுமார் இருபத்தெண்ணாயிரம் பேர் அகதிகளாக அங்கீகாரம் பெற் றுள்ளனர். இன்றைய உலகின் நிலப்பரப்பளவில் சோவியத் யூனியன் வீழ்ச்சிக்குப்பின் முதலாவது இடத்தை வகிக்கும் கனடாவிற்குத் தனது வளத்தைப் பெருக்க போதிய மக்கட் பலம் இல்லை என்ற குறை நீண்ட காலமாக இருந்து வருகிறது. நாட்டின் விருத்திக்கு மனிதபலத்தை நாடி இருக்கும் நாடுகளில் மிக முக்கியமானவை அவுஸ்திரேலியாவும் கனடாவும் ஆகும். கனடாவின் பொருளாதார வளர்ச்சியும் மக்கட் குடியேற்றமும் நீண்ட காலமாகப் பின்னிப் பிணைந்து இருக்கின்றன.

புதிய குடிவரவாளர், இந்நாட்டு நன்மை கருதி இழுக்கப்படுபவர்கள். தற்போதைய காலகட்டத்தில் ஹொங்கொங் மக்களுக்கென குடிவரவுத் திணைக்களத்தில் தனிப்பகுதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஏனெனில், ஹொங் கொங் மக்கள் இந்நாட்டில் தொழில் வல்லுனராக மட்டும் வராமல் மூலத னத்தைக் கொண்டு வந்து கனடாவின் வெளிநாட்டுச் செலவாணியை உயர்த்தி, முதலீட்டின் மூலம் வேலைவாய்ப்புக்களைப் பலருக்கு நல்கிப் பொருளாதாரத்தை உயர்த்துகிறார்கள். இவர்களை ஒன்ராரியோ மாநில முதல்வர் போன்றவர்கள் நாடிச் சென்றிருக்கிறார்கள். பணமென்றால் பல ரும் வழிதருவார்கள்.

பல அகதிகள் இங்கு வருகிறார்கள். அகதிகள், மூலதனம் முடக்கவல்ல வர்களல்ல. அகதிகள் சிறுவராய், முதியோராய், கற்றவராய், உழைக்கும் திறன் அற்றவராய், பாமரராய் இருக்கலாம். எனவே, அகதிகளால் உடனடி யாக நாட்டின் பொருளாதாரத்திற்கு நேரடிப் பெரும் பங்களிப்பு கிடைக்கு மென்பதற்கில்லை. நாளாவட்டத்தில் அவர்களின் அடுத்த சந்ததி ஏனையே-ாரைப் போல வளர்வார்கள். அவர்கள் தங்கள் பங்களிப்பை நல்குவார்கள்.

அகதிகள் தம் நாட்டைவிட்டு விலக விரும்பாதவர்கள். இவர்களில் நடுத் தர வயதுடையவர்கள் தொகையே அதிகம். இவர்களை வளர்க்கப்பெரும் முதலீடுகளைச் செய்த இவர்களின் தாய்நாடு இவர்கள் மூலம் பலன் பெறத் தவறுகிறது. இவர்களிடமிருந்து உழைப்பை அவர்கள் அகதிகளாக குடியேறிய நாடுகள் பெறுகின்றன.

எனினும், கனேடிய குடிவரவுக் கொள்கையில் சில தனித்துவத் தன்மை கள் உண்டு. ஏனைய நாடுகள் அகதிகளுக்குத் தற்காலிக ஆதரவு வழங் கும் நோக்கோடு தான் பெருமளவு அணைக்கிறார்கள். அவர்களை கூடிய ளவு சொந்த நாட்டில் நிலமை சீரானதும் திருப்பியனுப்பவே விரும்பிக் கொள்கிறார்கள். கனடாவைப் பொறுத்தவரை அகதிகள் நிரந்தரப் பிரஜை

யாகி விடப்போதிய வாய்ப்புக்கள் வழங்கப்படுகின்றன. அகதிகள் இந்நாட்டில் ஏனைய குடிமகன் போல் வாழ, பல சந்தர்ப்பங்கள் வழங்கப்படுகின்றன.

இரண்டாம் உலக மகாயுத்தம் முடிந்த பின்னரே அகதிகள் நிரந்தரப் பிரஜையாக வருபவர்களிடமிருந்து பிரித்துத் தனியான கவனத்தோடு வைக்கப்பட்டு வருகிறார்கள். தொகை கூடுவதன் நிமிர்த்தமே இவ்வாறு செய்யப்பட்டதென்பதும் கவனத்தில் எடுக்கப்படவேண்டிய தொன்றாகும்.

அகதிகள் வரைவிலக்கணத்தை விரிவுபடுத்தி, பலதரப்பட்டோரை ஏற்கவும் விரும்பும் நாடு கனடா. பெண்களைப் பொறுத்தவரை அண்மைக்காலங்களில் கனடா குடிவரவுக் கொள்கையின் அணுகு முறையில் புதிய திருப்பம் ஏற்பட்டுள்ளது. பெண் என்ற ரீதியில் ஒரு பெண்மணி துன்புறுத்தப்பட்டிருந்து, அரசியல், இன ரீதியில் பாதிக்கப்படாவிட்டாலும் கூட, அவர் அகதியாக அனுமதிக்கப்படுவார் என ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

பெண்ணிற்கு தனியிடம் வழங்கப்படுவது பற்றி ஐக்கிய நாடுகள் சபையின் 1951ம் ஆண்டு ஜெனிவா அகதி வரைவிலக்கணத்தினுள் சேராவிட்டாலும் கூட அவர்கள் நலன் பேணியாகவேண்டும் என கனேடிய அகதிகள் சபை கருத்துத் தெரிவித்துள்ளது. சில நாடுகளில் பெண்கள் மனித அடிப்படை உரிமைகளுக்கு மாறாக துன்புறுத்தப்படுவதும், பாலிய விவாகம் செய்வதும், தற்போதும் நடைமுறையில் இருக்கின்றன. வறுமை காரணமாகப் பெண்களை விபச்சாரத்திற்கு வலுக்கட்டாயமாக விற்கப்படுவதும் உண்டு.

அகதிகளில் பெண்களுக்குத் தனி இடத்தைக் கனடா வழங்குகிறது. நிராகரிக்கப்பட்ட அகதியின் பிள்ளை கனடாவில் பிறந்து கனடிய பிரஜையாக இருக்குமிடத்து அப்பிள்ளையை விட்டு, தாய் வெளியேற்றப்படுவதையும் தடுத்து நிறுத்தக் கனடாவில் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதும், அப்பிள்ளைக்குத் தன் தாயுடன் வளரும் உரிமையுண்டு என்றும் அதனைத் தடுக்க முடியாது என்றும் வாதாடப்பட்டது. மற்றும் சில நாடுகள், அகதி உரிமை கோரும் நாட்டில் பிள்ளைகள் பிறந்தாலும் அவர்கள் தம் பெற்றோரின் நாட்டுப் பிரஜையாகவே கணிக்கப்படுகிறார்கள். உதாரணமாக ஜேர்மனியில், பிரித்தானியாவில், இக்கொள்கை நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இக்கொள்கை நாட்டுக்கு நாடு, காலத்துக்குக் காலம் மாறியவண்ணம் உள்ளது. எனினும், இன்றைய கனடாவில் அகதிகளுக்குச் சில சலுகைகள் ஏனைய நாடுகளை விடப் பிரத்தியோகமாக உண்டு.

ஐக்கிய நாடுகள் சபை அகதிகள் வரைவிலக்கணம் ஒருவகையில் குறுகியதாகவும் கருதப்படுகிறது. அதில் குறிப்பிட்ட மொழி அரசியல், இன. சமூக ரீதியில் அல்லாதவர்கள் உயிருக்கு ஆபத்து ஏற்படுமேயானால் அவர்கள் அகதிகளாகக் கருதப்படமாட்டார்களா?சமூக சம்தப்பட்ட விடயம் மிகவும் தெளிவற்றது. ஒரு நாட்டில் சமூக ரீதியில் தாக்கப்பட்டவரென்பது இன்னொரு நாட்டில் அது சமூக வரைவிலக்கண எல்லையுள் அடங்காது எனக் கருதப்படுகிறது. கிராமத்தில் நேரடியாகச் சுடுபட்டவன் அகதியாகினான். குண்டுமாரி பொழியும் இடத்தில் வசிப்பவன் தாக்கப்பட்ட போதும் அகதியாகக் கணிக்கப்படாமல் விடப்படுகிறான். மட்டக்களப்பில் தமிழர் என்று வாழும் பலரும் உறுதிப்படுத்தப்பட்ட உயிருக்கு ஆபத்தான நிலையில் இருக்கிறார்கள். தமிழர் என்ற ரீதியில் கொல்லப்படுகிறார்கள். கந்தசாமி என்ற ரீதியிலோ மாணிக்கம் என்ற கோதாவிலோ அல்ல, தமிழர் என்ற

அடிப்படையில் கொலை செய்யப்படுகிறார்கள். எனவே அங்கு ஐக்கிய நாடு கள் சபை வரைவிலக்கணப்படி கந்தசாமியையோ மாணிக்கத்தையோ அகதி உரிமை பெறத்தகுதி அற்றவர்கள் எனக் கூறுகின்றதா? இவ்வழியில் கனடா அரசு சிந்தித்துச் செயற்படவேண்டியது மற்றுமொரு படியெனத் தோன்றுகிறது.

## இனப்பாகுபாடு.

கனேடியக் குடிவரவுக் கொள்கைகளில் இனப்பாகுபாட்டிற்கு இடம் இருந் திருக்கிறது. கனடிய குடிவரவுச் சட்டம் 1910ன் படி (Canadian Immigration Act 1910) இன ரீதியில் கனடாவிற்குள் நுழைவோரைத் தடுத்து நிறுத்த அமைச்சரவைக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. நாளடைவில் அதன் சொற்பிரயோகம் மாறிய போதும் அக்கொள்கை நடைமுறையில் 1978ம் ஆண்டு வரை இருந்திருக்கிறது. 1919ன் சட்டப்படி விரும்பாத இனத்தவர் கள் உள் நுழைவதைத் தடுத்து நிறுத்தக் கூடியதாக இருந்தது.

"Owing to their peculiar customs, habits, modes of life and methods of holding property and because of their probable inablity to become readily assimilated...."

இச்சட்டங்கள் குறிக்கப்பட்ட சில ஐரோப்பிய நாட்டினரை இலக்காகக் கொண்டிருந்தாலும் வரவேற்கத்தக்க தொன்றாக இல்லை.

ஆசியர்கள் வருகை கூட மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. 1923ல் இருந்து 1956வரை இக்கட்டுப்பாடு அமுலில் இருந்தது. பண்ணைத் தொழிலாளர், வீட்டு வேலை சம்பந்தப்பட்டவர்கள், கனேடியரால் விவாகம் செய்யப்பட்ட வர்கள் என, சிலரைத் தவிர ஏனையோர் வருகை மட்டுப்படுத்தப்பட்டிருந் தது. 1956ல் இச்சட்டம் மாற்றப்பட்டு நாடுகளுக்கு விகிதாசார முறை வழங் கப்பட்டது. அப்போது 50 இலங்கையரையும் அனுமதிக்க ஒழுங்குகள் செய்யப்பட்டன.

கனடா, 1954ம் ஆண்டின் குடிவரவு முறையின் கீழ் இங்கிலாந்து, அவுஸ் திரேலியா, தென்னாபிரிக்கா, அயர்லாந்து, அமெரிக்கா, பிரான்ஸ், ஆகிய நாட்டுப் பிரஜைகளை இலகுவாக ஏற்றுக்கொண்டது. இவர்கள் தாங்களாகத் தொழில் புரியும் வரை இந்நாட்டில் தம்மை உறுதிப்படுத்த வாய்ப்புகள் பெற்றவர்கள் எனக் கருதப்பட்டனர். அவர்களுக்கு இந்நாடுகளிலுள்ள அவர்களது உறவினர்கள், நண்பர்கள், உதவக்கூடிய வாய்ப்பு இருந்ததா கவும் கருதப்பட்டது. இவர்கள் அரசிற்கு எந்த வகையிலும் பாரமாக இருக்க மாட்டார்கள் என்ற கோதாவில் முதலிடம் பெற்றார்கள்.

1956ல் ஏனைய ஐரோப்பியர்களும் இச்சலுகைகளைப் பெறமுடிந்தது. அவர்கள் விடயத்திலும் அரசின் உதவிபெற்று வேலை வாய்ப்புக்கள் பெறக் கூடிய தகைமை பெற்றவர்களாக இருக்கவேண்டும். ஆபிரிக்க - ஆசிய நாட் டவர்களைப் பொறுத்தவரை தத்தம் குடும்ப இணைவின் கீழ் ஏற்கப் பட்டார்கள். இக்கட்டுப்பாடுகள் படிப்படியாக 1962ம் ஆண்டிலிருந்து மறைய ஆரம்பித்தன.

PUBLIC LIBRARY
JAFFNA
SPECIAL COLLECTION

## சீனருக்குத் தலைவரி.

சீனத் தேசத்தின் கிழக்கெல்லை கனடாவின் மேற்கெல்லைக்கு அண்மை யில் உள்ளது. ஜப்பான், சீனா, ஆகிய நாடுகள் கனடாவின் மேற்குப்புறத் திற்கு அண்மையில் இருக்கின்றன. சீனர்கள் இந்நாட்டில் பெருமளவில் குவிந்து விடுவார்கள் என்ற பயம் சில கனடியருக்கு கணிசமாக அளவு இருந்து வந்தது. சீனர் வருகையை மட்டுப்படுத்த, 1885ல் குடிவரவுச் சட்டம் ஒன்று அமுலாகியது. (The Chinese Immigration Act of 1885)கனடா நுழையும் சீனர்கள் கனடிய அரசிற்கு தலைவரியாக 50டொலர் செலுத்த வேண்டி இருந்தது. அது 1900ல் நூறுடொலராக உயர்த்தப்பட்டது. இச்சட் டம் படிப்படியாக தளர்த்தப்பட்டுப் பின்னர் நீக்கப்பட்டது. இரண்டாவது உலக மகாயுத்த காலங்களில் யப்பானியர் வருகை கூட தடை செய்யப்பட் டது. யூதர் வருகை மட்டுப்படுத்தப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

1978ம் ஆண்டு, குடிவரவுச் சட்டம் இனவாதத்திற்குக் கொள்கை ரீதியில் சாவு மணியடித்தது. இச்சட்டம் கனடாவினுள் நுழையும் எவரும் இன, தேசிய, நிற, சமய, பால், ரீதியில் பாகு படுத்தப்படக்கூடாது என வலியுறுத் தியுள்ளது. "To ensure that any person who seeks admission to land is subject to standards of admission that do not discriminate on the grounds of race, national or ethnic origin, colour; religion or sex".

## புதிய குடிவரவுச் சட்ட மாறுதல்கள் 1993.

முன்னாள் குடிவரவு அமைச்சர் பேனாட் பல்கொட் அவர்களால் 1992ஜூன் மாதம் 16ம் திகதி 113 பக்கங்களுடன் கொண்டு வரப்பட்ட C86 எனும் மசோதா, பாராளுமன்ற அங்கீகாரம் பெற்று பெப்பிரவரி மாதம் 1ம் திகதி 1993ல் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. இச்சட்டத்தினால் தமிழர் கள் வருகை பெருமளவு பாதிக்கப்பட்டது. இதுவரை காலம் கனடா அமுல் படுத்தாத கடுமையான குடிவரவுச் சட்டமாக இது அமைந்தது.

அமைச்சர் இச்சட்டத்தை மசோதாவாகப் பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்து வைத்தபோது "புதிய குடிவரவாளர், அகதிகள் நுழைவுக் கதவுகள் முற்றாக திறக்கப்படவோ அல்லது முற்றாக மூடப்படவோ மாட்டாது" என்று குறிப்பிட்டார். அவர் கருத்தின்படி அகலத் திறக்கப்பட்டிருந்த கதவு சற்று மூடப்பட இருக்கிறது என்பதேயாகும்.

உலகில் அகதிகளுக்குக் கனடா பாதுகாப்பான சுவர்க்கம் என்று கருதப் பட்டு வந்தது. கனேடிய குடிவரவுத் திட்டத்தின் தாராள மனப்பான்மைக்கு மணி மகுடம் சூட்டுவதுபோல 1986ம் ஆண்டு மே மாதம் அகதிகளுக்கு வதிவுரிமை வழங்கி, கனடாவில் இருந்த அகதிகள் அனைவருக்கும் நிரந்தர குடியுரிமை வழங்கப்பட்டது. பின்னர், பாதிக்கப்பட்ட பதினெட்டு நாட்டவர் களைத் தேர்ந்தெடுத்து நிரந்தர குடியுரிமை வழங்கும் வகையில் செயற் படத் தொடங்கியது. ஸ்ரீலங்காவும் அந்நாடுகளில் ஒன்றாகச் சேர்க்கப்பட்டது. நாட்டின் பொருளாதார நிலை காரணமாகவும், கனேடிய மக்களின் ஒரு பகுதியினரின் எதிர்ப்புக் காரணமாகவும், அகதிகள் தொகை கூடிக் கொண்

டே போவதினாலும் அக்கொள்கை மாற்றியமைக்கப்பட்டது. அதிலும் திருப்தி காணாமல் இப்புதிய சட்டம் அமுலாகியது. இதற்குத் தாராள மனப்பான்மை கொண்ட பழைய குடிவரவுச் சட்டத்தினைப் பலரும் துர்ப்பிரயோகம் செய்ததும் ஒரு காரணமாகும். அகதியாக கனடாவிற்குள் நுழைந்து அங்கீகாரம் பெற்ற பின்னும் அமெரிக்க எல்லைக்கு வெளியே சென்று, மாற்றுப் பெயரில் அகதியாக நுழைந்து சமூக நலநிதி மோசடியைச் சிலர் செய்திருக்கிறார்கள். அகதியாக உரிமை கோரியபோது, தனி மனிதரெனக் கூறியவர்கள் கணவன் மனைவியாக ஒரே கூரையின் கீழ் வாழ்வதும் ஓரளவு அரசிற்குப் புலனானது.

இவற்றைவிட, இந்தியா போன்ற நாடுகளில் கனடாவிற்குள் நுழையும் முறைகளை மறைமுகமாக சுட்டிக் காட்டிய விளம்பரங்கள் பத்திரிகைகளில் வெளிவந்தன. ஜோர்டான் நாட்டில் கனேடியப் பத்திரிகை நிருபர் ஒரு ஆபத்தற்று வாழும் ஜோர்டானியனிடம் உரையாடியபோது தானும் கனடா போக இருப்பதாகக் கூறினார். கனடா போவது அவ்வளவு சுலபமா என்று கேட்டபோது, "அது மிகச் சுலபம், எனது மகனை அனுப்பியுள்ளேன். அவன் அகதியாகி நிரந்தரக் குடிமகனாகி என்னை ஸ்பொன்சர் செய்யப் போகிறான்" என்றார். சீனா போன்ற நாடுகளில் இது ஒரு வியாபாரமாகக் கூட இருப்பதாகக் கூறப்படுகிறது. உலகின் பல பாகங்களிலும் கனடாவின் குடிவரவுச் சட்டமும் அதன் அமுலாக்கமும் ஓர் வலிமை குன்றியதாக, கருதப்பட்டதாகக் கூறப்பட்டது. கனேடியப் பத்திரிகைகளில் 1988-1990ம் ஆண்டுகளில் அகதிகளைக் கட்டுப்படுத்த வேண்டும். குடிவரவு சட்டங்கள் கடுமையாக்கப்பட வேண்டும் என்ற கருத்துப்படச் செய்திகள் வெளியாகின.

மேற்குக் கனடாவில், திரு மெனிங்கின் தலைமையில் சீர்திருத்தக்கட்சி வேகமாக வளர்ந்து வருகிறது. இக்கட்சி ஒருவகையில் இனவாதக் கொள்கை கொண்டது. மூன்றாவது உலக நாட்டு மக்கள் வருகையை, அடியோடு வெறுத்து வருகிறது. கடந்த 1993ம் ஆண்டுத் தேர்தலில் கூட, இக்கட்சி வேட்பாளர் இன்றைய கனேடிய பொருளாதார நெருக்கடிக்கு மூன்றாம் உலக புதிய குடிவரவாளர்களே ஓரளவு காரணம் என்று கூறினார்.

பொதுவாகக் கனடாவில் பொருளாதார நெருக்கடி ஏற்படும் காலங்களிலெல்லாம் புதிய குடிவரவாளர்கள் தொகை மட்டுப்படுத்தப்படுவதும் ஓர் முக்கிய அம்சமாகும். சில காலகட்டங்களில் பெருகி வரும் குற்றங்களுக்ும் பொருளாதார நெருக்கடிக்களுக்கும் புதிய குடிவரவாளர்கள் மேல் சாக்குக் காரணங்கள் கூறப்பட்டு குற்றங்கள் சுமத்தப்படுவதும் உண்டு. இத்தகைய சூழல் உருவாகும் கட்டத்தில் தான் பிறையன் மல்ரோனியின் பழமை தழுவும் கட்சி, புதிய சட்ட மாற்றங்களை அறிமுகம் செய்தது.

பொருளாதார மந்த நிலை ஏற்படும் காலங்களில் எல்லாம் குடிவரவுச் சட்டங்கள் இறுகிக் கொண்டு வருவது கனடாவிற்கு புதிதல்ல. புதிய சட்ட மாற்றத்தின் கீழ் கனடாவும் அமெரிக்காவும் இணைந்து எல்லை வாயிலாக நுழையும் அகதிகளைக் கட்டுப்படுத்தும் உடன்படிக்கையொன்று ஏற்படுத்தப்பட்ட வண்ணம் இருக்கிறது. இவ்வுடன்படிக்கை அமெரிக்காவினூடாக, கனடாவிற்குள் நுழையும் அகதிகள் தொகையை மட்டுப்படுத்தும். அகதி ஒருவர் தன் தாய்நாட்டை விட்டு, பாதுகாப்பான நாடு ஒன்றினூடாக வருவாரேயானால் அந்நாடு அவருக்கு மூன்றாவது பாதுகாப்பான நாடாக அமை

225280

கிறது. அவர் அந்நாட்டில் உயிருக்காபத்தின்றி வாழமுடியுமிடத்து அங்கு அகதியுரிமை கோரவேண்டப்படுவார். உதாரணமாகத் தமிழீழத் தமிழன் அமெரிக்காவுக்கு நுழையும்போது அமெரிக்கா மூன்றாவது பாதுகாப்பான நாடாக அமைகிறது. தன் நாட்டிலிருந்து கனடாவை நோக்கி வருபவர் ஏன் அங்கு அகதியுரிமை கோரக்கூடாது. அகதியுரிமை கோருபவருக்கு குறிப் பிட்ட நாட்டில்தான் அகதிநிலை கோரவேண்டும் என்ற தெரிவுக்கு உரிமை இல்லை. அவ்வாறு தெரிவு செய்வோரேயானால், அவரை உண்மையில் அகதியெனக் கருதப்படமாட்டாது. எனவே அமெரிக்காவிற்கு ஊடாக கனடா விற்கு நுழையவேண்டிய அவசியம் ஏற்படாது. இவ்வுடன்படிக்கையை இரு நாடுகளும் அண்மையில் மறு பரிசீலனை செய்துள்ளன. இவ்வுடன்படிக்கை அமுலாகுமிடத்து கனடாவிற்கு அமெரிக்கா எல்லைப் புறத்தால் நுழையும் அகதிகள் தொகை மிகவும் மட்டுப்படுத்தப்படும். இன்று கனடாவினுள் நுழையும் முப்பதாயிரம் அகதிகளில் மூன்றில் ஒரு பகுதியினர் அமெரிக்க எல்லையினூடாகவே வருகிறார்கள். இக்குறைப்பு கனேடிய அகதிகள் தொகையை பதினெண்ணாயிரமாகக் குறைத்து விடும்.

கனடாவும் அமெரிக்காவும் ஒரே விதமான குடிவரவுக் கொள்கையைக் கடைப்பிடிக்குமேயானால் இவ்வுடன்படிக்கை வரவேற்கத்தக்கது. கனடாவில் அகதியாக ஏற்கப்படுமொருவர் அமெரிக்காவில் அகதியாக ஏற்றுக்கொள் ளப்படாமல் திருப்பியனுப்பப்படக்கூடும். இரு அளவு கோல்களை வைத்த ளக்கும் போது உண்மையான அகதிகள் பலர் தம் நாடுகளுக்குத் திருப்பி யனுப்பப்படுவார்கள் அல்லவா?

இவ்வுடன்படிக்கையின் அடுத்த கட்டமாக ஐரோப்பிய ஒன்றிய நாடுகளு டனும் கனடா ஓர் உடன்படிக்கையை ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப் படுகிறது. தற்போது மேற்கத்தைய ஐரோப்பிய நாடுகள், டபிளின் உடன் படிக்கையொன்றை உருவாக்கியிருக்கிறார்கள். ஒரு அகதி ஐரோப்பிய ஒன் றிய அங்கத்துவ நாடொன்றில் இறங்கினால் அவர் அந்நாட்டிலேயே அகதி உரிமைகோர, கடமைப்பட்டவர் ஆவார். உதாரணமாக: ஒருவர் இத்தாலி யில் தரிக்கும் விமானத்தில் இறங்கி, திரும்ப பிரான்சுக்குச் செல்லும் விமானம் ஒன்றில் ஏறிச்சென்று அகதி உரிமை கோரினால் அவர் திரும்ப வும் விமானத்தில் இத்தாலிக்கு அனுப்பப்படுவார். இவ் ஒன்றியநாடுகளு டன் கனடாவும் ஓர் உடன்படிக்கையை ஏற்படுத்துமேயானால் ஐரோப்பியக் கண்டத்திலிருந்து கனடாவிற்குள் நுழையும் வாய்ப்புக்கள் குறைந்துவிடும். பலர் ஜேர்மனி, பிரான்ஸ், சுவிஸ், டென்மார்க், ஆகிய நாடுகளிலிருந்து கனடாவிற்கு வருகிறார்கள். இவர்கள் வருகை முற்றாகத் தடைப்படலாம். மூன்றாவது பாதுகாப்பான அகதி உரிமை பெறக்கூடிய நாடுகளிலிருந்து வருவோரைத் திருப்பி அந்தந்த நாடுகளுக்கு அனுப்பப்படும் நிலை ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன.

புதிய சட்டம் மேலும் பல கட்டுப்பாடுகளைக் கொண்டுள்ளது. குடிவரவுத் திணைக்கள அதிகாரிகளுக்கு அகதிகளாக நுழைவோரின் உடமைகளைப் பரிசோதித்து உரிய நடவடிக்கை எடுக்கப் போதிய அதிகாரமும் வழங்கப் பட்டிருக்கிறது. வருவோரின் புகைப்படங்கள் கையடையாளங்களைப் பெற வும் உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. அகதிஉரிமை நிராகரிக்கப்பட்டோர் மீண்டும் வேறு பெயருடன் வருவதும் கடுமையாக அவதானிக்கப்படுகிறது.

# குடிவரவுச் சட்ட அமுலாக்கம் பற்றிய பேட்டி:1

குடிவரவுச் சட்ட அமுலாக்கம் பற்றி, கனடிய குடிவரவு தகவல்துறை முகாமையாளர் திரு. மில்ரன் பெஸ்ட்டை 6.10.92 "கனடா ஈழநாடு"பத்திரிகைக்காக நான் கண்டசிறப்புப் பேட்டியின் சுருக்கம்:-

**கே:-** கனடா, குடிவரவுத் துறையைப் பொறுத்த மட்டில் புதிய குடிவரவாளர்கள், அகதிகள் ஆகியோரை ஏற்பதில் தாராள மனப்பான்மை கொண்ட நாடாகக் கருதப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு கூட இரண்டே கால் லட்சம் குடிவரவாளர்களும் அவர்களில் முப்பதினாயிரம் அகதிகளும் ஏற்கப்பட்டிருக்கிறார்கள். இந்நிலை தொடர்ந்தும் நீடிக்கப்படுமா?

**பதில்:-** குடிவரவைப் பொறுத்தமட்டில் ஐந்து வருட திட்டத்தின் மத்தியில் இருக்கின்றோம். சென்ற ஆண்டு எமது மதிப்பீடு இரண்டே கால் லட்சம். ஆனால் அதிலும் கூடிய தொகையினர் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். இவ்வாண்டும் எதிர்வரும் இரு ஆண்டுகளிலும் இரண்டரை லட்சமளவில் அனுமதிக்க மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது.

**கே:-** அகதிகள் அனுமதிக்கப்படும் தொகை கனடாவில் 40 வீதத்தால் குறைக்கப்படலாம் என்று கனடிய ஆங்கிலப் பத்திரிகையொன்று வெளியிட்ட செய்தி பற்றி என்ன கூறுகிறீர்கள்? அகதிகள் தொகையை விகிதாசாரத்தால் கட்டுப்படுத்தலாமா?

**பதில் :-** அகதிகள் அனுமதிக்கப்படும் தொகை ஒரு குறிப்பிட்ட விகிதாசாரத்தால் கட்டுப்படுத்தப்படும் என்று கூற முடியாது. புதிய C 86 மசோதா அமுலாகும்போது மூன்றாவது பாதுகாப்பான நாடுகளிலிருந்து அகதி நிலை கோருவோர் நிச்சயம் அந்நாடுகளில் அகதி உரிமை கோர வேண்டப்படுவர். அகதிகளாக வருபவர்கள் குறிப்பிட்ட ஒரு நாட்டில் தான் அகதிகளாக இருக்கவேண்டும் என்று எதிர் பார்க்க முடியுமா? இவ்வாறு அவர்கள் திருப்பி அனுப்பப்படுவதால் அகதிகள் தொகை நிச்சயம் குறையத்தான் போகிறது. இன்று உலகில் சுமார் பத்து மில்லியனுக்கு மேற்பட்ட அகதிகள் இருக்கிறார்கள். அனைவரையும் ஒரே நாடு ஏற்க முடியாது. அகதிகளை ஏற்கப் பல நாடுகள் கடமைப்பட்டிருக்கின்றன.

**கே:-** இன்றைய கனடிய வரிவழங்கும் பொதுமக்களில் சிலர் அகதிகளுக்குச் செலவாகும் பணம் போலி அகதிகளால் சூறையாடப்படக்கூடாது என்று கருதுகிறார்கள். நீங்கள் என்ன விளக்கம் தர இருக்கிறீர்கள்?

**பதில்:-** அகதிகளாக கனடா போன்ற நாடுகளுக்கு வருபவர்கள் ஒரு

குறிப்பிட்ட தொகை பணத்தைச் செலவு செய்து வருகிறார்கள். எத்தனையோ மக்கள் அகதிகளாக வெளியேற, பண வசதியற்றவர்களாய் அங்கு இருக்கிறார்கள். போலி அகதிகளைத் தவிர்ப்பதன் மூலம் மிஞ்சும் பணம் அகதிமுகாம்களுக்கு அனுப்பப்பட்டு, அவர்கள் நல்வாழ்விற்கு உதவ முடிகிறது. எத்தனையோ அகதி நிலையங்கள் உதவி நாடி நிற்கின்றன.

**கே:-** கடந்த ஆண்டு வருகை தந்தவர்களில் 52 வீதம் ஆசியர்கள். கூடிய ளவு ஒரு பகுதி மக்கள் வருகை தருவதால் கனடாவில் தொன்றுதொட்டு வாழ்ந்து வந்த மக்கள் வாழ்க்கை முறையில் மாற்றங்கள் ஏற்படும் என்று கருதி முன்பு போல் வரையறைகள் ஏற்படுத்தப்படலாமா?

**பதில்:-** இல்லை. 1978ம் ஆண்டிலிருந்து கனடா இனவாதப் பிரதேச வேறுபாடுகளை ஏற்பதில்லை. எங்கிருந்து வருகிறார்கள் என்று இன்றைய கனடா எதிர்பார்ப்பதில்லை. பிரதேசம் பற்றிய எண்ணமோ வரையறையோ இல்லை. வேண்டியவர்கள், தகுதிபெற்றவர்கள் ஏற்கப்படுகிறார்கள்.

**கே:-** அண்மையில் ஓர் இலங்கை அகதி திருப்பி அனுப்பப்பட்டார். இந்தியா போன்ற நாடுகள் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்பியிருக்கிறது. எங்களுக்குத் தெரிந்தவரை இலங்கையில் தமிழர் பாதுகாப்பு நிலை மோசமாகவே இருக்கிறது. இந்நிலையில் திருப்பி அனுப்பலாமா?

**பதில்:-** திருப்பி அனுப்பப்படுவோர் தம்மை அகதியென்று நிரூபிக்கத் தவறியவர்கள். ஸ்ரீலங்காவைப் பொறுத்தவரை 90 வீத அகதி உரிமை கோரியவர்கள் ஏற்றுக் கொள்ளப்படுகிறார்கள். அகதியுரிமை கோரும் நூறுவீதமானவர்கள் அகதிகளாக இருப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியுமா?

அகதிகள் வருகையை ஊக்குவிப்பது இரு சக்திகள். ஒன்று அவர்கள் நாட்டில் இருக்கும் நிலை. அது வெளியே தள்ளும் (Pushing Factor) சக்தி. நிலை மோசமாக மக்கள் வெளியேறத் தூண்டப்படுகிறார்கள். மறுபுறம் வரவேற்கும் நாடுகளின் சௌகரியமான நிலை, அது இழுக்கும் (Pulling Factor) சக்தி. இரு சக்திகளும் கூடித்தான் அகதிகளைக் குறிப்பிட்ட நாடுகளை நோக்கிச் செல்ல வைக்கின்றன.

**கே:-** அகதிகள் பற்றிய ஐக்கிய நாடுகள் சபை வரைவிலக்கணம் சில சந்தர்ப்பங்களில் குறுகிய வட்டத்தில் உள்ளோரை மட்டுமே ஏற்கிறது.

உதாரணமாக: "தனிப்பட்ட நபரின் உயிருக்கு, தகுந்த ஆபத்து இருக்கிறது என்று நிரூபிக்கும் நிலை இன்றைய மட்டக்களப்பு வாழ் தமிழர்களைப் பொறுத்த மட்டில் வித்தியாசமானது. எந்நேரமும் இனம் தெரியாதவர்களால் தமிழ் மக்கள் திடீரெனக் கொலை செய்யப்படலாம். நீங்கள் இதுபற்றி என்ன கூறுகிறீர்கள்?

**பதில்:-** அகதி உரிமை கோரி ஒருவர் வரும்போது அவரது தனிப்பட்ட பின்னணிகள் நன்கு ஆராயப்படுவது உண்மை. அதேவேளை செஞ்சிலுவைச் சங்கம் மனித உரிமை பிரகடனச் சங்கம் போன்ற பல நிறுவனங்கள்

மூலம் கிடைக்கப்பெறும் செய்திகளை ஆதாரமாக வைத்து அவ்வப் பிரதேச நிலைகளும் கவனத்தில் கொண்டு வரப்படும். உண்மையான அகதிகள் அச்சம் கொள்ள வேண்டிய அவசியமில்லை.

**கே:-** அகதி உரிமை கோருவோரில் சிலர் "பொருளாதார அகதிகள்" (Economic Refugees) எனக் கூறப்படுகிறார்கள். இலங்கைத் தமிழ் அகதி களைப் பொறுத்தவரை பலரும் மனநின்மதி இழந்து, மனமுடைந்து மனச் சிக்கலோடு, மனக்குளப்பத்தில் இருக்கிறார்கள். அவர்கள் கனடாவை நாடி வருவதின் அடிப்படை நோக்கமாக அமையக்கூடியது இந்நாட்டு அரசாங்கம் மட்டுமல்ல, கனேடிய மக்களின் தாராள மனப்பான்மை, இரக்க குணம், பரிதாபமான நோக்குமாகும். நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?

**பதில்:-** "பொருளாதார அகதிகள்" என்ற பதம் பத்திரிகைகளால் பெரும ளவு பாவிக்கப்பட்டு வருகிறது. அகதி உரிமை கோருவோரின் நிலையில் பொருளாதாரம் பின்னிக் கிடக்கலாம். அகதிகளாக உரிமை பெற, தகுதி உள்ளார்கள் என்பதே முக்கியமானதாகக் கருதப்படும்.

**கே:-** கனடாவில் வாழும் உரிமை பெற்றவர்கள் குடும்ப உறுப்பினரை வரவழைக்கும் முறையில் துரிதப்படுத்தும் முயற்சிகள் உண்டா? சிலர் நீண்ட காலம் எடுப்பதாக கருதுகிறார்கள்?

**பதில்:-** இம் முயற்சியில் சில மாற்றங்கள் ஏற்படுகின்றன. விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கு, பொதுவாக காலவரையறை அறியக்கூடிய நிலை இருக்கும். சில நாடுகளிலிருந்து நீண்ட காலம் எடுப்பதும் அங்குள்ள தூதுவராலயத்தில் இருக்கும் விண்ணப்பங்களின் தொகையையும் பொறுத் திருக்கிறது. குடும்பங்கள் இணைவதில் கூடிய அக்கறை காட்டப்படுகிறது. ஒன்ராரியோ குடிவரவுத் திணைக்களம் சில குறிப்பிட்ட விண்ணப்பங்களைக் குறிக்கப்பட்ட சில கால வரையறைக்குள் செய்வதற்கான ஒழுங்கு செய் திருக்கிறது.

**கே:-** எதிர்வரும் C.86 மசோதா பற்றிச் சில கேள்விகள் கேட்க ஆசைப் படுகிறேன். புதிய சட்டம் அமுலானால் கனடா எல்லையில் அகதி உரிமை கோருவோர் இரு அதிகாரிகளால் விசாரணை செய்து உள் நுழைய விட வோ அன்றி மறுக்கப்படவோ அதிகாரமும் கடமையும் பெறுகிறார்கள். நிராகரிக்கப்படுபவர்கள் மறு பரிசீலனைக்கு இடமுண்டா?

**பதில்:-** அவர்கள் தங்கள் மனுவைச் சமர்ப்பிக்கும் உரிமை இருக்கத் தான் செய்கிறது.

**கே:-** இன்று கனடாவிற்குள் வரும் அகதிகளில் மூன்றிலொருவர் அமெரிக்க எல்லையினூடாக வருகிறார்கள்.

மூன்றாவது பாதுகாப்பான நாடாக அமெரிக்கா இருக்கும்போது அமெ ரிக்க எல்லையூடாக வருபவர்கள் அமெரிக்காவிற்கே திருப்பி அனுப்பப்பட

லாமல்லவா?

**பதில்:-** இதில் ஓர் நியாயம் இருக்கிறது. கனடா, அமெரிக்காவுடன் இது பற்றி ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ள இருக்கின்றது. வேறு பாதுகாப்பான நாடுகளிலிருந்து கனடா வருபவர்கள் மீண்டும் அந்நாடுகளில் அகதி உரிமை கோரும் வாய்ப்பு இருக்குமிடத்து அங்கு அனுப்பப்படுவார்கள். புதிய சட்டம் மிகவும் திறமையான முறையில் செயல்பட இருக்கிறது. முதலாவது விசாரணையில் பெரும்பாலானோர் இன்று அங்கீகரிக்கப்படுகிறார்கள். இதனால், அதற்கு மாற்றுமுறையொன்றை ஏற்படுத்தி, செலவைக்குறைக்க முயற்சிகள் நடைபெறுகின்றன. உண்மையான அகதிகள் தரமான முறையில் வேகமாக அனுமதிக்கப்படுவார்கள்.

**கே:-** புதிய மசோதா நிரந்தர குடியுரிமை பெற்றவர் கூட ஒரு சட்ட விரோத நடவடிக்கைகளில் ஜனநாயகத்திற்குப் புறம்பான நடவடிக்கைகளில், பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டால் திருப்பி அனுப்பப்படுவார்கள் என்கிறது. விளக்கம் தருவீர்களா?

**பதில்:-** இந்நாட்டினுள் குற்றவாளிகள் எனக்கருதப்படுபவர்கள் வருகை தந்தால் அவர்கள் தகுந்த விசாரணையின் பின் திருப்பி அனுப்பப்படலாம். சட்டவிரோத நவடிக்கைகள் புரியும் அமைப்புக்களில் இருப்பவர்கள், அதன் நடவடிக்கைகளிலும் பங்கு கொண்டிருப்பார்கள் எனக்கருதலாம். நேரடியாகவோ, மறைமுகமாகவோ தொடர்பு இருக்கலாம். அவர்கள் எங்கிருந்து வந்தாலும் பரவாயில்லை, அவர்கள் மேல் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**கே:-** அகதி உரிமை கோருவோர் புகைப்படம், கை அடையாளம் பெறுவதின் அத்தியாவசியம் என்ன?

**பதில்:-** அகதிகளாய் வெளியேறுபவர்களிடம் உண்மையான பத்திரங்கள், சான்றிதழ்கள் அத்தனையும் இருக்குமென்று எப்போதும் எதிர்பார்க்க முடியாது. அகதிகளாய் வெளியேறுபவர்கள் பலதரப்பட்ட பத்திரங்களுடன் வருகிறார்கள் என்பதை நாம் அறிவோம். அவர்களின் உண்மையான அடையாளத்தைக்கண்டு பிடிப்பது எனது முக்கிய நோக்கம். அவ்வாறு கண்டு கொண்டால் தான் குற்றம் புரிந்தவர்கள், பொதுநலனுக்கு மாறுபட்டு நடந்தவர்களை அடையாளம் காண முடியும்.

**கே:-** தொழிற்சங்கங்களில் அங்கத்தவர்களாக இருப்பவர்கள், தொழிற்சங்க நடவடிக்கைகளில் தவறுதல்கள் செய்தால் திருப்பி அனுப்பப்படலாம் எனப்படுகிறது ஏன்?

**பதில்:-** இது மிகைப்படுத்திக் கூறப்பட்ட கருத்தாகும்.

**கே:-** பொதுவாக, புதிய குடிவரவுச்சட்டம், நிரந்தரவதிவுரிமை கோருவோர், அகதிகள் ஆகியோருக்கு எவ்வாறு உதவியாக இருக்கும்?

**பதில்:-** புதிய சட்டம் பாரபட்சமற்றது, திறம்படச் செயற்படவல்லது. முன் உதாரணமான குடிவரவுச்சட்டமாக அமையவிருக்கிறது.

**கே:-** எமது வாசகர்களுக்கு கனடா வாழ் இலங்கைத்தமிழர்களுக்கு என்ன கூற விரும்புகிறீர்கள்?

**பதில்:-** இலங்கைத்தமிழர் கனடாவில் முக்கியத்துவம் பெற்று வருகிறார்கள். அவர்கள் முன்னேற்றத்தில் பெரிதும் அக்கறை காட்டுகிறோம். புதிய சட்டத்தில் காட்டும் அக்கறையை பாராட்டுகிறேன். இப்பேட்டியைப் பாராட்டுகிறேன். இப்பேட்டியை நடத்தியமைக்கு எனது நன்றியையும் தெரிவிக்கிறேன்.

# பேட்டி 2

**கேள்வி:-** குடிவரவுத்துறை அமைச்சர் புதிய குடிவரவுச்சட்டத்தை அறிமுகம் செய்து வைக்கும் காலங்களில் கனடிய மக்கள் மனிதாபிமானமும், தாராள மனப்பான்மையும் கொண்டவர்கள், ஆனால், நாங்கள் எங்கள் மேல் யாரும் சவாரி செய்வதை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை எனக்குறிப்பிட்டிருந்தார். இக்கூற்றின் உட்கருத்து என்னவென்று நீங்கள் கருதுகிறீர்கள்?

**பதில்:-** அமைச்சர் இவ்வாறு கூறியது எனக்கு ஞாபகத்தில் இருக்கிறது. இன்று கனடாவில் நடைமுறையில் இருக்கும் அகதிகள் பற்றிய சட்டத்தின் கீழ்- பலர் கனடிய எல்லையிலும், விமான நிலையங்களிலும் வந்து அகதியுரிமை கோருகிறார்கள். அவர்களில் பெரும்பான்மையினர் உண்மையான அகதிகள், அவர்கள் கனடாவிற்கு வரவேண்டிய வசதிகளைத்தேடிய பின் இங்கு வருகிறார்கள், இவர்களில் ஒரு பகுதியினர் அகதியுரிமை கோரக்கூடிய நாடுகளூடாகவும் இங்கு வருகிறார்கள். அவர்கள் அந்நாடுகளில் அகதியுரிமை கோரமுடியும். நாங்கள் எங்கள் நாட்டிற்குரிய அகதிகள் தொகையை நாமாகவே தெரிவு செய்ய விரும்புகிறோம். அகதிகள் தாங்களாகவே அகதியுரிமை கோரவரும், நாட்டைத் தெரிவு செய்துவர ஏற்ற வண்ணம் இருப்பதா? உதாரணமாக: அமெரிக்காவூடாகப் பலர் கனடாவை நோக்கி அகதியுரிமை கோர வருகிறார்கள். அமெரிக்க நாடும் பெருமளவு கனடாவைப்போன்று அகதிகள் பற்றிய திட்டத்தைக் கொண்டிருக்கிறது. அவர்கள் அங்கு அகதியுரிமை கோரமுடியும் என்பது உங்களுக்கு நன்கு தெரியும். கனடா உலகில் தலை சிறந்த அகதிகள் திட்டத்தை அமுலாக்கி வருகின்றதென்பதனால் அவர்கள் எங்கள் நாட்டை நாடி வருகிறார்கள் என்பதில் நாம் நன்கு பெருமைப்படுகிறோம். மறுபுறம் அகதி உரிமை கோருபவர்கள் ஒரு புகலிடத்தை நாடுவது இயல்பு. ஆனால், அவர்கள் அகதி உரிமை கோரி, தாங்களாகவே அகதியாகப் போகும் நாடுகளைத் தெரிவு செய்துபோக வேண்டியதில்லை. அவர்கள் வரும் நாடுகளில் எத்தனையோ அகதிகள் பிரயாணச் செலவுக்கு வசதியின்றி அங்கு இருக்கிறா

ர்கள். அவர்கள் நலனையும் நாம் கருத்திற் கொள்ள வேண்டும்.

**கே:-** பழைய குடிவரவுச் சட்டம் 1986ல் அறிமுகமாகி, சுமார் இரு ஆண்டுகள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டு முழுமையாக அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. ஆனால், இப் புதிய திருத்தச் சட்டமோ சென்ற ஜுலை 1992ல் அறிமுகமாகி, சுமார் ஏழு மாதங்களுக்குள் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. குறுகிய கால எல்லைக்குள் அமுலுக்கு வருவதால் பல முக்கிய அம்சங்கள் சரியான முறையில் கவனிக்கப்படாமல் விடுபடும் அல்லவா? இவ்வாறு துரிதப்படுத்துவதின் நோக்கம் என்ன?

**பதில்:-** கடந்த ஏழு மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட பரிசீலனையில் பாராளுமன்றம், செனட்சபை, செய்தி ஸ்தாபனங்கள், பொதுமக்கள் பெரும் பங்கு எடுத்துக் கொண்டனர். இக் கால எல்லைக்குள் அசல் மசோமதாவில் பல மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. இம் மாற்றங்கள் மக்களின் வேண்டுகோள்களைப் பிரதிபலிக்கக் கூடியனவாக இருக்கின்றன. அத்தகைய மாற்றங்களில் சிலவற்றை உங்களுக்குக் கூற விரும்புகின்றேன்.

அகதி உரிமை கோரும்போது எடுக்கப்படும் கைவிரல் அடையாளம், படம், அசல் மசோதாப்படி நிரந்தரமாக இருக்க வேண்டியவை. அவை கனேடியப் பிரஜாவுரிமை பெறும்போது திருப்பி எடுக்கப்படும்

அடுத்த முக்கிய அம்சமாவது: அகதிகளாக வருபவர்களில் எவராவது தமது சொந்த நாட்டில் குற்றம் புரிந்தவர்களாகக் கருதப்பட்டாலும் அவர்கள் இந்நாட்டில் அகதிகளாக ஏற்கப்படும் வேளை இந்நாட்டுச் சட்டப்படி அவர்கள் குற்றம் புரியாதவர்களாகக் கருதப்பட்டால் அவர்கள் எவ்வித தண்டனையையும் ஏற்க வேண்டியதில்லை.

**கே:-** ஆம். ஆம். உதாரணமாக சாரியா என்ற இஸ்லாமியச் சட்டம் அமுலாக்கப்பட்டிருக்கும் இஸ்லாமிய நாடுகளில் ஒரு பெண்ணைத் தொட்டுப் பேசிக் கதைத்தால் குற்றமாகக் கருதப்படுகிறது. ஆனால், கனடாவில் இச் செயல் குற்றமாகக் கருதப்படவில்லையே.

**பதில்:-** அது சரி. சட்டங்கள் வேறுபட்டன. மற்றுமொரு மாற்றத்தையும் கூறிக் கொள்கிறேன். புதிய அசல் மசோதாப்படி கனடாவிற்குள் வரும் அகதிகளில் தடுத்து நிறுத்தப்பட்டு வைக்கப்படுபவர்கள் 28 நாட்களில் விசாரணைக்கு ஆஜராக வேண்டியிருந்தது. புதிய திருத்தத்தின்படி 48 மணித்தியாலங்களில் ஆஜராக்கப்படுவர். வேகமாக நடவடிக்கைகள் எடுக்கப்படும். அகதிகளாக அவஸ்தைப்பட்டு வருவோர் எல்லோரும் தமது சொந்தப் பத்திரத்துடன் வருவார்கள் என எதிர்பார்க்க முடியாது. பலர் போலிப் பத்திரங்களில் வருவதும், சிலர் அவற்றைக் கிழித்து எறிவதும் தெரிந்த விடயமே. சொந்த நாட்டு அரசாங்கத்தில் நம்பிக்கை இழந்தவர்கள் நிஜமான முழுப் பத்திரங்கள் பெற்று வருவது சில வேளைகளில் சாத்தியமற்றுப் போகலாம். இவ்வாறான போலிப் பத்திரங்களில் வருபவர்கள் தண்டனைக்குள்ளாவார்கள் எனக் கருதி, கிழித்தெறிய வேண்டிய அவசியம் இல்லை.

**கே:-** புதிய சட்டமாற்றம் பின்நோக்கி (Retroactive) அமுலாக்கப்படுகிறது.

அப்படியானால், எத்தகையவர்கள் எதற்குள் அடங்குகிறார்கள். விசாரணை நடுவில் உள்ளவர்கள், "பாக் லொக்" இல் (Back Log) உள்ளவர்கள் நிலையில் என்ன மாற்றங்கள் ஏற்பட இருக்கின்றன?

**பதில்:-** இது சம்பந்தப்பட்ட முழு நுணுக்கமான விபரங்கள் தற்போது தரும் நிலையில் இல்லை. சிறிலங்கா அகதிகளைப் பொறுத்தவரை முதலாவது விசாரணையில், பொதுவாக எல்லோரும் ஏற்றுக் கொள்ளப்படுகிறார்கள். இவர்கள் மேற்கொண்ட விசாரணைகள் துரிதப்படுத்தப்படவுள்ளன. அவர்களைப் பொறுத்தவரை அடிப்படை மாற்றங்கள் ஏற்படப் போவதில்லை.

**கே:-** "பாக்லொக்" ன் கீழ் சிலர் 1986ல் கனடாவிற்குள் நுழைந்து அகதி உரிமை கோரி இன்று வரை நிரந்தர வதியுரிமைப் (Landed) பத்திரம் பெறாமல் இருக்கிறார்கள். மற்றும் சிலர் விசாரணை முடிந்து லான்டட் பெற பணமும் கட்டிக் காவல் இருக்கிறார்கள். அவர்கள் நிலை பற்றிப் புதிய மாற்றங்கள் ஏதாவதுண்டா?

**பதில்:-** முதலாவதாக, கடந்த டிசம்பர் 31ஆம் திகதி, 1992ல் இருந்து பாக்லொக் என்பது எடுக்கப்பட்டுள்ளது. அடுத்ததாக கடந்த பல மாதங்களாகப் பெருமளவு முயற்சி செய்து, இவர்கள் நிலை என்ன என்பது தீர்மானிக்கப்பட்டது. அவர்களை அகதிகளாக ஏற்றிருப்பதால் நாம் ஓர் கடமைப்பாட்டைப் பெற்றிருக்கிறோம். அவர்கள் இருக்கையை உறுதிப்படுத்துகிறோம். எனவே, அவர்கள் அதிகம் யோசிப்பதற்கில்லை. எதிர்வரும் சில மாதங்களுக்குள் அவர்கள் பற்றிய விடயங்கள் முழுமை பெற்றுவிடும். பெரும்பாலும் சில மாதங்கள் எடுக்கலாம். மற்றுமொரு முக்கிய அம்சம் என்னவென்றால், நீண்ட காலமாகக் குடிவரவுத் திணைக்களத்திலிருந்து எதுவிதத் தொடர்புமற்ற நிலையில் உள்ளவர்கள் ஒரு குறிப்பிட்ட திகதிக்குள் தொடர்பு கொள்ளத் தவறியவர்கள் நிலை வேறு.

**கே:-** முதல் விசாரணை அகற்றப்படுகின்றது. இதன் விளைவாக குடிவரவுத்துறையில் பல அதிகாரிகள், சாதனங்கள், சக்திகள் தேங்கியிருக்கப் போகின்றன. இவர்கள் அகதிகள் விசாரணைகளைத் துரிதப்படுத்தப் பாவிக்கப்படுவார்களா? அல்லது வேறு துறைகளுக்கு மாற்றப்படுவார்களா?

**பதில்:-** இரண்டும் நடைபெற இருக்கின்றன. ஒரு பகுதியினர் அகதிகள் விசாரணை சம்பந்தப்பட்ட துறையில் ஈடுபடுவர். மற்றுமொரு பகுதியினர் குடிவரவுத் துறையிலேயே வேலை சம்பந்தப்பட்ட மற்றும் பிரிவுகளில் பணியாற்றுவர். இன்னுமொரு பகுதியினர் மத்திய அரசின் வேறு திணைக்களங்களுக்குச் சென்று பணி புரிவர். சிலர் குற்றங்கள் சம்பந்தப்பட்ட விசாரணைகளில் புதிய அகதிகள் விசாரணை துரிதப்படுத்தப்படும் சாத்தியக்கூறுகள் உள்ளன.

**கே:-** அமெரிக்கா பாதுகாப்பான மூன்றாவது நாடாக இருப்பதால், அமெ

ரிக்கா மூலம் எப்படி அகதிகள் கனடாவிற்குள் அனுமதிக்கப்படுவார்கள்?

**பதில்:-** நீங்கள் குறிப்பிட்டது போல அமெரிக்கா மூன்றாவது பாதுகாப்பான நாடாக அவர்களுக்கு அமைவதென்பது உண்மையே. ஆனால், அகதிகள் அமெரிக்க எல்லையூடாகக் கனடா வந்ததும், அமெரிக்காவுக்குத் திருப்பி அனுப்பப்படுவார்கள் என்பதற்கில்லை. கனடாவும் அமெரிக்காவும் இதுபற்றி ஒரு ஒப்பந்தத்தை உருவாக்கிக்கொண்டிருக்கிறது. அந்த ஒப்பந்தம் முழுமையாக கைச்சாத்திடப்படும்வரை அகதிகள் அமெரிக்காவிற்கு, திருப்பி அனுப்பப்பட, சாத்தியக்கூறுகள் இல்லை. இந்த ஒப்பந்தம் தற்போதைய புதிய அமெரிக்க ஜனாதிபதி பதவிப் பிரமாண ஒழுங்குகளால் சற்று வேகம் குறைந்துள்ளது. வெகுவிரைவில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படலாம். அதன் பின்னர், அமெரிக்க எல்லையூடாக, கனடா நுழையும் அகதிகள் தொகை நிச்சயம் மட்டுப்படுத்தப்படும்.

**கே:-** அப்படியானால் ஒரு குறிப்பிட்ட கால வரையறைக்குள் அகதிகள் அமெரிக்க எல்லையூடாக கனடா நுழையலாம் தானே?

**பதில்:-** ஆம், ஆனால், ஒப்பந்தம் எப்பவும் கைச்சாத்திடப்பலாம். நடைமுறைக்கு கொண்டுவரப்படலாம்.

**கே:-** அமெரிக்க - கனடிய ஒப்பந்தம் மேற்கு ஐரோப்பிய நாடுகள் ஏற்படுத்திய டபிளின் ஒப்பந்தம் போன்றதா? டபிளின் ஒப்பந்தப்படி எந்த அகதி முதலில் எந்த மேற்கு ஐரோப்பிய அங்கத்துவ நாட்டில் கால் வைக்கின்றாரோ அங்குதான் அகதி உரிமை கோர, கடமைப்பட்டிருக்கிறார். அவ்வாறான ஒப்பந்தமா?

**பதில்:-** டபிளின் உடன்படிக்கை, உருவாகும் கனேடிய அமெரிக்க உடன்படிக்கையின் சாயலைக்கொண்டது. இரண்டும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியான உடன்படிக்கைகள் தான். அகதி ஒருவர் ரான்சிற்றாக ஒரு அங்கத்துவ நாட்டில் இறங்கி இன்னொரு அங்கத்துவ நாட்டிற்கு அகதி உரிமை கோரச் சென்றால் அவர் முதலில் காலடி வைத்த நாட்டில் அகதியுரிமை கோர வேண்டும். இது அகதிச் சந்தையில் (Asylum Shopping) தேடித் திரியாமல் இருக்க வைக்கிறது. ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் ஒரு பொதுவான அகதிகள் பற்றிய நிலையை ஏற்படுத்தியும் வருகின்றன.

**கே:-** பிரான்ஸில் அகதிநிலை கோர எண்ணி பெல்ஜியத்தின் ஊடாக வருபவர் பெல்ஜியத்தில் அகதிநிலை கோர வேண்டப்படலாம். முன்னர் குறிப்பிட்டது போல கனடா அகதிகளுக்கு காட்டும் ஒரு கருணையை, அமெரிக்கா காட்டும் என்று கருத முடியவில்லை. கனடாவில் அகதியாக ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய ஒருவர் அமெரிக்காவினால் நிராகரிக்கப்பட்டுத் திருப்பி அனுப்பப்படலாம்?

**பதில்:-** எனக்கு அமெரிக்கா எவ்வளவு வீதம் அகதிகளை ஏற்றுக்கொள்கிறார்கள் என்று தெரியாது. ஆனால், இலங்கை அகதிகளைத் திருப்பி,

அங்குள்ள இன்றைய நிலையில் அனுப்பி வைக்கப்படுவார்கள் என நான் நம்பவில்லை. அவர்களின் அகதிகள் திட்டம், கிட்டத்தட்ட எமது திட்டத்தைப் போன்றது. கனடா போல நிரந்தர குடியுரிமை, பிரஜா உரிமை வழங்காவிட்டாலும் பல ஆண்டுகளில் அகதி உரிமை வழங்கப்படுகிறது. அகதி உரிமையை மட்டும் வழங்கும் நாடுகள், அகதிகளின் சொந்த நாட்டில் நிலைமை சீராகும்போது அங்கு திருப்பிப் போகவேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறார்கள். இது அகதிகளின் ஆபத்தான நிலையிலிருந்து அவர்களைக் காப்பாற்றும் அடிப்படை நோக்கத்தை மட்டுமே பூர்த்தி செய்கி றது. கனடாவோ அகதி உரிமை வழங்குவதோடு நிரந்தரக்குடியுரிமையும் தகுதியானவர்களுக்குத் தொடர்ந்து வழங்குகிறது என்பதும் குறிப்பிடத் தக்கது.

**கே:-** புதிய சட்டம் அகதிகளின் ஆரம்பக்கட்டத்தில் மிகவும் கடுமையாக இருக்கிறது. அகதிகள் அடையாளம் காண அவர்கள் உடமைகள் பிரித்துப் பார்க்கப்படுகிறது. பத்திரங்கள் சோதிக்கப்படுகின்றன. சில பத்திரங்கள் தற் காலிகமாகப் பறிமுதல் செய்து கொள்ளப்படுகிறது. படமெடுக்கப்படுகிறது. கைவிரல் அடையாளம் இன்னொரு புறம். இந்நிலையில் அகதிகளால் தமது சோகக்கதையைத் தெளிவாகக் கூற முடியுமா?

**பதில்:** அகதிகள் எல்லைப்புறத்திலோ, விமான நிலையத்திலோ சிரேஷ்ட குடிவரவு அதிகாரியைச் சந்திக்கும் போது தமது கதைகளைச் சொல்ல வேண்டியதில்லை. சிரேஷ்ட அதிகாரி கனடாவில் நுழையும் அகதியுரிமை கோருவோரின் அடையாளத்தைக் காண்பதில் முதலில் கவனம் செலுத்து கிறார். அகதிகள் போர்வையில் குற்றவாளிகள் வருகை தருவது, ஏற்கனவே கனடாவில் அகதிகளாக ஏற்கப்பட்டவர்கள், மீண்டும் அகதி உரிமை கோரு வது ஏனைய நாடுகளில் அகதிகளாக அங்கீகாரம் பெற்றவர்கள் இங்கு வரு கை தருவதையும் தடுத்து நிறுத்தவும் கடமைப்பட்டிருக்கிறோம். அந்த நிலையில் சிரேஷ்ட அதிகாரி, இவர்கள் கதையினைக் கேட்டுத்தீர்ப்புக் கூறுமளவிற்கு இல்லை. அவர் எடுப்பது அகதியாக உரிமை கோர விடலா மா? இல்லையா, என்ற முடிவு மட்டும் எடுக்கிறார். அகதி உரிமை சட்டத்தி னை, சரியான முறையில் உண்மையான அகதிகள் பயன்படுத்திக்கொள்ள ஒரு வாய்ப்பை நல்ல முறையில் பெறமுடிகிறது

**கே:-** அப்படியானால் கனடாவிற்குள் நுழையும் அகதிகள் தொகை பெருமளவு குறையும் எனக்கூற முடியாதுதானே?

**பதில்:** தொகை கூடவும் முடியும். முதல் விசாரணையில் 95 வீதமா னோர் ஏற்றுக் கொள்ளப்பட்டனர். தற்போது அகதி உரிமை கோர, தகுதி பெற்ற அத்தனைபேரும் நுழைய விடப்படுகிறார்கள். விமான நிலையம் ஊடாக வருவோர் தொகையில் மாற்றம் அதிகம் இருக்காது. அமெரிக்கா வுடன் ஒப்பந்தம் செய்யப்பட்ட பின்னரே எல்லைப்புறத்தால் வருவோர் தொகை மட்டுப்படுத்தப்படும்.

225266

## இலங்கைத்தீவில் தமிழர் படும் கஷ்டங்கள்.

**கே:** நான் குறிப்பாக எமது மக்களின் நிலை பற்றிக் கூற, இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த விரும்புகிறேன். முதலில் எம் நிலைபற்றிக் கூற முன் கனேடிய அரசும், கனேடிய மக்களும் எமக்கு கனடாவினுள்ளும், வெளியிலும் எமது மக்கள் கஷ்டங்களை நீக்க, செய்துவரும் உதவிகளுக்கு நாம் என்றென்றும் கடமைப்பட்டிருக்கிறோம். அண்மையில் ஒட்டாவா கனேடிய குடிவரவுத் திணைக்களத்தோடு தொடர்பு கொண்டபோது ஆண்டு ஒன்றிற்கு (1992) கனடா சராசரியாக ஏற்றக்கொண்ட அகதிகள் வீதம் 57 ஆக இருக்க, சிறிலங்கா அகதிகளின் வீதம் 93.7 என்று கூறப்பட்டது. மீண்டும் எமது நன்றியை தெரிவித்து விட்டு ஸ்ரீலங்கா நிலையை நோக்குவோம்.

அண்மையில் "சிறிலங்கா அகதிகளை உற்பத்தி செய்யும் நாடல்ல" என்று கூறப்பட்டிருந்ததை நீங்கள் அறிவீர்கள். அக்கனவு நனவாகுமேயானால் நாம் மிகவும் திருப்தி அடைவோம். ஆனால், அண்மையில் சுமார் 50ற்கு மேற்பட்டவர்கள் யாழ் குடாநாட்டிலிருந்து கொழும்பை நோக்கிப் படகுகள் மூலம் பிரயாணம் செய்து கொண்டிருந்தனர் இவர்களில் பெண்கள், முதியோர், சிறிய குழந்தைகளும் இருந்தனர். கடற்படையினர் அவர்களில் பலரைக்கொன்று குவித்தனர். அவ்வாறு கொல்லப்பட்ட ஒரு பெண்ணின் கணவன் கனடாவில் அகதி உரிமை கோரியிருக்கிறார். அவரைப் பேட்டி கண்டபோது தனது மனைவி 26 வயதுடையவள். இரண்டரை வயதுக் குழந்தைக்குத் தாய். இவர் கொழும்பு சென்று கொண்டிருந்த போது இராணுவத்தினரால் தாக்கப்பட்டார். குறை உயிருடன் இருந்த இவரை ஆஸ்பத்திரியில் சுடுகாயம் மட்டுமல்ல கால்களில் கீறப்பட்ட காயங்களுடனும் அனுமதிக்கப்பட்டு, பின்னர் காலமானார் என்றும் குழந்தையின் கதி என்னவென்று தெரியவில்லை என்றும் கூறினார். இவ்வாறு ஆயிரக்கணக்கான மக்கள் அங்கு வாழ்கிறார்கள். இந்நிலையில் மாற்றம் காணப் புதிய திட்டமேதுமுண்டா?

**பதில்:** முதலில் எங்களைப் பொறுத்தவரை, பல கோணங்களிலிருந்து செய்திகள் கிடைக்கின்றன. அத்தோடு சர்வதேச மனித உரிமைப் பிரகடனம், செஞ்சிலுவைச் சங்கம் போன்ற நிறுவனங்களும் உரிய விடயங்களை வெளிப்படுத்துகின்றன. நாங்கள் கூடியவரை அகதிகளைக் காப்பாற்றப் பல உதவிகளைத் தொடர்ந்து செய்து வருகிறோம். மேற்கொண்டு ஏதாவது திட்டங்கள் கருத்துக்கள பற்றி என்னால் கூற முடியாது. அது பற்றி குடிவரவுத்துறை அமைச்சர், வெளிநாட்டுத்துறை அமைச்சர் போன்றோர் அலுவலகம்தான் பதில் கூறமுடியும்.

**கே:** தமிழர் தம் பாரம்பரிய மண்ணில் போர், ஷெல்லடி காரணமாகப் பல விவசாயிகள் வேளாண்மை செய்யமுடியாது இருக்கிறார்கள். மழைகாலங்களில் அசுத்தமான நீரை அருந்தி வயிற்றோட்டம் காரணமாக இறக்கிறார்கள். போதிய மருந்து வசதியின்றி உயிர் விடுகிறார்கள். இந்நிலை

நீடிக்குமானால் அப்பிரதேசங்கள் இன்னொரு சோமாலியாவாகலாம் என்று சிலர் அச்சம் தெரிவிக்கிறார்கள். அந்நிலையைத் தடுக்க ஏதும் நோக்க முண்டா?

**பதில்:** இக்கேள்விக்கும் கூட அமைச்சர் அலுவலகமே பதில் கூற முடியும்.

**கே:** நிராகரிக்கப்பட்ட அகதிகள் கனடாவை விட்டு வெளியேறி 90 நாட்க ளின் பின்னர் மீண்டும் அகதி உரிமை கோரமுடியும் என்ற நிலை புதிய சட்டத்தின் கீழ் இருக்கின்றதா? நடைமுறையில் ஏதும் பலன் ஏற்படுமா?

**பதில்:** அவ்வுரிமை தொடர்ந்து இருக்கிறது. ஆனால், நிராகரிக்கப்பட்ட அகதியின் பாதுகாப்பிற்கு மாற்றங்கள் ஏற்படாவிட்டால் நடைமுறையில் மாற்றங்கள் காணப்படும் என்பதற்கில்லை. அவர் முன்னைய விசாரணை முடிவுகள் ஒருபுறம் இருக்கின்றது.

**கே:** அண்மையில் ரினிடாட்டியனைச் சேர்ந்த பெண் ஒருத்தியின் அகதி யுரிமை நிராகரிக்கப்பட்டு நாட்டை விட்டு வெளியேற வேண்டப்பட்டார். இது பற்றி நான் உங்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டது ஞாபகத் தில் இருக்கலாம். அவரின் கனடாவில் பிறந்த பிள்ளை கனேடிய பிரஜை யாக இருக்கும் போது தாய் வெளியேற்றப்படுகிறார். தற்செயலாகத் தாயும் தந்தையும் அகதியுரிமை கோரி, இருவரதும் விண்ணப்பம் நிராகரிக்கப்படு மேயானால் அவர்களுக்கு, கனடாவில் பிள்ளை பிறந்திருந்தால் அப்பிள் ளையின் கெதியென்ன?

**பதில்:** ரினிடாட்டியன் விடயத்தில் தாய், பிள்ளையைச் சேர்த்துக்கொள்ள விரும்புகின்றார். அவரது பிள்ளை கனேடிய பிரஜை. அதனால், தாயும் இங்கு இருக்க உரிமையுண்டு என்பதல்ல. தாயை, பிள்ளை பெரியவரான பின்பு ஸ்பொன்சர் செய்து கூப்பிடுவது சாத்தியமானது. நீங்கள் குறிப்பிட்ட தாய், தந்தையர், நிராகரிக்கப்பட்ட நிலையில் இருக்குமிடத்து பிள்ளை தனி யாகும் நிலைமை அரிது. பெற்றோர் விட்டுப்போகும் நிலை ஏற்படுமேயா னால் அப்பிள்ளையை பேணிக்காக்க வழி வகைகள் ஏற்படுத்தப்படும்.

**கே:** புதிய சட்டமாற்றம், கனடாவிற்கு வரவிருக்கும் அகதிகள், மற்றும் முதலீடு செய்பவர்கள் எனப்பலரினையும் மூன்று தரமாகப் பிரித்து முக்கி யத்துவம் கொடுத்துப் பரிசீலனை செய்யப்பட இருக்கிறதாக அறிந்தேன். அதில் முதல் தரத்தில் அகதிகள், குடும்ப இணைவு சம்பந்தப்பட்டவர்க ளும் சேர்க்கப்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரியது. எவ்வித மாற்றம் இப்பரிசீல னையில் ஏற்படும்?

**பதில்:** இவர்கள் வெகு வேகமாகத் தம் முடிவுகளைப்பெற முடியும். அது மட்டுமன்றி அங்கீகாரம் பெறும் அகதிகள் முன்புபோல் தாம் நிரந்தரக குடியுரிமை பெற்று, தம் குடும்பத்தினரை வரவழைக்கும் திட்டம் மாற்றி

யமைக்கப்பட்டு அவர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்போதே அவர்கள் குடும்பத்தினரை ஸ்பொன்சர் செய்யும் வசதிகள் செய்து தரப்படும். அதனால், அகதிகள் தம்மை இலகுவாக ஸ்திரப்படுத்திக் கொள்ள முடியும். இப்பரிசீலனை மாதக்கணக்கில் நடைபெறும் சாத்தியக்கூறு தென்படுகிறது. சகோதர சகோதரிகள் கனடாவிற்கு வர, முன்புபோல் சகோதரரை ஸ்பொன்சர் செய்யக்கூடிய வாய்ப்புகள் மட்டுப்படுத்தப்படுகின்றன. அவர்கள் கனடா வர வேண்டுமானால் தாமாக அனுமதிகோரி விண்ணப்பிக்கவேண்டும். அவர்கள் சகோதரர் இங்கு வசிப்பார்களேயானால் சற்று சலுகைகள் மட்டுமே வழங்கப்படும்.

**கே:** நிராகரிக்கப்பட்ட அகதிகள் இங்கிருப்பார்களேயானால். அவர்களை சகோதரர்கள் இங்கு நேரடியாக ஸ்பொன்சர் செய்ய முடியாதென்கிறீர்களா?

**பதில்:** மனிதாபிமான அடிப்படையில் சில வாய்ப்புக்கள் இருக்கக்கூடும். ஆனால், சகோதரர் என்ற முறையில் நேரடியாக ஸ்பொன்சர் செய்யும் வாய்ப்பு மட்டுப்படுத்தப்பட்டே இருக்கிறது.

நீங்கள் கேட்காத மற்றுமொரு விடயம் பற்றி இங்கு குறிப்பிட விரும்புகிறேன். டான்டட் காட் வழங்கும் முறை எல்லோருக்கும் விஸ்தரிக்கப்படவிருக்கிறது. பத்திரங்களுக்குப்பதில் வெகுவிரைவில் கார்ட் வழங்கப்படும். 1994ம் ஆண்டு நடுப்பகுதியில் பத்திரங்கள் மீளப்பெற்று கார்ட் வழங்கப்படஇருக்கிறது.

**கே:-** சென்ற முறை கேட்ட அதே கேள்வியை இம்முறையும் கேட்க விரும்புகின்றேன். இலங்கை மக்கள் கனடாவில் எவ்வாறு இருக்கிறார்கள்?

**பதில்:-** சிறிலங்கா மக்கள் கனடாவில் வேகமாக முன்னேறுகிறார்கள். அதற்கு எடுத்துக்காட்டாக அவர்கள் வந்த ஆரம்பகாலத்தில் அவர்களுக்கென ஒரு பத்திரிகை இருக்கவில்லை. இன்று உங்களது பத்திரிகை போன்ற பல பத்திரிகைகள் வெளி வருவது நல்ல அறிகுறி. சிறிலங்கா மக்கள் விழிப்புணர்ச்சியோடு தங்கள் கலாச்சாரத்தையும் பேணி, கனடிய வாழ்க்கை முறையோடு இணைந்து வாழ்கிறார்கள்.

## 21ம் நூற்றாண்டில் கனடிய குடிவரவு

கனடா தனது புதிய குடிவரவாளர்களின் நுழைவாயிலை முற்றாக மூடுமேயானால், 175 ஆண்டுகளுக்குப் பின் கனடாவில் மனித நடமாட்டமே இருக்க மாட்டாது. கனடா தனது ஆட்பலத்தின் கணிசமான அளவு தொகையை, புதிய குடிவரவாளர்கள் மூலம் பெற்றுப் பயனடைந்து வருகிறது. கனடிய பொருளாதாரத்தை நெறிப்படுத்த, புதிய குடிவரவாளர்களின் பங்களிப்பு அளப்பரியது என்பதைக் கனடிய முன்னாள் பிரதமர்கள் பலர் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். இன்றைய கனடிய பிரஜா உரிமை, குடிவரவு அமைச்சர் தனது 21ம் நூற்றாண்டிற்கான திட்டம் பற்றிக்குறிப்பிடுகையில், புதிய குடிவரவாளர் பங்களிப்பை நன்கு மதித்துப்பாராட்டியிருக்கிறார். எனவே, கனடிய நுழைவாயில் முற்றாக மூடப்படப்போவதில்லை.

ஆனால், கனடிய அரசு கனடாவிற்குள் நுழையவிருக்கும் மக்கள் தம் கல்வித்தகமை, பொருளாதார நிலை ஆகியனவற்றைப் பார்த்துக் கொள் வதில் கூடிய கவனம் செலுத்த உள்ளது. கனடிய அரசு புதிய குடிவரவாள ரை ஏற்றுக்கொள்ளும் போது அவர்களால் பெருமளவு பொருளாதார நல-னைப் பெறவும் விரும்புகிறது. இதனை "21ம் நூற்றாண்டிற்கான குடிவரவு, பிரஜாவுரிமை நெறி" எனும் (Into the 21st century, A strategy for Immigration and Citizenship) வெளியீட்டில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

"கனடா பெருந்திரளான சாதாரண தொழிலாளிகளை எதிர்பார்த்த நாட் கள் போய்விட்டன. இன்று கனடாவிற்கு, தொழிற்திறனும், கல்வி அறிவு கொண்டவர்களும், வேகமாக மாறும் தொழிலாளர் சந்தையின் சூழலுக் கேற்ப தம்மை மாற்றியமைக்கக்கூடியவர்களும் வேண்டப்படுகிறார்கள்" கனடா புதிய குடிவரவாளர்கள் விடயத்தில் முன்பு விவசாயம், சுரங்கம், ரெயில் பாதைகள், தொழிலாலைகள் ஆகியவற்றில் வேலை செய்ய, பல சாதாரண தொழிலாளர்களை வரவழைத்து அண்மைக்காலங்களிலும் கூட, கட்டிடம், பாலம், வீதி அமைத்தல் போன்ற துறைகளில் புதிதாக வந்த போர்த்துக்கேயரும், இத்தாலியரும் பெருமளவில் தொழிலாளிகளாக வேலை செய்து வருகிறார்கள்.

ஆனால், இன்றைய உலக பொருளாதார நிலையில் பல அடிப்படை மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஐரோப்பிய ஒன்றியம் விரிவடைந்து வரு கின்றது. பல புதிய ஐரோப்பிய நாடுகள் அங்கத்தவராகச் சேர்ந்த வண் ணம் இருக்கின்றன. இந்நாடுகள் புதிய ஒருங்கிணைக்கப்பட்ட பொருளா தார திட்டங்களின் மூலம் இன்றைய உலகில் வேகமாக வளர்ந்து வரும் சக்தி மிக்க பொருளாதார ஸ்தானமாக அமைந்து கொள்கிறது. கிழக்கு ஐரோப்பிய நாடுகள் இவ்வமைப்பின் கீழ் நுழையத்துடியாய்த் துடிக்கின்றன. பொதுவுடமை ஆட்சி தளர்த்தப்பட்டபின் இந்நாடுகள் தனியார் துறைப் பொருளாதாரத்தில் நாட்டம் காட்டி வருகின்றன. இந்நாடுகள் மலிவான ஆட்பலத்தை வழங்குவதோடு பெரிய சந்தையையும் வழங்குகின்றன. கனடாவில் இருந்தும்கூட பல ஐரோப்பிய கனடியர்கள் தம் முதலீட்டுடன் ஐரோப்பிய ஒன்றியத்தில் முதலிடச் செல்கிறார்கள். சிறு மீன்களாக இங்கே வந்தவர்கள் பெரு மீன்களாக வளர்ந்தும் வந்த நிலையில் திரும்பிச் செல்கி றார்கள்.

மறுபுறம் கிழக்கு, தென்கிழக்கு ஆசிய நாடுகள் பலம் மிக்க பொருளா தார நிறுவனமாக வளர்கின்றன. அமெரிக்க ஜனாதிபதி, கனடியப் பிரதமர் ஆகியோர் வட அமெரிக்காவிற்கு இந் நாடுகள் வெகு விரைவில் பொருளா தார ரீதியில் சவாலாக வரக்கூடும் என்று முன்கூட்டியே உணர்ந்து இந் நாடுகளின் வளர்ச்சிக்கேற்ப தம்மை மாற்றிக் கொள்ளத் தலைப்படுகிறார் கள். இந்நாடுகளில் சிலவற்றை வட அமெரிக்கப் பொதுச் சந்தையுடன் இணைக்கவும் இத்தலைவர்கள் முயல்கிறார்கள். இந்நிலையில் கனடா சர்வதேசப் பொருளாதார மாற்றங்களுக்கேற்ப தம்மைத் தயார்ப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறது. கனடா ஏற்கும் ஒவ்வொரு மனிதனும் ஏதோ ஒரு வகையில் கனடியப் பொருளாதார முன்னேற்றத்திற்குப் பங்களிக்கக் கூடி யவரா என எடையிட்டுப் பார்ப்பதில் அர்த்தம் இருக்கத்தான் செய்கிறது.

கனடா புதிய குடிவரவாளர்களை ஏற்றுக் கொள்வதில் மூன்று முக்கிய அம்சங்களைக் கவனத்தில் எடுத்துக் கொள்கிறது.

முதலாவது: புதிய குடிவரவாளர்கள், கனடியப் பொரளாதாரத்திற்குப் பாரமாகவோ கனேடிய மக்கள் வேலைகளைப் பறிப்பவர்களாகவோ இருக்கக் கூடாது. புதிய குடிவரவாளர் கனேடிய அரசினதும் வரி செலுத்தும் பொது மக்களினதும் பணத்தைத் தொடர்ந்து உறிஞ்சிய வண்ணம் இருப்பதால் கனடிய மக்களால் விரும்பப்படுவதில்லை.

இரண்டாவதாக: கனேடியரால், கனேடியப் பண்பாட்டின் மூலநதிகளாகக் கருதப்படும் பிரெஞ்சு, ஆங்கிலப் பாரம்பரிய பண்பாட்டு முறைகளைத் திரிவுபடுத்திச் சிதறடிக்கும் முறையில் ஒரு குறிப்பிட்ட மக்கள் வருகை தருவதும் வரவேற்கப்படுவதில்லை. இதனைக் கனடிய முன்னாள் பிரதமர் தெட்டத் தெளிவாகக் கூறியிருக்கின்றார். மக்கன்சி கிங் கூறுகையில் "நான் ஒரு விடயத்தை மிகவும் தெளிவாகக் கூறவிரும்புகிறேன். நாம் கனடாவிற்கு எனத் தெரிவு செய்யும் புதிய குடிவரவாளர், அவ்வுரிமையைப் பெறுவது அடிப்படை உரிமை அல்ல. அது அவர்களுக்குக் கிடைக்கும் வரப் பிரசாதமே. பொதுவாக கனேடிய மக்கள் தமது பாரம்பரியத்தைத் திரிவுபடுத்தும் வகையில் குறிப்பிட்ட மக்கள் கூட்டம் பெருந்திரளாக வந்து குடியேறுவதை விரும்ப மாட்டார்கள்" என்றார்.

மூன்றாவதாக: கனடா அனுமதிக்கும் புதிய குடிவரவாளர்கள் தொகை கனடாவின் பொருளாதாரத்தினால் தாங்கிக் கொள்ள வேண்டிய நிலைக்கு ஏற்றவாறு இருத்தல் வேண்டும். கனடாவின் பொருளாதாரத் தேவைக்கேற்ற முறையில்தான் புதிய குடிவரவாளர் தொகை நிர்ணயிக்கப்படுகிறது. இக்கோட்பாடு பல கால கட்டங்களில் உத்வேகத்துடன் செயற்பட்டு வந்தமையையும் எம்மால் அறிய முடிகிறது. அண்மைக் காலங்களில் பெருந்திரளான ஆசிய ஆபிரிக்க மக்கள் அகதிகளாகவும், குடும்ப இணைவின்கீழ் புதிய குடிவரவாளராகவும் இந்நாட்டில் வந்து குடியேறியுள்ளார்கள் இவர்கள் வருகையை மட்டுப்படுத்த ஓர் அரசியற்கட்சி மறைமுகமாக முனைந்து வருகிறது. அக்கட்சியின் கூக்குரலுக்கு முற்றாகச் செவி சாய்க்காவிட்டாலும் ஓரளவாகிலும் அரசு செவி மடுத்தே செல்லக் கடமைப்பட்டிருக்கின்றது. கனடிய அரசு மொத்தக் குடிவரவாளர் தொகையில் குடும்ப இணைவின் கீழ் வருவோர் வீதம் உயர்ந்து வருவதைச் சுட்டிக்காட்டி அவர்கள் வீதத்தைக் குறைக்க முடிவு செய்துள்ளது.

1993ஆம் ஆண்டில் கனடாவிற்கு வந்த மொத்தக் குடிவரவாளர் தொகை 254,321 ஆவர். இவர்களில் குடும்ப இணைவின் கீழ் 110,108 பேரும் அகதிகளாக 24,543 பேரும் சுதந்திர வகுப்பின் கீழ் (Independent) 43,340 பேரும் உதவப்பட்ட உறவினர் வரிசையில் 21,990 பேரும் வர்த்தகத் துறையினரும் அவர் தம்மில் தங்கியிருப்போருமாக 32,636 பேரும் இளைப்பாறியோர் 7,723 பேரும் மற்றும் 14,183 பேருமாக மொத்தத்தில் 254,321பேர் அனுமதிக்கப்பட்டனர். இப்புள்ளி விபரங்களை உற்று நோக்குமிடத்து குடும்ப இணைவின்கீழ் வந்தோர் தொகை பெருமளவாகத் தெரிகிறது. கனடாவினால் குடும்ப இணைவின் கீழ் வருவோர் கல்வித் தகமை, தொழிற் திறன்கள், பணமுதலீடு என்னும் தகுதிகள் பார்த்து ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. அவர்கள் கனடாவில் இருக்கும் குடும்பத்தினரால் வரவழைக்க

அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் மனிதாபிமான அடிப்படையிலும் ஜீவகாருண்ய அடிப்படையிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டார்கள். ஒருவருக்குத் தனது குடும்பத்துடன் இணைந்து வாழ உரிமை இருக்கிறது. இவ்வுரிமையை, கனடியப் பிரஜைக்கோ நிரந்தர வதிவுரிமை பெற்றவருக்கோ வழங்க அரசு கடமைப்பட்டிருக்கிறது. இதனால், குடும்ப இணைவின் கீழ் வரவழைக்கப்படுவோர் எவ்வளவு தூரம் பொருளாதார முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருப்பார்கள் என்பது முதலிடம் பெறுவதற்கில்லை. இவர்கள் வருகைக்கு உதவியாக இவர்களை, ஸ்பொன்சர் செய்பவர்கள், இவர்களைப் பொருளாதார ரீதியில் பராமரிக்க முடியும் என்ற வாக்குறுதியை அரசுக்கு வழங்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஒன்ராரியோ மாநிலத்திலிருந்து சென்ற ஆண்டு ஸ்பொன்சர் செய்தவர்களில் 86 வீதமானோர்களை ஸ்பொன்சர் செய்து வரவழைத்தவர்களே கவனித்து வருகின்றார்கள். ஸ்பொன்சர் செய்யப்பட்டவர்களில் 14 வீதமானோரே சமூகநல உதவியைப் பெறுகிறார்கள். இதனால், அரசிற்கு வருடமொன்றிற்கு 700 மில்லியன் டொலர்வரை செலவாகின்றது. இந்நிலையில் குடும்ப இணைவு நிமித்தம் வரும் புதிய குடிவரவாளர் தொகையைக் கட்டுப்படுத்த வேண்டும் எனக் கூறப்படுகிறது. இந்நாட்டு அரசு குடும்ப இணைவின் கீழ்வரும் புதிய குடிவரவாளர் தொகையைக் குறைக்கும், அதே வேளை தொழிற் திறன் படைத்தவர்கள், முதலீடு செய்யக் கூடியவர்கள் வருகை மிகவும் ஊக்குவிக்கப்படவேண்டும் எனவும் கூறப்படுகின்றது. இவ்விருதரப்பினருக்குமிடையில் ஓர் ஒப்பீடு செய்யப்பட்டு ஒன்றைக் குறைப்பதன் மூலம் மற்றொன்றைக் கூட்ட முயல்வது போன்று தெரிகிறது.

குடும்ப இணைவின் கீழ் புதிய குடிவரவாளர் தொகையைக் குறைப்பதற்கும் தொழில் நுட்பத் துறையினர் போன்றோர் வருகையை ஊக்குவிப்பதற்குமிடையில் இருக்கும் தொடர்பு ஒருபுறமிருக்க, இம்மாறுதல்களை வேறு விதமாகச் சில ஸ்தாபனங்கள் பார்க்கின்றன. இன்று கனடாவில் கணிசமான அளவு குடும்பங்கள் தனிப் பெற்றோர் நிலையில் (Single Parents) உள்ளன. மேற்கத்தையோரின் இன்றைய குடும்ப வரைவிலக்கணத்தின் கீழ் குடும்ப உறுப்பினராக கணவன், மனைவி, 18 வயதிற்குட்ட குழந்தைகள் தம் தயவில் படித்துக் கொண்டிருக்கும் ஏனைய பிள்ளைகள் இடம் பெறுகிறார்கள். ஆனால், ஆசிய ஆபிரிக்க சமூகங்களில் இன்றும் கூட்டுக் குடும்பம் (Extended Family) நடைமுறையில் இருக்கின்றது. இக்குடும்பத்தின் உறுப்பினராகப் பேரன், பேத்தி, சகோதரர்கள் சில சந்தர்ப்பங்களில் மாமா, மாமி ஆகியோரும் இணைந்து வாழ்வதைக் கண்கூடாகக் காண முடிகிறது. அரேபிய சமூகங்களிலும், பல ஆபிரிக்க சமூகங்களிலும் ஒருத்தனுக்கு ஒருத்தி என்ற குடும்ப தத்துவம் கௌரவமற்றதொன்றாகக் காணப்படுகிறது. நான் நன்கு பழகியிருந்த நைஜீரிய சமூகங்களில் பலவற்றில் இன்றும் ஒருவனது அந்தஸ்தை, அவனது குடும்ப எண்ணிக்கையைக் கொண்டு கணிக்கிறார்கள். எனது நண்பன் ஒருவனின் தந்தை ஓர் பிரபல்யமான வியாபாரி. அவருக்கு வர்த்தக நிறுவனங்கள் பல நகரங்களில் இருக்கின்றன. அங்கெல்லாம் அவருக்கு மனைவிமார்கள் உண்டு. பிள்ளைகள் மனைவியரின் பெயர்களைக் கொண்டே அடையாளம் காண்பதுமுண்டு. இந்த அளவிற்குப் பல குடும்பங்கள் இல்லாவிடினும் (Polygamy) பல

மனைவிமாருடன் கூடி வாழும் பண்பு இன்றும் நடைமுறையில் இருக்கின்றது. இத்தகைய சமூகங்களிலிருந்து பெருந்திரளான மக்கள் குடும்ப இணைவின் கீழ் கனடாவிற்கு வருகை தந்திருக்கிறார்கள். இவர்கள் தொகை ஐரோப்பாவிலிருந்து வருவோர் தொகையை மிஞ்சி விட்டது. சுமார் 40 ஆண்டுகட்கு முன், பெருந்திரளான ஐரோப்பியர்கள் கனடாவிற்கு வந்து குடியேறினர். இன்று பெருந்திரளான ஆசிய ஆபிரிக்கக் கண்டத்தவர்கள் இங்கு வந்து குடியேறுகிறார்கள். இந்நிலை தொடருமேயானால் வெகு விரைவில் ஆசிய ஆபிரிக்க சமூகத்தவர்கள் தொகை கனடிய நகரங்களில் கணிசமான அளவாக உயர இடம் இருக்கின்றது.

இந்நிலையை ஆட்சியிலிருக்கும் கட்சி, கண்டும் காணாமல் இருக்கலாம். ஆனால், இங்கு வளரும் வேறு சில கட்சிகள், இனத்துவேஷத்தை மரபு முறையில் வளர்ந்து வரும் மக்களிடம் தூவி வருகின்றன. எம் நாட்டில் சில கட்சிகள் இனத்துவேஷத்தைக் கக்கி வாக்காளர் கண்களை ஈர்ப்பது போன்று இவர்களும் ஈர்க்க முனைகிறார்கள். அரசு இவ்வாறான கருத்துக்களை மக்கள் மத்தியில் தூவப்படும்போது அதனைக் காட்டுத் தீ போலப் பரவ விடாமல் தடுக்க, சில முயற்சிகளை எடுக்கத் தள்ளப்பட்டிருக்கலாம்.

சில நிறுவனங்கள் குடும்ப இணைவு பற்றிய புதிய கட்டுப்பாடுகளை இனத்துவேஷமொன்றாகக் கருதுகின்றன. தேசிய செயற்பாட்டுக்குழுத் (National Action Committee) தலைவி சிகி றோச் குடிவரவுக் கொள்கை மாற்றம் நிறத்துவேஷம் கொண்டதும், வெள்ளையருக்கும் ஐரோப்பியருக்கும் குறிப்பாக, ஆண்களுக்குச் சாதகமானது எனக் கண்டித்தார். சீனக் கனடிய தேசியக் கவுன்சில் (Chinese National Canadian Council) கனடியன் வாகனத் தொழிலாளர்கள் நிறுவனம் உட்படப் பல சங்கங்கள் புதிய குடிவரவு மாற்றங்களை இனத்துவேஷம் கலந்ததென்று கண்டனம் தெரிவித்துள்ளன.

புதிய குடிவரவாளரைப் பொறுத்தவரை கனடிய அரச கரும மொழி அறிவு கொண்டவர்களுக்குத் தனிச் சலுகை வழங்கப்படும் எனத் தெரிகின்றது. ஆங்கிலம் அல்லது பிரெஞ்சு மொழி தெரிந்தவர்கள் கனடிய நுழைவிற்கான புள்ளிகளிற் சிலவற்றை மேலதிகமாகப் பெறலாம் என்பதனைப் பரவலாகப் பலர் கண்டித்துள்ளார்கள். இக்கொள்கை மறைமுகமாக ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரரை கனடாவிற்கு வர ஊக்குவிக்கின்றது என்றும் கூறப்பட்டது. இது பற்றி, இன்றைய குடிவரவு அமைச்சர் சேர்ஜியோ மார்சி குறிப்பிடுகையில்: கனடிய அரசகரும மொழி அறிவு பெற்றவர்களால் இலகுவில் கனடிய சமுதாயத்துடன் இணைந்து தொழில் புரிந்து செயலாற்ற முடியும் என்பதைச் சுட்டிக் காட்டினார். அமைச்சர், பத்திரிகையாளர் மாநாடொன்றில் பேசுகையில்:- ருசியாவில் போதிய ஆங்கில அறிவு பெற்ற ஒரு பொறியியலாளர், கனடாவிற்கு வர விருப்பம் தெரிவித்தபோது, அவர் ஓரளவு ஆங்கில அறிவு பெற்றபின் வருவதே அவருக்கும், அவரது தொழிலுக்கும், அவரால் பயன் பெற இருக்கும் தொழிற்துறையாளர்களுக்கும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்ற கோதாவில் கூறப்பட்டதாகக் கூறினார்.

கனடிய அரசு கனடாவிற்கு வந்தவர்களில் அரசகரும மொழி அறிவு போதியளவு இல்லாதவர்களுக்கு இன்று இம்மொழிகளில் ஒன்றை இரண்டாம் மொழியாகக் கற்க, வசதிகள் பல செய்து வருகின்றது. ESL,

LINC (Language Instruction for New comers to Canada) எனும் மொழி வகுப்புத் திட்டங்கள் உட்படப் பல மொழிப் பயிற்சித் திட்டங்கள் செயற் படுத்தப்படுகின்றன. லிங் என்றழைக்கப்படும் வகுப்புக்கள் மத்திய அரசி னால் 1992ம் ஆண்டின் பிற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டது. பல லட்சக் கணக் கான புதிய குடிவரவாளர்கள் அரச கரும மொழியில் போதிய அறிவின்மை யால் கனடிய சமுதாயத்துடன் சேர்ந்து வாழக் கஷ்டப்படுகிறார்கள். கன டாவிற்கு வருபவர்கள் இம் மொழி அறிவு கொண்டிருப்பார்களேயானால் இக்கல்விக்கான செலவினங்கள் குறைக்கப்படலாம் என அரசு கருதுகிறது.

ஹொங்கொங் நாட்டைச் சேர்ந்த பல செல்வம் மிக்கவர்கள் கனடாவில் முதலீடு செய்ய முன் வருகிறார்கள். அவர்களது ஆங்கில மொழி அல்லது பிரெஞ்சு மொழித் தகைமைக் குறைவை ஓர் முட்டுக்கட்டையாகக் கருதுவ தில்லை. ஏனெனில், இவர்கள் வருகையைப் பெருமளவில் கனடிய அரசு ஊக்குவிக்கிறது. இவர்கள் வருகையால் கனடியப் பொருளாதாரம் வெகு வாக முன்னேறுவதினாலும் பல வேலை வாய்ப்புக்கள் பெருகுவதினாலும் கனடியப் பிரதமர் ஜோன் கிரைச்சான் வர்த்தக முதலீடு செய்பவர்கள் விட யத்தில் அரச கரும மொழித் தகைமை அவர்களுக்கு ஓர் முட்டுக்கட்டை யாக அமையாது என்பதையும் சுட்டிக்காட்டியிருக்கிறார். ஒட்டு மொத்தமா கப் பார்க்கும் போது 1996ம் ஆண்டிலிருந்து படிப்படியாக அமுலாக்கப்பட இருக்கும் ஐந்தாண்டுத் திட்டத்தின் குடும்ப இணைவின் கீழ் வருகை தர இருப்போர் தொகை மட்டுப்படுத்தப்பட இருப்பது உறுதி.

கனடியக் குடிவரவு நுழைவாயில் சிறிது சிறிதாகச் சாத்தப்பட்டு வருகி றது என்றே கூறலாம். இதற்கு 21 ம் நூற்றாண்டிற்கான திட்டம் பற்றிய வெளியீடு ஒன்றில் குறிக்கப்பட்ட காரணம் ஒன்றையும் நாம் கவனத்தில் எடுக்க வேண்டும். கனடாவில் ஒரு காலத்தில் தாராளமாக இருந்த வளங்கள் இன்று அருமையாக இருக்கின்றன. ("Part of this change is Canada"s own fiscal reality. We must be mindful that resources once plentiful are now dear. In this context, our citizenship and Immigration programme must be more than fair and compassionate. It must be affordable and sustainable".) அத்தோடு கனடியக் குடிவரவுக் கொள்கைகள் ஜீவகாருண்ய அடிப்படையில் பொருத்தமானதாகவும் அதேவேளை இன்றைய கனடியப் பொருளாதார நிலையினால் ஏற்றுக் கொள்ளக்கூடியதொன்றாகவும் அமைய வேண்டும் என்று கூறப்படுகிறது.

இத்தகைய கொள்கை மாற்றங்கள் குடிவரவு அமைச்சரால் எட்டு மாதங்களாகக் கனடாவின் பல பாகங்களுக்கும் சென்று சுமார் 10 ஆயிரம் மக்களுடன் தொடர்பு கொண்டு மக்களின் நாடித்துடிப்பை அறிந்து முன் வைக்கப்பட்டதாகத் தெரிகின்றது. அடுத்ததாக, வருடா வருடம் கனடாவிற் குள் அனுமதிக்கப்படும் மொத்தக் குடிவரவாளர் தொகை பற்றிப் பல விதமான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. கனடிய முன்னாள் பிரதமர் பிரையன் மல்ரோனி அரசு இரண்டரை லட்சம் புதிய குடிவரவாளரை வருட மொன்றிற்குச் சராசரியாக ஏற்க முடிவு செய்திருந்தது. இது கனடிய மக்கள் தொகையின் ஒரு வீதமாகும். புதிய குடிவரவாளர்கள் கனடிய பொருளாதார வளர்ச்சிக்குப் பெரும் துணையாக இருக்கக்கூடும் என்றும் மதிப்பிடப்பட் டது. கனடிய இயற்கை வளங்கள், பொருளாதாரத் திட்டங்களை மையமாகக்

கொண்டு இத் தொகை கணிக்கப்பட்டிருக்கலாம். முன்னைய அரசால் அமுலாக்கப்பட்ட ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் பெரும் பகுதிக் கால எல்லை பொருளாதாரச் சுருக்க நிலைக்குள் தொங்கியிருந்தது. இப்பொருளாதார மந்த காலத்தில் இரண்டரை லட்சம் பேரளவில் வருடம் ஒன்றிற்கு ஏற்றுக் கொள்ளப்படுவது சற்று கடினமானதாகத் தென்பட்டது. ஆனால், புதிய குடிவரவாளர்களில் செலவிடப்படும் பணம் எதிர்கால முதலீடு என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இன்று பொருளாதார மந்த நிலை சீரடைந்து வருகின்றது.

உலக, கனடியப் பொருளாதாரம் மீண்டும் சற்று விரிவடையத் தொடங்கியிருக்கின்றது. அதுமட்டுமன்றி, கனடியப் பிரதமரின் தென்கிழக்காசிய விஜயத்தினால் பெரியளவில் ஏற்றுமதி பெருகும் வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளது. அதோடு, அவரது தென்னமெரிக்க நாடுகளின் விஜயமும் கனடிய வெளிநாட்டு முதலீட்டைப் பெருக்க இருப்பதாகக் கூறப்படுகிறது. ஒரு நாட்டின் குடிவரவுக் கொள்கைகள் இத்தகைய பொருளாதார ஏற்ற இறக்க நிலைகளை எல்லாம் கவனத்தில் எடுத்துத்தான் அமைக்கப்படுவதென்பதும் கவனத்தில் எடுக்கப்பட வேண்டியதொன்றாகும். இந்நிலையில் புதிய குடிவரவாளர் தொகையை இரண்டரை லட்சத்திலிருந்து வருடமொன்றிற்கு 195000 - 215000 ஆகக் குறைக்கப்பட உள்ளது. மறுபுறம் கனடிய சீர்திருத்தக் கட்சி புதிய குடிவரவாளர் தொகையை ஒன்றரை லட்சமாகக் குறைப்பதே பொருத்தமானதாக உள்ளதெனவும் கருத்துத் தெரிவிக்கின்றது. மக்கட் தொகையின் ஓர் குறிப்பிட்ட வீதத்தை மையமாகக் கொள்ளாமல், அதற்குப் பதில் கனடா தனது தேசிய உற்பத்தி நலனை மையமாக வைத்து அதற்கான திட்டங்களை வகுப்பதும் அதற்குப் பொருத்தமான புதிய குடிவரவாளர்களை ஏற்றுக் கொள்வதும் சாலச் சிறந்தது எனக் கருதுகின்றது.

ஒரு நாடு தனக்கு, தன் மக்களுக்கு நீண்டகால நன்மை பயக்கக்கூடிய திட்டங்களைத் தீட்டுவதும், மக்கள் அபிலாஷைகளை அனுசரித்துப் போவதும் ஏற்றுக் கொள்ளப்படவேண்டிய தொன்று. இந்நிலையில் பார்க்கும் போது 20ஆம் நூற்றாண்டின் இறுதி ஆண்டுகளில் ஏற்பட்டு வரும் அரசியல் பொருளாதார சமூக மாற்றங்களுக்கு ஏற்ப கனடியக் குடிவரவுக் கொள்ளைகளிலும் மேலும் பல மாற்றங்களை எதிர்நோக்க வேண்டியிருக்கலாம் எனவும் தெரிகிறது. அமெரிக்க வல்லரசிற்கும், சோவியத் யூனியனுக்கும் இடையே நடைபெற்று வந்த பனியுத்தமும் முடிவடைந்து பல ஆண்டுகள் கழிந்து விட்டன. இந்த யுத்த காலங்களல் இரு வல்லரசுகளும் உலக நாடுகளைத் தத்தம் பக்கத்திற்கு இழுப்பதில் கவனம் செலுத்தி வந்தன. சில நாடுகள் இவ்வல்லரசுகளின் செல்லப் பிள்ளைகளாக வளர்த்தெடுக்கப்பட்டன. மற்றும் சில நாடுகள் வல்லரசுகளின் தாளத்திற்கு ஆடின. வல்லரசுகள் தம்மை உயர்த்துவதோடு ஒன்றை ஒன்று தாக்குவதிலும் தீவிரமாக உழைத்தன. இக்கால கட்டத்தில் அப்பாவி நாடுகள் பல குறிப்பாக மூன்றாவது உலக நாடுகள் நடு நிலை வகிக்க விரும்பிக் கூட்டுச் சேராது இரு வல்லரசுகளுடனும் சுமூக உறவை, நிலை நாட்ட முனைந்தன. இந்நிலையில் வல்லரசுகள் தம் நிலைப்பாட்டிற்குச் சார்பான நாடுகளுக்குப் பொருளாதார உதவிகளோடு இராணுவ உதவிகளையும் வாரி வழங்கின. அத்துடன் தமது கொள்கைகளையும் ஏற்றுமதி செய்தன. 1950 ம் ஆண்டுகளில் ஆசிய நாடு

களில் இவர்கள் கவனம் சென்றது. 1960ல் இவர்கள் கவனம் ஆபிரிக்க தென்னமெரிக்க நாடுகளை நோக்கிச் சென்றடைந்தது.

இன்று பனியுத்தம் முடிந்த நிலையில் அமெரிக்கா உலகின் ஏக வல்லரசாக மிளிர்கிறது. அமெரிக்காவின் அயல் நாடான கனடா தனது வெளிநாட்டுக் கொள்கை, குடிவரவு விடயங்கள் ஆகியவற்றிலும் சில மாறுதல்களை ஏற்படுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. முன்னாள் சோவியத் யூனயனுக்கும் அமெரிக்காவிற்கும் இடையில் இருக்கும் கனடிய நிலப் பரப்பு ஒரு கேந்திர ஸ்தானத்தை வகித்து வருகிறது. சோவியத் யூனியனுக்குச் சொந்தமாக இருந்த அலாஸ்கா பிரதேசத்தை அமெரிக்கா கெட்டித்தனமாகச் சில மில்லியன் டொலர்கள் கொடுத்து வாங்கிவிட்டது. அலாஸ்கா, அமெரிக்காவின் ஒரு பகுதியானதும் கனடா, அமெரிக்காவின் இரு நிலப் பிரதேசங்களுககும் மத்தியில் இருக்கும் தேசமாகிவிட்டது. அமெரிக்கா கனடாவைத் தனது உள் வீட்டுப் பிள்ளையாக வைத்திருக்க விரும்புகிறது. இன்றைய அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கை மாற்றங்கள் பெருமளவு கனடாவையும் தனது வெளிநாட்டுக் கொள்கைகளை மாற்றத் தூண்டுகிறது. இன்றைய கனடிய அரசு சில மாறுதல்களை வெளிநாட்டுக் கொள்கையில் ஏற்படுத்தியுள்ளது. ஆயுத உற்பத்திக்கு அதி முக்கியத்துவம் வழங்கிய நிலையிலிருந்து இறங்கி வருகிறது. கனடா புதிய நாடுகளுடன் பொருளாதார உறவு ஏற்படுத்துவதில் ஆர்வம் காட்டி வருகிறது. குறிப்பாக, கிழக்கு ஐரோப்பாவில் சோவியத் யூனியன் கலைந்ததும் பல புதிய நாடுகள் தோன்றின. இந்நாடுகளுடன் போலந்து போன்ற பல முன்னாள் பொதுவுடமை நாடுகளும் தனியார் பொருளாதாரத்தை வரவேற்கத் தலைப்பட்டன. இந்நாடுகள் கனடாவிற்கு ஓர் புதிய சந்தையாக மாறி வருகின்றன. இந் நாடுகளுடன் புதிய உறவுகளை ஏற்படுத்தி, அதனால் பலன் பெறக் கனடா முனைகிறது. அந்நாட்டவரின் வருகையைக் கனடா ஊக்குவிக்கின்றது. அவர்களுடன் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்த விரும்புகிறது இந்நிலையில் கனடியக் குடிவரவுக் கொள்கைகள் நிச்சயம் மாறிய வண்ணம் தான் இருக்கும். இம்மாற்றங்கள் பெருமளவு பொருளாதார நலனை மையமாகக் கொண்டிருக்கும் போலத் தெரிகின்றது.

குடும்ப இணைவின் கீழ் ஆசிய - ஆபிரக்கர்கள் வருகை மட்டுப்படுத்தப்படுவது தெட்டத் தெளிவாகிவிட்டது. சீனர் வருகை சிறிது காலத்திற்குத் தொடர்ந்து பெருகி வரலாம். ஆனால், சீனர் வருகையும் ஒரு காலத்தில் மட்டுப்படுத்தப்படலாம். ஐரோப்பியர் வருகை அதிகரிக்கும் சாத்தியக் கூறுகள் தென்படுகின்றன. இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளிலிருந்து நீண்டகாலமாக வந்ததுபோல பெருந்திரளான மக்களைக் கனடா அங்கிருந்து எதிர்பார்க்க முடியாது. அவர்கள் கவனம் இன்று ஐரோப்பிய ஒன்றியத்தில் ஆழமாகப் பதிந்துவிட்டது. எனவே, எதிர்பார்க்கப்படக்கூடிய புதிய குடிவரவாளர்கள் பெரும்பாலும் கிழக்கு ஐரோப்பியர்கள் ஆவார்கள். கனடா இவர்களிலும் சாதாரண உடல், உழைப்பை நல்கும் தொழிலாளர்களை இன்று எதிர்பார்க்கவில்லை. முன்பு போர்த்துக்கல், இத்தாலி, சீனா, இந்தியா, உக்கிரேன் ஆகிய பிரதேசங்களிலிருந்து பெருந்திரளான தொழிலானர்கள் கனடாவிற்கு வந்து சுரங்கங்களிலும், விவசாயப் பண்ணைகளிலும் தொழிலாலைகளிலும் வேலை செய்தது போன்று இன்று வேலை செய்ய

PUBLIC LIBRARY

இத்தகைய ஆட்கள் பெருமளவு தேவைப்படவில்லை. இதனால், ஐரோப்பியர்கள் வருகையிலும் சில கட்டுப்பாடுகள் இருக்கத்தான் செய்கின்றன. சுய தகுதிக் குடிவரவாளர்கள் (Independent Class) தகுதி தரம் பார்த்து நாட்டின் தேவைகளுக்கேற்ப வரவழைக்கப்படுகிறார்கள் இவர்கள் நாட்டின் ஆட்பலத்தைத் தொழில் ரீதியில் தர, வல்லவர்களாகக் கருதப்படுகிறார்கள். இவர்கள் பொருளாதார உற்பத்தியைப் பெருக்க நேரடியாக உதவுபவர்கள். இவர்கள் வருகைக்கும் மனிதாபிமான அடிப்படைக் கொள்கைகளுக்கும் எந்தவித நேரடித் தொடர்புகளும் இல்லை. இவர்கள் வருகையை நிர்ணயிப்பது பொருளாதாரத் திட்டங்களும் உள் நாட்டு ஆட்பல தட்டுப்பாட்டின் நிலையும் ஆகும்.

மறுபுறம், ஐரோப்பிய ஒன்றியம், வட அமெரிக்காவிற்குப் பெரும் சவாலாக அமைகிறது. பொருளாதார ரீதியில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் தமக்குள் வர்த்தகத் தொடர்பை வலுப்பெறச் செய்து வருகிறார்கள். உதாரணமாக: இங்கிலாந்து முன்பு கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது. இன்று பொருளாதார ரீதியில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுடன் இணைந்துவிட்டது. ஐரோப்பிய ஒன்றியம் இன்று உலகின் சக்தி மிக்க பொருளாதார அமைப்பாக வளர்ந்து வருகின்றது.

மறுபுறம் கிழக்கு, தென்கிழக்காசிய நாடுகள் வேகமாக வளர்ந்து வருகின்றன. யப்பானைத் தொடர்ந்து சீனா வேகமாகப் பொருளாதார ரீதியில் வளர்கிறது. பல வளங்களைக் கொண்ட சீனா, மக்கட் பலமும் கொண்டிருக்கிறது. சீனாவின் மக்கட் தொகை 1.2 பில்லியனாகப் பெருகி உள்ளது. இங்கிலாந்து, ஹொங்கொங் தீவை 1997ல் சீனாவிடம் ஒப்படைக்க இருக்கிறது. வட அமெரிக்காவோ தொழில் நுட்பத் துறையில் முயல் போல் வேகமாகச் சென்று இடையில் தூங்கிக்கொண்டிருக்கையில் யப்பான் போன்ற நாடுகள் முன்னேறத் தலைப்பட்டன. விழித்தெழுந்த வட அமெரிக்கா மீண்டும் பொருளாதார விருத்தியை ஏற்படுத்த வட அமெரிக்கப் பொதுச் சந்தையை விரிவாக்குவதில் தீவிரமாக உழைத்து வருகிறது. வடஅமெரிக்கப் பொதுச் சந்தையில் இணைய இருக்கும் 35 மத்திய அமெரிக்கா, தென்அமெரிக்க நாடுகள் பொருளாதார ரீதியில் முன்னேறி வரும் நாடுகளாகும். இந்நாடுகளுடன் விருத்தியடைந்த நாடான கனடாவும் வல்லரசான அமெரிக்காவும் இணையும்போது பலவித தாக்கங்களைக் கனடா, சந்திக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படலாம். ஆனால், ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கத்துவம் வகிக்கும் நாடுகள் யாவும் விருத்தியடைந்து ஏற்றத் தாழ்வுகள் குறைந்த நிலையில் உள்ளன. ஆகையினால், வட அமெரிக்கப் பொதுச் சந்தையின் வளர்ச்சி வேகமும் கட்டுக் கோப்பும் வித்தியாசமான தொன்றாக இருக்கின்றது. இந்நிலையில் புதிய குடிவரவாளர்கள் வருகையிலும் பலத்த மாறுதல்களை நாம் சந்திக்க வேண்டிய நிலையில் இருக்கின்றோம்.

கனடாவின் புதிய குடிவரவாளர்கள் பற்றிய 100 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றுப் பின்னணியை ஆதாரமாகக் கொண்டு நோக்கும்போது இனிமேல் கனடாவினால் எதிர்பார்க்கப்படும் புதிய குடிவரவாளர்கள் தகுதியில் உயர்ந்தும் தொகையில் குறைந்தும் இருப்பார்கள்.

## இனவெறியைச் சாடுவோம்

பூனையைப் புண்படுத்தியவன் தண்டிக்கப்பட்ட இந்நாட்டில் மனித மாணிக்கங்கள் மாசுபடுத்தப்படுகின்றன. எறும்பைக் கொன்றால் பாவம் என்று கருணைக் கடலில் மூழ்கியிருக்கும் பௌத்தர்கள் பல சந்தர்ப் பங்களில் தமிழரைக் கொன்றால் பாவம் இல்லை என்கிறார்கள். நம் மவர்கள் நானிலமெங்கிலும் நையப் புடைக்கப்படுகிறார்கள். "பாவி போன இடமெல்லாம் பள்ளமும் திட்டியும்" என்று தமிழர் சோர்வுற்றிருப்பதா? அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது. அதனிலும் அரிது கறுப்பு, மஞ்சள் மண்ணிறமின்றி வெள்ளை நிறத்தவராய்ப் பிறத்தல் அரிது என்று எண்ணவும் தோன்றலாம். இத்தகைய உள்ளக் கிடக்கை இன்று நேற்றுத் தோன்றியதல்ல. பல நூற்றாண்டுகளாக அந்நியர் ஆட்சியில் அடக்கப்பட்டி ருந்த நம்மவர் மத்தியில் தூவப்பட்ட விதைகள் விருட்சங்களாக வளர்ந்துள் ளன. குட்டு வாங்கினாலும் மோதிரக் கையால் குட்டு வாங்குவோம் என அந்நியர் ஆட்சியில் அவர்களுக்குத் தூபம் இட்டு வந்தோம். வெள்ளை இனத்திற்கு ஒரு முதன்மை அன்றே மறைமுகமாகக் கொடுக்கப்பட்டது. காலம் கடந்தது. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என முப்பெரும் தூண்களில் நவீன யுகம் கட்டி எழுப்பப்பட்டதாகக் கருதுகிறோம். ஆனால், அந்த வெள்ளையின முதன்மை அப்பட்டமாகத் தலைவிரித்தாடும் போது நம்மால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

தமிழர், தமிழர் என்ற ரீதியில் தாக்கப்படுகிறார்களா? அல்லது நிறம் குறைந்தவர்கள் என்ற ரீதியில் தாக்கப்படுகிறார்களா என்ற கேள்வி நம் இதயங்களை புற்று நோய் போல் சூறையாடுகிறது. தமிழர் தாம் புகுந்தகத் தில் தம் முத்திரையைக் கண்ணியமாகக் குத்தியிருக்கிறார்கள். அவர்கள் கல்விக் கழகங்களில் முன்னிலையில் நிற்கிறார்கள். உணவு விடுதிகளில் இருந்து அரச துறைவரை செய்யும் தொழிலே தெய்வம் என உடலை, உள் ளத்தை உறுத்தி உழைக்கிறார்கள். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என உவகையோடு உண்டி கொடுத்த சமுதாயத்தோடு ஒன்றி வாழ்கிறார்கள். அவர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள் என்றால் அது ஒரு சில வெறியர்களின் பித்தலாட்டம்தான் என்று கூறலாமா?

இனவாதத்தின் மறுபக்கம் வெள்ளையர்களில் சிலர் தம்மை உயர்ந் தவர்களாகக் கருதுவதை விட நம்மை உடலில் உள்ளத்தில் செயற் திற னில் ஆக்கப்பணியில், சிந்தனைத் திறனில், பண்பில் தாழ்ந்தவர்கள், தரம் குறைந்தவர்கள் வளர்ச்சியடையாதவர்கள் என வரிசைப்படுத்துகிறார்கள். இந்தப் பாகுபாடு உள்ளத்தில் தாழ்வுணர்வை ஏற்படுத்தி மனித வளர்ச்சி யைத் தடைப்படுத்துகிறது. இதனால், நன்கு தாக்கப்பட்டவர்கள் கறுப்பினத் தவர்கள். கறுப்பர் என வர்ணிக்கப்படும் சுமார் 40 மில்லியன் கறுப்பின மக் கள் ஆபிரிக்கக் கண்டத்திலிருந்து புதிய உலகிற்கு வரவழைக்கப்பட்டார்கள். அன்றைய அந்நியராட்சியின் வடுவாய் மனித விலங்குகள் போல் சில துப்பாக்கிக்கும் சில குடிவகைப் பொருட்களுக்கும் விற்கப்பட்டு காடு கரம்பைகளைக் கடந்து கடலில் தத்தளித்து அமெரிக்கக் கண்டத்தில் அரும் பணிகள் பல புரிய வரவழைக்கப்பட்டனர். அவர்கள் வழி வந்த சந்ததியினர் இன்று மொழியிழந்து, கலை, பண்பாடு மறந்து, கறுப்பு இன வெள்ளைய

ராய் வாழ முனைகிறார்கள். அது அரசனை நம்பி புருஷனைக் கைவிட்ட கதையாய் முடிந்தது. மறுபுறம் ஆபிரிக்கக் கண்டத்தின் மூல வளங்களை ஐரோப்பியருக்கு அள்ளிக் கொடுத்தும் ஆட்டி அசைக்கப்படுகிறார்கள். அவர்களின் பொருளாதாரச் சக்கரம் வெள்ளையர்களால் சுழற்றப்படுகிறது. ஐரோப்பியர்களால் ஆங்காங்கு எல்லைப் பிரச்சினைகள் கிளப்பப்பட்டு ஆயு தங்கள் அள்ளி இறைக்கப்பட்டு ஆபிரிக்கரிடமிருந்து பணம் பறிக்கப்படு கிறது.

இந்நிலையில் கறுப்பர்கள் தாழ்த்தப்பட்டே வருகிறார்கள். இவர்கள் மத்தியில் நம்மவர்கள் திரிசங்கு சுவர்க்க நிலையில் வாழும் ஒரு நிலை ஏற் பட்டிருக்கிறது. நாம் மட்டுமன்றி பல சிறுபான்மைச் சமூகத்தவர்கள் நிந்திக் கப்பட்டதன் விளைவாக வேதனையோடும் சோதனையோடும் தனித்தனியா கவும் கூட்டமாகவும் இனப்பாகுபாடு என்ற பேயை விரட்டி அடிக்க முனைந் து வருகிறார்கள். வெட்ட வெட்டத் தழைக்கும் விஷ விருட்ஷம் போல் அது வளர்கிறது. தீவிரவாதிகள் வன்முறையில் இனவாதத்தை எதிர்த்துப் போரா டுகிறார்கள். முள்ளை முள்ளால் தான் எடுக்க முடியும் என்று போராடுகி றார்கள். மறுபுறம் காந்தீய வாதியான மாட்டின் லூதர் கிங், எனும் கறுப்பு நிற மக்கள் தலைவர் வழி நிற்பவர்கள் அகிம்சை எனும் ஆயுதத்துடன் அணுகுகிறார்கள். இவர்கள் வெறுப்பவனை வெறுப்பதால் இருளுக்கு இரு ளை இணைப்பதுபோல் ஆகிறது என்கிறார்கள். இவர்கள் இருளை விரட்ட ஒளியே வழி. வெறுப்பவனை நேசி என்கிறார்கள். இரண்டிற்கும் நடுவில் பலர் இடித்துரைப்போம், தலை நிமிர்ந்து இனவாதத்தைச் சாடுவோம் என நடுவழியே நம்வழி என்று செல்கிறார்கள். இவர்களில் எவ்வழி நம்வழி என்று எண்ணத் தோன்றுகிறது.

நம்மைப் பொறுத்தவரை இனவாதத்தை விட எமக்கெனத் தாய் மண் ணில் பிரச்சினைகள் ஆயிரமாயிரம் இருக்கின்றன. நமது சிந்தனையில் செயலில் உள்ளக் கிடக்கைகளில் இரத்தக்கறை படிந்திருக்கிறது. இந்நிலை யில் நாம் எம்மைப் பாதுகாத்துத் தெளிவாகச் செயற்படவேண்டும். இந் நாட்டில் பிறந்து, இந்நாட்டில் வளர்ந்து, தாய் மண்ணை அறியாதவர்கள் அணுகும் முறை நமக்கு ஒத்துவருமா? நம்முன் பணிக்கப்பட்டிருக்கும் கட மைகள் தான் நம் உரிமைகளை நிர்ணயிக்க இருக்கின்றன இந்நிலையில் இனவாத எதிர்ப்புக்களில் நம் பங்களிப்பு சாவதானதாக அமைய வேண்டும் என்பதில் ஐயமே இல்லை. நம்மவர்கள் எதிர்த்துப் போராட வேண்டியது நேரடியாக ஏற்படுத்தப்பட்டுவரும் இனவாத சம்பவங்களை மட்டுமல்ல, உள்ளார்ந்த ரீதியில் நாளாந்த வாழ்வில் தொழில் கல்வி நிறுவனங்களில் ஏற்பட்டு வரும் பாதிப்புக்களும் ஆகும். நாட்டின் சட்ட திட்டங்கள் இனவா தத்தை வன்மையாகக் கண்டித்துள்ள போதும் நடைமுறையில் நம்மவர்கள் சமமாக மதிக்கப்படுவதாகக் கூறுவதற்கில்லை. பல கல்லூரி, பாடசாலை மாணவர்கள் இத்தகைய பாகுபாட்டைத், தாம் மிண்டி விழுங்குவதாகக் குறை கூறியிருக்கிறார்கள். இளைய சந்ததி தொடர்ந்தும் பாகுபாடு காட்டப் பட்டு வருகிறதென்றால் இவ் இனப்பாகுபாடு செத்த சாரைப்பாம்பு என்று நம்பித் தூங்கிவிட முடியாது.

இனவாத நடவடிக்கைகள் பல வழிகளில் காணப்பட்டாலும் அவை உள்ளமென்னும் தடாகத்தில் பூத்தவை. உள்ளத்தில், உணர்வில் மாறுதல்

கள் ஏற்படவேண்டும். வெள்ளையர் உள்ளத்தில் வேற்றினங்களில் வெறுப்பு என்னும் முள்ளைக் கிள்ளி எறிந்து சகோதரத்துவ பசளை இடவேண்டும். இளைய சந்ததியிடம் புதிய போதனைகள் புகுத்தப்பட வேண்டும். அரசுகள் சட்டதிட்டங்களைத் தீட்டி மக்கட் பலத்தைத் திரட்டினால் மட்டும் போதாது, மனமாற்ற முயற்சிகளில் முன்னிற்க வேண்டும். மனிதன் தோன்றிய காலத் திலிருந்து இன்றுவரை மனிதனை மனிதனாகப் பார்க்கும் பண்பு முற்றாக வளரவில்லை. சமுதாய ஏற்றத் தாழ்வுகள் ஏதாவது வரையறை அமைத்து அதன் கீழ் மக்களைப் பிளவு படுத்திவிடுகிறது. இந்த ஏற்றத் தாழ்வுணர் வால் சந்ததி சந்ததியாக நம்மவர்கள் பாதிக்கப்பட்டு பழக்கப்பட்டு வந்தி ருக்கிறார்கள். அவர்களுக்கு இந்நோய் புதிதல்ல. ஒரே பானம் வித்தியாச மான கிண்ணத்தில் வார்த்து வழங்கப்படுகிறது. இனவாதத்தின் இன்னல்க ளைக் களைய இவ்வேளை நம்மவர்கள் கல்வியில், பண்பாட்டில், தொழில் துறையில் வளர்வதன் மூலம் சாட முடியும். நீருயர நெல்லுயர்வது போல் நாம் வளர நம்மினத்தின் தகுதியும் அந்தஸ்தும் வளர்ந்தே செல்லும். மறுபுறம் இனவாதம் முன்னேற்றத்திற்கு நிச்சயம் முட்டுக்கட்டையாகத் தானிருக்கும். எனவே, எதிர் நீச்சல் போட்டு இனவாதத்தைச் சாடுவோம்.

## கனடாவில் இனவெறிக்கு இரையாகும் தமிழ்ஈழத் தமிழர்.

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்ற கோட்பாட்டிற்கிணங்க, மாண்பு மிகு மறைத் தமிழர், திக்கெட்டும் சென்று பல இனமத நிறமனித மாணிக் கங்களுடன் இணைந்து வாழும் இவ்வேளை, இன நிறவெறியர்கள் சிலர் தம் கைவரிசையைக் காட்டி எம் உள்ளங்களை உருக்குலைய வைத்திருக்கி றார்கள்

அருந்தமிழ்ப் புதல்வர்கள் மூவர் உடலை உறுத்தி உழைத்துவிட்டு வீடு நோக்கி வரும் வேளை தெருவோரத்தில் நையப்புடைக்கப்பட்டனர். அவர்களில் ஒருவர் காலனிற்கு இரையானார். நாசிச நஞ்சைக் கக்கிய ஜேர் மனியில் தமிழ் மகன் ஒருவன் சில வருடங்களுக்கு முன் கொலை செய்யப் பட்டிருந்தான். இங்கிலாந்தில், சுவிஸில் தமிழர் பலர் ஏங்குகிறார்கள்.

இன்றைய உலகில் இனப்பற்று இனவெறி அசிட்டாக மாற்றப்பட்டு மாற்றான் மண்ணில் மக்கள் கண்ணில் வீசப்பப்பட்டு வருகிறது. இங்குமங் கும் தாக்கப்படும் சம்பவங்கள் இனவெறிப் பூகம்பங்களல்ல, இனத்து வேசம் நாளாந்த வாழ்வில் இலைமறைகாய்போல் இருந்து வருகிறது. மெல் லெனப்பாய்ந்து உள்ளங்களை மாற்றித் தனக்கோர் தனியகம் அமைத்து நிறத்தவரை நிந்தித்து வருகிறது. மேலெழுந்த மட்டத்தில் இவ் இனவாதத் தைப் பார்க்கும்போது அது பூத்துக்குலுங்கும் சிங்காரியின் முடியுள் மூழ்கிக் கிடக்கும் பேனும் ஈரும் போல வாழ்ந்து வருகிறது.

தமிழர் இனவாதச் சூடுபட்ட தழும்போடு வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் மத்திய கிழக்கிலிருந்து இமயத்தைத் தாண்டி அவுஸ்ரேலியா வரை உழைப்பால் உயர்ந்து கொடிகட்டிப் பறந்தவர்கள் என்பது வரலாறு அறிந்த உண்மை. அது நமக்குள் பேசும் பழம் கதையல்ல. அப்படிப்பட்ட அருந்தமிழ் இனத்தை ஆரியர், திராவிடர் என்பது கறுப்பர், தரத்தில்

குறைந்தவர் உடலில், உள்ளத்தில், உழைப்பில், பண்பில் தரமிழந்தவர் என்று ஒதுக்கி, தென் இந்தியாவிற்கு விரட்டி அடித்தனர். அந்த ஆரியர் திராவிடரை அல்லோல கல்லோலப்படுத்தி தமிழர் தம் மரபிற்கு மாசு கற்பித்திருக்கிறார்கள். நொந்து பட்ட தமிழர் காட்டிலும் மேட்டிலும் கரம்பையிலும் தம் பண்பாட்டைக் கட்டிக்காவி, பேணிப் பாதுகாத்து வந்திருக்கிறார்கள்.

அதே தமிழரை, ஐரோப்பியர் ஆண்ட காலங்களில் அடிபணியச் செய்தது மட்டுமன்றி அவர்கள் உள்ளத்தில், வெள்ளையர் இனத்தால் உயர்ந்தவர்கள் என்ற உணர்வைப் புகுத்தி விட்டார்கள். வெள்ளையுள்ளம் படைத்த நம்மவர்கள் வெள்ளைத் தோலை மெரு கூட்டிப்பார்த்தனர். "காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு" என்ற காலம் மலையேறி வெள்ளையர் மோகம் சூறையாடத் தலைப்பட்டது. நீலமேகக் கண்ணனிடம் தவம் கிடந்து பெற்ற மகன் வெள்ளையாய் இல்லையென் று வருத்தப்பட்டவர்கள் பலர் இருக்கிறார்கள்.

இதே வெள்ளை நிறத்தின் மேன்மை (White Supremacy) உணர்வு கொண்ட வெள்ளையர்கள் தொகையில் இன்று குறைந்திருக்கிறார்கள். ஆனால், முற்றாய் அற்றுப்போகவில்லை. இவர்கள் கண்ணில் நாமெல்லாம் ஐந்துமில்லியன் ஆண்டுகளுக்கு முன் அவதரித்த ஆதிமனிதன் குணாதியங்கள் கொண்டவர்களாய் தெரியக்கூடும். வெள்ளையர் ஆண்ட இனம் மட்டுமல்ல ஆதிக்கமுள்ள ஆழவேண்டிய இனம் என்று கருதுபவர்களும் இருக்கிறார்கள். வந்தேறு குடிகள் என எம்மைக் கருதும் இவர்களிற் சிலர், பொருளாதார நெருக்கடிக்காலங்களில் முன்னின்று தாக்கத் தலைப்படுகிறார்கள். வெறிநாய் போல் வேட்டையாட முனைகிறார்கள்.

இதன் முழுமையான பிரதிபலிப்பாகத் தான் தென்னாபிரிக்க நாட்டில் அபத்தைட் (Apatheid) எனும் இனப்பாகுபாடு என்ற கொள்கை நீண்ட காலமாக நடைமுறையிலிருந்து வந்தது. நெதர்லாந்து, ஜேர்மனி, பிரித்தானியா ஆகிய நாடுகளிலிருந்து முன்பு வந்து தண்ணிகேட்டு, உண்டி பெற்றுச் செல்ல இருந்த கடற்பிரயாணிகள் துவக்கையும், விஸ்கி போத்தல்களையும் வாரி வழங்கி கண்மூடி முழிப்பதற்குள் நிலத்தைப் பறித்துக் குடிமக்களை அடிமைகளாக்கி அவர்களைச் சுரண்டி வாழ்ந்தனர். பல்லாண்டுகளாய் வெள்ளையருக்குத் தனிக் கல்லூரி, தனி வைத்திய நிறுவனம், வீதி, கட்டிடம் என அமைத்துக்கொண்டு கறுப்பரை காட்டிலும், மேட்டிலும் வாழ வைத்தனர். தீண்டத்தகாத இனமாய் வாழ்ந்து வந்த இவர்கள், வெள்ளையர் வளர்க்கும் நாயின் பாதிச் சுகத்தைக்கூட அனுபவித்திருப்பார்களா தெரியவில்லை. கறுப்பர்களின் நீண்ட நாள் போராட்டத்தின் விளைவாக இன்று தென்னாபிரிக்காவில் இனவாதத்திற்குச் சாவு மணி அடிக்கப்பட்டது.

இனத்தின் பெயரால் எம் மக்கள் மனதில் தாழ்வு மனப்பான்மை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. நம்மவர்கள் வெள்ளையின மக்களோடு ஓடிவிளையாடி, கூடிப்பழகினாலும் கூட உள்ளத்தில் ஓர் கூச்சம் ஏற்படும் வகையில் வளர்க்கப்பட்டிருக்கிறோம். இத்தாழ்வுணர்வு நம்மவர் மத்தியில் அறிவுத்திறன், உள்ளத்தாற்றல், மனத்துணிவு போன்ற வளர்ச்சியைப் பெருமளவு தாக்கி இருக்கிறது என்று உளவியலாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள். நம் உள்ளத்தில் உறுதி வேண்டும். நாவுக்கரசர் கூறியது போல் நாம் யாருக்கும் அடிமைப்படோம் என்ற துணிவு வேண்டும். எமது

பண்பாட்டுக் கட்டுக் கோப்பில் நம்பிக்கை வளரவேண்டும். எமது பாரம்பரியத்தினைப் பார்த்துப் பெருமைப்படவேண்டும். எம் மூதாதையோர் சாதனைகள் மூடி மறைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றைச் சிரமம் பாராது உழைத்து முன்வைக்க வேண்டும். எமது நிறத்தில், எமது திறனில் நம்பிக்கையும் பெருமையும் கொண்டு வளரவேண்டும். தமிழர் என்று சொல்லித் தலை நிமிர்ந்து நிற்பதில் பெருமைப்பட வேண்டும்

நிறத்தை மாற்றிக் குணத்தை மாற்றி வெள்ளையராகி விடத்துடிக்கிறது சில இளவட்டங்களின் மென்மையுள்ளங்கள். அதோ பாருங்கள் கறுப்பின மக்கள் அடிமைகளாய் மனித மிருகங்களாய் கால் விலங்கிட்டு ஆபிரிக்கப் பொன் விளையும் பூமியிலிருந்து புதிய கண்டத்திற்கு வரவழைக்கப்பட்டனர். தந்திரோபாயத்தால் தன் கலை, பண்பு, பாரம்பரியத்தை மறக்க வைத்தனர்.

மேலைத்தேய வாழ்வு முறையை ஆவலோடு அரவணைத்தனர். சிலர் தாம் கறுத்தத் தோலினுள் மறைந்திருக்கும் வெள்ளையர் எனப் பெருமிதம் அடைந்தனர். முக்காலும் முழுகிக் குளித்தும் வெள்ளைக் கொக்கு ஆகவில்லையே என்று அழுகிறார்கள்.

இவர்கள் தம் மொழி இழந்து, பண்பாட்டை அடகு வைத்து, மூலவேர் அறுத்து ஏனோ தானோ என்று வாழ்கிறார்கள். இவர்களிற் சிலர் தாழ்வு மனப்பான்மையை உயர்வு மனப்பான்மையாக்கி இனவாத நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகிறார்கள். இத்தகைய எதிரினவாத உணர்வை (Reversed racism) என்பார்கள். கறுப்பே உலகின் உச்சத்தில் கொடி கட்டி பறக்கவல்ல இனம் என்று எண்ண வைக்கிறது. இவர்கள் முள்ளை முள்ளால் எடுக்கப் பார்க்கிறார்கள்.

மறுபுறம், யூதர்கள் இனவாதத்தை எட்டியுதைக்கிறார்கள். அன்று அந்த கிட்லர் ஆறுமில்லியன் யூதர்களை அரக்கர்போல் கொதித்தெழுந்து நச்சு மண்டபங்களில் ஈவிரக்கமின்றிக் கொன்று குவித்தான். இவ் யூதர்களிற் பலர் நாட்டைவிட்டுத் திரைகடல் ஓடி திரவியம் தேடி, தேடிய இடத்தில் வேரூன்றி, பிறந்தமண்ணை மறந்து ஓகோ என வாழ்ந்து வந்தனர். காலம் உருண்டோடியது. ஏழரைச்சனியன் பிடித்ததுபோல் ஏழு ஆண்டுகளில் எத்தனையோ மில்லியன் யூதர்கள் ஐரோப்பாவில் கொன்று குவிக்கப்பட்டு பிராந்துகளுக்கு பெருவிருந்தாக அளிக்கப்பட்டனர். இன்று அவர் பச்சைப் பசும் புற்றரையும், பாலும் தேனும் கலந்தோடும் மாற்றான் மண்ணைவிட நம் சொந்த மண்ணான பாலைவனமே எமது சோலைவனம் என தமது தாய் நாடான இஸ்ரேலுக்குச் சென்று வாழுகிறார்கள். ஒருவகையில் இவர்கள், தாம் கடவுளால் தெரிவு செய்யப்பட்ட இனமெனத் தம்பட்டமடித்து இனவாதிகளாய் இருந்தும் இன்று இனவாதத்தால் நிந்திக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள். கறுப்பர்களும், யூதர்களும் நமக்கு நல்கும் பாடம் ஈழத்தமிழர் தம் தாயகத்திற்கு என்றோ ஒரு நாள் சென்று அதனைக் கட்டி அணைக்கப் போகிறார்கள். தங்குமிடங்கள் தாயகமாக மாறிவிடாது என்று எண்ணச் செய்கிறார்கள். நமது பண்பை அடகு வைத்து ஏமாறாதீர்கள் என்ற பறைமுளங்கம் செய்கிறார்கள்.

இனம் என்பது விஞ்ஞான ரீதியில் மனிதரால் ஏற்படுத்தப்பட்ட வேறுபாடே என்று கருதப்படுகிறது. ஓர் அறிஞன் கூறியது போல மனிதன் ஒரு

மைப்பட்டவன். அவனைப் பிரிப்பது அவனது பண்பாடு.(The nature of men is identical what divides them is their customs). இனம் என்ற வேறுபாடு பெருமளவில் மனிதன் உள்ளத்தில் உதித்தபேய். அது மனிதனை ஆட்டிப் படைக்கிறது. மனிதன் அந்தப் பேயை தன்னிடமிருந்து பிரித்து அடித்து விரட்டுவானேயானால் அவனுக்கு இனவெறுப்பு ஏற்பட இடம் இருப்பதில்லை. ஆண்டவன் படைப்பில் அனைத்து மனிதனும் ஒன்று பட்டவன். மனிதன் தனது பொருளாதார சுரண்டல் வசதிக்காக பல கட்டுக் கோப்புக்களை, பிரிவினைகளை வளர்த்து அட்டகாசம் செய்து வருகிறான்.

இனவெறிக்குப் பரிகாரம் காணும் பணிகளில் கடந்த நூறு ஆண்டுகளாய் பட்மோர், சில்வஸ்ரர் போன்ற பலர் வைத்த வழிகளில் உழைத்து வருகிறார்கள். அமெரிக்காவில் மாட்டின் லூதர் கிங் என்பவர் காந்தீய வழியால் இனப்பிரச்சினைக் கெதிராகப் போராடி இருக்கிறார். வேறும் சில கறுத்த இனத் தலைவர்கள் முன்னொருமுறை ஒரே தீர்வு மீண்டும் தத்தம் தாய் நாட்டிற்கு மீளச் செல்லுதலே என்று வாதாடி இருக்கிறார்கள்.

ஐக்கிய நாடுகள் சபை 1965ல் எந்தவித இனப்பாகுபாட்டையும் ஒழிக்க வேண்டும் என்று சட்டம் கொண்டு வந்திருக்கிறது. அச்சட்டத்திற்கு 1982ல் பல மாற்றங்களை வரவழைத்தது.

இனவாதம் எம்மவர்கள் முன்னேற்றத்திற்கு உளரீதியாக, ஓர் முட்டுக் கட்டையாக இருப்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

# புகுந்தகத்தில் புதுவாழ்வு

## வேற்று மண்ணில் வேரூன்றும் தமிழன்

புதிய யுகத்தில் புதுவாழ்வு பூத்துக் குலுங்கப் போகிறது என உள்ளத் துடிப்போடு, உவகையாகக் கற்பனைக் கோட்டைகள் பலவற்றை அமைத்து, அதனுள் அரியாசனம் ஏறி ஆனந்தக் கடலில் மிதந்த நம்மவர்கள் பலர் படிப்படியாக, கசப்பான உண்மைகள் பலவற்றை முண்டி விழுங்க வேண்டிய நிலையில் இருக்கிறார்கள்.

பலருக்கு, மேலை நாடுகளில் பாலும் தேனும் கலந்து ஓடுகிறது. வறுமைக் கோட்டைத் தாண்டிப் பட்டினி, பசி, பஞ்சம் போன்ற படு குழிக்குள் விழாதிருக்கச் சமூக நலநிதி உதவி என்ற கருங்கல்லால் கட்டப்பட்ட மதில் காவாந்து பண்ணுகிறது. அவ்வுதவிப் பணத்தின் ஒரு பகுதியை, நாட்டில் ஈடு வைத்த காணியை மீட்கவும், அடகு வைத்த நகைகளை மீளப் பெறவும், கைமாற்றாகப் பெற்ற கடனைத் திருப்பி அடைக்கவும் கூட முடியும் என்ற தெண்பும் ஏற்படுகிறது. மேலும், ஒருபடி சிக்கனமாக நடந்தால் வளர்ந்து வரும் சின்னவனையும் ஏதோ ஒரு வகையில் வெளியே கொண்டு வந்து விடலாம் என்ற நப்பாசையும் கூடத் தலை தூக்கப் பார்க்கிறது.

ஆனால், சில மாதங்கள் கழிந்ததும் அவர்களது வெளிநாட்டுக் குதூகல வாழ்வில் கண்ட தேன்நிலவு கலைந்து, பழைய குருடி கதவைத் திறவடி என்பது போல மீண்டும் சோகக் கடலில் தத்தளிப்பதைப் பலராலும் உணர முடிகிறது. இக்கட்டங்களில் தான் கனடா, அவர்களுக்கு சுவிஸ், பிரான்சிலிருந்து அனுப்பப்பட்ட வீடியோக்கசட்டை அக்கம் பக்கத்து வீட்டில் பார்த்த ஞாபகம் வருகிறது. இங்கு நடை பெற்ற பிறந்த தின விழாக்களிலும், திருமண வைபவங்களிலும் காணப்படும் கோலாகலமான களிப்பூட்டும் காட்சிகள், மேலைநாட்டவரே தோற்றுப் போகுமளவிற்கு கோட், சூட் உடுப்புக்கள், வள்ளி திருமணத்தின்போது முருகனுக்கும் வள்ளிக்கும் கந்தன் ஆலயத்தில் சோடிக்கப்பட்டது போன்ற நகைச் சோடனைகளால் அலங்கரிக்கப்பட்ட இள வட்டங்கள் அங்குமிங்கும் ஓடும் காட்சி கண்முன் வந்து நிற்கின்றது. அவர்கள் விதம் விதமான கார் வண்டிகளில் தேர்வடம் போன்ற சங்கிலிகள் கழுத்தை அலங்கரித்துச் செல்லும் காட்சிகள், தாயகத்திலிருந்து வீடியோவில், எமக்கு ஓம குண்டத்தில் ஐயர் நெய் ஊற்ற, அக்கினித் தேவதை சுடர்விட்டுப் பிரகாசிப்பது போல உள்ளங்களைக் குமுற வைத்த நிலை நினைவுக்கு வருகிறது.

மின்னுவதெல்லாம் பொன்னல்ல, என்று பாட்டி சொன்ன பழமொழி தான் பலருக்கு ஞாபகத்தில் வருகிறது. உணவகங்களில் முகாமையாளர் என்றும், தொழிலாலைகளில் தொழில் நுட்பத்துறை மேற்பார்வையாளர் என்றும் வானளாவ இலங்கைத் தீவிற்கு வந்தபோது கூறிய நம்மவர்களில் சிலர், அல்லும் பகலும் அப்படியும் இப்படியும் உழைப்பதைப் பார்த்து, அவர்களை நம்பி வந்தவர்கள் கவலை தோய்ந்த முகத்துடன் இருக்கிறார்கள்.

நம்மவர்கள் கடந்த பத்து ஆண்டுகளில் புகுந்தகத்தில் பெற்றுவரும் அனுபவங்கள் அலசி ஆராயப்பட வேண்டியவை. இலங்கைத் தீவில் நம்

மண்ணில் ஒரே விதமான நடை, உடை, பாவனை, பண்பாட்டுச் சூழலில் வளர்ந்து வந்திருக்கிறோம். எமது மண்ணின் வாசனை இன்றும் எம் உள் ளங்களை விட்டு மறையவில்லை. பலரைப் பொறுத்தவரை உடல்கள் இங் கே, உள்ளங்கள் அங்கே. ஒரே குட்டையில் ஊறிய பல மட்டைகள். நாம் கனவிலுங்கூட மாறுபட்ட பண்பாட்டினை எண்ணிக் கூடப் பார்க்காது இருந் திருக்கிறோம். ஒரே வகைப் பண்பாட்டில் (Mono Culture) நாகரிகத்தில் வளர்ந்த எமக்கு, திடீரெனச் சிறிதளவேனும் எண்ணிப் பார்க்காதளவிற்கு மாறுபட்ட பின்னணியில் பல சமூகங்கள் மத்தியில் வாழும் நிலையில் இருக்கிறோம். மேலெழுந்தவாரியாகப் பார்க்குமிடத்து பல நிற மக்களைச் சந்திக்கிறோம். கறுப்பு இன மக்கள், சீனர், யப்பானியர், மொங்கோலிய இனத்தவர்கள், வெள்ளை இனத்தவர்கள் எனப் பலரைச் சந்திக்க, சேர்ந்து வேலை செய்ய, கூடிப் பழக நேரிடுகிறது. கனடாவில், நூற்று ஐம்பதுக்கு மேற்பட்ட நாட்டிலிருந்து புலம் பெயர்ந்தவர்கள் வாழ்கிறார்கள். சற்று ஆழ மாகப் பழக நேரிடுமிடத்து கறுப்பு இன மக்கள் மத்தியில் கூட பல நூற் றுக்கணக்கான பண்பாடுகளின் அம்சங்களைக் காணமுடிகிறது. கிழக்கா பிரிக்காவிலிருந்து வந்த சோமாலிய, எதியோப்பியா, உகண்டா, ரன்சானிய மக்கள் மேற்கு ஆபிரிக்காவில், நைஜீரியா, கானா போன்ற நாடுகளிலிருந்து வந்தவர்கள் முற்றிலும் வேறுபட்ட பண்பாட்டை வெளிப்படுத்தி வருகிறார் கள். மறுபுறம் அடிமைகளாக இருநூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன் வடஅமெரிக்காவிற்கு வரவழைக்கப்பட்ட கறுப்பு இன மக்கள் இருக்கிறார் கள். இவர்கள் ஆபிரிக்கச் சந்தைகளில் ஆடு, மாடுகள் விற்கப்பட்டது போல விற்கப்பட்டனர். ஒரு போத்தல் விஸ்கிக்கும், துவக்கிற்கும் பல நூற்றுக் கணக்கானவர்கள் விற்கப்பட்டனர். இவர்களை அன்றைய பிரித் தானிய சாம்ராச்சியம் வாங்கி, அமெரிக்கக் கண்டத்திற்கு ஏற்றுமதி செய் தது. அடிமைகள் காலில் விலங்கிடப்பட்டு, மிருகங்களிலும் கேவலமாக நடத்தப்பட்டனர். மலேரியா, வயிற்றோட்டம் போன்ற பலவகை நோய்களுக் குப் பலியானார்கள். பேய்களும் கழுகுகளும் இவர்களின் பிணங்களைத் தின்றன.

இவர்களை ஏற்றி வந்த பாய்மரக் கப்பல்கள் 40 பாகையில் (Latitudes) மாறுபட்ட திசைகளில் காற்றுக்கள் வீசப்பட்டபோது, கப்பல்கள் அங்குமிங் கும் தூக்கி எறியப்பட்டநிலையில், கப்பலின் பாரத்தைக் குறைக்க இவ்வடி மைகளில் பலர் கடலில் எறியப்பட்டனர். இவர்கள் மீன்களுக்கு அறுசுவை உணவாக அமைந்தனர். இவர்கள் ஆபிரிக்க நாட்டின் பல மொழி, பண் பாட்டின் பின்னணியைச் சேர்ந்தவர்கள். இவர்களைத் தந்திரமாக வெள்ளை யர்கள் தம் மொழிப் பண்பாட்டை மறக்க வைத்தனர். இரு மொழி பேசும் மக்களை ஒரே கூரையின் கீழ் வாழ வைக்கப்பட்டபோது சைகை மொழி யால் தொடர்பு கொண்டு பார்த்தனர். நெருங்கிப் பழகிக் கொண்டுவரும் கட்டத்தில், ஏதோ ஒரு மொழியின் துணை தேவைப்பட்டது. சுவாகிலி மொழி பேசிய ஆபிரிக்கனுக்கு யொருபா பேசும் ஆபிரிக்கன் மொழி எந்த வித அர்த்தத்தையும் வழங்கவில்லை. வேறு எந்த வழியும் இல்லாத நிலை யில் ஆங்கிலத்தைக் கற்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். என்று ஒரு இனம் தனது மொழியை இழந்ததோ, அன்று அந்த இனம் தன் தனித் துவத்தை இழந்தது மட்டுமல்ல, தம் இனத்தின் பண்பாட்டின் பொக்கிஷ

த்தையும் இழந்து விடுகிறது. மொழி இழந்து, பண்பாட்டைக் கொன்று, பழக்க வழக்கங்களை மாற்றி, வாழ்க்கை முறையைத் திசை திருப்புமிடத்து அவ் இனம் மற்றுமொரு இனத்திற்கு அடிமையாகி விடுகிறது. இன்றும், இவர்கள் எங்கிருந்து வந்தோம், எம் மூதாதையோர் யார்? எமது தாயகம் எது? எனத் தம் மூலவேரைத் தேடியலைகிறார்கள். அவதிப்படுகிறார்கள். ஆத்திரமடைகிறார்கள். அங்கலாய்க்கிறார்கள்.

இவர்கள் வழி வந்த சந்ததியினர் இன்று உளரீதியில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் மூதாதையர்கள் உள்ளத்தில் ஒட்டியிருந்த தாழ்வு மனப்பான்மையின் வேதனைகள், வெப்பியாரங்கள், உள்ளக் குமுறல்கள் ஒருங்கிணைந்து பீறிட்டு எழுகின்றதை நம்மால் நன்கு பார்க்க, உணர முடிகிறது. சாந்தமான சமூகத்தின் கௌரவம், நடையுடை பாவனைகள், ஏமாற்று வித்தையின் கோலங்கள் என்று, உணரத் தலைப்படுகிறார்கள். இவர்களை அறியாத வகையில் உளரீதியில் இவர்கள் வளர்ச்சி தடைப்பட்டு வந்த தன் பிரதிபலிப்பை இவர்கள் ஓரளவு தான் உணர்ந்திருக்கிறார்கள் என்று தெரிகிறது.

முன்னேறிய சமுதாயங்கள் சில திட்டமிட்ட ரீதியில் ஒரு இனத்தின் பண்பாடு, நாகரீகம், தனித்துவத்தை வலுவிழக்கச் செய்திருக்கிறது . அவர்கள் உள்ளத்தில் தாழ்வுணர்வு ஏற்படுத்தப்படுகிறது. அதனைத்தொடர்ந்து அறிவு வளர்ச்சிக்குச் சற்று அப்பால் இசை, விளையாட்டுத் துறைகளில் ஊக்குவிக்கப்படுகிறார்கள். பண்டைய கிரேக்கர் போல் வீரமும், காமமும் தலையெடுக்கத் தமக்கொரு வாழ்வை அமைத்துக் கொள்கிறார்கள். ஆனால், பண்டைய கிரேக்கர் போல அறிவு வளர்ச்சி பெற ஊக்குவிக்கப்படவில்லை. பகுத்தறிவு வளர்ச்சிக்குத் தகுந்த சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை. கற்றோர் மத்தியில் தொழில் வாய்ப்புக்களை வழங்குவதில் பாரபட்சம். இவற்றோடு கூடிய அறிவுத் துறையில் நாட்டம் கொள்வதை, திசை திருப்பி விடுகிறார்கள். நாளாவட்டத்தில் பின் தங்கிய இனம் என்ற வேலிக்குள் அடைக்கப்பட்டு விடுகிறார்கள். இத்தகையதொரு நிலை எந்தவொரு புதிய இனத்திற்கும் ஏற்பட்டு விடலாம் என்ற பயம் பலர் மத்தியில் இருக்காமல் இல்லை. அடுத்து, எம் இனத்தோடு இணையக் கூடியவர்களாக இருப்பவர்கள் "கயானாக்காரர்" என அழைக்கப்படும் மேற்கிந்திய தீவுகளையும், தென் அமெரிக்காவையும் சேர்ந்த இந்திய வம்சாவழியினர். கூலிகள் என நாசுக்காக அழைக்கப்படும் இவர்கள் வெளித் தோற்றத்தில் எம்மைப்போல் இருக்கிறார்கள். பெரும்பாலானோர் இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள். குறிப்பிடத்தக்களவு மக்கள் இஸ்லாமியர்கள். காரசாரமான உணவு வகைகளை எம்மைப் போலத் தயாரித்து உண்கிறார்கள். இவர்கள், நான் முந்தி நீ முந்தி என மேலைநாட்டு மோகத்தில் மூழ்கியுள்ளார்கள். அடிமைகளாய் கரும்பு, புகையிலைத் தோட்டங்களில் வேலை செய்ய இந்தியாவில் இருந்து அமெரிக்கக் கண்டத்தில் இறக்குமதி செய்யப்பட்டவர்கள், நாளாவட்டத்தில் வேகமாக முன்னேறினார்கள். முன்பு வந்த கறுப்பு இன மக்கள் உண்டு, உடுத்து. உவகை கொண்டிருந்தபோது இவர்கள் உண்டி சுருக்கி, உழைப்பால் உயர்ந்து சொத்துக்களைச் சேகரிக்க முன் வந்தனர். இவர்கள் பதுமையான சுபாவம் கொண்டவர்கள். இவர்களை மேற்கிந்திய தீவுகளில், கயானாவில் கறுப்பு இன மக்கள் வன்முறை, மிரட்டல் மூலம் அடக்கி

PUBLIC LIBRARY
JAFFNA
SPECIAL COLLECTION

வைத்திருக்கிறார்கள். இதனால், கறுப்பர்களுடன் ஓடும் புளியம்பழமும் போல வாழ்கிறார்கள். இந்நிலையில் சொந்தப் பண்பாட்டைத் தொடரவும் முடியவில்லை. கறுப்பர் போக்கில் வெறுப்பு இன்னொரு புறம். எனவே, வெள்ளையின மக்கள் போல் முக்காலமும் குளித்துப் பார்த்தார்கள். ஆனால், வெள்ளைக் கொக்காக முடியாது என்ற உண்மையை உணர்ந்து கொண்டார்கள். இவர்களுக்கும் கறுப்பு இன மக்களுக்கும் வரலாற்று ரீதியில் பல ஒற்றுமைகள் காணப்பட்ட போதும் அடிப்படை வேறுபாடுகள் சிலவும் தெரிகின்றன. புதுக் கண்டத்தைச் சேர்ந்த கறுப்பு இன மக்கள் இன்று வருகை தரும், ஆபிரிக்க கறுப்பு இன மக்களிடம் அனுதாப உணர்வு காட்டுவதில்லை. தம் மூதாதையரை அடிமைகளாய் விற்றுவிட்ட நயவஞ்சகர்கள் என்று கூட, சிலர் வேதனைப்படுகிறார்கள். பலர் தம்மை நிரந்தர இரண்டாந்தரப் பிரஜைகளாக வித்து இட்டவர்கள் என்று வேதனைப் படுகிறார்கள்.

ஆனால், கயானாக்காரர் எனக்கூறப்படுவோர் இங்கு அண்மைக்காலங்களில் வந்து குடியேறிய இந்திய வம்சாவழியினரைப் பார்த்துப் பொறாமைப்படுகிறார்கள். அவர்களுக்கென ஓர் தெளிவான குடும்ப வரலாறு உண்டு. சுதந்திர நாட்டிலிருந்து சுதந்திரப் பறவைகளாய் வந்திருக்கிறார்கள் என, ஓர் மதிப்பும் வைத்திருக்கிறார்கள். வெள்ளையரைப் போல அண்மையில் இங்கு வந்து குடியேறிய பாகிஸ்தான், இந்தியா, பங்களாதேஷ், இலங்கைத் தீவு மக்களை "பாக்கி" என்று தமக்குள்ளே எள்ளி நகையாடுவதும் உண்டு. நவநாகரிக ஏணியில் பல படிகள் கீழே இருக்கிறார்கள் என்று கருதும் போதெல்லாம் "பாக்கி" கள் பழக்க வழக்கங்கள் இது என்று சுட்டிக் காட்டி விடுகிறார்கள்.

இந்நாட்டு சமூக நதியின் முக்கிய மூல அருவியாகக் கருதப்படும் வெள்ளையின மக்கள் தொகையால் கூடியவர்கள். மூலதனத்தை முடக்கி வைத்திருப்பவர்கள். இவர்களுக்கும் எம்மவர்களுக்குமிடையில் ஓர் நீண்ட இடைவெளி இருக்கிறது. இக்கயானாக்காரர்கள் எவ்வளவு தூரம் மழித்தும், நீட்டியும், வெள்ளையின மக்களின் சம்பிரதாய பழக்க வழக்கங்களை விரும்பியோ விரும்பாமலோ ஏற்றுக் கொண்டிருந்த போதும், அவர்கள் சமுதாயக் கோட்டைக்குள் நுழைய முடிவதில்லை. எட்டிப்பார்த்து ஏப்பம் விடுபவர்கள் பலர். கிட்டச் சென்று மூக்குடைபட்டவர்கள் சிலர். அவர்களைப் போல ஆகிவிடவேண்டுமென்று துடியாய்த் துடித்துத் தம்மை மாற்ற முயல்பவர்கள் மற்றும் சிலர். முடிவில் நாம் தமிழன் என்பதை ஏற்று, தமிழனாக வாழ்வதில் தான் எம்மை மதிப்புடையவர்களாக்கிக் கொள்ளலாம் என்பதில் அசையாத நம்பிக்கை அடைகிறார்கள். அதுவே நீண்ட கால வெற்றியின் அறிகுறியாகும். நெருங்கிப்பழகி உறவுமுறை கொண்டாடி ஒருங்கிணைந்து வெள்ளை மக்களோடு வாழும் மவுசு நம் மக்கள் மத்தியில் முளைக்கவில்லை. ஆனால், அவர்களைப் புரிந்து வாழ்வதில் தவறில்லை. எவ்வளவு தூரம் புரிந்து வாழ்கிறோம் என்பது கேள்விக்குறி. ஓரளவு மேலெழுந்தவாரியாகப் புரிந்துவிட்டு, அவர்களை நன்றாகப் புரிந்ததாகப் பாசாங்கு பண்ணி நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதிலும் அர்த்தமில்லை. பெரும்பான்மையாக வாழும் இந்நாடுகளில் அவர்கள் அணுகுமுறைகளைப் புரிந்து கொள்வது அவசியம். புரிந்து மதிப்பதும், புரண்டு கிடந்து மண்டியி

டுவதும் முற்றிலும் வேறுபட்டவை. புரிந்து பழகிக் கொள்ளாதிருந்து வெள்ளாடு குழை தின்றது போல அங்குமிங்கும் சிலவற்றை அறிந்துகொண்டு தவறான முடிவுகள் எடுத்துக் கொள்வது தவிர்க்கப்பட வேண்டியதொன்று.

வெள்ளையினம் என்று ஒரு தனிப்பட்ட இனம் இல்லை. பலவித பண்பாடு, நாகரிகம் படைத்த வெள்ளையர்கள் மத்தியில் மாறுபட்ட நோக்கங்கள் இருக்கின்றன. இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ஆங்கிலேயருக்கும், வட அமெரிக்க ஆங்கிலேயருக்குமிடையில் கணிசமான வேறுபாடுகள் உண்டு. கனடாவில்கூட மேற்குக் கனடியருக்கும் கிழக்குக் கனடியருக்குமிடையில் வேறுபாடுகள் உள்ளன. ஏன், தமிழ்நாட்டில் கூட சேர, சோழ, பாண்டிய மன்னர்கள், அவர்கள் தம் குடிமக்களிடையே கூட வேறுபாடுகள் இருக்கத்தான் செய்தன. நெருங்கிப் பழகும் போதுதான் இவ்வேறுபாடுகள் புலப்படுகின்றன, உணர முடிகின்றன.

இத்தகைய பலதரப்பட்ட மக்களைப்பற்றி அறிகிறோம், பழகுகிறோம், உறவு கொண்டாடுகிறோம், கருத்துகள் பரிமாறுகிறோம், சேர்ந்து வேலை செய்கிறோம். நம்சிறார்கள் அவர்கள் பிள்ளைகளுடன் கூடி விளையாடுகிறார்கள் . இவர்கள் மத்தியில் நாம் தமிழீழத் தமிழன் போல் வாழ்வதா? கனடியர் போல வாழத் தெண்டிப்பதா? இரண்டிற்கும் இடையே எங்கே? எப்படி கோடு கீறி வாழ்வது? என்பது பலருக்கு ஓர் கேள்விக் குறியாக உள்ளது.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி

## பல இனங்கள் மத்தியில் நம் இனம்

தாயகத்தில் தமிழன்னையின் அரவணைப்பில் தனிச்சுவை கண்ட நாம், இன்று வேற்று மண்ணில் வேறுபட்ட சூழலில் வேரூன்றுகிறோம். தமிழோடு இசை பாடக் கேட்டுத் தமிழ் மணம் கமழும் தென்றலில் தேனைச் சுவைத்து, தமிழிலே கற்று, தமிழிலே பேசி, எழுதி வந்த நாம், மாறு பட்ட சூழலில் வாழவேண்டிய நிலையில் இருக்கிறோம்.

தடக்கி விழுந்தாலும் தமிழன் மேல் விழக்கூடிய சூழலில் இருந்த நாம் இன்று இங்கு பல இன, மத, பண்பாட்டு, நிற மக்கள் மத்தியில் வாழுகிறோம். சிறிய குட்டை ஒன்றில் துள்ளித் துள்ளி நீந்திய மீன்களைப் பல ஆறுகள் சங்கமிக்கும் ஆழ் கடலில் அடைந்திருப்பது போலப் பலரும் இங்கு வாழ்கிறோம். நாம், சிறிய நகரங்கள் கிராமப் புறங்களில் கட்டுப்பாடான பண்பாட்டின் எல்லைக்குள் வாழப் பழகிக் கொண்டவர்கள். கூட்டாக அண்ணன், தம்பி, மாமா, மச்சான் என, ஒருங்கிணைந்து கூட்டு வாழ்வு வாழப் பழகியவர்கள் நம்மவர்கள். நாங்கள் பல நூற்றாண்டுகளாகப் பழக்கப்பட்ட வாழ்க்கை முறையில் ஊறியிருக்கிறோம். அங்கு, அப்பா முன் அதட்டிப் பேசாது அடக்க ஒடுக்கமாக மகன் இருப்பதும், பெண்பிள்ளை சாவதானமாக நடப்பதும், நமக்கு நன்கு பழக்கப்பட்ட முறை. வயதிற்கு மூத்தவர்களை இளையவர்கள் மதித்து நடப்பதும், நாணம், கட்டுப்பாடு, வாய்மை என்பவற்றிற்கு முதலிடம் வழங்குவதும் அங்கு சர்வ சாதாரண நிகழ்ச்சிகளாகும். இத்தகையதொரு சூழலில் வளர்ந்த எம் இனம், கனடா போன்ற நாடுகளில், நாம் இப்படித்தான் வாழவேண்டும் என்று இல்லாமல் பல படிகள் இறங்கி சில சந்தர்ப்பங்களில் எப்படியும் வாழலாம் என எண்ணவும்

தலைப்பட்டிருக்கிறது. புதிய சூழலில் இப்படித்தான் வாழவேண்டும் என்ற நியதி சரிப்பட்டு வராது என்று கூடச் சிலரைச் சிந்திக்கவும் செய்கிறது.

நாம் வாழும் சூழலில் வானளாவ வளர்ந்த மாடமாளிகைகள், கோட கோபுரங்களைக்கொண்ட மாநகரங்கள் மலிந்து காணப்படுகின்றன. கனடா வில் வாழும் தமிழரில் 90 வீதத்திற்கு மேற்பட்டவர்கள் ரொரொன்ரோ, மொன்றியல், வான்கூவர் போன்ற நகரங்களில் வாழுகிறார்கள். இலங்கைத் தீவில் பெருநகரம் எனக் கருதப்படும் கொழும்பு நகரை விடப் பல மடங் கு வளர்ந்த நகரங்களில் நாம் இங்கு வாழுகிறோம். கிராமப்புறக் கனேடிய மக்கள் கூட இந்நகரங்களுக்கு வரும்போது மிகவும் புதியதொரு உலகில் சஞ்சரிக்கும் உணர்வோடு இருக்கிறார்கள். இத்தகைய நகர வாழ்வு நமக்கு மட்டுமல்ல பலருக்குமே புதிய அனுபவங்களைத் தரும் புரியாத புதிராக இருக்கிறது. இத்தகைய சூழலில் நமது சிந்தனை, செயற்பாடுகளை மாற்றி யமைத்துக் கொள்வது சுலபமல்ல.

ஜேர்மனி, பிரான்ஸ், இங்கிலாந்து, டென்மார்க் போன்ற நாடுகளில் பல நூற்றாண்டுகளாகக் கட்டி வளர்க்கப்பட்ட பண்பாடு, வாழ்க்கை முறை-யென ஒன்று, தெட்டத் தெளிவாக இருக்கிறது. கனடாவைப் பொறுத்தவரை பல நாட்டு மக்கள் வெள்ளம் பெருக்கெடுத்துப் பாய்கிறது. இவர்கள் மத்தியில் எம்மவர் இங்கு சந்ததியினர் முதல் தலைமுறையாக குடியேறி யுள்ளார்கள் பொதுவான வாழ்வுமுறையை நோக்கி அனைவரும் செல்கி றார்களா என்றால் அவ்வாறு இருப்பதாகத் தெரியவில்லை. "நண்டு தின் னும் நகரில் நடுப்பகுதி நமக்கு" என்று வாழ்வதற்குக் கூட முடியவில் லையே! நண்டுகளில் கூட பல வகைகள் உண்டு. இளைஞர்கள் சிலர் கறுப்பு இன மக்களின் இனக் குமுறல்களை நியாயப்படுத்திக் குமுறுகி றார்கள். மற்றும் பலர், தமக்குத் தெரிந்தளவிற்கு மேற்கத்தைய முறை-களைப் பின்பற்றுகிறார்கள். இத்தகைய குழம்பியதொரு நிலை புலம் பெயர்ந்தோர் ஆரம்ப கட்ட வாழ்வில் இருக்கிறது.

நாம் கிணற்றுத் தவளைகள் போல இருக்காவிட்டாலும் கூட உலகின் பல இன மக்கள் அன்றாட வாழ்வினை அறியும் சந்தர்ப்பம் கிடைக்காத சூழலில் வாழ்ந்து வந்திருக்கிறோம். அவ்வாறு அறிய வேண்டிய அவசியம் எமக்கு இருக்கவில்லை. இங்கு அதற்கு அவசியம் ஏற்பட்டிருக்கிறது. உதார ணத்திற்கு, சப்வே என அழைக்கப்படும் நிலத்துள் செல்லும் ரயில் வண்டி யில் செல்லும்போது பலரைப் பார்க்கிறோம். அவர்களின் உணவைத்தான் பாருங்களேன். எதியோப்பியன் பச்சை இறைச்சியைக் கண்ணப்பன் போல விரும்பி உண்பவன். கொறிய நாட்டினைச் சேர்ந்தவன் நாய் மாமிசத்தை விரும்புகிறான். சீனன் பாம்பைக் கறியாக்குவதில் நாட்டம் கொண்டவன். மலேசியன் குரங்கின் மூளையைத் தின்பவன். இப்படிப் பலதரப்பட்ட மக்க ளை ஒரு ரயில் வண்டியில் சந்திக்கிறோம். நாம் அவர்கள் அனைவரோடும் பழகுவதில்லை என்று சமாதானம் கூறிவிட முடியாது. படிப்படியாக வேரூன் றும்போது ஆலைகளிலும், வர்த்தக நிறுவனங்களிலும், கல்லூரிகளிலும் நேரடியாகவோ அன்றி மறைமுகமாகவோ பழகத்தான் போகிறோம். நம்மி னம் முன்னேறும் நோக்குடையது. புதுமையைக்கண்டு ஒதுங்கும் இனமல்ல நம்மினம். எமக்குள் நடக்கும் கொடுக்கல் வாங்கல் தொடர்புகள் பிற இன மக்களுடனும் விரிவடையப் போகிறது என்பது உண்மை. நாளாவட்டத்தில்

தமிழருக்காகத் தமிழ்க்கடைகள், தமிழருக்கெனச் செய்யும் ஆக்கபணிகள், உணவு விடுதிகள் அமைப்பதில் காட்டும் அக்கறையை விட ஏனைய இன மக்களுடன் தொடர்பு கொண்டு தன்னை உயர்த்தும் நிலைக்குத் தமிழன் உயரப்போகிறான். இவ்வாறான கால கட்டங்களில் நாம் பரந்த வட்டத்தில் வாழும் ஒரு நிலைக்கு, தள்ளப்படப் போகிறோம். அவ்வாறான காலகட் டங்களில் நாம் எம்மை எவ்வாறு தயார்படுத்திக் கொள்ள வேண்டும் என்ப து இன்றைய தலையாய கடமையாகும். நமக்குள்ளே பழங்கதைகள் பேசிப் பயனில்லை. நாம் உயர்ந்து கொள்ளாவிட்டால், வேகமாக முன்னேறும் இச்சமூகங்கள் மத்தியில் நாம் பின் தங்கியவர்களாகத் தள்ளப்பட்டு விடு வோம். எவ்வளவு பேர் வாழ்கிறோம், எவ்வளவு காலம் வாழ்கிறோம், என்ப தைவிட எவ்வளவு தூரம் முன்னேறுகிறோம் என்பதே நவீன உலகில் முக்கி யமானது.

புதிய சூழலுக்குப் பொருந்தும் வகையில் நம்மை வளைத்துக் கொடுப் பதென்பது பலருக்குக் கடினமானதொன்று போலத்தோன்றலாம். ஐந்தில் வளைக்க வேண்டியதைப் பத்திலும் இருபதிலும் வளைப்பது கடினமானதே என நினைப்பதா? இச்சூழலை மேலெழுந்த வாரியாகப் பார்க்கும் பொழுது எமக்குச் சில வேளைகளில் ஓர் தாழ்வு மனப்பான்மை கூட ஏற்படச் செய்கி றதே. நடை, உடை, பாவனைகள் ஒருபுறம் யந்திரமாக்கப்பட்ட தொழில் முறைகள் மறுபுறம். நாளாந்த வாழ்வில் கூடப் பலவகையான சந்தர்ப் பங்களில் சொன்னால் வெட்கம் சொல்லாவிட்டால் துக்கம் என்ற சங்கட நிலை ஏற்படுகிறது. காலகட்டத்தில் ஓரளவு புதிய முறைகள் பழக்கப்படத் தொடங்க இத்தாழ்வு மனப்பான்மை ஓர் உயர்வு மனப்பான்மையாக சில வேளைகளில் மாறுகிறது. "வெள்ளையருக்கு என்ன தெரியும். நாங்கள் அப் படிச் செய்வோம். இப்படிச் செய்வோம்" எனத் தம்பட்டமடிக்க ஆரம்பிக்கி றோம். இந்நிலைப்பாடு தெளிவுற்றதொரு கட்டத்தை அடைய வேண்டும். இக்கட்டத்தை அடைவதற்கான மனப்பக்குவத்தை நாடிச் செல்லக் கடமைப் பட்டிருக்கிறோம். தேவைப்படுகிறது.

இம் மனப்பக்குவத்தைத் தருவதுதான் பண்பாடு. பண்பாடு என்பது அகத்தே அமையும் மனத்தெளிவு. மனத்தை செம்மைப்படுத்தல் பண்பாட் டின் முதுகெலும்பு. ஆங்கிலத்தில் பண்பாடு (Culture) எனப்படுகிறது. நிலத்தில் பயிர் விளைத்தல் Cultivation என்றும், செய் நிலம் Cultivated land என்றும் கூறப்படுகிறது. தமிழில் பயிர் செய்நிலம் புலன் எனப்படு கிறது. உள்ளத்திற்கும் நிலத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதனால் எமது புலன்களும் நில புலன்களுடன் இணைத்துப் பேசப்படுகிறது.

எமது உள்ளத்தில் உறுதி வேண்டும். எமது நடைமுறைகள், பழக்க வழக்கங்கள், உணவு வகைகள், கொண்டாட்ட முறைகள், சமயக் கிரிகை கள் என்பனவற்றைப் புதிய சூழலில் இருந்து மாறுபட்டவையாகக் காணப்ப டும்போது என்ன செய்வது என்ற கேள்வி ஏற்படுகிறது. சிலர், முற்றுமுழு தாகக் காலத்திற்கேற்ப், கோலத்தை மாற்றிவிடுவதைத் தவிர வேறு வழியே இல்லை என்று அவசர முடிவு எடுத்துவிடுகிறார்கள். இவர்கள் இந்நாடு களின் பொருளாதார மேம்பாட்டிற்கு இந்நாட்டவர் பண்பாட்டு மேம்பாடு முக்கிய காரணமாக உள்ளதாகக் கருதுகிறார்கள். பண்பாட்டு வளர்ச்சிக் கும் பொரு ளாதார வளர்ச்சிக்கும் நிச்சயம் தொடர்புண்டு. ஆனால், பண்

பாட்டு வளர்ச்சி உயர்ந்த இடங்களில் பொருளாதார வளர்ச்சி தாழ்ந்த கால கட்டங்களும் உண்டு. அதே போலப் பொருளாதார வளர்ச்சி உயர்ந்த இடங்களில் பண்பாட்டு வளர்ச்சி தாழ்ந்தும் உள்ளன. உதாரணமாக, யப் பானியர்கள் பொருளாதார ரீதியில் தாழ்ந்திருந்தபோதும் சரி, இன்று உயர்ந்திருக்கும் போதும் அவர்கள் பண்பாட்டு முதன்மை அவர்கள் உள் ளத்திலிருந்து ஈடாடவில்லை.

நாம் எம் உள்ளத்தில் எமது வாழ்க்கை முறைகளைப் புதிய சூழல் என்ற ஆய்வுக் கூடத்தில் இட்டுப் பரிசோதித்துப் பார்க்க வேண்டிய அவசிய மில்லை. எமது மொழியைப் பகிரங்கமாகப் பேச நாலுபேர் மத்தியில் துணி வு வேண்டும். பேசுவதில் பெருமைப்படாவிட்டாலும் கூட, தாழ்மை உணர் வு கொள்ளக்கூடாது. எமது மொழி தெரியாதவர்கள் உள்ள கூட்டத்தில் எமது மொழி தெரிந்த சிலருடன் எம் மொழியில் உரையாடுவதும், பேசுவ தும் அநாகரிகமாகக் கருதப்படலாம். ஆனால், எமது மொழி தெரிந்த ஒருவ ரிடம் ஆங்கில மொழியில் பேசத் துணிவது தவறு.

பெரும் பொக்கிஷமான எமது பண்பாட்டைச் சுமந்து கொண்டு வந்து அதனைச் சாக்கடையில் தள்ளிவிட்டு, முதுகெலும்பற்ற முறையில் முன் வர எண்ணுவது பெரும் தப்பாகும்.

நம்மில் பெரும் பாலானோர், நம் தாய் மண்ணில் பிறந்து வளர்ந்தவர் கள். எமது மனத்திடகாத்திரமும், மனத்திண்மையும் தான் எம் சிறார்கள் உள்ளத்துறுதியை வலுப்படுத்தும். எமது பெற்றோர் நம் பண்பாட்டுச் சூழ லில் பிறந்து வளர்ந்து வந்தமையால் இத்தகையதொரு தலையாய கடமை அவர்களுக்கிருக்கவில்லை. ஆனால், எம்மைப் பொறுத்தவரை பிடுங்கி எடுக்கப்பட்ட மரம் புதுச்சூழலில் மீண்டும் நாட்டப்படும்போது சிக்கல்கள் போல இருக்கத்தான் செய்யும். நாம் இச்சிக்கல்களை வெற்றிகரமாகச் சமா ளித்து நமது பண்பாட்டினை நிலைநிறுத்தக் கூடிய இடங்களிலெல்லாம் நிலை நிறுத்த வேண்டும். அதுமட்டுமன்றி, எமது பண்பாட்டின் பெருமை-யை அறிந்து, உணர்ந்து உலகமெல்லாம் பரப்ப முன்வர வேண்டும். சில பழக்க வழக்கங்கள் எமக்கு அர்த்தமற்ற வெறும் சம்பிரதாயங்களாகவே தோன்றுகின்றன. ஏனெனில், அவற்றின் உட்கருத்தை எம்மால் புரிந்து கொள்ள முடிவதில்லை. சொந்த மண்ணில் அதனைப் புரிந்திருக்கத்தான் வேண்டும் என்ற அவசியம் இருக்கவில்லை. ஆனால், இங்கு இன்று இதன் அவசியம் ஏற்பட்டிருக்கிறது. நாம் எமது மண்ணில் தனிப் பண்பாட்டுடன் (MonoCulture) வாழ்ந்து வந்திருக்கிறோம். நாம் இங்கு பல பண்பாட்டுக ளையுடைய (Multi Cultural) சமூகத்தில், சிறுபான்மையினரில் ஒருவராய் வாழ்கிறோம். இந்நிலையில் சிரமம் பாராது நம் வாழ்வு முறையை நன்கு நிலை நாட்டுவதுடன், எமது பண்பாட்டின் மேன்மையை உலகெங்கும் அறியத் தரும் அரியதொரு வாய்ப்பு கிடைத்திருக்கிறது.

இது சம்பந்தமாக எம்மவர்களை இரு குடைக்கீழ் வைத்துப் பார்க்க லாம். ஒன்று தமிழ் பண்பாடு பெருமளவு பேணப்படட்டும் என்கிறது. மற் றது, காலத்தின் கோலத்திற்கேற்ப நம்மை மாற்றிக் கொள்வோம் என்கின் றது. இவர்களில் மாண்புமிகு மறைத் தமிழன் தன் பண்பாட்டை பிற நாடுக ளில் மறையவிடக் கூடாது என்று எண்ணித் துடிக்கிறான். மற்றவன், அத னைக் காற்றில் பறக்க விட்டால், தான் மேற்கத்தைய நாகரிகம் படைத்த

வன், என்ற அந்தஸ்தைப் பெற்றுவிட முடியும் என்கிறான். தமிழனும் சரா சரி மனிதன் தானே. இவர்கள் கனடா போன்ற நாடுகளில் நூற்றுக்கு மேற் பட்ட நாட்டிலிருந்து வந்து வாழும் மக்கள் அப்படியும் இப்படியும் வாழுவது போல தாமும் வாழ்ந்தால் என்ன என்கிறார்கள்.

சில, பழம் பெரும் நாகரிகம் படைத்த நாட்டவர்கள், இன்று தம் நாடு களிலேயே தம் பண்பாட்டைப் பேணிக் காக்க முடியாது இருக்கிறார்கள். இவர்களில் கிரேக்கர், இத்தாலியர், எகிப்தியர் போன்றவர்கள் எப்படி இந் நாடுகளில் தம் பண்பாட்டை முற்றாகக் கடைப்பிடிப்பார்கள் என எதிர் பார்க்க முடியும்.

தமிழனோ பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்கூட திரைகடல் ஓடியும் திர வியம் தேடிய போதும் தம் பண்பாட்டைச் சென்ற இடங்களிலெல்லாம் பரவி வந்திருக்கிறானே தவிர, பறி கொடுத்துவிட்டுக் கலங்கி வரவில்லை. தம் பண்பாட்டிற்குக் களங்கம் ஏற்படாது பேணிக் காத்து வந்திருக்கிறான். அத னைக் காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்ப வளைத்து, வளர்த்து வந்திருக்கி றார்கள். நாலாயிரம் ஆண்டுகளாக நம் மூதாதையோர் எத்தனையோ இன்னல்களுக்கு மத்தியில் வளர்த்தெடுத்துத் தந்த தனிப்பெரும் செல்வத் தை எடுத்து எறிய எமக்கு என்ன உரிமை இருக்கிறது? பதில், அதனைப் பேணிக் காப்பது எமது தலையாய கடமை. நாம் இந்தக் கடமையை, வெளி நாடுகளில் குடியேறிய முதற் சந்ததியினரின் முதற் கடமையாகச் செய்யா விட்டால் எங்கள் எதிர்காலச் சந்ததியினர் தம் இனத்தின் தனித்துவம் இழந்து, ஏனைய சில இனங்களைப்போல ஒதுங்கி வாழ நேரிடும். அது தமி ழன்னைக்குச் செய்யும் துரோகம். தமிழன்னையால் மறக்கவோ, மன்னிக் கவோ முடியாத குற்றமாகிவிடும்.

பிறந்த பொன் நாட்டில் தமிழன்னைக்குப் பூட்டப்பட்ட விலங்கை உடைக்க முனையும் நாம், வழமான இந்நாடுகளில் நம்மை வளர்ப்பது போல, நம் பண்பாட்டையும் நம்முடன் இணைத்து வளர்க்க வேண்டும். உடலில் ஓடுவது தமிழ் இரத்தம், செயற்பாடுகளில் இளையோடி இருப்பது நம் பண்பாடு என இருக்கவேண்டும்.

இந்நாடுகளில் நாம் காண்பதும் முரண்படுவதும் இரு பண்பாடுகள் அல்ல. அவை மூன்று வகைப்பட்டன. வாழும் இந்நாட்டு மண்ணின் பண்பாடு. அதனை நாம் தொட்டும் தொடாமலும் போகிறோம். எம்ம வர்களில் பலர் கனடியப் பண்பாட்டை ஆழமாகப் புரிந்து கொண்டதில்லை. கொள்ள வேண்டிய அவசியமும் அவர்களுக்கு ஏற்படவில்லை. நாம் எல் லாம் கனேடியப் பண்பாடு மேலை நாட்டுப் பண்பாடு என சொல்லிக் கொள்வதின் ஓர் கணிசமான பகுதி நவீன தொழில் நுட்ப வளர்ச்சியால் நகர்ப் புறங்களில் உருவாக்கப்பட்டுவரும் நகர்ப்புறப் பண்பாடு (Urban Culture) மணிக்கூட்டுடன் போட்டி போட்டு நிற்கவும், நேரமில்லை, நடக் கவும் நேரமில்லை என ஓடித்திரியும் வாழ்க்கை நகர்ப்புற வாழ்வு. நேரம் என்றால் பணம். பணம் இல்லையென்றால் பேய் மட்டுமென்ன ஈன்றெடுத்த தாயும் ஏறிட்டுப் பார்ககமாட்டாள்.

வசதிகள் பல படைத்த நகர்ப் புறங்களில், அவற்றின் கணிசமான அள வை நுகர்ந்து கொள்ள வாய்ப்புக்கள் மலிந்திருக்கின்றன. பலருக்குப் பொதுப் பணி செய்யவோ, ஊர்வம்பு பேசுவதற்கு எந்தவித நாட்டமும் வரு

வதில்லை. கிடைக்கும் வாய்ப்புக்களை நல்ல முறையில் பயன்படுத்த நேரமும் சாதனங்களும் போதாதிருக்கின்றன. இங்குதான் பொருளாதார அடிப்படைத் தத்துவம் தெளிவாகப் புலனாகிறது. (Human wants are unlimited but the resources are limited) தேவைகள் எல்லையற்றவை. அவற்றைப் பூர்த்தி செய்யவேண்டிய சாதனங்கள் சக்திகள் மட்டுப்படுத்தப்பட்டவை. இத்தகைய சூழலில் தான் விருந்தோம்பல், பொதுப்பணி போன்ற நல்ல நோக்கங்கள் குறைய ஆரம்பிக்கின்றன. சுயநலம் எப்படியும் தலை தூக்கு கின்றது. இப்படித்தான் தர்மத்தின் வழியில் நின்று சம்பாதிக்க வேண்டும் என்ற கருத்துத் தளர்கிறது. எவ்வளவு தொகையைக் கூடச் சம்பாதிக்கலாம் என்ற அவா தலை தூக்கின்றது. புத்தரின் தத்துவப்படி அவாவே துன்பத் திற்குக் காரணம் என்ற உண்மை உணரப்படாமல் போகிறது. இப்பண்பாடு கனடியப் பண்பாடோ அன்றி பிரெஞ்சுப் பண்பாடோ அல்ல. கைத்தொழில் மயமான நகர்புறப் பண்பாடு. இப்பண்பாட்டின் வளர்ச்சியை யப்பானின் ரோக்கியோ, இந்தியாவின் பம்பாய், அமெரிக்காவின் நியூயோர்க், கனடா வின் ரொரன்ரோ போன்ற பல நகரங்களில் காண முடிகிறது கிராமப் புறத்துக் கனடியர்களுக்குக் கூட இவ்வாழ்க்கை முறை புரியாத புதிராக இருக்கிறது. வின்சார் எனும் பட்டினத்தருகிலிருந்து இருந்து வந்த எனது நண்பன் ரொரன்ரோ வந்த மூன்று மணித்தியாலங்களில் தனது உடமை- களைப் பறிகொடுத்தார். அதே நபர், பதினொரு வருடங்களாக வின்சரில் இருக்கும் தனது வீட்டுக் கதவைப் பூட்டியதே கிடையாது என்றார்.

நகர்ப்புற பண்பாடுடன், நமது பண்பாடு எப்படி, எவ்வளவு தூரம் இணைந்து போகலாம் என்பது பலர் மத்தியில் எழும் பெரும் கேள்வி. இக் கேள்விகளுக்குப் பதில் காண முன் எம்மில் சிலர் உதிர்த்த பழங்களையும், காய்களையும் கவனிப்போம். நம்மில் சிலர் அறியாமையாலோ அல்லது நவநாகரிக மோகத்தாலோ தமிழ் வாழ்க்கை முறையை நிந்திப்பதில் பெரு மைப்படுகிறார்கள். தமிழனாகப் பிறந்ததையிட்டு மனச்சங்கடப்படுகிறார் கள். "நாங்களெல்லாம் இப்ப கனடியர். உந்த சம்பிரதாயங்களையெல்லாம் அங்கை வையுங்கோ. உவை அங்கை எங்கடை ஊரிலை சரி. இங்கை இந்தப் பழக்க வழக்கங்களை விட்டிடுங்கோ" என்பதும் "இஞ்சை பிள்ளை தமிழ்ப்படங்களைப் பார்த்துக் கெட்டுப் போகாதே. இங்கிலீசுப் படங்களைப் பார்" என்பதும் "என்னப்பா உந்தச் சனங்கள் வசுவிலையும் சப்வேயிலி லையும் தமிழிலை சத்தம் போடுதுகள். நாலு சொல்லுப் படிச்ச எங்களுக்கு வெட்கமாய்க் கிடக்குது" என்பதும் நாட்டு நிலை எப்படி என்று கேட்டால் "நான் இப்ப கனடியன் சிற்றிசன் எல்லே. எனக்கு எங்கை நேரம் பெடிய ளின்ரை கூத்துக்களைப் பற்றிக் கதைக்க. உங்கை ஸ்பொன்சரிலை வந்த சில கிழடுகள், நேரம் போகாமல் மோலிலை அலட்டுதுகள், அதுகளைக் கேள்" என்பதும் ஒருபுறத்தில் கூறப்படும் வாசகங்கள்.

மறுபுறத்தில் தவத்தாயின் தவப்புதல்வர்களின் பொன் வாய்களில் உதிர்ந்த முத்துக்கள் சில தரப்பட்டுள்ளன. "என்ன செய்தாலும் ஊரிலை கஞ்சி குடிக்கிறமாதிரி இஞ்சை இல்லையடா தம்பி. என்றைக்கோ ஒரு நாள் நாங்களும் எங்கடை நாட்டுக்குப் போகத்தான் போறம்"

"என்ன செய்தாலும் எங்கடை பெடியள் எங்களுக்குச் சுதந்திரம் வாங்கித்தான் தரப் போகிறார்கள்".

## அகத்துள்ளே அடைபட்டிருக்கும் அருந்தமிழ்

"பாய் டட், பாய் மம்" என்று விடை கூறிய வண்ணம் அவசர அவசர மாகக் கஜன் ஆரம்பப் பாடசாலையை நோக்கி வீறுநடை போடுகிறான். அவன் வீதியருகே நடைபாதையில் காலடி வைத்ததைக் கண்ட கயானாக் காரச் சிறுவன் ஒருவன் "காய் கஜன்" (Hai Gajan) என்று பின்னே கூப்பிட கஜன் திரும்பிப் பார்த்து, "காய் மை பொடி" என்று பதிலுக்குக் கூறிக் கொள்கிறான். காலையில் முதன் முதலாக வெளியே போகும் போது பின் னே நின்று கூப்பிட்டு விட்டானே என்ற மூடநம்பிக்கை எள்ளளவும் கஜன் உள்ளத்தைத் தொடவில்லை. பாடசாலைக்குச் சென்று தன் தமிழ் நண்பர் களைக் காண்கிறான். அவர்களைக் கண்டதும் ஒருவித இறுக்கமான புரிந்து ணர்வு முகத்தில் புன்முறுவலாய் மலர்கிறது. அவர்களோடு கதைக்கும போதும் கூட ஆங்கிலம் அல்லது வாழும் சூழலின் மொழி இயற்கையான அருவியாக வாயிலிருந்து ஊற்றெடுத்துப் பாய்கிறது. மொழி வேறுபட்டிருந் தாலும் பேசப்படும் விடயங்களில் கணிசமானவை நம் பண்பாட்டினைத் தொட்டுச் செல்கின்றன. கனடாவில் பிறந்த கஜனுக்குக் கூச்சம் எள்ளளவும் இல்லை. சரளமாகச் சிறார் பராமரிப்புநிலையத்தில் ஆங்கிலம் பேசிப் பழகி யதால் யாருடனும் முகத்தைப் பார்த்து வார்த்தைகளை அளந்து பேசாமல், அள்ளிக் கொட்ட முடிகிறது.அப்பா, அம்மா தற்காலிகமாக மறந்துவிடப்படு கிறார்கள். ஆசிரியரோ ஒரு நடமாடும் கம்பியூட்டர் போல எண்ணப்படு கிறார். பேச்செல்லாம் புதிய விளையாட்டுச் சாதனங்கள் பற்றியதே. சுப்ப நின்ரன்டோ, சேகாஜெனஸிஸ் பற்றியும் அவற்றில் விளையாடத் தரப்படும் பலவகை விளையாட்டு நாடாக்களும் பற்றியே பேச்சு. இடையிடையே தொலைக்காட்சியில் வரும் கார்டுன் என அழைக்கப்படும் நிகழ்ச்சிகள் பற் றிப் பேசுகிறார்கள். சில சமயம் வெள்ளைக்காரப் பிள்ளைகள், நமது தின் பண்டங்கள் சாப்பிடும்போது அதன் நறுமணத்தை எள்ளி நகையாடி, மூக் கை விரல்களால் உரசும் போதும் ஒருவகை வெட்கமும், ஓர் தாழ்வுணர்வும் தன்னை அறியாமலே எரிமலை போல் உள்ளத்துள்ளே குமுற, என்ன செய்வதென அறியாமல் அப்படியும் இப்படியும் சமாளித்து விடுகிறான். மனதுக்குள்ளே "இந்த நாட்டு மம் பாக்கிச் சாப்பாட்டைத் தந்து என் மானத்தை வாங்கிவிட்டாளே. இனிமேல் சாப்பாட்டிற்குக் காசு வாங்கி வரு வேன். இல்லையேல் பிரெஞ் பிறையும், கம்பேக்கரும்தான் கொண்டு வரு வேன். இல்லையென இடித்துரைத்து வேறு ஏதாவது தந்தால் அதனைக் குப்பைத் தொட்டிக்கே கொடுத்து விடுவேன்" என்று எண்ணுகிறான்.

இவ்வேளை வெள்ளையரில் ஓர் வெறுப்புணர்வு தோன்றுகிறது. ஆனால், ஆங்கில மொழியிலே எந்தவித வெறுப்பும் ஏற்படவில்லை. படிப்ப தும், பழகுவதும், விளையாடுவதும் ஆகிய நடவடிக்கைகளில் ஆங்கிலம் தாராளமாகப் பாவிக்கப்படுகிறது. பாடசாலை முடிந்து வீட்டிற்கு வரும் க ஜன் சோபாவில் பள்ளிக்கூடப் பையை ஐயர் அர்ச்சனைக்கு வில்வம் போட்டதுபோல போடுகிறான். அம்மாவைக் கண்டதும் அவசர அவசரமாகச் சப்பாத்தைக் கழட்டி எறிகிறான். தொலைக்காட்சிப் பெட்டி முன் மற்று மொரு சோபாவில் அமர்கிறான். அம்மா பார்த்து அரைவாசியிலிருந்த படக் கொப்பி தரையில் போடப்படுகிறது. கார்டுன் நிகழ்ச்சி ரி.வி.யில் வரவழைக்

கப்படுகிறது. சீதையை இராமன் விழிமேல் விழி வைத்துப் பார்த்தது போலப் பார்க்கிறான். இருந்த இடத்திலிருந்து, வழங்கப்பட்ட உணவை உணர்கிறான். அனைத்தும் அந்தச் சிறிய வட்டத்தினுள்ளே தனியுலகமாக இருக்கிறது. அப்போது பெரியப்பா வீட்டே வருகிறார். புறக்கண்கால் கூட ஏறிட்டுப் பார்க்கவில்லை. இந்நிலையில், எழுந்து நின்று, வளைந்து நெழிந்து மரியாதையாக வரவேற்கும் பண்பை, எப்படி எதிர்பார்க்க முடியும். தொலைபேசி குறுக்கிட்டு அலங்காரப் பூசைக்கு மணி அடித்தாற்போல ஒலி எழுப்புகிறது. பிராந்து மீனைக் கவ்வியது போல தொலைபேசியை எடுத்து விடுகிறான். கஜனுக்கு நன்கு தெரியும் தனது சக நண்பன் தான் இந்நேரம் தொடர்பு கொள்வான் என்று. அவனும் ஒரு தமிழ்ப் பையன்தான். பேச்சு தமிழ் கலந்த ஆங்கிலத்திலே நீண்டு போகிறது. இடைக்கிடையே தொலைக் காட்சியில் நடைபெறும் சம்பவங்கள் பற்றி விமர்சனமும் நடைபெறுகிறது. அன்று பாடசாலையில் நடந்த பல சம்பவங்கள் சிப்பியும், பூவும், வடையும் கோர்க்கப்பட்ட மாலை போல, மாறி மாறிப் பேசப்படுகின்றன.

இப் பிள்ளைகளின் உள்ளத்தில் ஆணித்தரமாகப் பதியப்பட்டு வருவது தாம் வாழும் சூழலின் பண்புகளே. வாழும் சூழல் ஈடாட்டமற்று இருக்கிறது. நன்கு ஒழுங்கு செய்யப்பட்டு திட்டவட்டமாகச் செயற்படுகிறது. அச் சமூக அழுத்தத்தின் செல்வாக்கு மூச்சிலும், பேச்சிலும், நாடித்துடிப்பிலும் நன்கு பதிந்துவிடுகின்றன. இந்நிலையில் இச் சிறார்கள் இயல்பாகப் பேசும் மொழி ஆங்கிலமாக அமைகிறது. பிள்ளைகளின் சிந்தனையில் ஆங்கிலம் அரியாசனமேறிவிட்டது. கனவில் புலம்பும் பல சிறார்களை அவதானித்திருக்கிறேன். அவர்கள் தம்மை அறியாமலே ஆங்கிலத்தில்தான் உழறுகிறார்கள். அவர்களுக்கு ஆங்கிலம் புற மொழியாகப் புலப்படுவதில்லை. இவர்கள் வீட்டில் தொலைபேசியிலும், தொலைக்காட்சியிலும் ஆங்கிலப் பின்னணியைக் கண்டும் கேட்டும் வருமிடத்து தமிழ் ஓர் அந்நிய மொழியாகத் தெரிகிறது. பெற்றோரிடம் கூடத் தமிழில் பேசுவதுதான் என்ற நிலை ஏற்படுமிடத்து பெற்றோரோடு கதைப்பதையும் குறைத்து விடுகிறார்கள். இந்நிலையில் அவர்கள் முதல் மொழி ஆங்கிலமாகவே அமைகிறது. தாய்மொழி கூடத் தமிழ் மொழியாக இருக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுவிடுகிறது.

பரம்பரை பரம்பரையாகப் பெற்றோரால் பேசப்பட்டு வரும் மொழிதான் தாய் மொழியா? அல்லது பிள்ளைகளால் இயற்கையாகப் பேசப்படும் மொழிதான் தாய்மொழியா? மேலை நாடுகளில் முதல் மொழியெனக் கூறப்படுவதும் நம் நாட்டில் தாய் மொழி எனப்படுவதும் ஒருவரது இயற்கையான சிந்தனை, உணர்வுகளை, உள்ளக் கிடக்கைகளை வெளிப்படுத்த உதவும் மொழியே. அதுவே அவரது தாய்மொழியாக அமைகிறது. மொழிக்கு வரைவிலக்கணம் கூறும் மொழியியலாளர் "மொழி என்பது மக்கள் தம் உணர்வோடு பிறப்பிக்கும் ஒலிகளாகிய குறியீடுகள் மூலம் தங்கள் எண்ணங்களையும் எழுச்சிகளையும் வெளியிடுவதற்கு உதவுகிற ஓர் அமைப்பேயாகும்" என்கிறார்கள். எம்மைப் பொறுத்தவரை தமிழ் அல்லாத எந்த மொழியும் நம் சிறாரின் தாய்மொழியாக இருக்க முடியாது, இருக்கவும் கூடாது என்பது எம் அவா. ஆனால், நடைமுறையில் அந்நிலை பிரதிபலிக்கிறதா?

பிள்ளைகளுக்குத் தமிழ் ஓர் இரண்டாவது மொழியாக அமைகிறது. தமிழைப் புரிய, தமிழில் பேச, சிந்திக்க உதவும் முதல் மொழியாக ஆங்கிலம் அமைகிறது. இரண்டாவது மொழியைக் கற்க உதவுவதும் அடிப்படையாக இருப்பதுமாக முதல் மொழி ஒன்று இருக்கிறது. அந்த ரீதியில் பார்க்கும்போது ஆங்கிலம் முதல் மொழியாக அமைகிறது. எழுத, வாசிக்க, பேசக் கற்றுக் கொண்ட மொழி ஆங்கிலம். அதன் உதவி கொண்டு மற்றுமொரு மொழியைக் கற்கும் ஒருவனுக்கு ஆங்கிலம் ஓர் தனி இடத்தைப் பெற்றுவிடுகிறது. ஆங்கிலத்தில் பழக்கப்பட்ட பின் கற்கப்படுவது தமிழ் மொழி.

ஆங்கிலம் பாடசாலைகளிலும், கல்லூரிகளிலும் போதனாமொழி, வர்த்தக நிறுவனங்களில் பாவிக்கப்படும் மொழி, அரச கரும மொழி, சமூகத்தில் பரவலாகப் பேசப்படும் மொழி, பொழுது போக்கு சாதனங்களில் குழந்தைகளுக்கு அன்றாட வாழ்வை இணைக்கும் பாலமாக அமைந்திருக்கும் மொழி. மேற்கொண்டு ஆங்கிலம் சர்வதேச மொழியெனப் பெருமையோடு தனி அந்தஸ்தைப் பெற்றிருக்கும் மொழி.

சிறார்களைப் பொறுத்தவரை ஊரோடு ஒத்துப்போய் வாழ்வதில் எந்தவித தப்பும் தெரியவில்லை. அவர்களைப் பொறுத்தவரை ஆங்கிலம் உயர்ந்த மொழியா? கடினமான மொழியா என்ற கேள்விக்கே இடமில்லை. தமக்கு முன் நடைமுறையில் காணப்படும் மொழியாக இருப்பது ஆங்கில மொழியே. இச்சிறார்கள் பச்சிளம் பாலன்களாக புலம் பெயர்ந்து வந்திருக்கிறார்கள். பலர் இந்நாட்டிலேயே பிறந்து வளர்கிறார்கள். காலா கட்டத்தில் புலம் பெயர்ந்து குடியேறிவரும் பிள்ளைகள் எண்ணிக்கை குறைந்த வண்ணம் போகிறது. இங்கேயே இச்சூழலில் பிறந்து வளரும் குழந்தைகள் தொகை உயர்ந்த கொண்டே தான் போகப் போகிறது. எனவே, இவ் ஆங்கில மொழியின் பங்கு கூடிக்கொண்டே போகிறது. இவர்களுக்கு இன மத நிற வித்தியாசம் என ஒன்று இருக்கிறது. அதில் பாரபட்சம் காட்டப்படுகிறது என்ற எண்ண அலைகள் அடிக்கடி வந்து அவர்கள் உள்ளத்தில் அடிக்கலாம். ஆனால், வாழும் சமூகத்தின் மொழி அவர்களுக்கு பெருமிதத்தையோ அன்றித் தாழ்வுணர்வையோ ஏற்படுத்தப் போவதில்லை. ஆங்கிலம் அன்றாட பாவனை மொழியாகிறது.

ஒரு வகையில் யூதர் சமூகத்தினர் தமது பண்பாட்டிற்கும் மதத்திற்கும் வழங்கும் முக்கியத்துவம் தம் (Hebrew) ஹிபுறு மொழிக்கு வழங்காது வருவது தென்படலாம். இஸ்ரேலில் இருக்கும் யூதர்கள் தொகையை விடப் பன்மடங்கு யூதர்கள் அமெரிக்காவின் நியூயோர்க் மாநிலத்தில் வாழ்கிறார்கள். கனடா, இங்கிலாந்து, பிரான்ஸ் போன்ற பல செல்வந்த நாடுகளில் யூதர்கள் வாழ்கிறார்கள். இவர்கள் தொகையால் குறைந்திருப்பினும் அவ்வப் பிரதேசத்தின் பொருளாதாரத்தில் பலத்த செல்வாக்கும் கட்டுப்படுத்தும் ஆதிக்க பலனும் கொண்டிருக்கிறார்கள். யூதர்கள் இனப்பற்று மிக்கவர்கள், மதப்பற்றுக் கொண்டவர்கள். ஆனால், மொழியென்ற வாகனத்தில் தான் தம் இனத்தின் மேம்பாடு செல்ல வேண்டும் என உறுதி கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. எனவே இவர்கள் தம் மொழியைத் தம் சிறாரிடம் பரப்பிவிட வேண்டும் எனக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கவில்லை. இஸ்ரேலில் மட்டும்தான் அண்மைக் காலங்களில் கீபுறு மொழியை வளர்த்

தெடுக்க பல முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. யூதர்களைப் பொறுத்த வரை அவர்களை ஒருங்கிணைப்பது அவர்கள் மதம். அவர்களது நிறமோ, மொழியோ அல்ல. உதாரணத்திற்கு, இஸ்ரேலியர் எதியோப்பியாவில் இருந்த யூதர்களைக் கடத்தித் தம் நாட்டிற்குச் சூடான் மூலமாக எடுத்துச் சென்றிருக்கிறார்கள். எதியோப்பியாவிலிருந்து எடுத்து செல்லப்பட்ட யூதர்கள் பெலாஸ் (Falashas) என்று அழைக்கப்படுகிறார்கள். இவர்கள் கிட்ட தட்ட மூவாயிரம் ஆண்டுகள் வரலாறு படைத்தவர்கள். இவர்கள் எதியோப்பிய இளவரசி ஷேபா (Sheba) மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் மத்திய கிழக்குக்குச் சென்று மன்னன் சொலமனை மணந்து, தன் நாட்டிற்குத் திரும்பி வரும் காலத்தில் எதியோப்பியாவை அடைந்தவர்கள் இவர்கள் நிறத்தால் கறுப்பர்கள், ஆனால் யூத சமயத்தைக் கடைப்பிடிப்பவர்கள். இவர்களில் சுமார் பதிணெண்ணாயிரம் பேர் இஸ்ரேலியரால் இஸ்ரேலுக்கு எடுத்துச் செல்லப்பட்டார்கள். இஸ்ரேலில் வாழ விரும்பும் யூதர்கள் உலகின் எப்பாகத்தில் இருந்தாலும் அவர்கள் (Israel's law of return) இஸ்ரேலுக்கு திரும்பி வருவோர் பிரஜாவுரிமைச் சட்டப்படி, இஸ்ரேலிய பிரஜைகளாக ஏற்றுக் கொள்ளப்படுகிறார்கள். இச்சட்டத்தின் கீழ் எதியோப்பிய பெலாஸ் இஸ்ரேலியப் பிரஜைகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டார்கள். இவர்களை இஸ்ரேலிய அரசு கறுத்த இனத்தவர்கள் என்றோ, பின் தங்கிய சமூகம் என்றோ அணுகாது விட்டுவிடவில்லை. அவர்கள் பேசும் மொழிகளில் கூடக் கவனம் செலுத்தவில்லை. அதேபோல ருசியாவிலிருந்தும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் இஸ்ரேலுக்கு வரவழைக்கப்படுகிறவர்களும் இருக்கிறார்கள். இவர்களையும் யூத சமூகத்தின் உறுப்பினர்களாகப் பார்க்கிறார்களே தவிர மொழி ரீதியில் பார்க்கவில்லை. இவர்களில் பலருக்கு தெரிந்ததெல்லாம், ருசிய, உக்ரேனிய , சிலவாக்கியா போன்ற மொழிகளே.

மறுபுறம் பாகிஸ்தானியரையும் பங்கள தேசத்தில் இருக்கும் முஸ்லிம்களையும் எடுக்கும்போது அவர்கள் மதத்தால் ஒன்றுபட்டாலும் மொழியால், பண்பாட்டால் வேறுபட்டிருப்பதனால் போரிட்டு, பங்களாதேஷ் தனிநாடு அமைத்திருக்கிறது. ஏன்? தன் பண்பாட்டை, வங்காள மொழியை வளர்த்தெடுப்பதற்காகத்தான். இவர்கள் பிள்ளைகள் புலம் பெயர்ந்த நாடுகளில் நமது பிள்ளைகள் போலத்தான் இருக்கிறார்கள்.

மறுபுறம் உக்ரேனியர், இத்தாலியர், போர்த்துக்கேயர், ஜேர்மனியர் எனப்பல சமூகத்தினர் ஒரு நூற்றாண்டு காலமாகக் கனடாவில் வாழ்கிறார்கள். இவர்கள் நிறத்தால் வெள்ளையர்கள். ஐரோப்பிய பொது வாழ்க்கை முறையில் பல அம்சங்களைத் தம்மிடையே பகிர்ந்துகொண்டிருக்கிறார்கள். சமயத்தில் கிறிஸ்தவ சமயத்தைக் கடைப் பிடிக்கிறார்கள். இவர்களிடம் உணவு வகையில் பலத்த வேறுபாடுகள் இருப்பதாக இல்லை. நடை, உடை, பாவனை, அகவாழ்வின் நோக்குகளில் பல வேறுபாடுகள் மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது தென்படலாம். உள்ளார்ந்த ரீதியில் பார்க்கும் போது ஒருவகைப் பொது வாழ்க்கை முறை அவர்கள் மத்தியில் உருவாகிக் கொண்டு வருகிறது. பல இன ஐரோப்பிய வம்சாவழி வந்தவர்கள் கலப்பு திருமணங்கள் செய்து வருகிறார்கள். உதாரணமாக ஒரு பெண் ஆசிரியையின் தாத்தா அயர்லாந்தைச் சேர்ந்தவர். பாட்டி உக்ரே

னிய இனத்தை சேர்ந்தவள். தாய் போத்துகீச பரம்பரையைச் சேர்ந்தவர். அவரது கணவன் ஜேர்மனியர். இது போன்ற உறவுமுறை ரொறன்ரோ போன்ற நகரங்களில் பரவலாக காணக் கூடியதாக இருக்கிறது. ஆனால் கனேடிய நாட்டுப்புறங்களில் வாழும் வெள்ளையர்கள் தம் இனமேம்பாட்டை இறுக்கமாகப் பிடித்து வைத்து கொண்டு இருக்கிறார்கள். தமது மொழியை நன்கு நேசிக்கிறார்கள். கண்டம் விட்டுக் கண்டம் மாறி வாழும் இவர்கள் தம் தனித்துவத்தை நிலை நாட்ட உறுதுணையாக அவர்கள் மொழிகள் இருக்கின்றன. கண்டம் விட்டுக் கண்டம் வந்து வாழும் கட்டத்தில் அவர் களை அடையாளம் காட்டக்கூடியதொன்றாக இருப்பது அவர்கள் மொழியே. மொழியின் ஊடாக அவர்கள் வரலாற்றுக் கால கட்டங்களில் வளர்ந்துவரும் தம் சொந்தப் பண்பாட்டைத் தம் சிறார்களிடம் ஊட்ட முடிகிறது.

இவர்கள் எமக்குப் பல ஆண்டுகள் முன் வந்தவர்கள். இவர்களிற் பலர் எம்மைப்போல் ஓர் போர்ச் சூழலில் பாதிக்கப்பட்ட சூழலில் இருந்து வந்திருக்கிறார்கள். மற்றும் பலர் பொருளாதார கஷ்டங்களினால் வந்திருக் கிறார்கள். பொதுவுடமை ஆட்சிக் கொடூர நிலையால் வந்திருக்கிறார்கள். யூதர் யுத்த நிலைப்பாட்டின் பாதிப்பால் வந்திருந்தாலும் கூட அவர்கள் உலக ரீதியில் ஏற்பட்ட ஏகாதிபத்திய நிலை காரணமாக வெளியேறியி ருக்கிறார்கள். இவர்கள் வெளியேற ஏற்பட்ட சூழலை விட, நாம் வெளி யேற ஏற்பட்ட சூழல் மிகவும் கொடூரமானது. எமக்கு உரித்தான பாரம்பரி யத்தை வேரோடு அறுத்து எம்மைப் பூண்டோடு அழிக்கும் திட்டமிட்ட நடவடிக்கைகளினால் தாக்கப்பட்ட சூழலிலிருந்து நாம் வந்திருக்கிறோம். நாம்தமிழன் என்ற ரீயில் நிந்திக்கப்பட்டவர்கள் என்ற தாக்கத்துடன் வந்தி ருக்கிறோம். இதனால், எமக்கு தமிழ் மொழிப்பற்று, இனப்பற்று, கலை, பண்பாட்டு மறுமலர்ச்சி பற்றிய உணர்வு சாதாரண நிலையிலும் பார்க்க உயர்வாக ஏற்பட்டிருக்கின்றன.

நாம் மொழியால் இணைபட்டிருக்கிறோம் என்பது எமக்கு நன்குத் தெரிகிறது. எம்மை ஒருங்கிணைப்பது எம் அருந்தமிழ் மொழியே. இந்திய நாட்டில் கூடத் தமிழன் அகதியாகத் தமிழ் நாட்டிற்கு அனுப்பப்பட்டு இருக் கிறான். பம்பாயில் பல தடவை கலவரங்கள் ஏற்படுமிடத்து திராவிடன், தென்னிந்தியன் என்று பாராமல் தமிழன் என்ற ரீதியில் தாக்கப்பட்டி ருக்கிறான். இந்தித்திணிப்பை எதிர்த்துப் போராடியவன் தமிழனே. அவன் பர்மாவில் இருந்தும், கல்கத்தாவில் இருந்தும் தாக்கப்பட்டபோது ஓடோடி வந்து தமிழ் நாட்டில் தஞ்சம் புகுந்திருக்கிறான். காவிரிப் பிரச்சினை பீறிட்ட போதும் கூட ஆந்திர மக்களில் சிலர் தமிழரை விரட்டியடிக்கும்போது "தமிழா வெளியேறு" என்றார்கள். தமிழன் என்ற உணர்வை தமிழ் மொழி ஏற்படுத்தியிருக்கிறது. தமிழனது பண்பாட்டைத் தமிழ் மொழி பேணிக்காத் து வருகிறது. தமிழன் என்றொரு இனம் உண்டு, தனியே அவனுக்கொரு குணம் உண்டு என்ற கருத்து எம்மில் பலருக்கு உள்ளத்தில் ஓர் புதிய தெண்பைத் தருகிறது. ஆனால், இவ்வுண்மை புலம் பெயர்ந்து வாழும் நம் சிறாருக்குத் தெரிவதில்லையே.

இந்நிலையில் நாம் நம் மொழியை எவ்வாறு எம் பிள்ளைகளிடம் கற் பிப்பது என்பது பெரியதொரு பணியாக எம்முன் வைக்கப்பட்டிருக்கிறது. நாம் ஒன்றை மட்டும் நிச்சயமாக மனதிற் கொள்ள வேண்டும். தமிழ்

மொழியை எம் சிறாருக்கு இரண்டாவது மொழியாகக் கற்பிப்பதில் புதிய அணுகு முறை ஒன்று தேவைப்படுகிறது. .எமது பெற்றோர் எம்மிடம் தமிழ் கற்பித்த முறையைப் பின்பற்றி, நாம் நம் பிள்ளைகளுக்கு கற்பித்துக் கொள்வதென்பது முயற்கொம்புபோலாகும். எங்கள் பிள்ளைகள் தமிழ் கற்பதென்பது எழுத்தறிவு புகட்டப்பட்டு, கற்றவன் என்ற நிலையை அடைவ தற்காகவல்ல. தமிழைக் கற்பதினால் தொழில் வாய்ப்புக்கள் பெருமளவு கிடைக்கப்போகும் எனக் கருத முடியாது. தமிழைக் கற்றுக் கொள்வதனால் இங்கு புதிய தொடர்புகளை பெருமளவு நிலைநாட்டிவிடலாம் என்பதற் கில்லை. நம்மவர்களில் சிலர் தமிழ் கற்றாலும் தமிழ்ப் பண்பாட்டை நன்கு புரிந்து கொள்ளாமையால், தமிழ் வாழ்க்கைமுறை கரடுமுரடானது, கட்டுப் பாடுகள் மிக்கது, சம்பிரதாயங்கள் மலிந்துள்ளன என்கிறார்கள். தமிழ் மேலை நாட்டவர் சமூகத்தில் எம் அந்தஸ்தை உயர்த்திவிடாது என வும் சிலர் எண்ணுகிறார்கள். தமிழைக்கற்றாலும், தமிழில் பேசி, வாசிக்க நேரம் கிடைப்பதில்லை. தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், வானொலி நிகழ்ச்சிகள், பத்திரிகைகள் ஆங்கிலத்தில் வருவன போன்று தமிழ் நிகழ்ச்சிகள் தம் வாழ்வோடு இணைந்து பொருத்தமானதாக இல்லை எனக் கூறுகிறார்கள்.

## தமிழ் மொழியை எதற்காகக் கற்க வேண்டும்?

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என சர்வதேச பண்பாட்டு நிலையை அடையும் பக்குவம் பெற்றுவிட்டோம், எனவே தமிழன் எனக் குறுகிய வட்டத்துள் நம்மைச் சிறைப்படுத்திக் கொள்ளலாமா? என்று எண்ணுவதில் அர்த்தமில்லை. சங்க காலந்தொட்டு தமிழன் தமக்குள்ளேயே ஒருங்கி ணைந்து வாழவில்லை. சேர, சோழ, பாண்டியர் மூவரும் பலமுறை மோதி, உரசி, யுத்தம் புரிந்திருக்கிறார்கள். இன்றும்கூட மலேசியத்தமிழன், ஈழத் தமிழன், இந்தியத்தமிழன், பிஜி தமிழன் என்று பிரித்துப் பார்க்கப்படுகிறார் கள். இவ்வாறான நிலையைப் பார்க்கும்போது நாம் எமது ஒருங்கிணைப்புச் செயற்பாடுகளில் பலபடி ஏற இருக்கிறது என்பது புலனாகிறது. இவ்வாறான குறுகிய சிந்தனை, ஏனைய சமூகங்களிடையேயும் இருக்கத்தான் செய்கி றது. போர்த்துக்கேயரை எடுத்துக் கொண்டால் கூட போர்த்துக்கேய பிரதா ன நிலப்பரப்பில் உள்ளவர்கள் சிறு தீவுகளில் வாழும் போர்த்துக்கேயரைத் தீவார் எனக் குறைத்து எடை போடுகிறார்கள். எனவே, தமிழன் என்ற உணர்வு முற்றாக ஏற்பட்டிருக்கிறதென்பது பொருத்தமற்ற கருத்து. கடந்த மூவாயிரம் ஆண்டுகளாக ஏற்படாத இந்நிலைப்பாட்டை நாம் இலகுவில் ஏற்படுத்திவிடுவோம் எனக் கருதிவிட முடியாது.

ஆனால், பல இன மக்கள் மத்தியில் வாழும்போது நாம் எந்நிலையில் இருக்கறோம் என்பது சிக்கலான ஓர் விடயமாகும். வெள்ளையின மக்க ளால் நாம்கறுப்பின மக்களின் ஓர் அங்கமாகக் கருதப்படுகிறோம். பின்னர் கறுப்பு - மண்ணிற மக்கள் வட்டங்கள் ஏற்படும்போது மண்ணிற வட்டத் தில் சேர்கிறோம். அங்கும் நெருங்கிப் பழகி உள்ளக்கிடக்கைகளை, உணர் வுகளைப் பகிர வேண்டிய கட்டம் வருமிடத்து தமிழன் ஒருவனைத்தான் நாடுகிறோம். தமிழன் என எண்ணுவது மனித இனத்தைப் பிரித்து நடத்தும் செயற்பாடல்ல. தனித்தனியாக வாழும் மனிதனை ஒருங்கிணைப்பது

இனம். தமிழினம் என்னுமிடத்து ஏழுகோடி மக்கள் இறுகிய கட்டுக் கோப்பின் கீழ் இணைக்கப்படுகிறார்கள். ஒரு தமிழன் தாக்கப்பட்டபோது பல தமிழர் இரத்தம் கொதித்தது. ஒரு தமிழன் உலக சாதனை ஒன்றைப் படைத்துவிட்டான் என்றதும் முழுத்தமிழினமுமே பூரிப்படைகிறது. தமிழீழம் என்பது தமிழ் மொழியால் ஒருங்கிணைக்கப்பட்டு ஒரு பெரும் சக்தியாகப் பர்ணமிக்கிறது. மொழியல்லாத வேறு எந்த சக்தியும் எம்மை இணைக்கப் போவதில்லை. உடை, நடை பாவனைகள் உள்ளக்கிடக்கைகளை முற்றா கப் பிரதிபலிக்கப் போவதில்லை. தமிழினத்தின் வாழ்க்கை முறைத் தத்து வத்தை அகத்தே இருந்து புறத்தே வெளிக் கொணரவல்லது நம் மொழியே.

எமது சிறார்கள் வேற்று மண்ணில் வேரூன்றுகிறார்கள். இவர்கள் தமக்குள் ஓர் இணைப்பை ஏற்படுத்திக் கொள்ளாதபோது உதிரிகளாக வாழும் நிலை ஏற்படும். இவர்களுக்கு அநீதி வழங்கப்பட்டால், பாரபட்சம் காட்டப்பட்டால், ஒடுக்கப்பட்டால், உரிமைக்குரல் கொடுத்துக் காக்க என்ன மாற்று சக்தி இருக்கிறது. அந்நிய நாடுகளில் நாம் ஆமா போடும் பிரஜைக ளாக வாழ்வதென முடிவு செய்துவிட்டோமா? இன்றைய உலகில் நீதி என் பது ஒவ்வொருவனது பலத்திலும் தங்கியிருக்கிறது. மத்திய கிழக்கில் ஒரு யூதன் கொல்லப்பட்டால் எத்தனை ஆர்ப்பாட்டம். எத்தனை விளம்பரங்கள் செய்யப்படுகின்றன. ஈராக்கில் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜிமிகாட் டர் கணிப்பின்படி சுமார் ஒரு லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டும் கொல்லப் பட்டும் இருக்கிறார்கள். ஜோர்ஜ்புஸ் - சதாம் குசேனின் பலப்பயிற்சியின் விளைவு இது. எந்தப் பத்திரிகைகள், பொதுஜன சாதனங்கள்கள் இவ் அப்பாவி மக்கள் சாவு பற்றிக் கவலைப்பட்டன. எனவே, அரசியல் சக்கரத் தின் சுழற்சி நம்மையெல்லாம் நிச்சயம் பார்த்துக் கொண்டே வருகிறது. நம்மால் அதனை நன்கு புரிந்து கொள்ள முடிவதில்லை. ஏனெனில், நாம் தனிப்பட்ட ரீதியில் பார்க்கிறோம், அணுகுகிறோம். நாம் அணுகுவது நன்கு நிறுவப்பட்ட ஓர் சக்தி வாய்ந்த அமைப்புக்களே ஆகும். இவ்வமைப்புகள் அரசியல், பொருளாதார, சமூக ரீதியில் மேலை நாடுகளில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. எமது சிறார் உடை, உணவு, விளையாட்டுப் பொருட் கள், பாவனைப் பொருட்கள் அத்தனையும் விளம்பரம் மூலம் ஓர் பெரிய சக்தி அடிமைப்படுத்திவிடுகிறது. சுதந்திர பூமியில் எடுக்கப்படும் ஒவ்வொரு முடிவும் சுதந்திர முடிவு என நாம் கருதி எடுக்கும் முடிவும் பின் நின்று, விடப்படும் உத்தரவுகளாகும். இந்நிலையில் நாம் ஓர் இனமாக இயங்கா விட்டால் நிச்சயம் பின் தள்ளப்பட்டு விடுவோம்.

இன உணர்வு வளர்க்கப்பட தமிழ் மொழியறிவு மிக அவசியம். தமிழ் மொழியை ஊட்டுவதோடு தமிழ்ப் பண்பாட்டையும் ஊட்டிவிட வேண்டும். தமிழ்க் கல்வியின் அவசியம் தமிழ் உணர்வை ஊட்டிவிடுவதன் மூலம் சிறாரிடம் தமிழன் என்று சிந்தித்துச் செயற்பட வைத்தலாகும். தமிழன் என உணர வைப்பதில் முக்கியமாக அமைவது இத்தகைய உணர்வை ஏற்படுத் துவதென்பதாகும்.

தமிழன் இன்றைய உலகில் வாழும் முதிர்ந்த இனம். உலகின் மூத்த குடி மக்களில் முன் நிற்பவர்கள் தமிழர்கள். பல்லாயிரம் ஆண்டுகட்கு முன் வரலாறு படைத்த இனம் நம் தமிழினம். பண்டைய வரலாற்று எச்சங்

கள், அகழ்ந்தெடுக்கப்பட்ட கல் வெட்டுக்கள், மண்ணுள் மறைந்திருந்த பட்டினங்கள், தமிழன் நாகரிகம் பத்தாயிரம் ஆண்டுகட்கு மேற்பட்ட நாகரிகம் படைத்தது எனக் கூறுகிறது.

தமிழன் உலகின் பல நாடுகளில் வாழ்ந்திருக்கிறான். அவன் அங்கு வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் இமயமலைச் சாரலில், நேப்பாளில் ,சீனாவில் இந்தோனேஷியாவில், அவுஸ்திரேலியாவில், நியூசிலாந்தில், இந்து சமுத்திரத்தினுள், மலகாசியில், எஜிப்தில், மத்திய கிழக்கில், ரோமில், அமெரிக்க ரொக்கி மலைச் சாரலில் எல்லாம் கிடைக்கப்பெற்றுள்ளன. இவன் கணிதம், விஞ்ஞானம், மெய்ஞானம், கட்டிடக்கலை, வாணியல் எனப் பல துறைகளில் முதன்மைத்துவம் பெற்றிருக்கிறான். நுண் கலைகளிலும் தனக்கெனத் தனியிடம்பெற்றவன். முழுமையான வளர்ச்சி அடைந்த இனம் தமிழினம். இன்றைய உலகில் பண்டைய நாகரிகப் பண்பாட்டைத் தொடர்ந்து வளர்ந்து வரும் இனம் தமிழினம் என்பதும் உணரப்படுத்தப்படவேண்டியது.

தமிழ் மொழி எத்தனையோ எதிர்ப்புக்கள் மத்தியிலும் வளர்ந்து வரும் மொழி. ஆரியர், போத்துக்கேயர் எனப் பலரது ஆதிக்கத்தையும் எதிர்த்து நிலை நின்று வளர்ந்து வாழ்ந்து வரும் மொழி. காலத்தால் அழியாதது என்பதும் உணர்த்தப்படவேண்டியது. குறிப்பாகத் தமிழ் மொழியின் தனித்துவம் உணர்த்தப்பட வேண்டும். தமிழ்மொழி எமது தாய் மொழியென்பதினால் அதனை இனிமையான மொழி கூறிவிட முடியாது. பல மேலை நாட்டு அறிஞர்கள் தமிழ் மொழியைக் கசடறக் கற்றுத் தமிழ் மொழியின் இனிமையை, ஆழத்தைப் பற்றிக் கூறியிருக்கிறார்கள். தமிழ் எவராலும் விரும்பிக் கற்கவேண்டிய மொழிகளில் ஒன்று. தமிழ் கற்பதன் மூலம் பல உண்மைகளை அறிய முடிகிறது.

தமிழ் மொழி இலக்கியங்களில், காவியங்களில் சிறந்தது. தமிழில் இருக்கும் பல இலக்கியங்கள் பண்டைய கிரேக்க இலக்கியங்களுக்கு ஒப்பானவை. இவ்விலக்கியங்களில் வெளிப்படுத்தப்பட்ட உணர்வுகள் வேறு எந்த இலக்கியங்களிலும் காண முடியாதவை. தமிழில் அற நெறிகள் ஆயிரம் உண்டு. தமிழ் படைத்த திருக்குறள் காலம் இடம் கடந்தது. கிராமத்தவனுக்கும் நகர்ப்புறத்தேயுள்ளவனுக்கும் ஈடுகொடுக்கவல்லது. பாமர மகன் தொட்டுப் படித்தவன் வரை கடைப்பிடிக்கக்கூடிய வாழ்க்கைத் தத்துவம் கொண்டது. திருக்குறள் பல உலக மெழிகளில் மொழிபெயர்க்கப்பட்டதுடன் அதன் பெருமை நின்றுவிடவில்லை. அதன் ஆழத்தை உணர்ந்து நடைமுறைக்கக் கொண்டுவரச் செய்தல் வேண்டும். அதற்கெல்லாம் முதலில் நம் பிள்ளைகள் தமிழ் கற்க வேண்டும், தமிழ் பரப்ப முயல வேண்டும்.

தமிழ் பொக்கிஷங்களை உலகின் பல பாகங்களிலும் பரவச் செய்தல் வேண்டும். தமிழ்ப் பரம்பரையில் உதித்த நாம் செய்யாவிட்டால் யார் செய்யப் போகிறார்கள். இன்னைய வியாபார உலகில் நல்ல பொருட்கள் யாவும் விற்பனையாகி விடுகின்றன என்பதற்கு உத்தரவாதம் இல்லை. அதேபோல் தரம் குறைந்த பல பொருட்கள் ஓகோ எனச் சந்தையில் விற்பனையாகின்றன. மொழியும் அதன் இலக்கியமும் விதிவிலக்கல்ல. இங்கே நாம் தமிழை ஒரு விற்பனைப் பொருளாகக் கருதுவதாக எண்ணிவிடக் கூடாது. ஆனால், தமிழை எம் பிள்ளைகள் மன விருப்போடு ஏற்று, கற்றுக் கொள்ள உதவும் முறையில் நாம் செயற்பட வேண்டும். எமது தமிழ்ப்

பொக்கிஷங்கள் நிச்சயம் விலை மதிக்க முடியாதவை. அவற்றை ஏன் நாம் மறைத்து வைத்திருக்க வேண்டும்.

தமிழ்ப் பிள்ளைகள் தம் பண்பாடு பற்றித் தாழ்வுணர்வு கொண்டிருக்கிறார்கள். இதனால், நிந்திக்கப்படுவது நம் பண்பாடல்ல, நாமே நிந்திக்கப்படுகிறோம். இத்தாழ்வுணர்வு இருவகைப் பாதகங்களை ஏற்படுத்துகின்றன. தாழ்வு மனப்பான்மை எக்காரணங்கொண்டு ஏற்படினும் அதனால் ஏற்படும் மனத்தாக்கம், செய்கை முறைச் சிக்கல், உள வளர்ச்சித் தடைப்பாடு, மன எழுச்சிச் சிக்கல்கள் முக்கியமானவை. இத்தாழ்வணர்வு ஏனைய பாடங்கள் கற்பதினைப் பாதிக்கிறது. உடை, நடை, பழக்கவழக்கங்களில் ஓர் அழுத்தத்தை ஏற்படுத்துகிறது. அவர்கள் முழு வளர்ச்சியைத் தடைப்படுத்துகிறது.

மறுபுறம், தமிழைக் கற்பதினால் தமிழனுக்கிருக்கும் பல முதிசங்கள் வேறு பல இனத்தவருக்கு இல்லையே என அறியுமிடத்து பெருமைப்பட வேண்டிய ஓர் கட்டம் ஏற்படுகிறது. இப்பெருமையால் ஏற்படும் ஊக்கம், மனப்பூரிப்பு, உள்ளத்து நிறைவு அவர்கள் வளர்ச்சியில் பெரும்பங்கை அளிக்க வல்லது. இதனால், நம் இனம் ஏனைய இனங்களோடு போட்டியிட்டு வேகமாக முன்னேறி உலக சமுதாயங்களில் முன்னேறிய சமூகங்களில் ஒன்றாகத் திகழ முடிகிறது. எத்தனை பேர் வாழுகிறார்கள, எவ்வளவு காலம் ஒரு நாட்டில் வாழ்கிறார்கள் என்பதை விட எவ்வளவு சீரும் சிறப்புடனும் வாழ்கிறார்கள் என்பதே மிக முக்கியம். எம் இனத்தின் வளர்ச்சிக்கும், எழுச்சிக்கும் உதவும் தமிழ்க்கலைக் களஞ்சியங்களைப் புறக்கணித்துக் கண்ணிருந்தும் குருடர்களாக வாழ வேண்டுமா? நம்மால் தமிழன்னைக்குப் பெருமை எனத்தப்புக் கணக்குப் போடாமல் தமிழன்னையால் எமக்குப் பெருமை என்பதை உணர வேண்டும்.

தமிழ்ப் பிள்ளைகளின் உள்ளத்துணர்வுகளை, வெளிப்படுத்த அவர்களுக்கு ஆங்கிலமோ ஏனைய ஐரோப்பிய மொழிகளோ ஒத்துவராது. தமிழர்கள் ஆங்கிலேயர் போல உடுத்து உண்டு குடித்தாலும் கூட ஆங்கிலேயராகிவிட முடியாது. உண்மையான உள்ளத்துணர்வுகள் சிந்தனையின் செயற்பாடுகள் வித்தியாசமானவை. எத்தனையோ, தமிழர் நடைமுறைகள் எமக்குப் பர்ச்சியப்பட்டவை. அவை அவர்களுக்கு விசித்திரமாக அமைகிறது. ஒரு விருந்தாளியை, உறவினரை அணுகுவதில் அவர்கள் தேவைகளில் இன்பதுன்பங்களில் பங்கு கொள்வதில் மாறுபட்ட நிலமை காணப்படுகிறது. சொந்த உணர்வுகள் தம்மையறியாமல் பல சந்ததிக்குத் தொடர்கின்றன. அவை ஓரளவு விஞ்ஞான ரீதியில் விளக்கப்படக் கூடியவை. எமது பிள்ளைகள் தமது உணர்வுகளை முற்றாக, பக்குவமாக, சுதந்திரமாக, ஆழமாக வெளிப்படுத்தப் பொருத்தமான மொழியில்லையெனில் அது ஒரு இனத்தின் வளர்ச்சிக்குப் பெருந்தடையாக அமைகிறது. இந்நிலைப்பாட்டைத் தவிர்க்க ஒரே வழி தமிழ்க் கல்வி ஊக்குவிக்கப்படவேண்டும்.

தமிழ்ப்பிள்ளைகளின் கலை, இலக்கியப்படைப்புகள் அந்நிய மொழிகளில் உரிய இடத்தைப் பெற முடியாத நிலை ஏற்படுகிறது. ஆங்கில இலக்கிய அறிவு உணர்வுடன் வேட்ஸ்லோர்த், மில்டன், சேக்ஸ்பியரைக் கற்று நம் பிள்ளைகளால் ஆழமாகப் புரிந்து தம் படைப்புக்களை, ஆக்கங்களை வழங்கிவிட முடியாது. கலை, இலக்கியம் ஒரு இனத்தின் வளர்ச்சி மட்டுமல்ல, உள்ளார்ந்த சந்தோஷத்தையும் தரவல்லது. அதன் பலன்களை

அனுபவிக்கத் தமிழ் கற்பித்து நம் பிள்ளைகளைத் தமிழில் தம் ஆக்கங்களை வெளிப்படுத்த முன்வரவேண்டும். இலக்கியப் படைப்புகள் ஆழமானவை. அவற்றைப் படைக்க ஒரு மொழியின் பாண்டித்தியம் அவசியமானது.

தமிழர்கள் மில்லியன் கணக்கில் ஒரு பண்பாட்டுக் குட்டையில் ஊறிய மட்டைகளாகப் பல நாடுகளில் இருக்கிறார்கள். குறிப்பாக, நம் தாயக மண்ணில் வாழ்கிறார்கள். இவர்களுடன் உள்ளார்ந்த தொடர்பு கொள்ளத் தமிழ் மொழிப் பயிற்சி அவசியம் தேவைப்படுகிறது. அவர்களிற் பலருக்குத்' தமிழ் மட்டுமே தெரியும். அவர்களிடம் அந்நிய மொழியில் தொடர்பு கொள்வது கடினமானதும் முழுமையற்ற தொன்றுமாகிறது. எமது உடன் பிறப்புக்கள் விடயத்தில் நாம் போதிய அக்கறை காட்டுவது நம் தலையாய கடமை. தாயக மண்ணை மாற்றான் பறித்துக் கொள்ளாமல் பாதுகாக்கும் அவர்களைப் பற்றி நாம் சிந்திக்கத் தவறலாமா? அவர்கள் படிக்கும் உணர்ச்சிமிக்க பாட்டுக்கள், கவிதைகளை நாம் உணர வேண்டாமா?

நமக்கு, தமிழீழத் தாயகம் நிச்சயம் சுதந்திரநாடாகக் கிடைக்கத்தான் போகின்றது. நம் தாயகம் விடுதலை பெற்றுவிடும் காலம் வெகு தொலைவில் இல்லை. நம் தாய் சுதந்திரப் பிரசவ வேதனையில் இருக்கிறாள். நம் தாயகம் சுதந்திரம் பெறுவது நம்மில் சிலருக்குக் கனவாகத் தோன்றலாம். நம்மில் பலருக்கு அது வெகு விரைவில் சாத்தியமாகக் கூடிய ஓர் நிலையாகத் தெரிகிறது. தமிழீழத்தில் வாழும் சிறார்கள் குறிப்பாக 1983ற்குப் பின் அதாவது யுத்த சூழலில் பிறந்து, வீரப்பால் குடித்துத் தவண்டு, பிரண்டு விளையாடிய மண்ணின் சுதந்திரம் நிச்சயம் கிடைக்கத்தான் போகிறது என மனத்திடமும் மன உறுதியுடனும் இருக்கிறார்கள். இவர்களுடன் சுதந்திர தாயகத்தில் சேரும்போது நாம் நம் நாட்டின் புறத்தியாராகி விட முடியுமா?

கடுமையான வாழ்க்கைச் சூழலிலிருந்து தப்பிப் பிழைத்தவர்கள் நம்மில் பலர். அவர்களுக்குப் பொருளாதார ரீதியில் கனடா ஓர் சுவர்க்கம். கனடாவில் கூட தாய் நாட்டை எண்ணிப் பார்க்க முடியாதளவு பல ஆடம்பரப் பொருட்களை இங்கு பெற்று அனுபவிக்க முடிகிறது. இந்நிலையில் இந்நாட்டு வாழ்வில் பெருமளவு சலிப்புத் தோன்றவில்லை. இங்கு நமது நாட்டுக் கல்வித் தேர்ச்சிப் பத்திரங்கள் முழுதாக அங்கீகரிக்கப்பட்டு, தகுந்த தொழில் வாய்ப்புக் கிடையாதவர்கள் திருப்தி இன்றி வாடியிருக்கலாம். ஆனால், வளரும் சிறார்களைப் பொறுத்தவரை இந்த ஒப்பீட்டு முறைக்கு இடமே இல்லை. அவர்கள் கனடியச் சூழலில் வளர்கிறார்கள். இவர்கள் வளர்ந்து வந்ததும் இன வேறுபாட்டினை உணரத் தலைப்படுவார்கள். இந்நிலையில் நாம் ஓர் சிறுபான்மையினர், எமக்கு எதிராகப் பல பாகுபாடுகள் இருக்கின்றன. வெளிமட்டத்தில் புலனாகாத இந்த வேறுபாடுகள் உள்மட்டத்தில் விசுவரூபமெடுத்து ஆடுவதைக் கண்டு கவலையடையும் போது எமக்கு என்று ஒரு நாடு இருந்தால் நமக்கு ஏன் இந்த இரண்டாந்தர வாழ்வு என்று எண்ண வேண்டிவரும். அப்போது "என் அப்பன் செய்த மாபெரும் தவறு எம்மைத் தாயகத்திலிருந்து பிரித்தெடுத்து இங்கு கொண்டு வந்தது" எனச் சாடத் தலைப்படுவார்கள். இந்நிலை நிச்சயம் வரத்தான் போகிறது. அந்நேரத்திலீ நாம், தமிழ் அறியாத தமிழராக மாறி விடுவோமேயானால் அரசனை நம்பி புருஷனைக் கொன்ற கதையாகத்

தான் மூடியும். அரசன்தான் புருஷனைக் கொல்லக் கத்தியைக் கூராக்கித் தந்ததாகவும் எண்ண வேண்டிய நிலை ஒன்று ஏற்படவும் இடமிருக்கிறது.

நாம் தமிழீழத் தமிழரில் கணிசமான அளவு தொகையினர். நம்மவர்களில் நாலில் ஒரு பங்கினர் புலம் பெயர்ந்திருக்கிறோம். எம்மிடம் தமிழ் வளரவில்லையேயானால் எமது மக்கட் தொகையில் குறிப்பிடத்தக்களவு மக்களின் மொழி வளர்ச்சி தடைப்பட்டதாக அமைகிறது. அதன் விளைவு மிகப் பாரதூரமானது. ஒரு நாட்டின் வளர்ச்சியில் நிலமும் மக்கட் செல்வமும் இரு கண்கள் போன்றவை.

இருமொழிக்கல்வி ஒருவனின் அறிவு வளர்ச்சியில் பாரிய தாக்கம் எதனையும் ஏற்படுத்தியதாகத் தெரியவில்லை. பல நாடுகளில் பலர் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளைக் கற்கிறார்கள். இன்று உலகில் சுமார் மூவாயிரம் முக்கிய மொழிகள் இருக்கின்றன. உலகநாடுகள் இருநூறுகூட இல்லை. எனவே, சில நாடுகளில் இரு மொழிகளுக்குமேல் பேசப்படுவதுமுண்டு. இந்நிலையில் இரு மொழிகள் கற்பதன்மூலம் ஒருவர் பரந்த வட்டத்தில் வாழமுடிகிறது. தமிழ் இரண்டாம் மொழியாகக் கற்கப்படவேண்டும். ஆனால், இரண்டாந்தர மொழியாகக் கற்கப்படக் கூடாது. தமிழ், தாய் மொழியாக முதல் மொழியாகக் கற்கும் நிலை இந்நாடுகளில் குறுகிய சிறுபான்மையினராக வாழும் எம்மால் எதிர்பார்க்க முடியாது. இன்றைய கனடிய மக்கட்தொகையில் தமிழர் வீதம் 0.5 ஆகத்தான் இருக்க முடியும்.

அமெரிக்காக் கண்டம் மொழிக்கொலைக் களம். அமெரிக்காவில் எண்ணாயிரத்திற்கும் மேற்பட்ட மொழிகள் அழிந்து போயின. இம் மொழிகள் செவ்விந்தியரால் பல்லாயிரம் ஆண்டுகள் பேசப்பட்டு வந்த மொழிகள். சில மொழிகள் ஒருவரால் மட்டுமே அமேசன் நதியோரத்தில் பேசப்படுகிறது. அவரது மறைவோடு அம்மொழியும் மறைந்துவிடுகிறது. பிரேசில் நாட்டில் குசாக்கரு (Kuzakaru) எனும் பெண்மணி1988ல் இறந்ததுடன் யுமுத்தினா (Umutina) மொழியும் அழிந்துவிட்டது. மிகுதி நூற்றுஅறுபது யுமுத்தின மக்கள் போர்த்துக்கேயப் பாஷையைக் கற்றுத் தாய்மொழியைக் கற்க, பேச மறந்துவிட்டார்கள். இன்றைய உலக மொழிகளில் ஆறாயிரம் உண்டு. அவற்றில் பாதியளவு அம்மொழி பேசுபவர்களின் சிறார்களால் பேசப்படாமல் போக அவை அழிந்துவிடுகின்றன. இன்று உலகில் அறு நூறு மொழிகள் மட்டுமே ஒருலட்சம் மக்களுக்கு மேல் பேசப்பட்டு வருகின்றன.

பிரேசில் நாட்டில் 1500ம் ஆண்டளவில் போர்த்துக்கேயர் வந்தபோது 1200 மொழிகள் பேசப்பட்டன. இன்று அவற்றில் பெருமளவு அழிந்துபோய் 160 மட்டுமே உயிர் வாழ்கின்றன. தென்அமெரிக்க மக்கள் தம் வாழ்வில் செய்த மிகப்பெரிய தவறு ஸ்பானியர்கள் வருகையோடு தம்மொழிகளை வலுவிழக்கச் செய்து ஸ்பானியர் மொழியைக் கற்றதாகும். அதன் விளைவு இன்று அவர்கள் தம் மொழியை இழந்தது மட்டுமல்ல, தம் பாரம் பரியத்தையும் கொன்றுவிட்டார்கள். இன்றுகூடச் சில மொழிகள் அங்கு அழிந்துகொண்டே போகின்றன. அமேசன் நதியோரத்தில் மாகு (Macu) மொழி பேசுபவர் பாரே (Bare) ஆவர். அவர் இறப்புடன் அம்மொழியும் அழிந்துவிடும். ஆகவே, மொழிகள் பேணிப் பாதுகாக்கப்படவேண்டும். வட அமெரிக்காவில் தமிழ் வளராவிட்டாலும் கூட உலகின் பல பாகங்களில் தமிழ் வளரத்தானே செய்யும் என்று எண்ணிவிடக்கூடாது. புலம் பெயர்ந்

தவர்கள் தாம் வசிக்கும் நாடுகளில் தமிழைத் தம்மோடு சேர்த்து வளர்க்க வேண்டும். தமிழன் வளர்ந்தால் தமிழ் வளர்ந்துவிடும் என்பதற்கு உத்தர வாதமில்லை. தமிழன் வளர்ந்தும் தமிழ் வளராத நிலை ஏற்படலாம். தமிழ் நாட்டில் இன்று பல பணக்காரத் தமிழ்க் குடும்பங்களில் பிறந்தவர்கள் அங்கே தமிழ் கற்காமல் ஆரம்பவகுப்பிலிருந்து பல்கலைக் கழகம் வரை ஆங்கிலத்தில் கற்றுப் பட்டம் பெற்றுவிடுகிறார்கள். தமிழ்மொழிக்குத் தமிழ கத்திலேயே இந்தக் கதி என்றால் நாம், தமிழன் எதிர்காலம் பற்றிச் சிந்திக் காமல் இருக்கமுடியுமா?

## எவ்வாறு தமிழ்க் கல்வி புகட்டலாம்?

முதலில் பெற்றோர்கள் வீட்டுமொழியாகத் தமிழை நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும். கூடியவரையில் பிள்ளைகளுடன் அவர்களுக்கு ஆர் வம் தரக்கூடிய விடயங்களை முதலில் தமிழில் பேசி, கலந்துரையாடி வரவே வண்டும். அவர்களிடம் கதைக்கப்படும் விடயங்களும், மொழியும் புதிதாக இருக்குமிடத்தில் பிள்ளைகள் வெருண்டோடிவிடுகிறார்கள். படிப்படியாகத் தமிழில் உள்ள நெறிகளைப் புகுத்தவேண்டும். கனடாவில் நான் கலைத் தொழில் நுட்பக் கல்லூரியில் தமிழ்ப்பண்பாடு கற்பிக்க நேர்ந்தது. சிறுபிள் ளைகள், பெரும்பாலானோர் பன்னிரண்டு வயதுக்குட்பட்டவர்கள். இவர்க ளுக்கு முதல் இரு பாடங்கள் சேகா ஜெனஸிஸ் விளையாட்டுக்கள், மைக் கல் ஜாக்சனின் பாட்டுக்கள், மைக்கல் யோடன் பற்றி ஆரம்பித்துப் படிப்படியாக ஔவையார், பாரதியார் பற்றி வரக்கூடியதாக இருந்தது. அப் பிள்ளைகளுக்கு தமிழ் பண்பாட்டில் இருக்கும் ஆர்வத்தைப் பின்பு காணும்போது பெரு மகிழ்ச்சி ஏற்படுகிறது. ஆங்கிலத்தில் ஆரம்பிக்கப்பட்ட வகுப்புக்கள் படிப்படியாகத் தமிழில் மாறிவிட்டன. இப்பிள்ளைகள் கடை களில், பொது நிகழ்ச்சிகளில் தமிழ் மணம் கமழப் பழகும்போது உண்மை யில் மட்டற்ற மகிழ்ச்சி ஏற்படுகிறது. சிறிய வேலை, பெரிய சாதனை.

வீட்டில் நடைபெறும் ஒவ்வொரு பண்டிகைகட்கும் தத்வரூபமான, விஞ்ஞான ரீதியான விளக்கங்களை விளங்கக்கூடிய முறையில் விளக்க வேண்டும். உதாரணமாக, தைப்பொங்கலன்று சூரிய வழிபாட்டின் பின்ன ணி விளங்கப்படுத்தப்படவேண்டும். ஒரு திருமண வைபவத்தில் இருக்கும் போதும், முக்கிய கிரிகைகள் நடைபெறும்போதும் அதில் சிலவற்றின் விளக் கங்கள் கூறப்படல் வேண்டும். சாதாரணமாக ஒரு விளக்கில் ஐந்து திரிகள் எரிகின்றமை ஐம்புலன்களிலிருந்து ஒளியேற்றப்படுகிறது என்று கூறலாம். எங்கள் பண்பாட்டில் மிக நுணுக்கமான விஞ்ஞான ரீதியான விளக்கங்கள் இருக்கின்றன. இவற்றை நாம் முன்கூட்டியே அறிந்து தருணம் வரும் போது பிள்ளைகளுக்கு விளங்கப்படுத்த வேண்டும். பிள்ளைகளைப் படிப்ப டியாக இவ்வைபவங்களில் பங்குபற்ற வைக்கவேண்டும். பார்ப்பதிலும், கேட்பதில் விட செய்வதில் கூடிய பலனைப் பெறுகிறார்கள்.

எந்தப் பிள்ளைக்கும் மிகச் சிறிய பருவத்திலிருந்து எமது மொழி பண் பாடு உயர்ந்தது என்ற உண்மையை ஏற்படுத்த வேண்டும். ஜேர்மனியர், ஜப்பானியர் ஐந்திலிருந்து ஐம்பதுவரை தம் இன உணர்வை ஊட்டிவிடுகிறார்கள். அவ்வாறு செய்வதன்மூலம் பிள்ளைகள் மத்தியில்

தம் மொழி யில், பண்பாட்டடில் தாழ்வு மனப்பான்மை வளர இடம் வராது.

பிள்ளைகளுக்குத் தூய தமிழ் பெயர்களை வைப்பதன் மூலம் மற்று மொரு வகையில் தமிழை வளர்க்க முடியும். தமிழ்ப் பெயர்கள் நீளமான வை என்பது பல நாட்டு மக்களோடு பழகும்போது பலரும் உணர்ந்து கொள்கிறார்கள். இன்றைய மின்கணனி யுகத்தில் சில தமிழ்ப் பெயர்கள் விண்ணப்படிவங்கள் சிலவற்றில் போட்டுக் கொள்ளப் போதிய பெட்டிகள் கூட இருப்பதில்லை. எமது தமிழ் பெயர்கள் போலக் கிழக்கு ஐரோப்பியப் பெயர்கள் பலவும் நீளமானவை. ஆனால், தமிழ்ப் பெயர்கள் வெறுமனவே எழுத்துக்களால் சேர்க்கப்பட்ட பெயர்கள் அல்ல. பெரும்பாலான தமிழ் பெயர்கள் அர்த்தம் மிக்கவை. தவம் கிடந்து பெற்றெடுத்த பிள்ளைக்கு, தவம் கிடந்த தெய்வத்தின் பெயர் வைக்கப்படும் மரபு எங்களிடம் மட்டும் இருக்கவில்லை. போர்த்துக்கேயர், ஸ்பானியர், தென்அமெரிக்கர் ஆகியோரி டமும் இம்முறை இன்றும் நிலவி வருகிறது. இதனைவிட மொழியியல் ரீதியில் தமிழ்ப் பெயர்கள் இடப்பட்டும் வருகின்றன. இப்பெயர்கள் வரிசை யில் அழகான தமிழ்ப்பெயர்களைக் குறிப்பிடத்தக்களவு பெற்றோர் இட்டு வருகிறார்கள். கரிகாலன், அன்பழகன், பாண்டியன் எனப் பல அழகான தமிழ்ப் பெயர்கள் இடப்பட்டுள்ளன. பண்டைய வீரர்களைப் பாராட்டி அவர் களது வீர தீரச் செயல்களை நினைவு கூருகிறோம். இதே வேளை, இன்று நம் தாயகத்தில் வீரமரணம் அடைந்தவர்கள் பெயர்களை தமிழ் நாட்டில் சில தலைவர்கள் தம் பிள்ளைகளுக்குச் சூட்டிவருகிறார்கள். தமிழ்நாட்டுத் தலைவர் ஒருவர் தன் மகனுக்குத் திலீபனின் பெயர் சூட்டியிருக்கிறார்.

புலம் பெயர்ந்தவர்களின் பிள்ளைகள் பெயர்கள் சிறியனவாக வைக்கப்பட்டிருக்கின்றன. நான்கு ஐந்து எழுத்துக்களைக் கொண்ட பெயர் களாக அமைந்துள்ளன. இப்பெயர்கள் தமிழ் மொழி, தமிழ் இலக்கண முறைகளை விட அழைப்பதற்கு இலகுவானவையாகத் தேர்ந்தெடுக்கப்படு கின்றன. மற்றுமொரு பகுதியினர் எண் சாஸ்திரத்தை அடிப்படையாகக் கொண்டு எழுத்துக்களில் மாற்றம் செய்து, பெயர்களைத் திரிச்சு வைக் கிறார்கள். இதனால், பெயர்களின் பொருள் சில கட்டங்களில் மறந்தவிடப்ப டுகின்றன. சற்று சரளமாக கனடிய சமூகத்துடன் பழக விரும்பிக் கொள்வ தில் அக்கறை காட்டுபவர்கள் கனடியப் பெயர்களுக்கு நெருக்கமான பெயர்களை வைத்துவிடுகிறார்கள்.

இந்தோனேஷிய, பிஜி, யுபூட்டி போன்ற பல நாடுகளில் வாழும் தமிழர்களிடம் தமிழ்ப் பண்பாட்டில் எஞ்சியிருப்ப வைகளில் தமிழப் பெயர் களே. தேவி என்றும், செல்வியென்றும் தமிழ் பெயர் இருக்கும். இவர்களை அணுகிக் கதைத்தால் எஞ்சியிருப்பதெல்லாம் தமிழ்ப் பெயர்களே. இவர்கள் தமிழ் தெரியாத தமிழர்கள். இந்திய வரலாற்றின் வடுக்கள் இவர்கள் வாழ்க்கையை நிந்தித்துவிட்டது.

அரசியல் காரணத்திற்காக, கனடாவில் உக்ரேனிய மக்கள் ஒரு கால கட்டத்தில் தம் பெயர்களை கைவிட்டுக் கனடியப் பெயர்களைத் தழுவினார் கள். இரண்டாம் உலக மகா யுத்தத்தில் உக்ரேன் நாட்டினை இணைத்துக் கொண்டு ஆட்சி புரிந்த சோவியத் யூனயனின் நிலைப்பாடு கனடிய அரசின் எதிர்த்தரப்பினருக்கு உதவியாக இருந்தது. உக்ரேனியர் கனடாவில் தாக் கப்படலாம் எனப் பயம் இருந்தது. கனடியப் படையினர் ஐரோப்பாவில்

எதிரிகளால் கொன்று குவிக்கப்பட்டனர். இதனால், உக்ரேனியர்கள் தற்கா லிகமாக, தமது பெயர்களை மாற்றி அமைத்துக் கொண்டனர். நிலமை சரி யானதும் மீண்டும் அவர்கள் தமது உக்ரேனியப் பெயர்களை வைப்பதில் தவறவில்லை.

## தமிழ் வளர்க்க சில சிந்தனைச் சிதறல்கள்

1. தமிழ் தெரிந்த தமிழ் பண்பாட்டுக் குட்டையில் ஊறிய தமிழினத்தை உருவாக்கும் பணியில் நாம் எல்லோரும் அக்கறை கொண்டிருக்கிறோம். தமிழ் மொழியை தமிழ்ப் பிள்ளைகளிடம் ஊட்டுதல், தமிழைக் காலத்தோ டு ஒட்டி வளர்த்தல், தமிழை உலகரங்கில் அரியாசனம் ஏற்றுதல் எனப் பல பணிகளைச் செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம். அவ்வாறு செய்வதற்கு முன் நாம் சில குறிக்கோள்களைத் தெளிவு படுத்தி நடை முறைக்குக் கொண்டு வர முயல்தல் வேண்டும். இன்று கனடாவிலே சுமார் 15 ஆயிரம் சிறார்கள் பாடசாலைகளிலும், கல்லூரிகளிலும் கல்வி பயில்கிறார்கள். இவர்களில் சுமார் 2ஆயிரம் பிள்ளைகள் மட்டுமே தமிழை கற்க முன்வந்திருக்கிறார் கள். ஏனைய பிள்ளைகள் பலர் தமிழ் மொழியை ஓர் பாடமாகக் கற்க வேண்டிய ஒழுங்குகளை நாம் செய்ய வேண்டும் அல்லவா? இந்நாட்டில் இருக்கின்ற தமிழர்களின் குடும்பங்களில் பிறக்கும் தமிழ் பிள்ளைகள் தமிழ் மொழியைக் கற்றுக் கொள்ள, தமிழ்ப் பண்பாட்டை அறிந்து கொள்ள திட்டவட்டமான நடைமுறைச் செயற்பாட்டுத் திட்டங்களை முன் வைக்க வேண்டியது புலம் பெயர்ந்த முதல் சந்ததியினரான எமது தலையான பணியாகும்.

இந்நாடுகளில் வளர்ந்து வருகின்ற எமது சிறார்கள் இயல்பாகப் பேசும் மொழி இந்நாட்டு மொழிகளாகும். ரொரன்ரோ நகரில் ஆரம்ப பாடசாலையி லிருந்து படித்துவரும் ஒரு சிறுவனுக்கு ஆங்கிலம் முதல் மொழியாக அமைகின்றது. அவனுக்கு இயல்பாக எழுத, பேச, சிந்திக்க ஆங்கிலம் முன்னிற்கின்றது. அவ்வாறான சிறுவனுக்குத் தமிழை இரண் டாவது மொழியாக நாம்கற்பிப்பதற்கான ஒழுங்குகள் செய்ய வேண்டும். ஆங்கிலச் சூழலில் தமிழ்ப் பிள்ளை ஒருவருக்குத் தமிழ் மொழியை இரண் டாவது மொழியாக முரணற்ற முறையில் அணுகி விருப்பத்தோடு கற்றுக் கொள்ளவைக்க வேண்டியது எமது முக்கிய பணிகளில் ஒன்றாகும். இதற் கான பல புதிய அணுகுமுறைகளைக் கற்பிக்கும் முறைகளைப் பாடத்திட்ட ங்களை அமைத்தல் போன்ற பலபணிகளை நாம் முன் நின்று செய்ய வேண்டும்.

2. புலம் பெயர்ந்த தமிழ் மக்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றங்கள், ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள் அனைத்தும் கவனத்தில் எடுக்கப்பட்டு அவர் கள் வாழும் சூழலில் தமிழ்ப் பண்பாட்டை அர்த்தமுள்ளதாகவும் இன்றைய விஞ்ஞான யுகத்தில் விரும்பி ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவும் விளக்கிக் கொள்ள நாம் பல ஆராட்சிகள் செய்ய வேண்டும். எமது பண்பாடு வெறும் சம்பிரதாயச் சடங்குகள் என்ற கோதாவில் இல்லாமல் அர்த்தமுள்ளவைகள் என்று எமது சிறார்கள் ஏற்றுக் கொள்வதோடு ஏனைய இன மக்கள் மத்தியில் பெருமையோடு தமிழன் என்று சொல்லித் தலை நிமிர்ந்து நின்று

அவற்றைப் பிற இன மக்கள் மத்தியில் பரப்ப முன்வரவேண்டும்.

3. தமிழ் மொழி வளர்ச்சியில் பெற்றோர்களின் பங்களிப்பு மிகவும் அவசியமானதாகும். பெற்றோர்கள் காட்டும் ஆர்வம் எடுக்கும் முயற்சிகள் உரிய பாதையில் பிள்ளைகளை வழிநடத்திச் செல்ல வேண்டும். பெற்றோர் கள் தமிழ் சூழலில் தமிழ் மொழியை வளர்த்த முறையிலே இங்கு தமிழை வளர்க்க முன் வருவார்களேயானால் அது நிச்சயம் தோல்வியில் முடிவடை யும். புதிய சூழலில் வளரும் எமது பிள்ளைகளின் நிலைப்பாட்டை நன்கு உணர்ந்து அதற்கேற்ற முறையில் தமிழ் மொழியை விரும்பிக் கற்கக் கூடிய ஓர் பக்குவ நிலைக்கு எடுத்துச் செல்வது அவர்கள் பங்களிப்பில் ஓர் முக்கிய கட்டமாகும். பெற்றோர்களுக்குத் தமிழ் ஆர்வம், தமிழ் அறிவு, தமிழைப் பரப்பும் உணர்வு இருந்தால் மட்டும் போதாது. சூழலுக்கேற்ப அதனை வழங்கும் திறனும் பெற்றிருத்தல் அவசியம்.

4. தமிழர் பண்பாட்டின் வாழ்க்கை முறையின் சிறப்பம்சங்கள் பல இருக்கின்றன. அவை காலத்தால் அழியாதவை. வட முனை தொட்டு தென் முனை வரை வையகத்தில் கடைப்பிடிக்கக்கூடியவை. அந்த வாழ்க் கை முறையை, கனடிய வாழ்க்கை முறையோடு எவ்வாறு இணைந்து போகலாம் என்பது பற்றிச் சிந்தித்துச் செயற்பட முன்வரவேண்டும். இந் நாட்டு வாழ்க்கை முறையைக் கண்மூடித்தனமாக ஏற்றுக் கொள்வதோ அன்றி இந்நாட்டு வாழ்க்கை முறையை ஒதுக்கித் தள்ளிவிட்டு கூட்டுக்குள் பதுங்கிக் கிடப்பதோ எமது சிறார்களின் எதிர்கால வாழ்வுக்கு உதவக் கூடியவை அல்ல. எமது பண்பாட்டின் சிறப்பை உணர்த்திக் கொள்ளும் அதேவேளை கனடியப் பண்பாட்டினை மதித்துக் கொண்டு செல்வோமே யானால் எமது பிள்ளைகள் மத்தியில் ஓர் தெளிவான வாழ்க்கை முறை ஒன்று கிடைக்கக்கூடியதாக இருக்கும்.

5. தமிழர் தம் வரலாறு தெட்டத் தெளிவாக எமது சிறார்களுக்குத் தெரியப்படுத்தல் வேண்டும். தமிழன் வரலாற்றை மிகைப்படுத்தப்படா மலோ திரிவுபடுத்தப்படாமலோ பிள்ளைகளுக்கு ஊட்ட வேண்டும். உலக சமூகங்கள் மத்தியில் தமிழர் நாகரீகம் எங்கிருக்கிறதென்பதை நம் சிறா ருக்கு ஊட்ட வேண்டும். தொன்மையான மொழி நாகரிகம் படைத்த, விரல் விட்டு எண்ணக்கூடிய உலக சமூகங்களில் தமிழர் சமூகம் ஒன்று என்பதை எமது சிறாருக்குத் தெட்டத் தெளிவாகக் கூறி, தமிழன் என்பதில் பெரு மைப்படவைக்க வேண்டும். அவற்றிற்கான நூல்கள் வெளியீடுகள் போன்ற னவற்றை இலகுவில் பெறக்கூடிய ஒழுங்ககள் செய்யப்பட வேண்டும்.

6. இலங்கைத் தீவின் வரலாற்றில் தமிழர்களுடைய நிலைப்பாடு சிறார்களுக்குத் தெரியப்படவேண்டும். இலங்கைத் தீவின் பூர்வீகக் குடி மக்களில் ஒருவர் தமிழர்கள், தனி இறைமை கொண்ட அரசு அமைத்து ஆண்டாண்டு காலமாகத் தம்மைத் தாமே ஆண்டு தம் மண்ணை அந் நியர் ஆக்கிரமிப்பிலிருந்து பேணிப் பாதுகாக்க முயன்றவர்கள் என்பதும் சுட்டிக்காட்டப்பட வேண்டும்.

7. இன்று தமிழர்கள் சுமார் 50 நாடுகளில் தற்காலிகமாகவோ அன்றி நிரந்தரமாகவோ வாழ்கிறார்கள். இவர்கள் தாமாகக் குடியேறியவர்கள் ஆங்கிலேயவர்களால் குடியேற்றப்பட்டவர்கள், பிரெஞ்சுக்காரரால் எடுத்துச் செல்லப்பட்டவர்கள், கல்வித்திறனால் வரவழைக்கப்பட்டவர்கள் அகதிக

ளாக வந்தவர்கள் எனப் பல வகுப்பக்களில் அடங்குவர். அவர்கள் பல கால கட்டங்களில் மாறுபட்ட தொகையில் வெவ்வேறு நாடுகளில் குடிய மர்ந்திருக்கிறார்கள். அவர்கள் மத்தியில் தேமதுரத் தமிழோசை எங்கே எவ் வாறு ஒலிக்கின்றது என்ற விடயங்கள், கருத்துக்கள், அனுபவங்கள் பரிமாறப்பட வேண்டும்.

8. தமிழை, சர்வதேச மொழிகளில் ஒன்றாக கற்பிப்பதற்கான ஒழுங்கு முறைகள் செயற்படுத்தப்பட வேண்டும். நாளாந்தப் பாடசாலைத் திட்டத் தின் கீழ் கனடாவில் இன்று ஆங்கிலம் பிரெஞ் அல்லாத மற்றும் சில ஐ ரோப்பிய மொழிகள் கற்பிக்கப்படுவதுபோல தமிழும் கற்பிக்கப்படுவதற் கான ஒழுங்கு முறைகள் செயற்படுத்தப்பட வேண்டும்.

9. உயர் கல்வி கற்கும் பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் தமி ழை வளர்க்கும் முயற்சியில் பல ஆக்க பூர்வமான வேலைத்திட்டங்களைச் செயற்படுத்த உதவ வேண்டும். பல மாணவர்கள் தமது ஆராய்ச்சிக் கட்டு ரைகளைத் தமிழ் மொழி வளர்த்தல், தமிழர் பண்பாடு போன்ற துறைக ளில் செய்வதன் மூலம் ஏனைய இன மக்களுக்கும் தமிழின் பெருமையை எடுத்துக்காட்டக் கூடிய வாய்ப்புக்கள் ஏற்படுகின்றது. இன்றைய நவீன சாத னங்களைப் பயன்படுத்தி வளமான மேலைத் தேசங்களில் தமிழை வளர்ப்பதன் மூலம் நாம் தாயகத் தமிழ் மக்களுக்கு ஓர் அரும் பணியைச் செய்யக் கூடியதாக இருக்கும்.

10. தமிழ் மொழியைக் கற்பிக்கும் முறைகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். தமிழை முதல் மொழியாகக் கற்ற நம்மவர்கள் தமிழ் சூழல் என்ற குட்டையில் ஊறியவர்கள். தமிழை இரண்டாவது மொழியாகப் பாவிக்கும் எமது சிறார்களிடம் இரண்டாம் மொழி கற்பிக்கின் ற புதிய அணுகு முறைகளை, தமிழைக் கற்பிப்பதற்கும் பயன்படுத்த வேண்டும். எதைச் சொல்கிறோம் என்பதோடு அதனை எப்படிச் சொல்கி றோம் என்பதும் முக்கியமானது.

11. தமிழ் மொழி கற்கும் இம்மாணவர்கள் முதல் மொழியான ஆங்கி லம் அல்லது பிரெஞ்சு அல்லது ஜேர்மன் போன்ற மொழிகளின் இலக்கண இலக்கிய வரம்புகள் வசன அமைப்பு முறைகள் என்பனவற்றிற்கும் தமிழ் மொழிக்கும் உரிய அமைப்புமுறை ஒப்பீடுகள், வேறுபாடுகள் பற்றிய தெளிவான ஆய்வுகளும் தமிழ் கற்பிப்பதற்கு உறுதுணையாகப் பயன்படுத் தல் சாலச் சிறந்தது.

12. தமிழ் பேச்சு வழக்கிற்கும் எழுத்து வழக்கிற்கும் இடையே உள்ள வேறுபாடுகள் பற்றிக் கவனம் எடுத்தல் வேண்டும். எமது தாயகத்தில் பெரும்பாலான பிள்ளைகள் தத்தம் குறிச்சியில் உள்ள பாடசாலைகளில் ஆரம்பக் கல்வியைக் கற்று வந்திருக்கிறார்கள். இங்கு தாயகத்தின் பல குறிச்சிகளிலிருந்து வந்த பிள்ளைகள் ஒருங்கணைந்து பேசும்போதும் எழு தும் போதும் சில வேறுபாடுகள் ஆங்காங்கே ஏற்படுகின்றன. எப்படியாவது தமிழைப் பேசினால் போதும் என்று திருப்பி கொள்வோமேயானால் தமிழ் மொழி பல சிறிய மொழிகளாக பிரிந்து அழிந்து விடும். பேச்சுத் தமிழிற் கும் எழுத்துத் தமிழுக்கும் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தி இலக்கண வரம்பின் கீழ் தமிழ் மொழி பேணிப் பாதுகாத்து வளர்க்கப்பட வேண்டும்.

13. தமிழ்ப் பிள்ளைகளிடம் மறைந்திருக்கும் கலைத் திறன்களை

வெளிக் கொணர வேண்டும். அவர்களுக்கு உரியசந்தர்ப்பங்களை வழங்கி அவர்கள் கலைத் திறன்களை வெளிப்படுத்தி, நெறிப்படத்தி வளர்க்க ஆவன செய்தல் வேண்டும். பல சிறார்களிடம் இருக்கின்ற திறன்களை சிறார்களின் பெற்றோர்களோ, ஆசிரியர்களோ அறியாதிருக்கலாம். அவர்கள் திறன்களைக் கண்டறிந்து சந்தர்ப்பம் வழங்கி வளர்த்தெடுத்தல் வேண்டும்.

14. தமிழ் மொழி வளர்ச்சிக்கான ஆக்க பூர்வமான ஆலோசனைகள் பலரிடமிருந்து பல மட்டத்தில் பெறப்பட வேண்டும். பட்டி மன்றங்கள் விவாத அரங்குகள் போன்ற பல முறைகளின் மூலம் கருத்து மோதல்கள் ஏற்படுத்தப்பட்டு புதிய கருத்துக்கள் படைக்கப்பட வேண்டும்.

15. தமிழ் மொழியில் வெளியாகும் ஆக்கங்கள், படைப்புக்கள், கதை, கவிதை, நாடகம், நடனம், ஓவியம், கட்டுரை போன்றன ஆய்வு செய்யப் பட்டு ஊக்கவிக்கப்படவேண்டும். தமிழ் மொழி வளர்ச்சியில் ஏற்படும் தடைகள் தகர்த்தெறியப்பட வேண்டும். அதற்கான ஒத்துழைப்பை முழுத் தமிழ் சமுதாயத்திலிருந்தும் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

16. இன்று மின்கணனி, சி.டி.ராம் போன்ற புதிய முறையினால் நூல்கள் மாற்றியமைக்கப்படுகின்றன. இன்னும் பத்து ஆண்டுகளில் வகுப்பறைகள், நூலகங்கள் புதிய வடிவம் பெற இருக்கின்றன. தமிழ் மொழிக் கல்வியும் இதே முறையில் தயாரிக்கப்பட வேண்டும். நவீன முறையில் தமிழ் வளர நாம் உழைக்க வேண்டும்.

17. தேமதுரத் தமிழை ஏனைய மொழியின மக்கள் மத்தியில் பரப்பி வைப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். அவர்களையும் தமிழ் வளர்க்கும் பணிகளில் ஊக்குவிக்க வேண்டும்.

18. தமிழ் மொழி வளர்ச்சியில் ஏனைய மொழியியல் வளர்ச்சியில் இருக்கும், நெழிவு சுழிவுகள் அறிந்து அவ் அனுபவங்கள் புகுத்தப்பட்டுத் தமிழ், பழமைக்குப் பழமையாய் புதுமைக்குப் புதுமையாய் இருக்க வேண்டும் என்பதை நாம் உணர்ந்து செயற்பட வேண்டும்.

19எமது இன எழுச்சிக்காக உழைத்தவர்கள், இன விடுதலைக்காக உழைத்துத் தம்மைத் தியாகம் செய்தவர்கள், தமிழ் மொழியை வளர்த்தவர்கள், தமிழ்க்கலை இலக்கியத்திற்குப் புத்துயிர் கொடுத்தவர்கள், தமிழ் மண்ணை அந்நியரிடமிருந்து மீட்க எத்தனித்தவர்கள் குறிப்பாக எமது தாயகத்தில் இத்துறைகளில் பணி புரிந்தோர்கள், நினைவுகூர வேண்டியவர்கள், மதிப்புப் பெற வேண்டியவர்கள் கௌரவிக்கப்படவேண்டியவர்கள்.

இக்கட்டத்தில் ஓர் இசை விழாவில் நடந்த சம்பவம் ஒன்று ஞாபகத்திற்கு வருகிறது. எனக்கருகில் அமர்ந்திருந்த ஈழத்து இசைக் கலைஞர் ஒருவரிடம் நவாலியூர் சோமசுந்தரப் புலவர் பாடல்கள் சிலவற்றைக்கூறி அவற்றிற்கு இசையமைத்துப் பாடுதல் பற்றிக் கதைத்தபோது அவர், யார் இந்த சோமசுந்தரப் புலவர் எனக் கேட்டார். எனக்கு வெட்கமும் தயக்கமும் ஒருங்கிணைந்து என்னை ஒரு சில விநாடிகள் இயக்கமற்ற நிலைக்குக் கொண்டு வந்துவிட்டது. இந்நிலை மாற வேண்டும்.

20. பல்கலைக் கழகங்களில் கற்கும் மாணவர்களுக்குத் தமிழை வளர்க்கத் தாயகத்திலோ அன்றித் தமிழ் நாட்டிலோ இல்லாத வசதிகள் பல இங்கு இருக்கின்றன. பல ஆராட்சித்துறைகள் நிறுவித் தமிழை வளர்க்

க முடிகிறது. தமிழ், தமிழ்ப் பண்பாடு, கலைத்துறைகளை மேற்படிப்புப் படிக்கும் மாணவர்கள் தம் ஆராட்சித்துறைக்கு எடுத்து, தமது ஆராட்சித் திறனை வளர்க்கலாம். பல்கலைக் கழகங்களைப் பொறுத்தமட்டில் அவர்கள் கவனமெல்லாம் தம் மாணவர் கல்வித் திறனை வளர்ப்பதே. அதற்கெடுக்கப்படும் ஆராட்சிக்குரிய தலைப்புக்கள், விடயங்கள் மாணவர்களால் தெரிவு செய்யும் சுதந்திரமும் ஓரளவு உண்டு. புதிய வசதிகளைப் பயன்படுத்தி தமிழர் விடயங்கள் பற்றித் ஆராட்சி செய்வதன் மூலம் தமிழை வளர்க்க முடிகிறது. பாரதியார் கண்ட கனவான நம் படைப்புக்களை உலகறிய வைக்க முடியும். எம் சிறார் உள்ளத்தில் தமிழ் உணர்வையும் ஊட்ட முடியும்

21. மின்கணனித் துறையில் படித்துப் பட்டம் பெறுபவர்கள் கூடத் தமிழ்த் துறையில் அளப்பரிய பணிகளைச் செய்ய முடியும். தமிழ் எழுத்துக்களுக்கு மெருகூட்டுவதோடு நின்றுவிடாமல் ஆங்கிலத்தில் (Soft ware) மின்கணனித் துறையில் ஏற்பட்ட பலத்த வளாச்சியினை ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து தமிழில் அவ்வளர்ச்சி மிகக் குறைவாகவே காணப்படுகிறது. இந்தியா இன்றைய உலகில் பெருமளவு (Soft ware) சொவ்ற்வெயர்ளை உற்பத்தி செய்கிறது. ஆனால், தமிழில் போதியளவு வளராதது ஏன்? தமிழ் மக்கள், தமிழ் படைப்பாளிகள் இன்னும் இருட்டில் இருக்கிறார்களா?

22. பல்கலைக் கழகங்களில் தமிழ்ப் பீடங்கள் அமைக்கப்பட வேண்டும். இப்பீடங்கள் தமிழைத் தொடர்ந்து வளர்த்துக் கொண்டே போகும். இப்பீடங்களில் தமிழர் மட்டுமன்றி ஏனைய இனத்தவரும் தமிழைக் கற்றுத் தமிழ் வளர்க்க முடியும். இப்பீடங்களை அமைப்பது கடினமானதொன்றல்ல. நாம் இங்கிருக்கும் பல்கலைக் கழகங்களை அணுக வேண்டும். எமது எண்ணக் கோட்பாடுகளை விளங்கப்படுத்த வேண்டும். அதனை அமைத்துக் கொள்ள, சில ஆயிரம் டொலர்கள் தேவைப்படுகிறது. அதனைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

தமிழ் பீடங்கள் அமைப்பதில் தமிழ் பெரியார்கள், அறிஞர்கள், தமிழ்த் தொண்டர்கள் பேரார்வம் காட்டாவிட்டாலும் ஓரளவு ஆர்வம் காட்டி வருகிறார்கள். இவர்களுக்குப் பலரின் ஒத்துழைப்பு அவசியம். முயற்சி திருவினையாக்கும். ஏற்கெனவே வடஅமெரிக்கப் பல்கலைக் கழகங்களில் தமிழ்ப் பீடங்கள் இயங்கி வருகின்றன. கலிபோனியாவில் ஆங்கிலேயப் பின்னணியைக் கொண்ட அமெரிக்கர் டேவிட், தமிழ் பேராசிரியராக இருந்து தமிழ் பீடத்தில் பல அரும்பணிகள் ஆற்றி வருகிறார். கியூபெக், ஒன்ராரியோ மாநிலங்களில் கனடாவின் தலைசிறந்த பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன. இப்பல்கலைக் கழகங்களில் கணிசமான அளவு தமிழ் பிள்ளைகள் உயர் கல்வி பயின்று வருகிறார்கள். இவர்களுக்குத் தமிழ்த் துறையில் ஆர்வம் காட்டி வருவோமேயானால் நிச்சயம் தமிழ்த்துறையில் பல புதிய சாதனைகளைப் புரிய முடியும். தமிழ் மண்ணில் தான் வளரவேண்டுமென்பதல்ல. எங்கெங்கெல்லாம் வாய்ப்புக்கள் கிடைக்கின்றனவோ அங்கங்கெல்லாம் தமிழ் வளர்க்கப்படவேண்டும். தமிழ் வளர்க்க கனடாவில் கிடைத்திருக்கும் வாய்ப்பு உலகின் வேறு எந்த வெளிநாட்டிலும் கிடையாது. பல்கலாச்சாரத் துறையின் கீழ் இந்நாட்டில் இவ்வசதி நன்கு இருக்கிறது. இவ்வசதிகளைப் பயன்படுத்துவதில் காட்டப்பட்டு வரும் அக்கறை போதியதா

கத் தெரியவில்லை. எமது அக்கறை கூடியளவு அடிப்படைப் பிரச்சினைக ளான குடியிருப்பு புதுச்சூழலில் நம்மைத் தயார்ப்படுத்தல் போன்றனவற் றை மையமாகக் கொண்டுள்ளன. எம்மை நாம் புகுந்தகத்தில் ஸ்திரப்படுத் துவது ஆரம்பகால கட்டங்களில் அவசியமானது. இந்நடவடிக்கைகளின் அவசியம் படிப்படியாகக் குறைந்துவிடும். சுமார் பத்து ஆண்டு கால கட் டத்தில் ஓரளவிற்குப் புதிய சூழலில் நம்மை ஸ்திரப்படுத்திவிடும். அதன் பின் நம்மை எவ்வாறு நெறிப்படுத்திக் கொள்ளலாம் என்ற செயற்பாடுகள் தீவிரமாகத் தலையெடுக்கும். அக்கால கட்டங்களில்தான் கல்விப் பீடம் அமைத்தல் போன்ற நீண்ட காலத் திட்டங்கள் நடைமுறைக்குக் கொண்டு வரும் நிலைப்பாடுகள் தெளிவாகின்றன. நீண்டகாலத் திட்டங்களில் கல்வி முதலிடம் பெறுகிறது. எமது இனத்தின் மூலதனமே கல்வி. கல்வியில் முதலிடுவதில் ஈழத்தமிழன் மிகவும் அக்கறை கொண்டவன். கல்வியால் தன்னையும் தன் இனத்தையும் வளர்த்துவருபவன். அவன் கல்வியால் உயர்ந்து உலகின் பல பாகங்களிலும் தனது முத்திரையைக் குத்திவருகி றான். தமிழன் மூளைப் பலத்தை பல சிங்களத் தலைவர்களே பலமுறை தமக்குள் வியந்து பாராட்டியிருக்கிறார்கள். கடன்பட்டாவது தமது பிள்ளை களை உயர்கல்விக்கு அனுப்புவது நம் சமூகத்தில் சர்வசாதாரணமாகக் காணக்கூடிய தொன்று. சிங்கள அரசினால் தமிழ் உடமைகள் அழிக் கப்பட்டபோதும் அவன் தன்னொடு வைத்திருக்கும் கல்வி எனும் மூலத னத்தைக் கொண்டு நெருக்கடியான காலகட்டங்களில் வேகமாக முன்னே றிக்கொண்டிருக்கிறான். ஓர் போராட்ட காலகட்டத்தில் கலை, அறிவு, சமூக முன்னேற்றம், பொருளாதாரம் எனப் பல துறைகளில் கணிசமான அளவு வளர்வது அவனது கல்வியில் கொண்ட நம்பிக்கையையும் அதன் பலனை யும் காட்டுகிறது.

அத்தகைய தமிழன்தான் புகுந்தகத்தில் விஞ்ஞானத்துறைகளில் வேக மாக முன்னேறி வருவது பாராட்டத்தக்கது. அவன், தனது அடையாளத்தை மறக்காமல் இருக்கவேண்டும். கட்டுக்கோப்பான இன உணர்வு உலக சமுதாயங்களில் அவனுக்கு ஒரு தனி மதிப்பையும் கௌரவத்தையும் வழங்கும். தனிப்பட்ட ரீதியில் பெறமுடியாத கண்ணியத்தைப் பெறமுடியும். அச் சக்தி நீண்ட காலத்தில் உள ரீதியில் கூட ஓர் மன எழுச்சியையும் மன உறுதியையும் வழங்கும். பல நாடுகளில் சிதறிக் கிடக்கும் தமிழன் அங்கங்கெல்லாம் தனது இன உணர்வையும் கல்வியோடு ஊட்டிவரும் போது இளைய சந்ததிக்கு ஓர் தற்பாதுகாப்பு ஏற்படுகிறது. தன்னம்பிக் கையும் தற்பாதுகாப்பும் எவனுக்கும் அவசியம். குறிப்பாகத் தாயகத்தை விட்டு வெளியேறி வாழ்பவனுக்கு மிக அவசியம். அவற்றைக் கைவிடாமல் பார்த்துக் கொள்ள தமிழ்த்துறைக் கல்விப் பகுதிகளில் அமைக்கும் நடவடிக் கைகள் பற்றி ஊக்கமும் ஆர்வமும் காட்டப்பட வேண்டும். அதற்கான முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். ஆலமரமாக வளரப் பல்லாண்டு எடுக்க லாம். ஆனால், அதற்கான முயற்சிகள் என்றோ ஒரு நாள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பத கவனத்தில் எடுத்துக் கொண்டால் உடனடி நடவடிக்கை கள் எடுக்கப்படுவதன் அவசியத்தை மெல்லோரும் உணருவோம்.

## தமிழ்மொழிக் கல்வி

தமிழ் வளரத் தமிழ் நாடும் தமிழீழமும்தான் தகுந்த இடங்கள் என்று வரையறை செய்துவிடக்கூடாது. தமிழை முற்றுமுழுதாக வளர்க்க எங்கெங் கெல்லாம் தமிழன் கணிசமான அளவு வாழ்கிறானோ அங்கங்கெல்லாம் முயற்சிகள் எடுக்கப்படலாம். தமிழ் உலக அந்தஸ்தை நாலாயிரம் ஆண்டு களுக்கு முன்பே பெற்றுவிட்டது. தமிழ் பழமைக்குப் பழமையாய் புதுமைக் குப் புதுமையாய் வளைந்து நெளிந்து கொடுத்து வருகிறது. தமிழ் தொன் மையை மட்டும் கூறிவிடாமல் தமிழின் வளத்தையும் கூட உலக மொழிக ளில் பார்க்குமிடத்து முதல் பத்து மொழிகளில் தமிழும் ஒன்றாக இருக்கி றது. தமிழ் மொழியில் காணப்படும் பல துறைகளின் முன்னேற்றங்கள் வேறு எந்த மொழிகளிலும் இல்லை. தமிழில் பல பொக்கிஷங்கள் மறைந் திருக்கின்றன. அவை காலத்தால் அழியாதவை. இவற்றைப் பற்றிப் பேசுவது நமக்குள்ளே பழங்கதைகள் பேசும் பண்பல்ல.

தமிழ் வளர்க்கப்படுவதற்கு முன், வளர்ந்திருந்த தமிழ்ச் செல்வங்களை அழியாது பாதுகாத்து வருதல் அவசியம். அதற்கு முதற்படியாக எதிர்காலச் சந்ததிகள் தமிழ் மொழியை, அதன் இலக்கண, இலக்கியங்களைத் தொட் டுப்பார்த்து விட்டால் மட்டும் போதாது. ஆழமாகக் கற்க வேண்டும். அதற் கான அத்திவாரம் ஒவ்வொரு தமிழ்ச் சிறாரிடமும் போடப்பட வேண்டும். தமிழ்ச் சிறார்கள் தமிழ் கற்க அவகாசம் இருப்பதாக தாமாக வந்து கூறி விடமாட்டார்கள். அவர்களை, தமிழை ஒரு பாடமாகக் கற்க ஊக்குவித்தல் அவசியம். பல பாடசாலைகளில் தமிழ், இங்கு இரண்டாம் மொழியாகக் கற்பிக்கிறார்கள். இதற்கான ஆதரவு பெற்றோரிடம் இருந்து போதியளவு இருக்கவில்லை. பெற்றோர்களுக்கு தமிழ் பின்னணி நன்கு இருக்கிறது. இப்பின்னணியில் வளர்ந்தவர்கள். அவர்கள் உள்ளத்தில் எல்லாம் தமிழ் மணம் கமழ்கிறது. பல கட்டங்கள் புதிய சூழலில் வாழ்வது ஓர் சங்கடமாக இருக்கிறது. புதிய சம்பிரதாயங்கள் உள்ளத்தை எப்போதும் ஓர் கட்டுப்பா டான நிலைக்குள் வைத்திருக்கிறது. இந்நிலையில் வாழும் பெற்றோர்கள் இருவிதமாக புதுச் சூழலை அணுகுகிறார்கள். புதிய சூழலில் தாம் சுதந்திரமாக இயங்க முடியாமல் படும் கடின நிலையை உணர்கிறார்கள். தாம் இனிமேல் இந்நாட்டில்தான் வாழ்வது நடைமுறைச் சாத்தியக் கூறாக அவர்களுக்குத் தென்படுகிறது. இவர்கள் தம் வாழ்க்கையில் சந்தித்த கடின நிலையை எண்ணிக்கூடப் பார்க்க மறுக்கிறார்கள். அச் சிந்தனை வந்தால் கூடத் திசை திருப்பி விடுகிறார்கள். இவர்களைப் பொறுத்த மட்டில் தமது பிள்ளைகள் இக் கடின நிலையின் வடுக்களைப் பெறக்கூடாது என்பதே முக்கிய குறிக்கோள். அவர்கள் தம் பிள்ளைகள் கூடிய வரை தமிழ்ப் படங் களைப் பார்ப்பதைக்கூடத் தவிர்க்கிறார்கள். அதே வேளை தாம் தாராள மாக அப்படங்களைப் பார்க்கிறார்கள். இங்கே படம் பார்ப்பதோ இல்லை யோ என்பதல்ல முக்கியம். அதன்பின் மறைந்திருக்கும் உள்ளக்கிடக்கை தான் முக்கியம். பிள்ளைகளை வழி நடத்த ஒவ்வொரு பெற்றோருக்கும் அளவற்ற சுதந்திரம் உண்டு. ஆனால், பிள்ளைகளைச் சரியான முறையில் வழி நடத்துதல் தம் தலையாய கடமை. கடந்த ஐயாயிரம் ஆண்டுகளாக எம் மூதாதையோர் நம் பண்பாடு, பழக்க வழக்கங்கள், வாழ்க்கை முறை

கள் என்பனவற்றில் தேவையற்ற அடிப்படை மாற்றங்களை ஏற்படுத்த விரும்பவில்லை. பூத்துக் குலுங்கும் மாற்றான் நாகரிகத்தில் மோகங் கொண்டு சிலுசிலுப்பில் பணியாரத்தைக் கைவிடவில்லை. இன்றைய அர-சனைக் கண்டு அரசபரம்பரையில் உதித்த, ஆனால் இன்று அரசனாய் இல்லாவிட்டாலும் கூட ஆண்டியாக வாழும் ஓர் நடுத்தர புருஷனைக் கைவிடலாமா? அவனை அரியாசனத்தில் மீண்டும் அமர்த்தி அவன் ஆளு மையில் நம் தமிழ் குடிமக்களை வையகத்து வாழ்வாங்க வாழவைக்க முடியும் என்ற நம்பிக்கையும் மன உறுதியும், அயராத உழைப்பும், தாழ்வு மனப்பான்மையுமற்ற மனத்திடகாத்திரமும் இருக்குமானால் தமிழ் மாணிக் கக் கல்மேல் இருக்கும் பாசிகள் அகற்றப்படும். தமிழ் உலகெங்கும் உயர்ந்த மொழிகளுள் ஒன்றாகப் பிரகாசிக்கும். தமிழை வளர்ப்பதால் தமிழுக்குப் பெருமை யென்பதை விட எமக்குத்தான் பெருமை. தமிழப் பணி நம் சொந்தப்பணி. பெற்றோர் தம் பிள்ளைகளுக்கு தமிழ் கற்க வைக்க வேண்டும். அவர்களிடம் தமிழை திணிக்கக் கூடாது. திணிப்பதற்கு தமிழ் ஒன்றும் வலது குறைந்த மொழியல்ல. சில சந்தர்ப்பங்களில் அதன் அருமை பெருமை தெரியாத இடத்தில் நாம் பலபடிகள் இறங்கித்தான் வளர்க்க வேண்டும். பிள்ளைகளுக்கு நாளாந்தம் தமிழ் மொழியில் இருக்கும் சிறப்பை உணர்த்திய வண்ணம் இருக்க வேண்டும். தமிழ் பர-வலாக நம் மத்தியில் பேசப்பட்டு வரும் கட்டங்களில் பிள்ளைகள் மத்தியி லும் கூட ஓர் மனத்துணிவு ஏற்படும். நம்மில் பலர் பொது நிலயங்களுள் அல்லது சப்வே என அழைக்கப்படும் சுரங்க வண்டிகளில் செல்லும் போது, தாய் அயலில் இருக்கும் தமிழ் பெண் மணியுடன் தமிழில் சுகம் விசாரிக்கத் தொடங்கியதும், நம்மில் சில பிள்ளைகளுக்கு மிகச் சங்கடமா ன நிலை ஏற்பட்டு விடுகிறது. எத்தனையோ பேருக்கு மத்தியில் "இந்த சனியன் பிடித்த அம்மா தமிழை அலட்டுது. என்ரை மானம் போச்சு. இனிமேல் இந்த கிழடுகளோடு வரவே கூடாது" என்று உள்ளத்துள் ஆயி ரத்தெட்டு அர்ச்சனை நடந்து கொண்டு போகிறது. போதாக் குறைக்கு மோலில் போகும் போது அம்மா சீலை உடுத்துக்கொண்டு வருமிடத்து சிநேகிதரைக் கண்டதும் பாம்பின் செட்டை கழன்றது போல கழன்று விடு கிறார்கள்.

இத்தகையதொரு மனநிலை இருக்குமிடத்து தமிழை நேசித்துக்கற்பது என்பது முயற்கொம்பாகிவிடுகிறது. தமிழை வேப்பங்காய் போல், ஆமணக் கெண்ணெய் போல் வாயில் முண்டு விளுங்கிவிடுவதா? இங்கு பிள்ளைக ளைக் குறை கூறிப்பயனில்லை. பிள்ளைகள் மத்தியில் தாம் சூழலில் இருக்கும் பண்பாடு முதன்மை பெறுகிறது. அதனைச் சரியான முறையில் பின்பற்ற எத்தனிக்கிறார்கள். நான் முந்தி நீமுந்தி யென, சமூகத்தில் பிற ருக்குத் தாமும் இப்பண்பாட்டில் ஊறிய குஞ்சுகள் என முத்திரை குத்துவ தில் கௌரவமும் பெருமையும் அடைகிறார்கள். எமது பிள்ளைகளுக்கு் உறவினர் அல்லாவிட்டாலும் நெருக்கமானவர்களாகக் கருதக் கூடியவர்கள் கயனாக்காரர் என அழைக்கப்படும் இந்திய வம்சாவழியினர். அவர்கள் சரளமாக ஆங்கிலம் பேசுகிறார்கள். அவர்கள் உச்சரிப்பில் தூய ஆங்கில சாயல் இருக்காவிட்டாலும் கூட ஆங்கிலம் பேசுமிடத்து ஆங்கிலத்தைத் தாய் மொழியாகக் கொண்ட வெள்ளையின மக்கள் இலகுவில் புரிந்து

கொள்கிறார்கள். எமது ஆங்கில உச்சரிப்பில் எமது பாணி இளையோடிக் காணப்படுகிறது. இந்நிலையில் தமிழில் வேறு பேசினால் பாடசாலைகளில், வேலைத்தளங்களில் மட்டமாகக் கருதி விடுவார்களோ என்ற மனப்பயம் இருக்கிறது. பிள்ளைகளிடம் ஓர் மனச் சங்கடமான நிலை இருக்கிறது. நாம் மற்றுமொரு உண்மையை உணரவேண்டும். இந்த கயனாக்காரர் என அழைக்கபடும் இந்திய வம்சாவழியினரில் கூரிய சிந்தனையும், கல்வியும் கொண்டவர்கள் பலரிடம் இவ்விடயம்பற்றி கதைத்திருக்கிறேன். சில நூல்கள் வாசித்திருக்கிறேன். அவர்கள் தாம் இந்த நிலைக்கு தள்ளப்பட்டதினையிட்டு வெட்கமும் வேதனையும் கொண்டிருக்கிறார்கள். பலர் தமது குடும்பத்தின் மூல வேரைத் தேடியலைகிறார்கள். அவர்கள் வரலாற்று சந்தர்ப்பவசத்தால் மொழி, பண்பாடு ஆகிய துறைகளில் தாம் நிரந்தர அடிமைகளாகி விட்டோம் என்ற மனப்புண்ணுடன் வாழுகிறார்கள்.

ஒரு மொழியை, நாகரீகத்தைக் கட்டியெழுப்புவது சுலபமான கருமமல்ல. உலகில் பல்லாயிரக் கணக்கான மொழிகள் பேசப்படுகின்றன. பலநூற்றுக் கணக்கான இனங்கள் இருக்கின்றன. இவற்றில் விரல் விட்டு எண்ணக் கூடியவையே வானளாவ வளர்ந்திருக்கின்றன. அவ்வாறு வளர்ந்த இனங்களில் ஒன்றான நமது தமிழ் இனத்தின் முதுகெலும்பான தமிழ் மொழி நிச்சயம் பேணிப் பாதுகாக்கப்படுவதுடன் மேலும் வளர்க்கப்பட வேண்டும். முந்த நாள் பெய்த மழைக்கு நேற்று முளைத்த காளான் மொழிகளை வளர்ப்பதில் அம்மொழிகள் பேசும் மக்கள் துடியாகத் துடிக்கிறார்கள். தமது மொழியில் பேசுவதில் பெருமைப்படுகிறார்கள். இந்நாட்டில் வாழும் சில செவ்விந்தியருடன் அவர்கள் மொழிகள் அழிந்து போவது பற்றிக் கதைத்தேன். நான் கலந்துரையாடிய செவ்விந்தியர்கள் நகர்புறங்களில் வாழும் பார்வையில் நகர் பிரஜையாக தோன்றினாலும் உள்ளத்தில் செவ்விந்திய பண்பாட்டு மணம் கமழ்பவர்கள். இவர்கள் மிகவும் வேதனையான நிலையில் தான் இருக்கிறார்கள். தமது மொழிகள் பல அழிந்து போவதை அவர்களால் எண்ணிக் கூடப்பார்க்க முடியவில்லை. அவர்கள் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஆசியாவில் இருந்து அலாஸ்காவூடாக அமெரிக்கக் கண்டத்தில் குடியேறி இருக்கலாம் என்று வரலாற்று ஆசிரியர்கள் கருதுகிறார்கள். இவர்கள் தம் மொழியில், வாழ்க்கைமுறையில் பல விஞ்ஞானக் கருத்துக்கள் அனுபவம் மூலம் நடைமுறையில் இருந்து வருவதாகக் கூறுகிறார்கள். தமது மொழி பண்பாடு நசுக்கப்பட்டதாகக் கருதுகிறார்கள். திட்டமிட்டுச் செயற்பட்ட முறையில் படிப்படியாக தாம் ஓர் ஒதுக்கப்பட்ட இனமாக்கப்பட்டதாகக் கூட, கருதுகிறார்கள். தென் அமெரிக்காவில் குறிப்பாக அமேசன் நதியோரங்களில் வாழ்ந்து வரும் செவ்விந்தியர்கள் கூட உறங்கிக்கிடக்கவில்லை. வலு இழந்த நிலையில் இருக்கிறார்கள். படிப்படியாக முதன்மையடைந்த இனங்கள் ஏனைய இனங்களை தம் மூல நதியின் கிளை நதிகளாக, அருவிகளாக திசை திருப்பி சங்கமிக்க வைக்க முனைந்து வருகிறார்கள். இத்திட்டத்திற்கு உலகின் பல இனமக்கள் பலியாகி விட்டார்கள். சக்தி வாய்ந்த இன மொழிகளின் ஈர்ப்பு சக்தி சுத்தமாக இருப்பது ஒருபுறம், மறுபுறம் எதிர்த்து இழுக்கும் சக்தி நலிந்து இருக்கும் கட்டத்தில் கயிறு இழுக்கும் போட்டியில் தோல்வி காண வேண்டிய நிலை ஏற்படுகிறது. இது ஒரு சங்கிலிக் கோர்வையின் பலவீனமான

வளையம். அது உடையுமேயானால் சங்கிலி அறுந்து விடும். சகல சக்திகளையும் ஒருங்கிணைத்து பெருமுயற்சி எடுத்து பலவீனமான கட்டத்தினை பலமாக்கிக் கொள்வோமேயானால் நிச்சயம் ஆபத்தான நிலையில் இருந்து நம்மை நாம் பாதுகாத்துக் கொள்ள முடியும். பொருளை வாரி வழங்கத் தேவையில்லை. ஆங்கிலம் கற்பதினை குறைத்து கொள்ளத் தேவையில்லை. இந்நாட்டு மக்களுடன் ஒருங்கிணைந்து வாழும் முறையினை ஒதுக்கித் தள்ளத் தேவையில்லை. நவீன கல்விப் பயிற்சியைத் தளர்த்த வேண்டியதில்லை. தெருவெங்கும் பொட்டுப் போட்டு, தமிழ் நாதம் முழங்கிக் கொண்டே மட்டும் இருக்க வேண்டியதில்லை.

முதலிலே தமிழ் மொழியைப் பற்றோடு நேசிக்க வேண்டும். தமிழுக்கு இடர்வரின் தரணியைக் கொடுத்திடுவோம் எனத்துடிக்க வேண்டும். யாம் அறிந்த, அறியாத மொழிகளில் தமிழ் வளமான மொழியென்று பலர் நிரூபித்த உண்மையை உணரவேண்டும். தமிழ் ஓர் கடல். அதில் முத்துக்கள் ஆயிரம். கரையோரத்தில் இருக்கும் சிற்பிகளை மட்டும் கண்டு கடலெல்லாம் சிற்பி நிறைந்தது என தப்புக்கணக்கு போட்டு விடக் கூடாது. தமிழ் பற்றி பேசும் போது, தமிழ் நாதம் வானொலிகளில், நாடாக்களில் ஒலிக்கும் போது மறைகளின் வேதமந்திரம் கேட்கும் மகிழ்ச்சியும் திருப்தியும் ஏற்பட வேண்டும். தமிழில் காதல் கொள்வது சுலபம். கனவிலும் நினைவிலும் தமிழ் நரம்பு இளையோடிச் செல்லுமிடத்து நாடித் துடிப்போடு கூடிய நரம்பு துடிப்பாக துடிக்கும். தமிழ் அமுதம் மட்டுமல்ல எமது தனிச் சொத்து. கையிலே வெண்ணெய் இருக்க நெய்யிற்கு அலைய வேண்டுமா. தமிழ் வெண்ணெய் உருக்கி நெய்யாக்கி விளக்கேற்றி தமிழ் ஒளி தமிழனுக்கு மட்டுமல்ல தரணியெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும். தமிழன் மற்றுமொரு தமிழனைக் காணும்போது தமிழிலே பேச எத்தனிக்க வேண்டும். தமிழ் நமது மொழி, பலரும் பொறாமைப்படக் கூடிய அரும் பெரும் பொக்கிசம். இன்றைய உலகில் கற்று பாண்டித்தியம் பெற்றவன், நூலறிவு இன்றிச் செய்திறன் மிக்க தொழிலாற்றல் கொண்டவன். திருமகள் கடாச்சம் பெற்ற செல்வந்தன். உண்டி சுருக்கி உடலையும் உயிரையும் ஒருங்கிணைத்து வாழ முனையும் பாமரன், கலைஞன், எனப்பல தரப்பட்ட மக்களுக்குத் திண்மையான வாழ்க்கை முறையை காலம் இடம் கடந்து நடத்தி விடக்கூடிய நெறிகளைத் தன்னைத்தே கொண்ட மொழி தமிழ் மொழி. தமிழ் உலக மொழியாகும் தகுதி பெற்ற மொழி. வணிக துறையில் சில மொழிகள் வளம் பெற்று இருக்கின்றன. சட்டத்துறையில் தலைசிறந்தன சில மொழிகள். சமய அறநெறியில் அமுதமாய் இருக்கின்றன மற்றும் சில மொழிகள். கணிதம், கட்டிடகலை, விஞ்ஞானத்தில் மேன்மை பெற்றுள்ளன. சில மொழிகள் தத்துவத்திற்கு பெயர்போன மொழிகள். அத்தனை யையும் தன்கைத்தே கொண்டு பல துறைகளிலும் வளம் பெற்றது நம் தமிழ். தமிழின் தொன்மையை, வளத்தை, வரலாற்றை, ஆழத்தை, முதன்மை என்பனவற்றைப் பற்றி, பக்கம் பக்கமாக பலர் எழுதியிருக்கிறார்கள். இங்கு நாம் தமிழ் உயர்ந்த மொழியென்ற உண்மையை உணர வேண்டும். அதனை நம் சிறார்கள் மத்தியில் ஊட்டி விட வேண்டும்.

நாளொரு வண்ணம் பொழுதொரு மேனியாக தமிழ்த்தளிர் அவர்கள் உள்ளத்தில் நாட்டப்பட்டு வளர்க்கப்பட வேண்டும். தமிழை நிந்திக்கும்

PUBLIC LIBRARY
JAFFNA

பூச்சிகளுக்கு தமிழ் இலக்கிய மருந்து அடிக்க வேண்டும். தமிழ்ப்பயிர்களோடு வளரும் வேற்று இன பண்பாட்டினை களைகள் போல, பிடுங்கி எறிந்து விட வேண்டும். சந்தர்ப்பங்கள் ஏற்படும் இடத்து தமிழ் கலை விழாக்கள், அரங்கேற்றங்கள், இசை விழாக்கள் போன்ற பசளைகள் இட வேண்டும். தமிழ்ப்பயிர் வாடும் போதெல்லாம் தமிழ் வாழ்க்கை முறை-யெனும் நீர்ப்பாய்ச்சல் வேண்டும். தமிழ் வளரும் போது அது கட்டுக் கோப்புடன் வாழ எல்லையிட்டு பாத்தி கட்டி செம்மையுற இலக்கண வேலியிட வேண்டும். அப்பயிர் ஓங்கி வளர உள்ளங்கள் பூரிப்படையும். நீர் உயர நெல் உயர்வது போல, தமிழ் உயர நாம் உயர்வோம். இந்த ஒரு கட்டத்தில் நாம் வெற்றி கொள்வோமேயானால் எமது சிறார்கள் வளர்ந்து பெற்றோர்களைத் தயக்கமின்றிப் பின்பற்றுவார்கள். நாம் தவறுவிட்டால் எண்ணிக் கூடப்பார்க்க முடியாதளவுக்கு நம் இனத்தை அழிக்கும் ஓர் கொடிய செயலுக்கு ஆளாகி விடுகிறோம். நாங்கள் பல தடவை ஓர் முக்கிய விடயத்தை மறந்து விடுகிறோம். புலம் பெயர்ந்த முதல் சந்தியினர் நாம். எமக்குப் பிடுங்கியெடுத்த தமிழ் செடியை மாறுபட்ட மண், கால நிலையுள்ள சூழலில் வளர்க்கும் போது தனிப்பட்ட சில செயற்பாடுகள் தேவைப்படுகிறது. இச் செயற்பாடுகள் எமக்குப் புதியவை. எம்பெற்றோரிடம் இருந்து நாம் கற்றதில்லை. எம் பெற்றோருக்குப் புகுத்த வேண்டிய அவசியம் இருக்கவும் இல்லை. எம் பெற்றோர் போல எம்பிள்ளைகளுக்கும் அதன் அவசியம் வரப்போவதில்லை. ஏனெனில் பெற்றோர் வளர்ந்த மரத்தை வளரும் சூழலில் பேணிப்பாதுகாக்கிறார்கள். எமது எதிர்கால சந்ததியினரும் நாம் பிடுங்கி நாட்டிய மரத்தை தொடர்ந்து இதே சூழலில் வளர்க்கப் போகிறார்கள். எனவே, ஆதியும் அந்தமுமாக எமக்கு தலை-யான பணியொன்று இருக்கிறது. இப்பணியை செம்மையுறச் செய்ய இரு வழிகள் இருக்கின்றன.

வெற்றிகரமாக வெளிநாடுகளில் தமிழன் பல்லாண்டு காலமாக வாணிபம், தொழிற்துறைகளில் சென்ற காலத்தில் எவ்வாறு தனது பண்பாட்டை வெளிநாடுகளில் மாசு படாமல் பாதுகாத்து வளர்த்தான். உலகின் பல் இனமக்களில் சில குறிப்பிட்ட இனம் புதிய சூழலில் வெற்றிகரமாகத் தனது பண்பாட்டை வளர்த்து வந்திருக்கிறது. அவர்கள் மூன்றாம் நான்காம் தலை முறை தமது பண்பாட்டை வெளிநாடுகளிலும் நன்கு வளர்த்து வருகின்றன. நல்ல நீர் ஓடும் அருவிகளைப் பார்க்க வேண்டுமே தவிர சாக்கடைகளைப் பார்த்து அதில் விழுந்து ஓடக்கூடாது. இவர்கள் இன்று எப்படி வாழுகிறார்கள் என்று பார்பதை விட இவர்கள் வந்து வேர் ஊன்றிய காலங்களில் எவ்வாறு தம்மை ஸ்தரப்படுத்தினார்கள் என்பதை உணர வேண்டும். வளர்ந்திருக்கும் ஓர் சமுதாயத்தின் வளர்ச்சியின் உச்சப்படியைப் பார்த்து, பின்பற்ற முனைவதை விட அவர்கள் வளர்ந்து வந்த கால கட்டங்களில் எவ்வாறு உழைத்தார்கள், எத்தகைய பிரச்சினைகளைச் சந்தித்தார்கள் என்ற பல உண்மைகளை உணர வேண்டும். அன்றைய சூழல் வேறு, இன்றைய சூழல் வேறு என்று சமாதானம் கூறி விடக் கூடாது. உக்ரேனியர், சீனர், ஜேர்மனியர், யப்பானியர் இந்நாட்டிற்கு வந்து குடியேறிய காலகட்டங்களில் அவர்கள் சந்தித்த பல சந்தர்ப்பங்கள் பிரச்சனைகளை நாம் இன்றும் அணுகி வருகிறோம். அப்பிரச்சனைகள் தோன்றிய மாதிரி

சற்று மாறு பட்டிருந்தாலும் அவர்கள் உள்ளக்கிடக்கைகள், மனசிக்கல்கள், தம்பண்பாடு மொழி பற்றிய ஏக்கங்கள் பெருமளவு எமக்கு இருப்பது போன்றவை. இந்நாட்டில் கடந்த நூறு வருடங்களாக வந்து குடியேறிய பல இனமக்கள் நேரடி அனுபவங்களை கேட்டறிந்த போதும், அவர்கள் அனுப வங்கள் நூல்களின் வடிவத்தில் வெளியிட்டப்பட்டதையும், அவர்களுடன் நேரடித் தொடர்பு கொண்டவர்கள் ஒலி நாடாவைக் கேட்கும் போது இவ் உண்மை நன்கு புலப்படுகிறது.

மறுபுறம், தமிழ் மொழி யாமறிந்த மொழிகளில் இனிமையானது என்று பழம் பெருமை பேசிக் கொண்டு உறங்கிக் கொண்டிருந்தால் தமிழ் வளரப் போவதில்லை. இவ்வாறு தான் எகிப்து மக்கள் தமது வானளாவ வளர்ந்திருக்கும் பிரமிட்களைப் பற்றியும், கணித, வாணியல், வானவியல் பண்டைய வளர்ச்சி பற்றியும் பேசிக் கொண்டே இருந்திருக்கிறார்கள். கிரேக்க படையெடுப்பில் தாக்கப்பட்டார்கள். இன்று விட்ட இடத்தில் இருந் து தொடர முடியவில்லை. மொழி மாறியது, பண்பாடு மாறியது. அதே பூமியில் மாறுபட்ட வாழ்க்கை நெறி. கிரேக்கர்கள் இங்கு வாழும் இடத் தால் கூட தம் பழம் பெரும் நாகரிகத்தை தொட்டும் தொடாமலும் செல்கி றார்கள். இவர்கள் எமது பண்பாட்டின் பாதுகாப்பிற்கு எடைபோடும் தராசாக இருக்க வேண்டுமென்பதல்ல. தமிழன் என்றொரு இனமுண்டு அவனுக்கு ஓர் தனிக்குணமுண்டு என்ற கோதாவில் நாம் பல இனமக்கள் வாழ்க்கை நெறிகளில் காணும் முன்னேற்ற அம்சங்களை எடுத்து நமக் கான ஓர் பாதையில் வீறுநடை போட வேண்டும். யதார்த்த நிலையில் நாம் இன்றைய சூழலை அணுகி எமது பண்பாட்டை, மொழியை எம் இளைஞர் மத்தியில் வளர்ப்பதற்கான வழி வகைகளை ஏற்படுத்தல் அவசியம். தமிழ் வளர்க்கும் முயற்சியில் மூன்று முக்கிய பங்குகள் இருக் கின்றன. தமிழ்ப் பின்னணியில் பிறந்து வளர்ந்து வந்து இங்கு குடியிருப் பவர்கள். இவர்கள் தொகை இன்றைய புலம்பெயர்ந்த தமிழரில் மிகக் கணிசமான அளவு இருக்கிறது. இவர்கள் தாயகத்தில் இருந்திருந் தால் எவ்வாறு தமிழ் அறிவு வளர்க்கச் சாத்தியக் கூறுகள் இருந்திருக்குமோ அவ்வளவு சாத்திய கூறுகள், நேரம் இங்கு இல்லையென்பது உண்மை தான். ஆனால், மறுபுறம் அவர்கள் திறனை இங்குள்ளவர்களுக்குப் பயன்படும் முறையில் உழைக்க வேண்டும்.

தமிழ் அறிஞர்கள் பலர் இருக்கிறார்கள். எழுத்தாளர், கவிஞர்கள், கலைஞர்கள் இருக்கிறார்கள். இவர்களில் பலர் தாயக மண்ணிலும் தமிழ் நாட்டிலும் தம் திறனை நன்கு புலப்படுத்தி இருக்கிறார்கள். இவர்கள் திறன் நமது இங்குள்ள இளைஞரிடம் தமிழ் பண்பாட்டை, தமிழ் மொழியை வளர்க்க மிகவும் தேவைப்படுகிறது. இவர்கள் ஆலையில்லா ஊரில் இருக்கும் இலுப்பைப்பூ சக்கரை அல்ல. இவர்கள் தரமான படைப்பாளிகள். இவர்கள் தாயக படைப்பாளிகளை விட ஒரு வகையில் இங்கு தமிழ் வளர்க்க மிகவும் பொருத்தமானவர்கள். ஏனெனில் இவர்க ளுக்கு இங்குள்ள சூழல்பற்றி ஓரளவு தெரியும். பிள்ளைகள் வளரும் சூழல் தெரியும். ஒருவகையில் பிள்ளைகள் எதிர் காலம் பற்றி சிந்தித்துச் செயலாற்ற வாய்ப்பும் உண்டு. இவர்கள் தம் திறனை வளர்ப்பதுடன் நின்று விடக்கூடாது. ஒரு இசை ஆசிரியரோ, நாட்டிய ஆசிரியரோ, மற்றும்

எந்த கலைஞனும் எழுத்தாளனும் நம் கலையை இளம் சந்ததியினரிடம் காலம் இடத்திற்கேற்ப புகட்டுவதில் உரிய யுக்திகளைக் கையாண்டு வளர்க்க முன்வர வேண்டும். கல்வித் துறை தத்துவம் ஒன்று கூறுகிறது. "கற்பிக்கப்பட வேண்டிய விடயங்களை கசடறத் தெரிந்தவன் பாதி ஆசிரிய னாகிறான். மிகுதிப்பாதி அவன் தனது மாணக்கனையும் அவன் வாழும் சூழலின் அறிவை பெற்றபின் பெறுகிறான்" என்கிறது.. வித்தக ஆற்றல் திறன் படைத்த கலைஞன் எழுத்தாளன் எங்கள் மக்கள் இச்சூழலில் எவ் வாறு வாழுகிறார்கள் என்று அறிவதில், ஆராய்வதில் போதிய அக்கறை, ஆர்வம், முயற்சி எடுக்க வேண்டும். இல்லையேல் நாம் பிள்ளைகளைத் தவறான முறையில் வழிநடத்தி செல்லும் நிலைக்கு தள்ளப் படுவோம்.

இம்முயற்சிகள் மிகப்பலன் அளிக்கக் கூடியதாக இருக்க வேண்டு மாயின் அதை நவீன அணுகுமுறையில் அமைத்தல் அவசியம். நவீன முறையில் நமது கலை, இலக்கியங்களை முதலில் அணுக வேண்டுமா? அவ்வாறு அணுகுவது சரியா? என்றெல்லாம் தவறான முடிவுக்கு வந்து விடக்கூடாது. எமது கலைகள் அவைக்குரிய இலக்கண விதி முறைகள் வழுவாது அமைய வேண்டும் என்பதில் எந்தவித கருத்து வேறுபாடு இல்லை. உதாரணமாக, பல நூற்றாண்டுகளாகப் பரத நாட்டியக் கலை பரதமுனிவர் இலக்கணத்தைத் தழுவி வளர்ந்து வருகிறது. அதற்கு கனடாவிலோ, ஐரோப்பிய நாடுகளிலோ மாற்றம் வேண்டுமென்பது தவறு. ஆனால், பயிலும் மாணவர் உள்ளக்கோட்பாடுகள், மன எழுச்சித் தேவை கள், உள்ளகிடக்கைகள் தகுந்த முறையில் எடையிடப்பட வேண்டும். எமது சம்பிரதாய முறைகளில் நிச்சயம் மாற்றங்கள் ஏற்படவேண்டும். அனுபவ சாலிகளால் கூட புதிய சூழலின் ஆழத்தையறியாமல் நம்மவர்கள் நிலைப் பாட்டை நன்கு எடையிட்டு விட முடியாது. எமது பிள்ளைகள் சிலமணி நேரம் எமது கலைப்பண்பாட்டுத் துறையில் ஈடுபட்டுக் கொண்டாலும் கூட அவர்கள் முழுமையான வாழ்வின் அம்சங்கள் இச்சில மணி நேரங்களுடன் தொடர்பும் ஈடுபாடும் கொண்டிருக்கிறது. இதில் ஒன்றையொன்று பின்னிப் பிணைந்து இருக்கிறது. முழுமையான நிலைப்பாட்டை அறிந்தால் தான் பிள்ளைகளிடம் நம் கலையுணர்வை, கலைத்திறனை உரிய முறையில் வளர்க்க முடியும். கலைப்பயிற்சியை எப்படியாவது வழங்கிவிட்டால் போதும் என எண்ணிவிடக்கூடாது. கணிசமான கலைத்திறன் கொண்ட மக்கள் எம்மிடம் நிச்சயம் இருக்கிறார்கள். இப்பிள்ளைகள் சரியான திறனை சரியான முறையில் கடைந்தெடுத்து வெளிப்படுத்தப்படல் வேண்டும். அவர்கள் கலைத்திறனை வெளிக்கொணரமுன் அவர்கள் நிலைப்பாட்டை நுண்ணியமுறையில் அறிந்து கொள்ள கனடாவில் பல வசதிகள் இருக் கின்றன. இந்நாட்டில் நவீன கருவிகள் இருக்கின்றன. பிள்ளைகள் நிலைப் பாட்டை அறியும் முறைப்பற்றி பயிற்சிகள் இங்கு வழங்கப்படுகிறது. மக்கள் விருப்பு வெறுப்பு, பல்துறைகளின் திறன்கள் ஆகியன மதிப்பீடு செய்யப்படுகிறது. தொலைபேசி, பத்திரிகை, நேரடித் தொடர்பு சாதனங்கள் மூலம் பல கேள்விகளுக்கு சரியான விடைகள் எடுக்கப்படுகின்றன. இந்த நிலையில் நாம் நம்மைத் தயார் செய்து கொள்கிறோமா? சமைக்கும் கறிக் கு மதியத்திற்கு உப்பும் தூளும் போடுவது போல கலைத்துறையிலும் மக் கள் மதிப்பீட்டை எடுக்கிறோம். எமது மதிய கணிப்பீடு சில சந்தர்ப்பங்

களில் எம்மை தவறான முடிவுக்கு எடுத்து செல்கிறது. சரியான அணுகு முறைகளை நாம் கற்றுக் கொள்ள வேண்டும். அதற்கான ஆர்வம் காட்ட வேண்டப்பட வேண்டும். கலை, எழுத்துப்பணிகளில் பல தியாகங்கள் செய் யப்பட உள்ளன. அவை வேறு எத்தொழில் போல் வருவாயை முக்கிய மாகக் கொண்டுதான் இருக்க வேண்டுமென்பதற்கில்லை.

மறுபுறம் இது வெளிநாடு தானே "ஏதோ இவ்வளவு தூரம் செய்வது போதுமே!" என்று சமாதானம் செய்து விடக்கூடாது. அரைகுறையாக கற்ற தே போதும் என்பது உண்மையில் அக்கலைகளின் தத்துவங்களை விதி முறைகளை நன்கு அறியாதவர்கள். அவ்விதி முறைகளை அறிந்தவர்கள் கூட அவை ஏற்பட்டதின் நோக்கங்களை நன்கு விளங்காதிருக்கவும் கூடும். செய்வன திருந்தச் செய்தல் வேண்டும்.

இளைய சந்ததியினர் தமிழ் கற்பது என்பது வெறும் நடமுறைக்குச் சாத்திய மற்ற பகற்கனவாகி விடக்கூடாது. ஒவ்வொரு தமிழ் பிள்ளைக்கும் தமிழ் பேசத்தெரிவது முதற்படி. தமிழில் மற்றுமொரு தமிழனுடன் தொடர்பு கொள்ளக் கூடியளவுக்கு தமிழ் தெரிய வேண்டும். சாதாரண அன்றாட வாழ்வில் ஏற்படும் தொடர்புகளைத் தமிழில் அதிக சிரமம் இன்றித் தொடர்பு கொள்ளும் நிலைக்கு தமிழ் தெரிந்திருக்க வேண்டும். அந்நிலைக் கு வர, தமிழில் பயிற்சி வேண்டும். சித்திரமும் கைப் பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம். எவ்வளவு தூரம் தமிழை பேசுகிறோமோ அவ்வளவு தூரம் இலகுவாக அமைகிறது. தமிழ் கதைக்க, சிறார்களுக்கு இயற்கையான எத்தனிப்பு வர கடினமாக ஆரம்பத்தில் இருக்கலாம். அதில் தவறில்லை. ஆனால், படிப்படியாக அந்நிலை மாற்றப் படாவிட்டால் அது தவறு. வீட்டு மொழி தமிழ் என்பதில் எந்த வித சந்தேகமும் இருக்கக் கூடாது. அன்றாட பாவனைப் பொருட்கள், தொழில்பாடுகள் பற்றிச் சரளமாகத் தமிழில் பேசப்பட பழகிக் கொள்ள வேண்டும். "இந்த பிள்ளைகளுக்கு என்னப்பா ஒழுங்காகத் தமிழ் தெரியாது. ஏதோ இங்கிலிசிலை அலட்டுதுகள்" என்று விடக் கூடாது. பிள்ளைகள் இயல்பாக தமிழில் கேட்கும் கேள்விகளுக்கு ஆங்கிலத்தில் பதில் கூறுவார்கள். பரவாய் இல்லை. சண்டைக்கு போகவும் கூடாது தமிழில் கேள்விகள் கேட்பதை நிறுத்திவிடவும் கூடாது. நிச்சயம் அவர்கள் தமிழில் கேட்கப்படும் கேள்விகளை உணர்ந்து தான் தமிழில் பதில் கூறுகிறார்கள். படிப்படியாகத் தமிழில் பதில் கூறும் நிலை ஏற்பட்டே தீரும்.

அடுத்த நிலை தமிழில் எழுத வாசிக்க வைக்கும் நிலை. தமிழை ஒரு பாடமாகத் தொடர்ந்து கற்பிக்கவே வேண்டும். வீட்டிலும், பாடசாலைகளி லும் தமிழ் ஒரு பாடமாக கற்பிக்க வேண்டும். தமிழ் கற்பிக்கும் முறையில் மிகக் கவனமாக இருக்க வேண்டும். பிள்ளைகள் தற்போதைய நிலையில் தமிழை இரண்டாம் மொழியாக தான் கற்கிறார்கள் என்பதை உணரவேண் டும். இரண்டாம் மொழியாகக் கற்பதென்பது தமிழை இரண்டாம் தர மொழியாக கற்பதாக எண்ணி விடக்கூடாது. தமிழ் விளங்கிக் கொள்ள, வீட்டில் பேச்சு மொழியாக இருக்கும் போது அது ஒரு வகையில் உதவி செய்யும்.

தமிழ் கற்பிக்கப்படுமிடத்து எந்தச் சூழலை மையமாகக் கொள்வதென் பது அடுத்து எழும் கேள்வி. உதாரணத்திற்கு ஔவைப் பாட்டி பற்றி

கற்பிக்கப்படும் போது நிச்சயம் அவர் வாழ்ந்த சூழலை முன் வைக்கத் தான் வேண்டும். கனேடிய சூழலை மையமாக வைக்க முடியவில்லை யென்பதை விட தெரிந்த நிலையில் இருந்து தெரியாத நிலைக்கு படிப்படியாக கூட்டிச் செல்ல வேண்டும் (From known to unknown) மறுபுறம் புதியசூழலில் நாம் வாழும் முறையையும் இச்சூழலின் பின்னணி யும் இணைக்கப்பட வேண்டும். உண்மையில் மூன்று சூழல்கள் பின்னணி யாக அமைகின்றன.

(1) பிள்ளைகள் வாழும் இன்றைய இந்நாட்டு சூழல்

(11) தாயகத்தில் தமிழர் வாழ்வின் பின்னணி

(111) பண்டை தமிழகத்தின் சூழல் -

இம்மூன்று சூழலும் எமது தமிழ் பிள்ளைகள் வளர்ச்சிக்கு அவசியமா னவை. இதில் ஒன்றைமட்டும் உணர்த்திவிட்டு எஞ்சிய இரண்டையும் புறக் கணித்து விடக்கூடாது.

தாயகம் பற்றிய நிலைப்பாடுகள் பற்றி உணர்த்தல் மிக அவசியம். எமக்கும் தாயகத்திற்கும் இடையே தற்போது இருக்கும் நிலையைத் தற்காலிகமான தாகக் கருதி விடக்கூடாது. எமக்கு தற்போது தாயக தொடர்பின் மகத்துவம் நன்கு புலப்படாமல் இருக்கலாம். மலேசியாவில் கூட குடியேறிய தமிழ் மக்கள் சில காலம் தாம் புதிய சுவர்க்க பூமியில் இருப்பதாகக் கருதித் தம் தாகத்தை சரியான முறையில் எண்ணிப் பார்க்கத் தவறினர். ஆனால் கடந்த இருபது ஆண்டுகளாக மலேசியா, மலே மக்களுக்கு என்ற கோசம் பலமாக அடிபடத் தொடங்க, தாயக உணர்வு தலையெடுக்க ஆரம்பமாயிற்று. மலேசியாவில் கல்வியில் தொழில்வாய்ப்பில் பார பட்சம் காட்டப்பட்டு வருகிறது. தமிழருக்கு மறைமுக தாக்கம் ஏற்பட்டு வருகிறது. மலேசிய முஸ்லிம் மக்கள் குறைந்த புள்ளிக ளுடன் உயர்நிலைக்கல்லூரிகளில் இருக்கிறார்கள். அவர்கள் உயர் பதவிக ளைத் தட்டி கொண்டு போகிறார்கள். இந்நிலை வரக்கூடும் என முன்பு எம் மக்கள் பாரதூரமாக எண்ணி இருக்கவில்லை. சில ஆண்டுகளுக்கு முன் அங்கு சென்றிருந்த போது மலேசியத் தமிழ் மக்கள் மிகவும் கவலைப் பட்டுக் கூறிய கருத்து, தாம் தம் தாயகத்துடன் நெருங்கிய தொடர்பு வைத் திருக்காமை யென்பதாகும்.

கனடாவில் நிலைமை வெளிப்பார்வைக்கு பாரபட்சமற்ற நாடாகத் தெரிகிறது. ஆனால், எமது பிள்ளைகள் மேற்படிப்பு படித்து விட்டு வேலை வாய்ப்புகள் தேடும் போது, பதவி உயர்வுகளை நாடும் போது வேதனை யான ஓர் நிலையைச் சந்திக்க நேரிடும். அந்நேரத்தில் அவர்கள் தம்மை சக கனேடியர்களுடன் குறிப்பாக ஆங்கிலேய கனேடியருடன் ஒப்பிட்டு பார்த்து விட்டு பராபட்சம் காட்டப்படுகிறது என, கண்ணீர் விடுவார்கள். இந்நிலையில் தாயகம் பற்றிய உணர்வு நிச்சயம் தலையெடுக்கும்.

மறுபுறம் போரில் பாதிக்கபட்டிருக்கிறோம். எமது உற்றார் உறவினர் அங்கு இருக்கிறார்கள். அங்கு சொத்துக்கள் உள்ளவர்கள் இங்கு இருக்கிறார்கள். நாம் தாயகத் தொடர்பு கொண்டு இருப்பது அவசியம் ம ட்டுமல்ல கடமையும் கூட. நம் உடன் பிறப்புகள் தம் சுகங்களை, ஆசை- களை அடகுவைத்து போராடுகிறார்கள். அவர்கள் தம்மை பந்த பாசம் இன்பம், பதவி, பெயர், புகழ் எனும் ஆசைகளில் இருந்து தம்மை விடுத

லை செய்திருக்கிறார்கள். தம்மை அவற்றிலிருந்து விடுதலைசெய்து தேசத்தை விடுதலை செய்ய முன்வந்திருக்கிறார்கள். என்றோ ஒரு நாள் தாயகம் விடுதலை பெறும் அப்போது நாமும் தாயகத்திற்குச் செல்லத்தான் போகிறோம்.

எம்மைப்போல உக்ரேனிய மக்கள் நூறு வருடங்களுக்கு முன் வந்து குடியேறினர். அவர்கள் பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் கனடாவில் பிறந்து வளர்ந்து வருகிறார்கள். உக்ரேன் சோவியத்யூனியனிடமிருந்து பிரிந்து தனி நாடாக வந்ததும் பல படித்த உக்ரேனியர், பணம் படைத்தவர்கள் தம் நாட்டிற்கு ஓடிச் சென்று விட்டார்கள். கிழக்கோ மேற்கோ நம் தாயகமே மேலானது. தற்போதைய தாயகம் பற்றிய அக்கறையும் உணர்வும் இக்காலகட்டத்தில் நமது இனத்தின் விடுதலைக்கு மிக அவசியமானது. பண்டு தொட்டு வாழ்ந்து வரும் நம் மண்ணில் இரத்தக்கறை படிந்திருக்கிறது. ஒரு சந்ததியே போர் சூழலில் கருவாகி உருவாகி மலர்ந்து, தவழ்ந்து, வளர்ந்து வருகிறது. இச்சந்ததிக்கு போர் முழக்கமே தாலாட்டுப் பாட்டாக அமைகிறது. வெறிபிடித்த சிறிலங்கா அரசின் நவீன யுத்தக் கருவிகளின் தாக்கமே, அவர்கள் உளவளர்ச்சிக்கு இடையூறாக இருக்கிறது. பதுங்குகுழிக்குள் சரிந்த மண்குவியலே தலையணையாக இருக்கிறது. தீபாவளிப் பட்டாசுகளுக்குப் பதில் ஷெலிகளும் பொம்மர்களும் இலவசமாக குண்டு மழைகளாய்ப் பொழிந்தவண்ணமிருக்கின்றன. புறநானூறு படைத்த மறப்போருக்கு பின் தமிழன் நடத்தும் பெரும் போர் இது. அப்போரில் ஊறித் திளைத்த நம்மவர்கள் பற்றி நாம் அக்கறை கொண்டிருத்தல் அவசியம். எமது சிறார்கள் தம்மை தம் தாயகத்தோடு இணைத்து ஓர் அன்புப் பாலம் அமைக்கத் தமிழ்க்கல்வி உதவவேண்டும். தமிழனுக்கென்று ஒருநாடு உருவாக்கப்பட்டால் தமிழன் தனக்கென ஒரு நாட்டில் தமிழ்மணம் தவழ வாழுவான்.

10147cc

தமிழ் பண்பாடு பற்றி, சிறார்களிடம் கதைத்தபோது தலைகுனியக் கூடிய அனுபவம் ஒன்று கிடைத்தது. சில பிள்ளைகள் பச்சிளம் பாலகராய் இங்கு கொண்டு வரப் பட்டிருக்கிறார்கள். மற்றும் சிலர் இங்கு பிறந்து வளர்கிறார்கள். இவர்களிடம் உங்கள் சொந்த ஊர் எது என்று கேட்டபோது சில பிள்ளைகளுக்கு எதுவுமே தெரியவில்லை. சில பிள்ளைகள் "அரங்கல்" "சாச்சேரி" "கோவில்" என்று குறிப்பிட்டார்கள். எவ்வளவோ கண்டத்தின் மத்தியில் சிந்தித்து மலர்ந்த வார்த்தைகள் இவை. எந்த ஊர்களைக் குறிப்பிடுகிறார்கள் என ஆராய்ந்த போது முறையே ஆவாரங்கால், சாவகச்சேரி, கொக்குவில் என அறிய முடிந்தது. குற்றம் சொல்லி எள்ளி நகையாடுவதல்ல எனது நோக்கம். மற்ற ஊர் பிள்ளைகள் தம் ஊர் பெயரை நன்கு தெரிந்திருக்கிறார்கள் என்பதும் அல்ல. ஊர் பெயரையே தெரியாத ஒரு பரிதாபகரமான நிலைக்கு நம் சிறார்கள் தள்ளப் பட்டிருக்கிறார்கள்.

உதாரணமாக உலகம் பூராக, பரம்பரை பரம்பரையாக பிறந்து வளர்ந்து வரும் பிள்ளைகளுக்கு பெற்றோர் கற்பிக்கும் முக்கிய பாடங்களில் ஒன்று தமது தாயகம் ஆகும். கனடாவில் வாழும் எமது பிள்ளைகளுக்கு கனடா தானே தாயகம். எதற்காகத் தமிழீழம் பற்றிச் சிந்திக்க வைக்க வேண்டும். இது கனடாவின் உப்பை உண்டு வளரும் எமக்கு

இந்நாட்டிற்கு செய்யும் இரண்டகம் என்று எண்ணத் தோன்றலாம். இந்நாட்டின் சட்டதிட்டங்களுக்கு அமைய உழைத்து உயரும் போது நிச்சயம் நாம் இந்நாட்டின் நற்பிரஜைகளாகிறோம். இந்நாட்டின் வளர்ச்சியில் அக்கறை காட்டுகிறோம். மாற்றான் பிள்ளைகள் போல நடப்பதில்லை. வாழும் மண்ணை நேசிப்பது மிக அவசியம். ஆனால், நம் தாயகத்தை பண்டு தொட்டு வாழ்ந்து வந்த புண்ணிய பூமியை நேசிப்பதில் இடுக்கண் களைவது எமது கடமை மட்டுமல்ல உரிமையும் கூட. பல நாடுகளில் இருந்து கனடா வந்து குடியேறியவர்கள் தம் பிறந்த நாட்டினதும் கனடாவினதும் (Dual Citizen) பிரஜைகளாக இருக்கிறார்கள். இவர்கள் இருநாட்டுடனும் இணைந்து வாழவில்லையா? நம் பிள்ளைகள் வெகு சுலபமாக தம் பூர்வீக தாயகத்தை மறந்தால் அவர்கள் ஒரு போதும் ஓர் விருட்சமாய் வளர முடியாது. குருவிச்சைச் செடிகளாகத் தான் கணிக்கப்படுவார்கள். நாம் எங்கு தான் தற்காலிகமாகவோ அன்றி நிரந்தரமாகவோ வாழ முடிவு செய்தாலும் எமது தாயகத்தை உயிர் உள்ளவரை அக்கறையோடு தொடர்பு கொண்டு நேசிக்க வேண்டும். எமது தாயகம் குறிப்பாக அவல நிலையில் இருக்கும் போது "நான் தப்பினேன் பிழைத்தேன் போதும்" என்று இருந்து விடக்கூடாது. ஒரு காலத்தில் நம் தாயகம் விடுதலை பெற்று தமிழ் மணம் கமழ பொங்கி வளரும் போது புலம் பெயர்ந்த மக்கள் அங்கு சென்று குடியிருக்காவிட்டாலும் கூட நமது புனித பூமியை தரிசித்து அதன் வளர்ச்சி பற்றி பெருமையும் இறுமாப்பும் கொள்ளலாம். இத்தகைய உணர்வு சிலருக்கு பகற்கனவாக, நப்பாசையாகத் தோன்றலாம். ஆனால், சுதந்திரம் வேண்டி நின்று வெற்றி பெற்ற பல நாட்டுப் பிரஜைகளை அவர்கள் சுதந்திரப் போராட்டம் நலிந்த நிலையில் சந்தித்திருக்கிறேன். அவர்களில் என்னால் மறக்க முடியாதவர்கள் எறிற்றியர்கள். எதியோப்பிய நாட்டின் ஒரு பகுதியாக எறிற்றிய இருந்தது. எதியோப்பிய நாடு ஆபிரிக்க நாடுகளிலேயே முற்றாக அந்நிய ஆட்சிக்கு உட்படாத நாடு. மூவாயிரம் ஆண்டுகள் பழமை உடையது மட்டுமன்றி தனது சொந்த எழுத்துக்களை கொண்ட ஒரே ஆபிரிக்க மொழியாக அவர்கள் மொழி திகழ்கிறது. அங்குள்ள எறிற்றியர்கள் 1970ல் தீவிரமாக சுதந்திரப் போராட்டம் ஒன்றை நடத்திக் கொண்டிருந்தனர். அவர்கள் போராட்டம் மிகவும் கட்டுப்பாடான முறையில் நடை பெற்றுக் கொண்டிருந்தது. ஆண்களுக்குச் சரி நிகராகப் பெண்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். எறிற்றியாவின் நிலை கிட்டத்தட்ட இலங்கைத்தீவில் தமிழர் நிலைக்கு ஒப்பானது. எறிற்றிய மாநிலம் எதியோப்பிய நாட்டின் வட கிழக்குப் பகுதியாக இணக்கப்பட்டிருந்தது. எரிற்றியர் தமிழர்களைப் போல கல்வியில் குறிப்பாக கணிதத் துறையில் மிகவும் வல்லவர்கள். இவர்கள் எதியோப்பியா பூராக முக்கிய அரச பதவிகளில் இருந்து இந்நாட்டின் நிர்வாக யந்திரத்தை இயக்கிக் கொண்டிருந்தனர். ஆனால் பெரும்பான்மையினரான அமாரிக் மக்கள் ஆட்சி அதிகாரத்தை தம் கையில் வைத்துக் கொண்டு எறிற்றிய மக்களை நசுக்கிக் கொண்டு இருந்தார்கள். எறிற்றியர்கள் ஆயுதம் ஏந்திப் போரிட்டார்கள். இறுதியில் அவர்கள் தமது நாட்டு இறமையை மீளப் பெற்றார்கள்.

இந்த எறிற்றியர்களின் வெற்றிக்கு மூல காரணங்களில் ஒன்றாக

இருந்தது மொழிப்பற்று. எறிற்றியர்கள் எங்கு சென்றிருந்தாலும் தம் சிறாருக்குத் தம் மொழியை பெருமையுடன் கற்பித்து வருகிறார்கள். ஒரு எறிற்றியன் இன்னொரு எறிற்றியனைக் கண்டதும் முதலில் தன் சொந்த மொழியில் தான் பேசுவான். தம் மொழி அறியாதவன் மத்தியில் இருக்கும் போது மற்றவர்களிடம் மன்னிப்புக் கோரி விட்டு தம் மொழியில் தான் கதைக்கிறார்கள். எறிற்றியர்கள் மதத்தால் கிறீஸ்தவர்கள், இஸ்லாமியர்கள் என இருந்த போதும் மொழியால் இணைக்கப்பட்டிருக்கிறார்கள். எந்த எறிற்றிய சிறுவன் கூட எந்த நிந்தனையும் ஏற்றுக் கொள்வான். ஆனால் தனது மொழியை நிந்தித்தால் வீறிட்டு எழுந்து விடுவான்.

ஒருமுறை நான் அதிபராகக் கடமையாற்றிய கல்லூரிக்கு யந்திரங்கள் சிலவற்றை அமைத்து தர ஒரு பொலந்தை சேர்ந்த தொழில் நுட்ப வல்லுனர் வந்திருந்தார். அவர் தனது வேலையை முடிக்கும் வரை என்னுடன் தங்கி இருந்தார். அவர் சில நாட்களுக்குப் பின் ஓர் நாள் இரவு போசனம் அருந்திக் கொண்டிருக்கும் போது என்னுடன் இருந்த வங்கியொன்றின் மனேஜர் ஒருவரான எறிற்றியரும் சேர்ந்து இராப்போசனம் அருந்திக் கொண்டிருந்தார். அவ்வேளை இன்னொரு எறிற்றிய நண்பன் தனது மொழியில் மாலைவணக்கம் செய்ததினை கண்ட இப்போலந்து காரருக்கு தெரிந்தது எனது நண்பன் எறிற்றியன் என்று. இராப்போசனம் முடித்து வீடு சென்ற போது தனது கதை யொன்றைக் கூறினார். அவரது பொழுது போக்கு உலகின் பல நாடுகளுக்கு சென்று பல கட்சிகள், முக்கிய சம்பவங்களைப் படம் பிடித்தலாகும். துணிவுமிக்க இவர் எறிற்றிய பகுதியில் யுத்தமுனையில் படங்கள் எடுத்து கொண்டிருக்கும் போராளிகளால் கைது செய்யப்பட்டு, சுரங்கப் பாதைகள் மூலம் தமது காரியாலத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டார். அவரைப் பல கேள்விகள் கேட்டார்கள். எடுக்கப்பட்ட பல நூற்றுக் கணக்கான படங்களைப் பறித்தனர். அவர்கள் சில நாட்களுக்கு பின் தடுப்புகாவலில் வைத்திருந்தார்கள். அவர் அவர்களோடு நான்கு மாதங்களுக்கு மேல் தங்கி இருந்திருக்கிறார். அவர்கள் ஒழுக்கம், கட்டுப் பாடுகளை வியந்துரைத்தார். போர்களத்தில் எதிரியைக் கொடூரமாகக் கொன்று குவித்தவர்கள் சாதாரண நேரங்களில் பஞ்சுபோல் மென்மை யுள்ளம் படைத்தவர்களாக இருக்கிறார்கள் என்பதை அவரால் நம்பமுடிய வில்லை. இவரிடம் போராளிகளுக்கு ஓரளவு நம்பிக்கை ஏற்பட்டது. போராளிகள் இவரை உளவாளியாகக் கருதித்தான் கைது செய்தார்கள் என் பது பின்னர் இவருக்கு தெரியவந்தது. அவர் எறிற்றிய போராளிகளிடமும் மக்களிடமும் கற்றுக் கொண்ட ஓர் நடைமுறை உண்மை ஒரு இனம் தனது தாய் மொழியையும் தன் தாய் மண்ணையும் பாதுக்காக்காதவரை அந்த இனம் தனது சவக்குழியைத் தோண்டிக் கொண்டே இருக்கிறது என்பதா கும். எவ்வளவு தூரம் தமக்குள் கருத்து வேறு பாடுகள் கொண்டிருப் பார்கள். ஒருவரை யொருவர் தூற்றுவார்கள், சண்டை பிடிப்பார்கள் ஆனால், ஒரு எறிற்றியன் அல்லாதவனிடத்து ஒருங்கிணைந்து தம் மொழி யையும் தம் இனத்தையும் இறுகப் பிடித்துக் கொண்டு விடுகிறார்கள். எதியோப்பிய அரசு எறிற்றிய சராசரி மனிதர்கள் பலரை மண், பொன், பெண் ஆசை காட்டி எறிற்றிய விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக எட் டப்பராக இயங்க முயன்று பார்த்தனர். முடியவில்லை. எனது அருமை நண்

பர் அந்த வங்கி முகாமையாளராக இருந்தவர் தமது தாயகப் போராட்டத் திற்கு தன் சேவை தேவைப்பட்டதும் வீடு வாசல் அத்தனையையும் விட்டு இரவோடு இரவாக ஓடி விட்டார். இவர்கள் மொழிப்பற்றும், மொழி முதன் மையும் நம்மிடம் இருக்கிறதா? நம் பிள்ளைகளுக்கு அப்பற்றை ஊட்டமுன் நாம் பற்றுள்ளவர்களாக இருக்க வேண்டாமா? இன்றைய உலகில் இனப் பற்றும் மொழிப்பற்றும் மிக்க மக்கள் உலகின் பல பாகங்களில் இருக்கி றார்கள். அவர்கள் முன் மாதிரியே எமது சிறார்களுக்கு எடுத்துக் காட்டி உணர வைப்போமேயானால் அவர்கள் மத்தியில் தமிழ்ப்பற்று தானாகவே வளரும். எனவே, தமிழ் கற்பிக்கும் போது அதற்கு ஓர் நோக்கு, குறிக் கோள் இருக்க வேண்டும். காலம் இடம் தேவைகளுக் கேற்ப அந்த நோக் கும் குறிக் கோள்களும் மாறுகின்றன என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

நம் ஆறுமுக நாவலர் வெள்ளையர்களின் ஆங்கில மொழித் திணிப் பை ஆடுகின்ற மாட்டை ஆடிக் கறப்பது போல ஆங்கிலேயர் சூழலுக் கேற்க நின்று தமிழ் வளர்த்திருக்கிறார். தமிழ் உலகில் ஓர் மறுமலர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறார். சுப்பிரமணிய பாரதியார் ஆங்கிலேயர் அடக்கு முறை ஆட்சியின் கீழ் பாஞ்சாலி சபதம் எனும் தலைப்பில் சுதந்திரப் போராட்டத்திற்கு நெய் ஊற்றி இருக்கிறார்.

நாம் எமது பிள்ளைகளுக்கு தமிழ் கற்பிக்குமிடத்து என்ன குறிக்கோள் களை கொண்டிருக்கிறோம் என தெரிவு ஏற்படுத்தப்பட வேண்டும். அக்குறிக்கோள்கள் பலவாக இருக்கலாம். அவற்றில் ஒன்றாக அமையக் கூடியது உலகமெங்கும் தமிழ் கல்லாதவர்களிடம் தமிழைப் பரப்புவது. இதனைச் செய்ய எல்லாத் தமிழரும் முன்வரவேண்டுமென்பதல்ல, அது சாத்திய மாகக் கூடிய தொன்றுமல்ல. நமது நாட்டில் இருந்து பாரெங்கிலும் பைந்தமிழைப் பரப்ப இருக்கும் வாய்ப்புகளை விட இங்கு வாய்ப்புகள், வசதிகள் சாதகமாகவும் அதிகமாகவும் உள்ளன. தமிழ் மொழியில் மொழி யியல் ஆராய்ச்சிகள் பல மிண்கணனி வசதிகளோடு செய்யக் கூடியதாக இருக்கிறது. தமிழை ஏனைய தொன்மை வாய்ந்த மொழிகளோடு ஒப்பிட்டு ஆராய பல நவீன வசதிகள் இருக்கின்றன. தமிழகத்தில், இங்கிலாந்தில் ஏற்கனவே இவ்வாராட்சிகள் நடைபெற்று கொண்டிருந்தாலும் கூட புதிய முறையில் இவ்வாராட்சிகள் நடத்தல் படுதல் அவசியம் என்பதை மொழியி யல் ஆராய்ச்சியாளர்கள் உணர்ந்திருக்கிறார்கள். எம்மிடம் நிச்சயம் அத் திறனும் தகுதியும் உள்ள சிறார்கள் இருக்கிறார்கள். அவர்கள் திறன் நெல் லுக்கு இறையாது புல்லுக்கு இறைத்த நீராக இருப்பதா? தமிழ் மொழியின் நவீன துறைகள் நன்கு வளர்க்கப்படுவது நம் கடனல்லவா? புத்தம் புதுக்கலைகள் பல தமிழில் வளர்க்கப்பட வேண்டும். நாடகம், சிறுகதை, நாவல், விமர்சனம், மொழியியல் எனப்பல துறைகளில் மேலைநாட்டு இலக்கியங்கள் நன்கு வளர்ந்திருக்கின்றன. ருசிய மொழியில் உலகின் வேறு எந்த மொழிகளிலும் இல்லாதளவு பல இலக்கியங்கள் வளர்ந்திருக் கின்றன. உக்ரேனிய மலைச் சாரலில் இந்நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் எழுத்து வடிவமற்ற பேச்சு வழக்கில் இருந்த மொழி கூட வளர்ந்த மொழிக ளுக்கு சரிசமமாக இருக்கக் கூடிய நிலைக்கு வளர்க்க பட்டிருக்கிறது. தமிழும் ஆங்கிலமும் அறிந்து வளரும் ஓர் இளைஞர் சமுதாயத்தில் தமிழை உலகளாவிய ரீதியில் வளர்ப்பது மிகப் பொருத்தமானது. உல-

கரங்கில் நிமிர்ந்து நிற்க எந்தவகையிலும் தகுதிபடைத்த தமிழ் மொழியை உரிய இடத்தில் வைக்கும் பணியே நமது கடமையாகும். இப்பணியை, தமிழ் சூழல் அல்லாத இந்நாடுகளில் திறன்படைத்த நம்மவர்கள் தொடர்வதில் ஏற்படும் இடைஞ்சல்களைப் பற்றிச் சிந்திக்கிறார்கள். அதில் நியாயமில்லாமல் இல்லை. ஆனால், சாதகமான பல வசதிகளை உற்று நோக்கி காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ள முனைவது பொருத்தமானதேயாகும்.

## தேங்கிக் கிடக்க வேண்டிய தேசப்பற்று

"பெற்ற தாயும் பிறந்த பொன் நாடும் நற்றவ வானினும் நனி சிறந்தனவே" ஒரு தேசத்தின் முதுகெலும்பும் இருதயமும் அத்தேசத்து மக்களும் மண்ணும் ஆகும். மக்கள் பலம் மண் வளத்தை பெருக்க, மண்வளம் மக்கள் பலத்தை பெருக்க அந்நாட்டு மக்கள் சீரும் சிறப்புறடனும், கோன்முறை அரசு செய்து, நான் மறை அறங்கள் ஓங்க நல்வாழ்வு வாழ முடியும் என்பதை, தமிழன் தன் வரலாற்றுக் காலங்களில் நன்கு நிரூபித்திருக்கிறான். தமிழன் தனக்கென சேர அரசு, சோழ அரசு, பாண்டிய அரசு, யாழ்ப்பாண அரசு எனப்பல அரசுகள் அமைத்து பண்பட்ட இனமாக, நாகரீகம் படைத்த மனிதனாக, நாநிலம் போற்ற வையத்து வாழ் வாழ்ந்து வந்திருக்கிறான். அவன் மத்திய கிழக்கில், பாகிஸ்தானில், மற்றும் இந்து சமுத்திரத்தில் தாழ்ந்திருக்கும் நிலப்பரப்பில் பல அரசுகளை அமைத்திருந்திருக்கிறான் என்பது வரலாறு காட்டும் உண்மைகள். உலகின் மூத்த குடி தமிழ் குடி. தமிழினம் முப்பதினாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அரசமைத்து வாழ்ந்து வந்திருக்கிறது. பூகோளத்தின் தென்பகுதியில் ஓர் பெரிய நிலப்பரப்பொன்று இருந்தது. அந்த நிலப்பரப்பு தென் ஆசிய தீவுகள், ஆசியாவின் தென்பகுதி நிலம், அவுஸ்திரேலிய போன்ற இடங்களையும் இன்று பசுபிக், இந்து சமுத்திரத்தின் சிலபகுதிகளும் இந்நிலப்பரப்பில் இணைந்து ஓர் கண்டமாக இருந்தது. இதனை, புவியியலாளர் கொண்டு வானாலான்ட் என்கிறார்கள். இதனைத் தமிழர்கள் குமரிக்கண்டம் என்கிறார்கள். இக்கண்டம் தென்னாபிரிக்காவையும் தென்னமெரிக்காவையும் சுற்றி இருந்திருக்கிறது. தற்போதைய இமயமலைப் பிரதேசம் கடலாகவும் இந்து சமுத்திரத்தில் ஓர் பெரிய மலையும் இருந்ததாகக் கூறப்படுகிறது. அன்று இந்து நாடு, கங்கை நாடு, இமயநாடு எனப் பெரும் தமிழ் அரசுகள் இருந்திருக்கிறது. தெற்கே துண்டீர நாடு, எருமை நாடு, குறும்பர் நாடு, கொங்கர் நாடு, பழவர் நாடு, சோழ நாடு, சேரநாடு, பாண்டிய நாடு எனப் பல அரசுகள் இருந்திருக்கின்றன. மேலும் தெற்கே செல்லுமிடத்து குமரியாற்றின் கரையில் இருந்து தென் துருவத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் இருந்த தமிழ் அரசுகள் குமரி நாடு, பெருவளநாடு, ஒளி நாடு என்று மூபெரும் பிரிவுகளாக இருந்திருக்கின்றன. இவ்வாறாக தமிழன் பல நாடுகளில் தமிழரசுகள் அமைத்து தமிழ் மணம் கமழ வாழ்ந்து வந்திருக்கிறான். தமிழன் வாழ்ந்தான் என்பதை விட தமிழன் தனக்கென ஒரு நாகரீகம் படைத்திருந்திருக்கிறான், வையகத்து வாழ் வாங்கு வாழ்ந்திருக்கிறான், விஞ்ஞானமும் மெய்ஞானமும் கலந்த இல்ல

றத்தில் நல்லறம் செய்து வந்திருக்கிறான் என்பது பொருத்தமாகும். தமிழனின் வளர்ச்சிக்கு, உயர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தது அவன் நாட்டுப்பற்று. தன் தாய் மண்ணைக் காக்க, தன் மைந்தனை களத்தே அனுப்பி, தான் களத்தே சென்று போராடத் தள்ளாடும் வயதில் உடல் இடம் தரவில்லை யெனக் கதறினாள் ஓர் தமிழ் தாய். ஆனால் களத்தே மரணமடைந்த தன் மகன் புறமுதுகு காட்டியோடினான் என்று கேள்விப் பட்டு அவனுக்கு பாலூட்டிய மார்பை அறுத் தெறிய முனைந்தாள். தன் மகன் போரில் எதிரியை நேருக்கு நேர் நின்று போர் புரிந்து வீரமரணம் அடைந்தான் என்பதைக் கேள்விப் பட்டு அவனை பெற்ற அன்று பெற்ற மகிழ்ச்சியை விட அவன் தியாகத்தைப் பார்த்து, பெரு மகிழ்ச்சியுற்றாள்.. தாய் மண்ணைத் தன் உயிரிலும் மேலாக நேசித்தவன் தமிழன். தமிழனுக்கு நன்கு தெரிந்திருந்தது கையூண்ட இடமில்லாமல் கரணம் போட முடியாது என்பது. தமிழன், தமிழை உயர்ந்த மொழியாக்கினான் என்றால் அதற்கு அவன் தளமாக தமிழ் அரசுகளை அமைத்திருக்கிறான். அமைத்த அரசை உருக்குலையாது பேணிக் காத்திருக்கிறான். இன்னல்கள் மத்தியில் தன் அரசை வளர்த்து வந்திருக்கிறான். இன்றைய உலகில் நாகரீகம் படைத்த பல இனங்கள் அன்று இருட்டில் மங்கிக் கிடந்திருந்தன. அன்று நாகரீகம் படைத்த பல இனங்கள் அதே மண்ணில் தமது அரசைத் தொடர்ந்தும் நிலைநாட்டியும் தம் பண்டைய பண்பாட்டை மாற்றானிடம் இழந்து, அடகு வைத்து தன் சுய கௌரவத்தை இழந்தும் இருக்கிறார்கள். பல நாகரீகங்கள் இடம் தெரியாது, விலாசமற்றுப் போய் விட்டன. அன்று கிரேக்கர்கள் மாபெரும் நாகரீகம் படைத்திருந்தார்கள். அவர்கள் ஆங்கிலேயரைக் காட்டுமிராண்டிகள் என்று எள்ளி நகையாடினார்கள். இன்று ஆங்கிலேயர்கள் கிரேக்கரைப் பார்த்து எள்ளி நகையாடுகிறார்கள்.

ஒரு இனம் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக, தன் தனித்துவத்தைப் பேணிக் காத்து வந்திருக்கிறது என்றால் அந்த இனத்தின் தனித்துவத்தை, இடைவிடா முயற்சியை, தேசமொழிப்பற்றைப் பாராட்டாமல் இருக்க முடியாது. அந்த இனத்தில் உதித்தவர்கள் நாம் என்று உணரும் போது தமிழன் என்று சொல்லி, தலை நிமிர்ந்து நிற்பதில் நியாயம் இருக்கத்தான் செய்கிறது

# உக்ரேனியரின் உதாரணம்

முன்னாள் சோவியத் யூனியனின் கோதுமைக் களஞ்சியமாய், உண வின் உறைவிடமாய் உண்டி கொடுத்து உயிர் காத்து வந்த ஒரு பிரதேச அரசு தான் உக்கிரேன். இன்று தனிப்பட்ட சுதந்திர நாடாய் பூத்துக் குலுங் குகிறது. உக்கிரேனிய மக்கள் பலநூறு ஆண்டுகள் பாரின் பல பகுதிகளில் பண்போடு வாழ்ந்து வந்த போதும், இன்று தாய் நாட்டை அரவணைக்க ஆவலோடு துடிக்கிறார்கள், அள்ளிக் கொடுக்கிறார்கள். இதோ கனேடிய உக்கிரேனிய மக்கள் தம் செலவில் தமக்கென தூதுவராலயத்தைத் தொடக்கி நடத்தி வருகிறார்கள்.

இவர்கள் வரலாற்று படகில் திசை தெரியாது நடுக்கடலில் தத்தளித்து அந்நியரால் அடக்கி ஆளப்பட்டு தில்லு முல்லுகள் மத்தியில் இரத்த கண்ணீர் வடித்துக் கலங்கியவர்கள்.

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தில் உதித்தவன் தமிழன் என்று நாம் பெருமைப்படுவது போல நாற்பதினாயிரம் ஆண்டுகள் வாழ்ந்த வர லாற்று எச்சம் கொண்டிருப்பவர்கள் இந்த உக்கிரேனியர்கள். மழையைக் காணாத பசும்புற் தரைகளில் வாழ்ந்து வந்தவர்கள் இவர்கள். இவர்களை அந்நிய நாடுகளும், வல்லரசுகளும் ஆண்டு கடுதாசிக் கோட்டை போல் ஆக்கினர். வேதனையில் வெந்த உக்கிரேனிய மக்கள் அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, பிரேசில், பிரான்ஸ், ஜேர்மனி, இங்கிலாந்து, ஆர்ஜன்டி னா, இத்தாலி எனப் பல நாடுகளுக்கு, திரைகடல் ஓடி உயிர் வாழச் சென்றனர்.

சென்ற நூற்றாண்டின் இறுதியில் கனேடிய கதவின் ஊடாக நுழைந்து வந்தவர்கள் வினிபெக், அல்பேட்டா, சாஸ்கச்சுவான், ஒன்ராறியோ எனப் பல மாகாணங்களில் சென்று குடியேறினர். ஏர் முனைக்கு நேர் இங்கு ஏது மேயில்லையென்று கிராமப் புறங்களில் உழுது உற்பத்தி பெருக்கி வாழ் வை உறுதிப் படுத்தினர். உலக மகா யுத்தமொன்றில் தாய் நாட்டை தன்ன கத்தே அடக்கிக் கொண்ட ரஷ்யநாடு ஆங்கில நாட்டு நிலைக்கு முரணாய் நிற்க உக்ரேனிய மக்கள் ஏக்கத்தில் தளர்ந்தனர். சிலர் தம் இன மணம் கமழும் பெயர்களைத் தற்காலிகமாக அடகு வைத்தனர்.

இத்தனைக்கும் மத்தியில் உக்ரேனிய கலாச்சாரத்தை தாய்பாலோடு தனயருக்கு கொடுத்து வந்தனர். உக்கிரேனிய மொழியைப் பேணிக் காக்க முனைந்தனர். அல்பேற்றாவில் ஆங்கிலத்தோடு உக்கிரேனிய மொழி கற்கி றார்கள் . பல மாகாணங்களில் பல்கலைக் கழக நிலையில் தமது மொழி வளர்ச்சிக் கல்வித் திட்டங்களை நடைமுறைக்குக் கொண்டு வந்திருக் கிறார்கள்.

கனடாவில் பிரெஞ்சுக்கும் ஆங்கிலத்திற்கும் தனியிடம் இருப்பது போல தமது மொழிக்கும் ஒரு் வித அந்தஸ்து தந்தாலென்ன என்று எண் ணவும் தலைப்பட்டு விட்டார்கள். கனடாவில் இன்று சுமார் ஒரு மில்லியன் உக்ரேனியர்கள் இருக்கின்றார்கள்.

இவர்கள் சங்கம் அமைத்து, தம் பாரம்பரிய பண்பை வளர்த்து வந்த தில் உயர்ந்தவர்கள். உக்கிரேனியர் தம் பலநோக்குச் சங்கத்தின் ஊடாய் தம் சமூகத்தை உயர்த்த முனைந்து வருகிறார்கள். உக்கிரேனிய நாட்டின்

புனர்நிர்மாண வாழ்விற்குப் பல வழிகளில் உதவி புரிகிறார்கள். கனடா வில் கிராமப் புறங்களில் ஆரம்பித்த உக்கிரேனியர்கள் இன்று நகர்ப்புறங்க ளில் படையெடுத்து அரச பதவிகள் பல பெற்று தாம் வாழும் நாட்டையும், தன் சமூகத்தையும் உயர்த்துகிறார்கள். அமைச்சர்களாய், பாராளுமன்ற உறுப்பினர்களாய், நகர பிதாக்களாய் முதுசபை உறுப்பினர்களாய் இருந்து உழைத்து வருகிறார்கள். நீர் உயர நெல் உயரும் என்பது போல, தான் உயர்ந்தால் தன் சமுதாயம் உயரும் என்று உறங்காமல் தம் சமுதாயத் தை உயர்த்த, தனி முயற்சிகள் சில எடுக்கிறார்கள். கனடிய மண்ணில் இரு கலாச்சாரப் பாரம்பரிய விருட்சங்கள் மட்டும் இருந்தால் போதா தெனப் பல்கலாச்சார மரங்களும், செடிகளும் வானளாவ வளர வேண்டும் என்று வாதாடியவர்கள். 1987ல் பல்கலாச்சார உரிமை வழங்கும் சட்டப் பிரமாணம் தலை தூக்க வைத்தவர்களில் இவர்களும் ஒருவர். அவர்கள் ஆத்ம வழிபாட்டு ஆலயங்கள்கூட தம்முறையில் அமைக்கப்பட்டிருக்கின் றன. அவை ஆங்காங்கு தனித்திருந்து தனியழகு தருகின்றன.

இன்று பல அறிஞர்கள், கலைஞர்கள் தத்தம் மொழியில் பாண்டித்தி யம் பெற்றுப் பல நாடுகளில் திகழ்கிறார்கள். கிரியா கிர்லாக் போன்ற உலக உக்ரேனிய காங்கிரசைச் சேர்ந்த எழுத்தாளர் வட அமெரிக்காவில் கொடி கட்டிப் பறக்கிறார். வில்லியம் குரிலாக் போன்றவ ஓவியர்கள் தம் கலைச்செல்வத்தை இந்நாட்டில் படைத்துப் பலரை வியப்படையச் செய்தி ருக்கிறார்கள்.

இங்கு இன்றைய உக்ரேனிய இளம் சந்ததிகள் நாலாம், ஐந்தாம் தலைமுறையைச் சேர்ந்தவர்கள். ஆனால், பெற்றோரின் செல்வாக்கால் தம் தாய் நாடாகக் கனடாவைக் கண்ட போதும் தம் பரம்பரையின் ஆணி வேர் உக்ரேயின் நாட்டிலிருந்து வருகிறதென அறிந்து வைத்திருக்கிறார்கள்.

பல கல்விமான்கள், கட்டிடக் கலைஞர்கள், விஞ்ஞானிகள், வாணிபச் செல்வங்கள் தம் நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டுமென்று தம் பாரம்பரிய நாட்டிற்குச் செல்கிறார்கள். இந்நாட்டில் பொன்னும் மணியும் பூத்துக் குலுங் கினாலும் கூடத் தம் தாய் நாட்டின் தரையில் தனிச் சுகம் உண்டெனக் கங்கணம் கட்டிச் செல்கிறார்கள். வரலாற்றில் அவர்கள் கண்ட உண்மை என்றோ ஒரு நாள் தம் தாய் நாட்டின் தனிக் கதவுகள் திறக்கப்பட்டு மாற் றான் மாசு படைத்த ஆக்கிரமிப்பிற்குச் சாவு மணியடித்துச் செல்லத்தான் போகிறோம் என்ற உணர்வு கல்லில் எழுதப்பட்ட காவியங்கள். புது நாட் டின் மோகங்கள் அவர்கள் கண்களை ஆரம்பத்தில் இருளடிக்க முனைந்தி ருக்கலாம். சுகபோகங்கள் சுவையாகத் தோன்றலாம். ஆனால், அடிமட்டத் தில் தாயைக் காணாத கன்றுபோல் மனம் துடிக்கத்தான் செய்யும். அத னாற்தான் இன்று அவர்கள் உக்கிரேனைக் கட்டியெழுப்பத் துடிக்கிறார்கள். உக்ரேனிய நாட்டில் தொடர்ந்து வாழ்ந்து வந்தவர்கள் பட்ட கஷ்டங்கள் ஆயிரமாயிரம். அந்நியராட்சி ஒருபுறமிருக்க ரஷ்யப் பொதுவுடமையாளர் கள் ஏகாதிபத்திய தாக்கம் மிகக் கடினமாய் இருந்தது. ரஷ்யர்கள் உக்ரே னிய மொழியை வளர்ப்பது போல் நடித்து நஞ்சூட்டிக் கொலை செய்ய முனைந்தார்கள். தரமான செய்திகள், புத்தம்புதுக் கண்டுபிடிப்புகள், விண் வெளி ஆராய்ச்சிகள் போன்றவற்றை ரஷ்ய மொழியில் வெளியிட்டனர். முன்னணிக்குதவாத செய்திகள், சுவையற்ற ஆக்கங்கள் பலவற்றை உக்ரே

னிய மொழியில் பிரசுரித்து மொழி ஆர்வத்தைக் குன்ற வைத்தனர். போதாக்குறைக்கு உக்ரேனிய கல்விமான்களை, உத்தியோகத்தர்கள் பலரைத் தேசிய ஒருமைப்பாடு என்ற ஒரு குடைக்கீழ் ரஷ்ய நாட்டிற்கு மாற்றம் செய்தனர். அங்கு அவர்கட்கு ரஷ்ய மொழியைத் திணித்தனர். உக்ரேனுக்கு அனுப்பப்பட்ட ஊழியர்களை உக்ரேனிய மொழியைக் கற்க, பேச, எழுத ஊக்குவிக்கத் தவறினர். ரஷ்ய மொழி தெரியாதவர்கள் மத்தியில் தாழ்வுணர்வை ஏற்படுத்தினர்.

கோழி மேய்த்தாலும் கோறணமேந்தில் மேய்க்க வேண்டுமென்ற ஆசை அடிமைத் தனத்தில் முடிந்ததை ஓர் பாடமாய்க் கருதினர். சொந்தக் காலில் நிற்கத் தவறியவர்கள் நம் நாட்டில் இன்றும் அரசின் அரவணைப்பில் ஆர்வம் காட்டுபவர்கள் கற்க வேண்டிய பாடமிது. வெண்காயமும், மிளகாயும், புகையிலையும் பயிரிட்டு கைத்தொழில் பல புரிந்து தம் காலில் நிற்க நினைப்பவர்களை எள்ளி நகையாடலாமா? பதில், ஊக்குவித்து உற்பத்தியைக் கூட்டவேண்டுமல்லவா? உக்ரேனிய மக்களிடமிருந்து நாம் கற்கும் பாடங்களில் இதுவுமொன்று.

இத்தனை வளமான கலாச்சாரப் பின்னணியிருந்தும் கூட அவர்கள் மத்தியில் இளைய சந்ததி பற்றிக் கவலையில்லாமல் இல்லை. இளைய சந்ததி கனடியக் கலாச்சாரத்தின் ஈர்ப்பின் விளைவாகத் தாய் மொழிக்குப் பதில் ஆங்கிலம் அவர்களால் சாதாரணமாகப் பேசப்படுகிறது. கலை, கலாச்சாரம் பெருமளவு வருடத்திற்கொருமுறை கொண்டாடப்படும் விழாக்களோடு தள்ளி வைக்கப்படக்கூடாதெனக் கருதுகிறார்கள்.

உக்ரேனிய மக்கள் நூறு ஆண்டுகளாய் இடைவிடாது, மனம் சோராது, உள்ளத்துறுதியோடு பேணிக்காக்கும் தம் பாரம்பரியம் சோதனையும் வேதனையும் கொண்ட எதிர் நீச்சல் என்றே கூறலாம்.

எம்மைப் பொறுத்தவரை முதற் பரம்பரையினரே தம் பாரம் பரியத்தைப் பேணுவதில் பேரக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை.. இன்னும் இன்னும் எத்தனையோ பரம்பரைகள் எதிர் நீச்சல் போடக் கடமைப்பட்டிருக்கின்றன. உக்ரேனியர்கள் போலன்றித் தாயகம் மாற்றான் கையில் தவிக்கிறது. தாயகம் தனிச் சுதந்திரம் பெறவேண்டும். அதனைக் கட்டியெழுப்பிக் கனமான நாடாகத் திகழப் பெரும் பணி பல புரிய வேண்டும். அடுத்ததொரு சந்ததி மலர இருக்கிறது. இச் சந்ததிக்குப் பாரம் பரியத்தின் தாகத்தை ஏற்படுத்த வேண்டும். இன்னல்கள் மத்தியில் சமுதாயம் இனிது வாழத்துடிக்கும் இளம் சந்ததியினருக்குத் தமது பண்பாட்டு முத்திரை குத்திவிட விரும்புகிறார்கள்.

திக்கெட்டிலும் தேனும் பாலும் தினையுமாக உண்டு உறங்கினாலும் கூட தனக்கென்றொரு தாயகம் இல்லாதபோது அநாதையாய் அலையும் நிலை இருக்கத்தான் செய்யுமென்ற உண்மையை உக்கிரேனியரிடமிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டும்.

# தமிழ் பிரதேசங்களில் குடியேற்றதிட்டங்கள்

"வெள்ளையர்கள், கையில் புத்தகத்தைத் தந்து கண்ணை மூடிக் கொண்டு கும்பிடும்படி கூறினார்கள். கண்ணை மூடிக் கும்பிட்டபின், திறந்து பார்த்த போது கையில் புத்தகம் இருந்தது. நிலம் பறி போய் விட்டது" கெனிய நாட்டு சுதந்திரப் போராட்ட வீரனும் சுதந்திர கெனியாவின் முதல் ஜனாதிபதியாக இருந்த யோமோ கெனியாட்டாவின் வார்த்தைகளே அவை.

எங்கள் கண்கள் திறந்தபடி இருக்கவே தமிழன் பாரம்பரிய நிலங்கள் கடந்த ஐம்பது ஆண்டுகளாகப் பறிபோய்க் கொண்டிருக்கின்றன.

ஓர் தேசத்தின் அழியாத சொத்து அதன் நிலப்பரப்பு. மக்கள் வளத்தைப் பெருக்குவது போல மண் வளத்தை பெருக்க முடிவதில்லை. ஒரு நாடு தன் எல்லையை விஸ்தரிக்கிறது என்றால் மற்றுமொரு நாடு தன் நிலப்பரப்பைக் குறைத்துக் கொள்கிறது என்பது அர்த்தம். கடலில் இருந்து மீளப்பெரும் நிலப்பரப்பை விட கடலினால் ஆக்கிரமிக்கப்படும் நிலப்பரப்பு கூடியளவாக இருக்கிறது. தாய் மண்ணின் ஓர் சதுர அங்குலத்தை கூட விட்டுக் கொடுக்கத் தமிழன் தயங்கினான். தளராது போராடினான். மீளப் பெறும் வரை முழு மூச்சாக உழைத்தான். அதன் பிரதி பலிப்புத்தான் நம் நாட்டில் காணியின் வரம்பு சண்டைகளும் நம்மக்களிடம் மலிந்து காணப் பட்டு வந்ததினை நான் காணக் கூடியதாக இருந்தது. வரம்பு அமைக்கும் போது காணியில் போடப்படும் மண் சற்று மறுகாணிப் பக்கம் சென்றுவிடுமிடத்து அடுத்த காணி உரிமையாளர் கொதித் தெழுந்து கூக்குரல் இடுவதை நாம் சாதாரணமாக நம் நாட்டில் கண்டிருக்கிறோம். வேலிக்குக் கதியால்கள் போட அலவாங்கால் கிடங்குகள் கிண்டுமிடத்து சற்று சரித்துக் கிண்டி முள்முருக்கங்கதியால் அன்றி பூவரசங்கதியால் வேலி போட்டு விட்டால் கோழிச் சண்டையில் தொடங்கி குத்து வெட்டில் முடிவதும் உண்டு. வேலி அடைக்கும் போது பெரும்பாலானவர்களுக்கு அவர்களை அறியாமலே குறிப்பாக அலவாங்கால் நிலத்தை கிண்டும்போது சற்று அயலவன் நிலத்தைச் சுரண்டச் சொல்கிறது. கிண்டுபவனின் பேதை மனம் மக்கட் தொகை வேகமாகப் பெருகத் தொடங்க நிலங்களும் கூறுபோடப்பட்டன. ஒரு குடும்பம் பல குடும்பங்களாகக் கிளைவிட்டு வளர்ந்தன. தனிக் குடித்தனம் நடத்துவதென்பது தவிர்க்க முடியாத தொன்றாகிவிட்டது. அண்ணன், தம்பி, அக்கா, தங்கைகளின் குடும்பங்கள் ஓர் கூரையின் கீழ் வாழ்வதால் முற்காலத்தில் கிடைக்கப் பெற்ற பலன்களை, இக்காலத்தில் ஏற்படும் வசதியினம், கருத்துமுரண்பாடுகள், சண்டை சச்சரவுகள் அதிகமாகிக் கொள்ளத்தொடங்கின. இதனால், சீதனமாகவோ முதிசமாகவோ குடும்பத்திற்கு சொந்தமான நிலபுலன்கள் பிள்ளைகள் மத்தியில் பிரிக்கப்பட்டு வழங்கப்பட்டன. மக்கள் தொகை பெருகிறது. நிலவளம் பெருகவில்லையே! நிலத்திற்குரிய மதிப்பும், விலையும் பன்மடங்கு உயர்ந்த வண்ணம் செல்கிறது. தனக்கெனச் சொந்த வீடு வேண்டுமென்னும் உணர்வு, தேவை மிகவும் ஆழமாக நம்மவர்கள் மத்தியில் நன்கு வேர் ஊன்றி விட்டது. யாதும் ஊரே யென எண்ணி வாழுவதை விட இதுவே நம்மூர் என திடகாத்திரமான முடிவோடு வாழ நம்மவர்கள் தலைப்பட்டு விட்டார்கள். நம்மவர்கள் இலங்கைத்தீவில் சிறிலங்கா நாட்டின் பிரதேசங்களில் எவ்வ

ளவு ஆடம்பரமாக வாழ்ந்தாலும் கூட ஓர் அந்நிய உணர்வு இருக்கத்தான் செய்கிறது. அயலாருடன் கூடிவாழும் இயல்பு படைத்த தமிழன் சிங்கள மக்களோடு அன்னியோன்னியமாக உள்ளத்தைத் திறந்து உணர்வுகளைப் பரிமாறி வாழும் நிலையில் இருக்கவில்லை. அன்றாட வாழ்வில் தமிழன் தமிழனுடன் தான் நெருங்கிப் பழகி வந்திருக்கிறான். அதுமட்டுமன்றி கடந் த ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேலாக, தமிழனுக்கும் சிங்களவனுக்குமி டையே சண்டை சச்சரவுகளும் இருந்து வருகின்றன. கடந்த ஐம்பது ஆண்டுகளாகப் பல முறை தமிழன் சிங்களப் பிரதேசங்களில் தாக்கப்பட்டு, துன்புறுத்தப்பட்டு, உடமைகள் பறிக்கப்பட்டு, கற்பு சூறையாடப்பட்டு வரும் போதெல்லாம் தமிழன் தனக்கெனச் சொந்தப் பிரதேசம் இருக்க வேண்டு மென்ற உணர்வு பெறுகிறான். அவ்வுணர்வு பலரைப் பொறுத்தவரை மலர்ந்து காய்க்காத பூவாய் வாடி விழுந்து விடுகிறது. சிலரைப் பொறுத்த வரை அது காய்த்துப் பழமாகிறது. இவர்கள் தமிழீழப் பிரதேசங்களில் நிலம் புலங்களை வாங்கி வீடுவாசல்களைக் கட்டிச் செம்மையுற வாழ்கிறார் கள். தமிழன் பொதுவாகப் புதுமையை நாடியோடுபவன் அல்ல, பழையன வற்றை இலகுவில் கழிப்பவனல்ல. அவனால், பழமையைக் கைவிடுவது கடினமான தொன்று. இதனாலோ என்னவோ புது நிலம் தேடி, காட்டுப் பிரதேசங்களைச் செம்மைப்படுத்தி, புதுக்குடியிருப்புகளை ஏற்படுத்தத் தயங்குகிறான். குறுகிய பிரதேசத்தில் நிலத்தின் முக்கியத்துவம் கூடிக் கொண்டே போகிறது.

தமிழன் பாரம் பரியமாக வாழ்ந்து வரும் நிலப்பகுதியை சிறிலங்கா அரசு திட்டமிட்டுப் பறித்தவண்ணம் இருக்கிறது. தமிழன் நிலபுலங்களைப் பறிப்பதில் சிறிலங்காவின் எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் கூடப்பரவாய் இல்லை, ஒரே கொள்கைகளைக் கடைப்பிடிக்கிறார்கள். இலங்கைத் தீவின் முழுப்பகுதியும் சிங்கள மக்கள் பிரதேசமாக அமைய வேண்டும் என்பதே அவர்கள் நீண்ட காலத்திட்டம். இதனைத் தான் முன்னாள் ஜனாதிபதி டி.பி.விஜயதுங்கா "சிங்களமக்கள் இந்நாட்டில் மரம் போன்றவர்கள். சிறு பான்மையினர் அம்மரத்தில் படரும் கொடிகள் போன்றவர்கள்" என்று கூறி இருக்கிறார். நல்லகாலம் சிறுபான்மையினர் அம்மரத்தில் வளரும் குரு விச்சைகள் என்று கூறிவிடவில்லை. சிங்களமக்கள் பட்டு கொண்டிருக்கும் மரமா இல்லையே அது வேறுவிடயம். தமிழர்களைக் கல்வித்துறையில் மட் டம் தட்டி, விவசாய நிலத்தைப் பறித்து, குன்றிய பின்தங்கிய இனமாக்கி விட வேண்டும் என்பது தான் அவர்கள் ஆசை போலும். தமிழ்மக்கள் தமக்கென இலங்கைத்தீவில் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த பிரதேசம் ஒன்று என இருக்கக் கூடாது என்பது அவர்கள் நீண்ட நாள் ஆசை. தமிழன் இலங் கைத்தீவில் பல்லாண்டு காலமாக வாழ்ந்து வருகிறான் என்ற வரலாற்றை யும் மறைக்கும் நடவடிக்கைகளும் மறுபுறம் தீவிரமாக ஏற்பட்டு வருகின் றன. இத்திட்டங்களை நிறைவேற்றுவதில் சிங்களத் தலைவர்களிடம் ஓர் ஒற்றுமை காணப்படுகிறது. எவ்வளவு தூரம் தேர்தல் காலங்களில் தமக்குள் சண்டையிட்டுக் கொண்டாலும் இத்திட்டங்களை அமுலாக்குவதில் அவர்கள் முரண்பாடு காட்டுவதில்லை.

புலம் பெயர்ந்த மக்கள் ஒருபுறம் தம் நிலபுலன்களை விட்டு வந்திருக்கிறார்கள். அவற்றை யெல்லாம் எப்படிச் சூறையாடுவதென்பதில்

PUBLIC LIBRARY
JAFFNA

அவர்கள் கவனம் செல்லாமல் இருக்க முடியாது. குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் தமிழர் நிலபுலன்கள் தொடர்ந்து பறிக்கப்பட்ட வண்ணம் இருக்கின்றன.

இலங்கையில் கொண்டு வரப்பட்ட குடியேற்றத்திட்டங்கள் மேலெழுந்தவாரியாகப் பார்க்கும் போது அருமையாக இருக்கின்றன. வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்கி, நாட்டை சுபீட்சமாக்கிக் கொள்ள உதவுகிறது. விவசாயத்தைப் பெருக்கி நாட்டின் உணவுப்பஞ்சத்தை குறைக்கிறது. வெளிநாட்டு அரசி போன்ற அத்தியாவசியப் பொருட்கள் இறக்குமதியைக் குறைத்து வெளிநாட்டு செலவாணியை சேமிக்க முடிகிறது. படித்த வேலையற்றவர்களுக்குப் புதுவாழ்வை அளிக்கிறது. கிராமப்புற மக்கள் நகர்புறங்களுக்குப் படையெடுத்து நகர்புறங்களில் ஏற்பட்டுவரும் வசதிக்குறைவுகளை மட்டுப்படுத்த உதவுகிறது. எனப்பல நோக்கங்களை முன்வைக்கலாம். ஆனால் குடியேற்றத்திட்டத்தின் அடிப்டை உள்நோக்கம் அரசியல் இனவாதக் கொள்கையை மையமாகக் கொண்டது என்பது மறைக்கப்பட்டிருக்கும் உண்மை. 1935ம் ஆண்டில் இருந்து 1956ம் ஆண்டுவரை சுமார் 340 மில்லியன் ரூபாய் செலவிட்டு அடைக்கப்பட்ட குடியேற்றத் திட்டங்கள் இலங்கைக்கு 25 மில்லியன் ருபாய் வருவாயை மட்டும் நல்கி இருக்கிறது. மாமலை சுண்டெலியை பெற்றெடுத்த கதையாகத்தான் இருக்கிறது.

சிறிலங்கா அரசிற்குத் தமிழ் பிரதேசங்களில் சிங்கள மக்களைக் குடியேற்ற, பிரித்தானியர் ஆட்சியில் அரசமயமாக்கப்பட்ட நிலம் சம்பந்தப்பட்ட சட்டங்கள் மிகவும் சாதகமாக இருந்து வருகிறது. 19ம் நூற்றாண்டில் ஆங்கில ஏகாதிபத்திய அரசினை எதிர்த்து ஆங்காங்கு எதிர்ப்புத் தெரிவித்தவர்களுக்குக் கண்டியரசு ஓர் களமாக அமைந்திருந்தது. கண்டிக் கிராமப்புறத்து மக்கள் போத்துகேயர், ஒல்லாந்தர் ஆட்சியில் கரையோரப் பிரதேசங்களைப் போல, பாதிக்கப்படவில்லை. கண்டி மக்கள் ஆங்கிலேயர் ஆட்சியை வெகுவாக எதிர்த்தனர். ஆங்கிலேய ஏகாதிபத்திய அரசு கோப்பி, தேயிலைத் தோட்டங்களை மலை நாட்டுப் பிரதேசங்களில் விஸ்தரிப்பதில் பேரக்கறை காட்டி வந்தது. 1815ல் பிரித்தானியர் கண்டிப் பிரதேசத்தை கைப்பற்றினர். கண்டி சாசனம் (Kandian Convention) கண்டி மன்னனால் கையொப்பமிடப்பட்டது. இலங்கைத் தீவு முழுவதும் பிரித்தானியர் ஆட்சியின் கீழ் வந்தது. 1818ல் ஏற்பட்ட கலவரத்தின் போது பிரித்தானிய அரசு தற்பாதுகாப்பு குறைவை உணர்ந்தது. விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடுவோருக்கு கண்டிப் பிரதேசம் தங்கு மடமாக அமைவதாகக் கருதினர். தீவின் ஏனைய பகுதிகளில் இவ்வுணர்வு பரவலாம் என ஐயமுற்றனர். 1840ல் மக்கள் குடியேறாத நிலபுலன்களை அரசின் உடமையாக்கினர். (Crown Property land act of 1897 " If any one occupied one or more pieces of land other than which he actually occupied then those lands will not belong to him") இலங்கைத்தீவின் 82.3வீதம் அரசின் நிலமாக இருந்து வருகிறது. சுதந்திரத்திற்குப் பின்னும் அரசுக்கு இந்நிலங்கள் சொந்தமாகவே இருக்கின்றன. இந்நிலபுலங்கள் தமிழர் பாரம்பரிய நில புலங்களையும் அடக்கியுள்ளன. ஆங்கிலேயர் இலங்கைத் தீவை ஒரே குடைக்கீழ் கொண்டு வந்தது மட்டுமன்றி சுதந்திரம் வழங்கும் போதும் அதனை ஒரே அரசிடம் வழங்கினர். 18, 876 சதுர கிலோ மீட்டர் பரப்பை வடகிழக்கு மாகாணங்கள்

கொண்டிருக்கின்றன. அப்பிரதேசம் சிறிலங்கா அரசிடம் ஒப்படைக்கப் பட்டது.

சிறிலங்கா அரசு இந்நிலபுலங்களை மக்களுக்கு, படிப்படியாக குடி யேற்றத் திட்டங்கள் மூலம் திருப்பி கொடுக்க திட்டங்கள் தீட்டியது. பெரிய குடியேற்றத்திட்டங்கள், மலைப்பிரதேச குடியேற்ற திட்டங்கள், கிராம விருத் தித் திட்டங்கள், இளைஞர் குடியமர்புத் திட்டங்கள், நீர்ப்பாசன திட்டங்கள் எனப் பல திட்டங்கள் தீட்டப்பட்டன. இத்திட்டங்களின் மூலம் வடக்கு, கிழக்கு, வடமேற்கு மாகாணங்களிலும் ஏனைய தமிழர் பாரம்பரிய பகுதிக ளில் சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டு வருகிறார்கள். கலப்பையே தொட்டறி யாதவன் கமம் செய்யக் குடியேற்றப் படுகிறான். நகர்புறங்களில் தெரு அளந்தவர்கள் பல பொன் விளையும் பூமியில் பயிரை அழிக்கும் புளுக்கள் போல அமர்த்தப்பட்டார்கள். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 1881ல் தமிழர் தொகை 84.9 வீதமாக இருந்தது. 1981ல் 68.6 குறைந்து போனது. சிங்கள மக்கள் வீதம் கூடிக் கொண்டது.

கல்லோயாத்திட்டம். (பற்றிப்பளைத்திட்டம்) சிறிலங்கா சுதந்திர அரசி னால் ஆரம்பிக்கப்பட்ட முதல் குடியேற்றதிட்டம் இது. 1948ல் சுதந்திரம் அடைந்த சிறிலங்கா 1949ல் கல்லோயா திட்டத்தைத் தீட்டி அமுலாக்கியது. யு. என். பி. கட்சியின் தந்தையெனக் கருதப்படும் டி. எஸ். செனநாயக்கா வினால் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. பற்றிப்பளை என்ற பெயரை கல் லோயா என சிங்கள மயமாக்கினார்கள். தூய தமிழ் பெயர் மறைக்கப் பட்டது. 28. 8. 1949ல் இங்கினியாகல என்னுமிடத்தில் இத்திட்டத்தை அன் றைய பிரதமர் டி. எஸ். செனநாயக்கா திறந்து வைத்தார். தமிழர்கள் படிப்படியாக கிழக்கு மாகாணத்தின் தென்பகுதியில் அமைக்கப்பட்ட இக் குடியேற்றத் திட்டத்தில் இருந்து விரட்டியடிக்கப்பட்டார்கள். ஆனி மாதம் 5ம் திகதி 1956ல் ஏற்பட்ட இனக்கலவரத்தின் போது பல தமிழர்கள் இங்கிருந்து விரட்டியடிக்கப்பட்டது மட்டுமல்ல அவர்கள் நிலபுலங்கள், உடமைகள் பறிக்கப்பட்டன. தமிழர் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த இப்பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்ட குடியேற்ற திட்டங்கள் மூலம் நாற்பத்து நான்கு கிரா மங்கள் உருவாக்கப்பட்டன. அவற்றில் முப்பத்தெட்டுக் கிராமங்கள் சிங்கள மக்களிடம் கொடுக்கப்பட்டன. 1946ல் மட்டக்களப்பு மாவட்டத்தில் சிங்கள மக்கள் தொகை 5.8 வீதமாக இருந்தது. கல்லோயாத்திட்டம் அறிமுகமான தும் 11.5 வீதமாக உயர்ந்தது. இத்திட்டத்தின் விசமத்தனத்தை கலாநிதி எஸ். ஏ. விக்கிரமசிங்கா கூறுகையில், இலங்கை மக்கள் எந்தப் பலனையும் இத்திட்டம் மூலம் அடையவில்லை. அமெரிக்க ஆக்கப் பணியாளரும், நிபுணர்களுமே பயன் அடைந்தனர் என்றார். சிங்கள அரசைப் பொறுத்த வரை தமிழர் பிரதேசங்களைச் சூறையாடும் முயற்சியில் ஓர் முக்கிய வெற் றிப் பாதையாக இக் குடியேற்றத்திட்டம் அமைந்தது. 1959ல் உருவாக்கப் பட்ட அம்பாறைத் தொகுதியில் 1960ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் சிங்களப் பாராளுமன்ற உறுப்பினர் தெரிவு செய்யப்பட்டார். சிங்களப் பிரதேசமாக்கப்பட்ட அம்பாறைக்கென, கற்பனை வரலாற்றுக் காவியங்கள் எழுதப்பட்டன. இன்றைய சிங்கள இளம் சந்ததியினர், இப்பகுதி பல்லா யிரம் ஆண்டுகள் சிங்கள மக்களின் மூதாதையர் வாழ்ந்த பிரதேசமாகக் கருதுகிறார்கள்.

கிழக்கு மாகாணத்தின் வடபகுதியான திருக்கோணலை பகுதியிலும் குடியேற்றத் திட்டங்கள் மூலம் தமிழ் பிரதேசங்கள் பறிக்கப்பட்டு வந்துள் ளன. உலகின் மூன்றாவது தலை சிறந்த இயற்கைத் துறைமுகமான திருக் கோணமலையை தமது பரிய நிலமாக்குவதில் மிகவும் அக்கறை காட்டி வருகிறார்கள் சிங்களத் தலைவர்கள். ஆசி சிவன் அமரும் திருக்கோண மலையில் அரசமர நிழலில் புத்தர் பகவான் திருப்பள்ளி கொண்டிருக்கும் காட்சிகள் முந்த நாள் பெய்த மழைக்கு நேற்று முளைத்த செடி போலக் காட்சி தருகின்றன.

அகத்தியனுக்கும் ஆதி சிவனுக்கும் குன்றில் உறை குமரன் ஆசா னாய் இருந்த கதை போய் சித்துக்கள் ஆசானாக அமர்ந்து கொள்ளும் காலம் பிறந்து விட்ட பிரமை ஏற்படுகிறது. கந்தளாய், பதவியா எனப்பல குடியேற்றத்திட்டங்கள் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டன. விவசாய நீர்பாசன திட்டம், மீன் பிடித்திட்டம் எனப் பல திட்டங்களின் மூலம் சிங்கள மக்கள் இழுத்து கொண்டு வரப்பட்டு சலுகைகளைக் காட்டிக் குடியேற் றினர். திருக்கோணமலை மாவட்டத்தில் 1881ல் இருபத்து இரண்டாயிரத்து நூற்று தொன்நூற்றேழு பேரில் தொழாயிரத்து முப்பத்தைந்து பேரே சிங் கள மக்களாக இருந்தனர். நூறு ஆண்டுகளுக்குப் பின் 1981ல் இரண்டு இலட்சத்து ஐம்பத்தையாயிரத்து தொழாயிரத்து நாற்பத் தெட்டுப் பேரில் சிங்கள மக்கள் 33 வீதம். தமிழர் 34வீதம் ஆக உள்ளனர். தமிழரும் சிங் களவரும் பாதிக்கு பாதி என்றளவிற்கு நிலமை வந்துள்ளது.

வடமாகாணத்தில் கூட வவுனியா, புத்தளம், மன்னார் பகுதிகள் படிப்ப டியாக சிங்கள மயமாக்கப்பட்டு வருகின்றன. பாவற் குளம் குடியேற்றத் திட்ட மூலம் பெரும் திரளான சிங்கள மக்கள் தமிழ் பிரதேசங்களில் குடி யேற்றப்பட்டனர். மணலாறு என்ற தமிழ் பெயர் வெலியோயா என மாற்றப் பட்டு முல்லைத்தீவுப் பகுதியிலும் சிங்கள மக்கள் குடி யேற்றப்பட்டுள் ளனர்.

பல பெயர்கள் இவ்வாறு மாற்றப்பட்டுள்ளன.

| பாரம்பரிய தமிழ் பெயர்கள் | மாற்றப்பட்ட சிங்களப் பெயர் |
|---|---|
| பார்வதிகிராமம் | பதவியா |
| முதலிக்குளம் | மொறவேவ |
| பட்டிப்பளை | கல்லோயா |
| பெரிய குளம் | நாமால்வத்த |
| பதவிகுளம் | சங்கரபுரா |
| மணலாறு | வெலிஓயா |
| குமறுக்கடவை | குமறகடவல |
| பனங்கட்டி முறிப்பு | வெளிக்கெட்டியாவா |

சிங்கள மக்களின் உள்ளங்களில் பாலும் தேனும் கலந்து ஓடப்போகிறது எனக் கூறி மகாவலி கங்கை திட்டம் ஒன்றை கொண்டு வந்தனர். "வேலையில்லாதிண்டாட்டம் மறையப் போகிறது. செல்வம் செழிக்கப் போகிறது, மின்சாரம் ஒளிபரப்பப் போகிறது" என்றெல்லாம் கூறப்பட்டது. உண்மையில் நடந்தது தான் என்ன? உலகவங்கி ஜேர்மனி, யப்பான், கனடா, சுவீடன், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் ஒருங்கிணைந்து இரண்டரை பில்லியன் டொலர் முதலீட்டை முன்வைத்தனர். இஸ்ரேலிய அமியார் (Amy Yaar) இத்திட்டத்தைத் தீட்ட உதவினார். சிறிலங்கா அரசு அரசியல் நோக்கைப் பின் வைத்துச் செயற்பட்டது. சிங்கள கிராமப்புறங்களில் அவ்வப்போது அரசிற்கு எதிராக ஏற்படும் கிளர்ச்சிகளை முளையிலே புடுங்கி விடும் திட்டம் உதயமானது. வளர்ந்த பிரச்சினைகள் புது நிலத்தில் புது நாற்றாக நாட்ட திட்டம் தீட்டப்பட்டன. அரசிற்குத் தலையிடி தருபவர்கள் சிதறிக்கப்பட்டனர். இத்திட்டத்தைச் சாட்டாகக் காட்டி அதற்குரிய ஒரு பகுதி பணத்தை, தமிழரை நசுக்க ஆயுதம் வாங்கப் பாவிக்கப்பட்டது. அப்பாவி பொதுமக்கள் பாலையும் தேனையும் காணாது மகாவலி கங்கை நீரையாவது பருகுவோம் என அரசனை நம்பி புருசனைக் கைவிட்ட கவலையுடன் இருக்கிறார்கள். சோலெல் பொனா (Solel Bonah) போன்ற இஸ்ரேலிய கம்பனிகள் பலத்த லாபம் அடைந்தன. இன்று வரை சிறிலங்கா அரசால் ஏற்படுத்தப்படும் குடியேற்றத் திட்டங்கள் யாவும் முழுக்க முழுக்க அரசியல் சாயம் பூசப்பட்டவையாக இருக்கின்றன. பொருளாதாரப் பின்னணியென்பதெல்லாம் வெறும் சம்பிரதாயமாகத்தான் இருக்கிறது. தமிழ் மக்கள் கண்களில் மண்ணைத் தூவி அவர்கள் நிலத்தைப் பறித்தெடுத்து விட்டார்கள். இன்றைய போராட்ட சூழல் வந்திருக்காவிட்டால் தமிழரது பிரதேசத்தின் பெரும்பகுதி சிங்கள மயமாக்கப் பட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை.

தமிழர்கள் கற்காலத்தில் இருந்தே இலங்கைத் தீவில் பெரிய நீர்பாசன திட்டங்கள் அமைத்து வளம் பெருக்கி இருக்கிறார்கள். வரண்ட வலயத்தை மையமாகக்கொண்டு வாழ்ந்த இவர்கள் குளங்களையும், நீர்த் தேக்கங்களையும் அமைத்திருந்தனர். இலங்கையின் பல பாகங்களில் கண்டெடுக்கப் பட்ட அகழ் ஆய்வுகள் இதனை உறுதிப் படுத்துகின்றன. தமிழர்களுக்கு நீர்பாசன திட்டங்கள் புதியவையல்ல. ஆனால் இன்றைய வரலாறு சிங்கள மக்களின் கைவண்ணத்தில் தான் நீர்பாசன திட்டங்கள் சுடர்விட்டுப் பிரகாசித்து வந்தது என்கிறார்கள்.

சிங்கள மக்கள் நீர்பாசனம், விவசாயம் எனப் பல அம்சங்களை முன் வைத்து, குடியேற்றத்திட்டங்கள் மூலம் நம் நிலங்களைப் பறித்தெடுத்து விடுகிறார்கள். புலம் பெயர்ந்த தமிழன் தாயக மண்ணைப் பற்றி அக்கறை காட்ட வேண்டுமல்லவா? தாயக மண் பறிபோனது போகட்டும் சமாதானமாகப் போய் விடுவோம் என்பது தற்கொலை முயற்சிக்குச் சமமாகும். நாங்கள் வெளியேறியதன் மூலம் நிலத்தின் பாதுகாப்புப் பணியை, போராளிகள் கையில் விட்டு விட்டோம். சிங்கள இராணுவத்தினர் மக்கட் குடியிருப்புக் குறைந்த இடங்களை இலகுவில் தம் வசப்படுத்தி கொள்கிறார்கள். மக்கள் செல்வம், நிலத்தை மழை வெள்ளத்தில் கரைந் தோடும் மண்ணை இறுகப் பிடித்து வைத்திருக்கும் மரத்தின் வேர்கள் போன்றது. நாம் வெளியேறிய

தற்குப் பரிகாரமாக நம் மண்ணை மீட்கும் பணியில் ஈடு படுபவர்களுக்கு ஆவன செய்தல் அவசியம்.

மண் மேல் கொள்ளும் தேசப்பற்று நாட்டு நலனை மையமாகக் கொண்டிருத்தல் வேண்டுமல்லவா? நிலப்பிரபுத்துவ காலத்தால் ருசியர்கள் நிலங்களைத் தனது உடமையாக்கினார்கள். பின்பு நிலங்கள் எமது உடமைகள், அதனால் அங்கிருக்கும் மக்களும் எமக்கு அடிமைகள் என்றார்கள். மேற்கு ஐரோப்பிய நிலப் பிரபுக்கள் அன்று மக்கள் எம் அடிமைகள் எனவே, அவர்கள் நிலம் எமக்கு அடிமையென்றார்கள். சிறிலங்கா அரசு நிலமும் மக்களும் எமக்கு நிரந்தர அடிமைகளே என்பதைச் சொல்லாமற் செய்து காட்டுகிறார்கள்.

# உலகிற்கு உணர்த்தப்படும் உண்மைகள்

"நான் தமிழ் மக்கள் கருத்துக்கள் பற்றிக் கவலைப்படவில்லை. தற்போது அவர்களைப் பற்றி நாம் சிந்திக்க முடியாது. எவ்வளவு தூரம் வடக்கில் அழுத்தத்தைக் காண்பிக்கிறோமோ அவ்வளவு தூரம் இங்கு சிங்கள மக்கள் சந்தோஷமடைகிறார்கள். உண்மையில், தமிழர்களைப் பட்டினி போடுவேனேயானால் சிங்கள மக்கள் சந்தோஷப்படுவார்கள்" முன்னாள் சிறிலங்கா ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன கூறிய கருத்துக்கள் (Daily Telegraph)டெயிலி ரெலிகராப் பத்திரிகையில் ஜுலை மாதம் 11ம் திகதி 1983ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.. இக்கூற்றை ஆகஸ்ட் மாதம் 1ம் திகதி, 1983ம் ஆண்டில் வெளியான லண்டன் கார்டியன் பத்திரிகை ஆசிரியர் தலையங்கம் வன்மையாகக் கண்டித்தது. இது ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்ற உண்மையை உணர்த்துகிறது. இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் சிங்கள அரசன் துட்டகைமுனு தான் காலை நீட்டி நிமிர்த்திப் படுக்க முடியவில்லை. ஏனென்றால் வடக்கே தமிழர், கிழக்கே தமிழர், வடமேற்கே தமிழர் இருக்கிறார்கள் என்றார். எனவே, தமிழனை ஒடுக்கும் முயற்சி நேற்று இன்று தோன்றியதல்ல. சிங்கள இனத்தின் வரலாறே தமிழனை அழுத்தி, அவன்மேல் ஏறி மிதித்த வண்ணம் எழுதப்பட்டிருக்கிறது போலத் தெரிகிறது.

நான் இலங்கைப் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் கல்வி கற்றுக் கொண்டிருந்த காலத்தில் சிறிலங்காவில் சோஸலிசத்தின் தந்தை என அழைக்கப்படும் பிலிப் குணவர்த்தனாவைச் சந்தித்துக் கதைக்க முடிந்தது. அவரிடம் தமிழர் பிரச்சினை பற்றிக் கேட்டபோது அவர் சொன்ன பதில்: சிங்கள மக்களே சிறுபான்மையினர். இலங்கைத் தீவில் மட்டுமே சிங்களவர் வாழ்கிறார்கள். தமிழர்களோ பெருந் தொகையாக இந்தியா, மலேசியா, பிஜி, தென்னாபிரிக்கா போன்ற நாடுகளில் வாழ்கிறார்கள். எனவே, தான் சிங்கள மக்களைப் பேணிக் காப்பதன் மூலம் உலக சமூகங்களின் சிறுபான்மையினரான சிங்கள சமூகத்தை அழியாது பார்த்துக் கொள்ள முடிகிறது" என்றார். தர்க்க ரீதியில் பிலிப் குணவர்த்தன குறிப்பிட்ட வாதம் தமிழர்கள் சிறுபான்மையினரல்ல என்கிறார்.

இலங்கைத் தீவில் இரு அரசுகள் இருந்து வந்திருக்கின்றன. அவை தமிழ் இராட்சியமும், சிங்கள இராட்சியமும் ஆகும். யாழ்ப்பாண இராட்சியம் என்றழைக்கப்பட்ட தமிழ் அரசு சிங்களவர் இலங்கைத் தீவுக்கு வருகை தர முன்பிருந்தே இருந்து வந்திருக்கிறது. அந்நியராட்சியிலும்கூட போர்த்துக்கீசரும், டச்சுக்காரரும் தமிழ்ப்பகுதியைத் தனியாக ஆட்சி புரிந்து வந்திருக்கிறார்கள். ஆங்கிலேயர்கூட நீண்ட காலமாகத் தனி இராட்சியமாகத்தான் அங்கீகரித்து ஆட்சி புரிந்து வந்திருக்கிறார்கள். இலங்கைத் தீவில் இரு நாடுகள், இரு கொடிகள், இரு அரசுகள், இருவித சட்டங்கள், யாப்புக்கள், இரு நாணய முறைகள் இருந்து வந்திருக்கின்றன. தமிழீழத்தில் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழ்ந்து வந்திருக்கிறார்கள்.

சிங்கள மக்கள் தத்தம் பிரதேசங்களில் பெரும்பான்மையாக வாழ்கிறார்கள். சிங்களப் பிரதேசத்தையோ சிங்கள மக்களையோ முன்னேற்றுவதில் தமிழனுக்கு எந்தவித ஆட்ஷேபனையும் இல்லை. பதில், செல்வந்த

அயல் நாடு ஒன்று இருக்குமிடத்து அகதிகள் பிரச்சினைகளோ நோய் நொடி பட்டினி பாதிப்புக்களோ அப்பிரதேசத்திலிருந்து தமிழீழ நாட்டிற்கு வராது என்ற நல்ல அறிகுறியுடன் வாழ முடியும்.

இலங்கைத் தீவின் வரலாறு திரிக்கப்பட்டும், உண்மைகள் மறுக்கப்பட்டும், மறைக்கப்பட்டும் வந்துள்ளன. இலங்கைத் தீவின் ஆதிக்குடிகள் யார்? என்பது முக்கியமான கேள்வி. இத்தீவின் மூத்த புதல்வர்கள் யார்? எப்படிப் பட்டவர்கள் என்பது இன்றைய பிரச்சினைக்கு மூல வேராக இருக்கிறது. சிங்கள வரலாற்று ஆசிரியர்கள் ஆதாரமாகக் கொண்டிருக்கும் மகாவம்சம், தீபவம்சம் ஆகிய நூல்கள் இராமாயணம் போன்ற இதிகாசங்களே. கற்பனை கலந்த சம்பவங்களைத் தமக்குச் சாதகமாக வளைத்து, நெளித்து எழுதப்பட்டவை. தீபவம்சம் நான்காம் நூற்றாண்டிலும் மகாவம்சம் 6ம் நூற்றாண்டிலும் எழுதப்பட்டவை. பாளி மொழியில் வரையப்பட்டவை. இந் நூல்களின்படி ஆதிகாலப் பூர்வீகக் குடிகளாக இலங்கைத் தீவில் வசித்தவர்கள் இயக்கர், நாகர் என்னும் இனத்தவர்கள். இவர்கள் நாகரிகம் படையாத காட்டுமிராண்டி மக்கள். இவர்கள் மிருகங்களோடு மிருகங்களாக வாழ்ந்து வந்தார்கள் என்ற உணர்வை ஏற்படுத்தும் வகையில் இவர்கள் வாழ்க்கை முறை சித்தரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், பல புதைபொருள் ஆராய்ச்சிகள் வரலாற்று எச்சங்கள் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு பல மேலை நாட்டும், கீழைத் தேச வரலாற்று நிபுணர்கள் கூறும் விளக்கமும் வேறு. திராவிட மக்களே இலங்கைத் தீவின் ஆதிக்குடிகள் என் பதைத் திட்டவட்டமாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். மூவாயிரம் ஆண்டுகட்கு முன்பே திராவிடர் இலங்கைத் தீவில் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். இன்னும் ஒருபடி ஆழமாகப் போனால் திராவிட இனத்தைச் சேர்ந்த தமிழர்கள் சிங்கள இனத்தைப்போல இந்தியாவில் இருந்துதான் வந்து குடியேறி இருக்கிறார்கள் என்பதும் தவறான கருத்துப் போலத் தெரிகிறது. லெமூரியாக் கண்டத்தில் இந்தியா இலங்கைஇணைந்த ஒரே நிலப்பரப்பாக இருந்திருக்கிறது. இந்நிலப்பரப்பில் தமிழர்கள் வாழ்ந்து வந்திருக்கிறார்கள்.

அவர்கள் இருந்த பிரதேசம் பிளவுபட்டதே தவிர மக்கள் இடம் விட்டு இடம் மாறிச் செல்லவில்லை. திராவிடர்கள் மத்திய கிழக்கில் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதற்கு போதிய சான்றுகள் இருக்கின்றன. வட இந்தியாவில் மொகஞ்சதாரோ கரப்பா நாகரீகம் திராவிட மக்களது. தமிழர்கள் வரலாற்று எச்சங்கள் அவுஸ்திரேலியவிலும் அதனை அண்டிய நியூசிலந்து தீவுகளிலும் கண்டெடுக்கப்பட்டன. தமிழன் எங்கு எப்போது தோன்றினான் என்பது திட்டவட்டமாகக் கூற முடியாவிட்டாலும் கூட தமிழன் ஆதிக் குடிகளில் ஒருவனாக வாழ்ந்திருக்கிறான் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மாமிரவர்ணி என அழைக்கப்பட்ட இலங்கைத்தீவு திராவிடர் வாழ்ந்து வந்த, பிரதேசம் பொன்நிறம் கொண்ட பூமி தாமிரவர்ணி யெனப்படுகிறது. ஈழம் என இத்தீவு அழைக்கப்பட்டிருக்கிறது.

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த திராவிடர்கள் வேளாண்மை செய்ததாகவும் வரலாறுகள் நிரூபிக்கின்றன. வேளாண்மை செய்ய நீர்ப்பாசன திட்டங்கள் பல தீட்டப்பட்டிருந்தன. நல்லமுறையில் நாகரீகம் படைத்து வாழ்ந்திருக்கிறார்கள். மட்பண்டங்கள், கல்லாயுதங்கள், கலைப்படைப்புகள் பல செய்திருக்கிறார்கள்.

இவர்களுக்குப் பின் வந்த சிங்களவர்கள் படிப்படியாக இத்தீவின் மத்திய, மேற்குப் பகுதிகளில் குடியேறி வந்தார்கள். இவர்கள் மொழியாக சிங்களமும் 12ம் நுற்றாண்டளவில் எழுத்து வடிவத்தை அமையப் பெற்று வளர ஆரம்பித்தது. சிங்கள மக்களின் நீர்ப்பாசன திட்டங்கள் சிங்கள மொழி, பண்பாட்டில் கணிசமான அளவு திராவிடக் கலப்பு ஏற்பட்டது. சிங் கள மக்கள் தமிழ் மக்களோடு இணைந்து வாழ்ந்ததும் முரண்பட்டுப் போனதும் வரலாற்றில் காணமுடிகிறது.

சிங்கள மக்கள் தமிழ்த் தீவில் குடியேறியதினால் ஓர் அந்தரமான நிலையில் இருப்பதான உணர்வை வளர்த்து விட்டார்கள் போல தெரிகிறது. தம்மை உயர்ந்த இனமாகக் கருதத்தலைப்பட்டனர். தம்மை கடவுளால் தெரிவு செய்யப்பட்ட இனமெனக்கருதி, தம்மை ஆரிய இனத்துடன் இணைத்துத் தாம் உயர்ந்தவர்கள், ஆளப்பிறந்தவர்கள், அறிவு ஆற்றல் மிக்கவர்கள் என்ற உணர்வுகளையும் வெளிப்படுத்தினர். ஆரியர்கள் இவ் வாறான உணர்வை ஏற்படுத்தி இந்தியாவில் திராவிடர்களை உளரீதியாகத் தாக்கி வந்தார்கள். இந்த உயர்வு மனப்பான்மையைச் சிங்களவர்கள் புத்த மதத்தினூடாக வளர்த்தெடுத்தனர். புத்தமதம் உதித்த இந்தியாவில் புத்த மதம் குறிப்பாக வடக்கே வளர மறுத்தது. ஆனால், தென் இந்தியாவில் புத்த மதம் வளராவிட்டாலும் புத்தமத கருத்துக்கள் நன்கு அலசி ஆரா யப்பட்டன. தமிழ் ஐம்பெரும் காப்பியங்களில் மணிமேகலை, புத்தமதக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கைத் தீவை, புத்தரின் புனிதபூமி யெனப் பிரகடனப்படுத்த, தம் மாலான முயற்சிகளைச் செய்தனர். இதனை, கலாநிதி குமாரி ஜெயவர்த் தனா "சிங்கள இனம் கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்ட இனம் - புத்த தர் மத்தைக் காத்து, நிலை நாட்ட வேண்டியது அவர்கள் தலையான கடமை யாக உள்ளது. புத்தர் மூன்று முறை விஜயம் செய்த சிறிலங்கா மண்ணில் புத்த மதத்தை நிலைநாட்டும் நோக்குடன் தெரிவு செய்யப்பட்டவர்கள் சிங்கள மக்கள் " என்றார். இந்த உணர்வு சாதாரண சிங்கள மக்களிடம் இளையோடி இருக்கிறது.

ஈழத்துத் தமிழ் அரசர்களும் தம் பிரதேசத்தைப் பாதுகாக்கவும் தம் மொழியை வளர்க்கவும் சுயமாக நின்று உழைத்தனர். தமிழ் நாட்டில் தமிழ் வளர்கிறது என்று தமிழ் நாட்டின் ஓர் அங்கமாக இருக்க விரும்பவில் லை. தமிழ் நாடு என்னும்போது தற்போதைய தமிழ் நாட்டை மட்டும் குறிக்கவில்லை. இதில் சேர,சோழ,பாண்டிய நாடுகளையும், இந்து சமுத்தி ரத்தினுள் மூழ்கிப் போன நிலபுலன்களின் சில பகுதிகளையும் சேர்க்கலாம். தமிழர்களிடம் பண்பாட்டு ரீதியில் பொறுமையான உணர்வுகள் ஏற்பட்ட போதும், தத்தம் இராட்சியங்களைத் தனித்தனியாக ஆளுவதில் அக்கறை காட்டி வந்தனர்.

சோழர் ஆட்சிக்காலத்தில் சோழ சாம்ராச்சியம் விஸ்தரிக்கப்பட்டது, வடக்கே இமய மலைக்கும் சென்றது. தெற்கே இலங்கைத்தீவு, கிழக்கே இந்தோனேசிய தீவு வரை சோழ சாம்ராட்சியம் பரந்திருந்தது. இச்சாம் ராட்சிய பரவலின்போது இலங்கைத் தீவின் தமிழ், சிங்களப் பிரதேசங்கள் கைப்பற்றப்பட்டன. சோழர்களுக்குத் திறை செலுத்த இப்பிரதேச மன்னர் கள் பணிக்கப்பட்டனர். பாண்டிய அரசன் செல்வாக்கும் ஆங்காங்கு காணப்

பட்டது.

இந்திய சாம்ராட்சிய அரசுகளின் படையெடுப்புகளுக்குப் பின், சிங்கள மக்கள் மத்தியில் தமிழருக்கெதிரான உணர்வு பலமானது. இவர்கள் கண்களில் தமிழகத்தமிழரும் இலங்கைத்தீவுத் தமிழரும் இணைந்து கொள்வார்கள். அவர்கள் சக்திமிக்கவர்களாவார்கள். அதனால், சிங்கள இனத்திற்கு ஆபத்து ஏற்படலாம் என்ற கருத்துக்கள் பொதுமக்கள் மத்தியில் தூவப்பட்டன. தமிழன் வளர்ச்சி சிங்கள இனத்தின் அழிவுக்கு இடப்படும் அத்திவாரம் போலத் தோன்றியது. சிங்கள அரசுகள் கண்டிப்பிரதேசத்திலும், கரையோரப்பிரதேசத்திலும் இருந்தன. கோட்டையை மையமாகக் கொண்டு வளர்ந்து வந்த கரையோரப் பிரதேச அரசு, வெளிநாட்டு வர்தகத் தொடர்புகளைப் பெற்று வந்தது.

இலங்கை வரலாற்றில் ஐரோப்பியர் வருகை ஓர் திருப்பு முனையை ஏற்படுத்தியது. ஐரோப்பியர் ஆட்சியினால் பல அடிப்படை மாறுபாடுகள் ஏற்பட்டன. 1498ல் வஸ்கொடகாமா எனும் போத்துகீசன் இலங்கைத் தீவை வந்தடைந்தான். 1505ம் ஆண்டு போத்துக்கேயர் இலங்கை ஆட்சியில் பங்கெடுத்தனர். 1619ல் தான் தமிழ் பிரதேசங்கள் போத்துகேயர்களால் கைப்பற்றப்பட்டன. 1646ல் டச்சுக்காரர் கைப்பற்றி ஆண்டனர். இவர்கள் ஆட்சியில் தமிழ் பிரதேசங்கள் தனி நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டன. இலங்கைத் தீவின் வரைபடத்தில் தமிழ் பிரதேசங்களின் எல்லைகள் நன்கு வரையறுக்கப்பட்டன. தமிழ்ப் பிரதேசம் புத்தளத்திற்கு வடக்கே போதாமை ஆறு முதல் தொடங்கி பொத்துவிலுக்குத் தெற்கே குபுக்கன் ஆறுவரை இருந்தது. கைலாயவன்னியன் ஆட்சிப் பகுதியையும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. அருவியாற்றின் கீழிருந்து தொடங்கும் எல்லை, வடக்கில் வன்னியப் பகுதியையும், கிழக்கில் கொட்டியாறு, பழுகாமம், பாணமை, வன்னிமைகளை அடக்கியிருந்தது. பிரித்தானியர் ஆட்சியின் முற்பகுதியில் தமிழர் பிரதேசம் தனி நிர்வாகத்தில் இருந்தது.

பிரித்தானியர்கள் தன்நிறைவுப் பொருளாதாரத்தைச் சீர்குலைத்து கோப்பி, தேயிலை, றப்பர் தோட்டங்களை உண்டாக்கி ஏற்றுமதி வருவாயைப் பெருக்கத் தொடங்கினர். இதன் பெறுபேறாக மலைப் பிரதேசங்களுடன் காட்டுப் பிரதேசங்களும் அரச உடமையாக்கப்பட்டன. முழு இலங்கையும் ஓர் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது.

பிரித்தானியர் காலத்தில் ஏற்பட்ட கல்வி மறுமலர்ச்சியில், தமிழர்கள் கணிசமான அளவு பலனைப் பெற்றனர். பிரித்தானியருக்கும் அமெரிக்க மிசன்களுக்குமிடையே ஏற்பட்ட தகராறு காரணமாக அமெரிக்க மிசன் வடக்குப் பகுதிக்கு அனுப்பப்பட்டு, பல பாடசாலைகளை மேலும் அமைத்து, தமிழர் கல்வியை மேலும் விரிவாக்கப்பட்டது.

இந்திய சுதந்திரப் போராட்டத்தை அடுத்து இந்தியாவுக்கு சுதந்திரம் வழங்கப்பட்டது. இலங்கைத் தீவை வைத்துப் பராமரிப்பதில் அதிக நன்மையில்லை என்பதை உணர்ந்த பிரித்தானியர்கள் 1948ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4ம் திகதி இலங்கைக்கும் சுதந்திரம் வழங்கினர். சாத்வீகமாகவோ இன்றி ஆயுதப் போராட்டமோ இன்றி இலங்கைத்தீவிற்குச் சுதந்திரம் வழங்குவதாகக் கூறி தீவுமுழுவதினையும் ஒரே அரசின் கீழ் குறிப்பாக, ஒற்றை ஆட்சியின்கீழ் சிங்களவரிடம் கையளித்தனர்.

கலாநிதி வில்மெட் பெரெரொ கூற்றின்படி " போரிடாமல் பெற்ற சுதந்திரத்தின் மதிப்பைப் பலராலும் உணர முடியவில்லை" என்றார். இச்சுதந்திரம் தமிழ் மக்களைப் பொறுத்தவரை அர்த்தமற்ற தொன்றாகிவிட்டது. விலங்குகள் மாற்றப்பட்டன. இரும்பு விலங்கிற்கு பதில் பொன்னால் செய்யப்பட்ட விலங்குகள் மாட்டப்பட்டன. தமிழன் பிரதேசம் தமிழனுக்கு வழங்கப்படவில்லை. தமிழனை ஆள அயல் பிரதேசத்தவரிடம் உரிமை வழங்கப்பட்டது. அதுவும் ஒற்றை ஆட்சித்திட்டத்தின் கீழ் இவ்வுரிமை வழங்கப்பட்டது. தமிழ் பிரதேசங்கள் சிங்கள அரசின் ஓர் பகுதியாகக் கருதப்பட்டது. தமிழ் மக்கள் சிறுபான்மையினமாகக் கருதப்பட்டனர். தமிழ் மொழி, தமிழ் பிரதேசங்களுக்கு எந்த வித உத்தரவாதமும் வழங்கப்படவில்லை.

## போராட்டம் அவசியம் தானா?

இலங்கையின் மத்திய பிரதேசத்தில் குறிப்பாக, பெரும் கோப்பி, தேயிலை, றப்பர் தோட்டங்களில் பணிபுரிய இந்தியாவில் இருந்து பிரித்தானியர்களால் வரவழைக்கப்பட்ட தமிழர்கள், இலங்கை சுதந்திரம் பெற்றதும் முதல் அடி விழுந்தது. இவர்கள் பிரஜாவுரிமை 1948ல் பறிக்கப்பட்டு நாடற்றவர்கள் என்ற முத்திரை குத்தப்பெற்றனர். உடலை உறுத்தி உவகைகளை மறந்து அல்லும் பகலும் அயராது உழைத்தவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியிது. சிங்களப் பிரதேசங்களில் தமிழர் வாக்குகள் பிரதிநிதிகள் தெரிவை நிர்ணயிக்கப் போகிறது. சிங்கள மக்களுக்குச் சேரவேண்டிய வேலைவாய்ப்புக்களை இவர்கள் பெற்று விடலாம், தமிழன் கை ஓங்குகிறது என எண்ண அலைகள் மோதியதின் விளைவாக இவர்கள் வாக்குரிமை பறிக்கப்பட்டது.

இவர்கள் இலங்கைத் தீவை, செல்வந்த நாடாக்கிக் கொண்டிருக்கும் வறியவர்கள். இவர்கள் ஊதியம் குறைவானது. வேலை நேரங்கள் ஏறி இறங்கிய வண்ணம் செல்கிறது. கல்வி வசதிகள் மிக மட்டமானது. தென் கிழக்காசியாவில் ஜப்பானுக்கு அடுத்த தரமான கல்வி வழங்கும் நாடு சிறிலங்கா என உலக அரங்கில் தம்பட்டமடிக்கும் இவ்வேளை, தோட்டப் பாடசாலைகள், மாட்டுக் கொட்டில்கள் போன்றவை, தரமான ஆசிரியர்கள் இல்லை. போதிய விஞ்ஞான கூடங்கள், உபகரணங்கள் இல்லை. எத்தனையோ இன்னல்களுக்குள் இவர்கள் வாழுகிறார்கள்.

இவர்கள் வாக்குரிமை 1948, 49 சட்டத்தினால் பறிக்கப்பட்டதுடன் நிற்கவில்லை. சிறிமாவோ - சாஸ்திரி ஒப்பந்தம் போன்ற பல ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்பட்டு, கணிசமான அளவு பேரை இந்திய அரசு அரிசி மூட்டைகள் போல மீளப்பெற்றது. பலலட்சம் மக்கள் திருப்பியனுப்பப் பட்டார்கள். இவ்வாறு அனுப்பப்பட்டவர்கள் இலங்கை மண்ணைத் தவிர வேறு எந்த மண்ணையும் தொட்டு அறியாதவர்கள். அவர்களும், அவர்கள் பெற்றோர்களும் பிறந்து, வளர்ந்து, வந்த மண்ணை விட்டு வெளியேறி விட்டார்கள். இலங்கையை, தம் தாய் நாடாகக் கருதி உழைத்தவர்கள் இவர்கள் பற்றி பத்திரங்கள் யாவற்றிலும் "இந்திய வம்சாவழித்தமிழர்" எனவும் குறிப்பிட்டிருக்கிறது.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி

அவர்கள் தாமாக வரவில்லை. ஆங்கிலேயரால் கொண்டு வரப்பட்டார்கள். 1823ம் ஆண்டு சிங்கபிட்டிய என்ற கிராமத்தில் கென்றி பேட் என்பவரால் பதினான்கு தொழிலாளர் இந்தியாவில் இருந்து வரவழைக்கப்பட்டனர். கோப்பித் தோட்டத்தை அமைத்து, பெருலாபம் கண்டார். தொடர்ந்து லட் சக்கணக்கில் தமிழர்கள் இந்தியாவில் இருந்து வரவழைக்கப்பட்டனர். மொறிசஸ்சிற்கும் பிஜிக்கும் சென்ற தமிழர்கள் அந்நாட்டுப் பிரஜைகளாகக் கணிக்கப்பட்டு வாழுகிறார்கள்.

இவர்கள் மூதாதையினர் காடு கரம்பைகளுக்கூடாக கொட்டும் மழையி லும், கொளுத்தும் வெயிலிலும் வாடி வந்தனர். குடிக்கத் தண்ணியின்றிப் பலர் மடிந்தனர். மலேரியா வியாதியால், பாம்புக்கடியால் பலர் இறந்தனர். இராமேஸ்வரம் ஊடாக மத்திய மலை நாட்டிற்கு நடந்து வந்தவர்கள் பலர். இவர்கள் தரகர்களால் ஏமாற்றப்பட்டு, பணத்தைப் பறி கொடுத்து ஆசை வார்த்தைகளை நம்பி வந்தார்கள். இவர்களில் இறந்தவர்களின் சடலங்கள் பிராணிகளுக்கு உணவாகின. சில சந்தர்ப்பங்களில் பச்சிளம் பாலகன் பாலின்றிப் பசியால் வாடி இறந்த இடத்து, அதன் சடலத்தைக் காட்டில் விட்டு விட்டுக் கண்ணீரும் கம்பலையுடனும் பயணத்தைத் தொடர்ந்தனர். நூற்றிற்கு நாற்பது வீதம் இறந்தார்கள். 1841 - 1849 இடையில் மட்டும் எழுபதினாயிரம் பேர் இறந்ததாகக் கூறப்படுகிறது.

இத்தனை இன்னல்கள் மத்தியில் வந்தவர்களைத் திருப்பியனுப்புவது மனித அடிப்படை உரிமைகளை உதறித்தள்ளும் முயற்சியேயாகும். எத்த னை பேச்சு வார்த்தைகள் நடந்தன. 1953ம் ஆண்டு ஜூன் மாதத்தில் லண்டனில் இந்தியப் பிரதமர் நேருவும் இலங்கைப் பிரதமர் டட்லி சௌநா யக்காவும் நாடற்ற பிரஜைகள் கெதிபற்றி ஆராய்ந்தனர். 1954ல் நேருவும் இலங்கை பிரதமர் கொத்தலாவலையும் பேசினர். எந்தவித பலனையும் அளிக்கவில்லை.

உலகரங்கில் இந்தியா தனது வம்சாவழி மக்களைக் கண்டு கண்ணீ விடும் வேளை அதாவது 1964ம் ஆண்டு அக்டோபர் மாதம் 24ம் திகதி இந்தியப் பிரதமர் சாஸ்திரியும் சிறீலங்கா பிரதமர் சிறிமாவும் ஒப்பந்தம் ஒன்றைச் செய்தனர். இவ்வுடன்படிக்கையிள்படி பத்துலட்சம் மலையகத் தமிழரில் பாதிக்கு மேல் பதினைந்து வருடங்களில் இந்தியா தன்நாட்டிற்கு வரவழைத்துக் கொள்ளுமென முடிவு செய்யப்பட்டது.

இவ்வொப்பந்தங்கள் மனித அடிப்படை உரிமைகளை ஊதாசீனம் செய்தன. மக்கள் விருப்பு வெறுப்புக்கள் கவனத்தில் எடுக்கப்படவில்லை. உண்மையான நிலை அவர்களுக்கு விளங்கப்படுத்தப்படவில்லை. இவர்க ளுக்கு ஆசை வார்த்தைகளைக் கூறி இந்தியா எடுத்து சென்றது. சர்வதேச மனித உரிமைச் சாசனம் (1948) படி "தேசிய இனத்துக்குரிய உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு. ஒருவரது தேசிய இனத்துவம் வேண்டு மென்றே பறிக்கப்படுகிறதோ, அல்லது அவரது தேசிய இனத்துவத்தை மாற்றிக் கொள்வதற்குள்ள அவரது உரிமையை மறுப்பதோ கூடாது" என்கிறது.

இன்று மலையகத்தில் வாழும் தமிழரின் ஒருபகுதியினர் தமிழீழப் பிர தேசங்களில் குடியேறி இருக்கிறார்கள். மற்றுமொரு பகுதியினர் மலையகத் தில் தொடர்ந்து இருக்கிறார்கள். இவர்கள் தொண்டமான் போன்ற தலை

வர்களது அரசியல் விளையாட்டிற்கு நகர்வு காய்களாக இருப்பது போலவும் தோன்றலாம்.

1977ல் தமிழீழ கோரிக்கை முன் வைக்கப்பட்ட போது கூட்டணித்தலைவர்களான எஸ் ஜே வி செல்வநாயகம், ஜி ஜி. பொன்னம்பலம் அதனை ஏற்றுக் கொண்டனர். தொண்டமான் அதனை அன்றே ஏற்க மறுத்தார். மலையகத்தில் இருக்கும் தமிழ் மக்கள் எதிர்கால வாழ்வைப்பற்றித் திட்டவட்டமான கொள்கைகள் தொண்டமானிடமோ, செல்லச்சாமியிடமோ ஏனைய தொழிலாளர் காங்கிரஸ் தலைவர்களிடமோ இருப்பதாகத் தெரியவில்லை. ஆளும் கட்சியையும் அணைத்து எதிர்கட்சியுடனும் முறைக்காது எத்தனை நாட்களுக்கு இவர்கள் இப்படி வாழ வேண்டும். இதற்கு ஒரு விடிவே கிடையாதா?

ஒரு இனத்தின் மொழியுரிமையைப் பறிப்பதன் மூலம், அந்த இனத்தினையே வேரோடு அழித்துவிடலாம். சிங்களம் மட்டுமே அரசகரும மொழி எனும் சட்டம் 1956ம் ஆண்டு ஜூன் மாதம் 5ம் திகதி பிரதமர் எஸ். டபிள்யூ ஆர் டி பண்டாரநாயக்காவினால் பாராளுமன்றத்தில் அறிமுகமாக்கப்பட்டது. இலங்கைத்தீவில், அரசகரும அலுவல்கள் யாவும் சிங்களத்தில் நடைபெறும். படிவங்கள் யாவும் சிங்களத்தில் இருக்கும். அரச உத்தியோகம் பெறவிரும்புவோர் சிங்களம் எழுத, பேச, வாசிக்கத் தெரிந்திருக்க வேண்டும் என்றது. ஏற்கனவே அரசாங்கத்தில் இருக்கும் ஊழியர்களுக்கு அவகாசம் வழங்கப்பட்டது. சிங்களப் பயிற்சி பெறாதவர்கள் வருடாந்த சம்பள உயர்வுகள், பதவி உயர்வுகள் தடுத்து நிறுத்தப்பட்டன. சிங்களப் பிரதேசத்தில் சிங்களம் அரசகரும மொழியாக்கப்படுவதில் ஓரளவு நியாயம் இருக்கிறது. ஆனால், தமிழ் பிரதேசங்களில், உலகில் வளர்ந்த மொழிகளில் ஒன்றான தமிழ் மொழி விருட்சம் போல இருக்க, வளர்ந்து வரும் மொழி யொன்று அதன் இடத்தை எடுப்பது நியாயமா?

தமிழும் சிங்களமும் சம உரிமை பெற வேண்டும் என, தமிழத் தலைவர்கள் மட்டுமல்ல, சிங்கள இடதுசாரித்தலைவர்களும் குறிப்பிட்டனர். கனடா போல இரு மொழிகளும் சம அந்தஸ்து பெறவேண்டும் என்றனர். கனடாவில் பிரஞ்சு மொழி பேசுபவர்கள் பெருமளவு ஒரு மாகாணத்தில் வாழுகிறார்கள். கனேடிய மக்கள் தொகையில் நாலிலொரு பங்கு இருக்கிறார்கள். ஆனால், பிரஞ்சும் ஆங்கிலமும் உத்தியோக மொழிகளாக அரியாசனம் ஏறியுள்ளன.

சம உரிமை கோரி வந்த லங்கா சமசமாஜ கட்சித் தலைவர் டாக்டர் என்.எம். பெரேரா 1960 ம் ஆண்டு எட்டியாந்தோட்டையில் பேசுகையில் தனது சம உரிமையென்பது தமிழுக்கு ஓரளவு பாவனை உரிமையென விளக்கம் கொடுத்தார். அதாவது தமிழ் வடகிழக்கு மாகாணங்களில் மட்டும் உத்தியோக மொழியாக சிங்களத்துடன் இருக்கும் என்றார். 1942ல் பொதுவுடமைக் கட்சி தனது பிரகடனத்தில் "தமிழர் இலங்கையில் ஓர் தனித்துவம் பெற்ற தேசிய இனம். அவர்களின் பாரம்பரிய தாயகம் வட-கிழக்குப்பகுதிகள். இதைத்தமிழர் ஆள, ஏற்ற அரசை அமைத்துக் கொள்ள லெனினிச கோட்பாட்டின்படி, சுய நிர்ணய உரிமையை அனுபவிக்க தமிழனுக்கு உரிமை உண்டு. அவசியமானால் அவர்கள் பிரிந்து தனது தனித்துவமான அரசை உருவாக்க உரிமை பெற்றார்கள்" என்று குறிப்பிட்டது.

யு.என்பி கட்சி தமிழுக்கும் சிங்களத்திற்கும் சமவுரிமை பேசியது. யு. என். பி. கட்சியின் தலைவர்களில் ஒருவரான சேர். யோன் கொத்தலாவலை கொக்குவிலில் பேசுமிடத்து, தமிழும் சிங்களமும் சம உரிமை பெறுமென் றார். திரும்பிக் கொழும்பு சென்றதும் கைவிடப்பட்டது. களனியாவில் நடை பெற்ற யு. என். பி என அழைக்கப்படும் ஐக்கிய தேசியக்கட்சி மாநாட்டில் சிங்களம் மட்டுமே ஆட்சி மொழியெனத் தீர்மானித்தது. 1956ம் ஆண்டில் சிங்களம் மட்டுமே ஆட்சி மொழியென, சிறீலங்கா சுதந்திரக் கட்சி மசோ தாவைக் கொண்டுவர ஐக்கிய தேசியக்கட்சியும் ஏற்றுக் கொண்டது. இடது சாரிக் கட்சியைச் சேர்ந்த கொல்வின் ஆர் டி சில்வா கூறுகையில் "சிங்க ளம் மட்டும் என ஒரு மொழி ஆட்சி மொழி என்றால் இருநாடுகள் மலர லாம்" என்றார்.

பண்டா - செல்வ நாயகம் ஒப்பந்தம் ஒன்று 1957ம் ஆண்டு யூலை மாதம் 26ம் திகதி கையொப்பமிடப்பட்டது. பிரதமர் பண்டாரநாயக்காவும், தமிழரசுக்கட்சித் தலைவர் செல்வநாயகமும் நியாயமான அளவு தமிழ் உப யோகத்துடன் சிங்களம் ஆட்சி மொழி என ஏற்றனர். இந்நிலையிலும் சிங்களம் தான் ஆட்சி மொழி- ஆனால், தமிழும் ஓரளவு பாவிக்கலாம் எனக் கூறப்பட்டது. புத்தபிக்குகள் பலர் தமிழனிடம் சிங்கள இனத்தை விற்று விட்டதாகக் கூக்குரல் இட அந்த ஒப்பந்தமும் தண்ணீரில் எழுதிய எழுத்துப் போலானது. 1944ல் ஜி.ஜி பொன்னம்பலம் சிங்களம் 50வீதம். தமிழ் 50வீதம் என, சம உரிமை கேட்ட காலம் போய் 1957ல் நியாயமான அளவு தமிழ் உபயோக உரிமை கூட கைவிடப்பட்டது.

1965ல் யு என் பி ஆட்சியில் இருக்கும் போது பிரதமர் டட்லி சேனநா யக்காவுக்கும் - தந்தை செல்வாவுக்கும் இடையே ஒப்பந்தம் ஒன்று ஏற்பட் டது. அப்போது தமிழரசுக் கட்சி, ஆளும் கட்சியான யு. என். பி. யுடன் இணைந்து, சிறிது காலம் இருந்தது. திருச்செல்வம் Q. C அவர்கள் உள்ளூராட்சி அமைச்சராக இருந்தார். மாகாண சுயாட்சி, மொழி உரிமை பற்றிப் பேசப்பட்டது. நடைமுறையில் எதுவும் பலனைத் தரவில் லை. முன்னாள் அமைச்சர் திருச்செல்வம் எமது நூல் ஒன்றை வெளியிட்டு வைக்க கண்டிக்கு வருகை தந்திருந்தார். இவ் வெளியீட்டு விழா, பேரா- தனை றெஸ்ற் கவுஸ்சில் நடைபெற்றது. அவ்வெளியீட்டு விழா முடிந்ததும் மாகாண சுயாட்சி பற்றிக் கருத்துக்கேட்டேன். அவர் அன்று உள்ளூராட்சி அமைச்சராக இருந்தது மட்டுமல்ல தமிழரது நலனைக் காக்க உதவவேண் டியவராகவும் இருந்தார். அவர் கூறிய கருத்துக்கள் இன்றும் எனக்கு ஞாப கத்தில் இருக்கின்றது. "தம்பி! அவர்கள் (அமைச்சர்கள்) காலை ஒன்று சொல்வார்கள் மாலை அதற்கு மாறாக வேறொன்று சொல்வார்கள் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்" என்றார். அவரது பேச்சில் சிறிதள வு நம்பிக்கை இருந்த போதிலும் அவரது தொனியில் தள்ளாட்டம் காணப் பட்டது. எஸ். எல் எப் பி அரசு சமாதான ஒழுங்குகள் செய்யுமிடத்து யு. என். பி கட்சி சிங்களக் காடையர்களைத் தூண்டிக் குளப்பியது. யு. என். பி. கட்சி சிறு சலுகைகள் வழங்க முன்வந்த போது எதிர்க் கட்சிகள் அத னை முறியடித்தன. அந்த யு என் பி - எஸ் எல் எப் பி எனும் இரு யானைகள் சண்டையிடுமிடத்து பொதுத்தமிழ் மக்கள் புல்லைப் போல நசுக்கப்பட்டனர்.

சிறீலங்கா அரசு தமிழை, தேசிய மொழிகளில் ஒன்றாக சிங்களத்துடன் ஏற்க மறுத்தது. சிங்களம் தான் தேசிய மொழி. தமிழ் வட கிழக்கு் பாவ னைக்குரிய மொழியாக இருக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டது. இதன் அடிப்படை நோக்கு சிறீலங்காவில் சிங்கள மக்களே தேசிய இனத்தைச் சேர்ந்தவர்கள். சிங்களம் மட்டுமே அரச கரும மொழியாகும் தகுதியுடை யது. சிறுபான்மையினர் என அழைக்கப்படும் தமிழ், முஸ்லீம், மலே, பறங்கி இன மக்கள் சிங்கள மக்கள் தயவில் வாழ வேண்டும். அவர்க ளுக்கு ஆங்காங்கு நாய்க்கு எலும்புத்துண்டு போடுவது போல, சலுகைகள் வழங்கப்படலாம். அச்சலுகைகளைத் தம் உரிமைகளாகக் கருதுமிடத்து அவை குறைக்கப்படும் அல்லது பறிக்கப்படும் என்ற உணர்வு அவர்களிடம் நன்கு வேரூன்றி இருக்கிறது. சிங்களம் மட்டுமே தேசிய, அரச கரும மொழி என்ற சட்டத்தில் கை வைக்க, அச்சட்டத்தைக் கொண்டு வந்த பண் டாரநாயக்காவினாலேயே முடியவில்லை. ஒரு கால கட்டத்தில் பண்டார நாயக்கா தனிச்சிங்கள சட்டம் நியாயமற்றது என்பதை நன்கு உணர்ந் திருந்தார். 1957 - 1958ல் அவர் நிகழ்த்திய பாராளுமன்ற உரைகளில் அதன் பிரதிபலிப்பைக் காணக் கூடியதாக இருந்தது.

ஆட்சியைக் கைப்பற்ற இனத்துவேசம் ஓர் தாரக மந்திரமாக இருந் தது. அவர்களுக்கு இன வெறியை ஊட்டினர், சிங்களத்தின் காலவர் என்ற உணர்வை ஏற்படுத்தினர், தெருவெங்கும் புத்த விகாரைகளைக் கட்டி னர், மிகுந்தலை போன்ற இடங்களில் விகாரைகளைப் பெருப்பித்துக் கட்டினர். உலகில் கீனயான புத்தமதம், மகாயான புத்தமதத்தை விடச் சிறந்தது என்ற உணர்வையும் ஊட்டினர். சிங்கள மக்கள் தமிழரை ஓர் வினோத கண்ணோட்டத்துடன் பார்க்கத் தலைப்பட்டனர். தமிழன் உயர்ச்சி யே தமது வளர்ச்சிக் குறைவுக்குக் காரணம் என எண்ணினர். தமிழன் தனது நாட்டில் சீருடனும் சிறப்புடனும் வாழ்வதை அவனால் பொறுக்க முடியவில்லை. தமிழனை நசுக்கத் தமிழை நசுக்கவது ஓர் நல்லதொரு கருவியாக அவர்களுக்குத் தென்பட்டது.

சிறிலங்கா அரசில் ஆட்சி புரிந்துவரும் இரு முக்கிய கட்சிகளும் இரு குடும்பப் பரம்பரையை மையமாகக் கொண்டு வந்தன. பண்டாரநாயக்கா குடும்பம் எஸ்.எஸ்.எவ்.பி.யை வழி நடத்தி வருகிறது. பண்டாரநாயக்கா சுட்டுக் கொல்லப்பட்டபின் அவர் மனைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா கட்சித் தலைவரானார், பிரதமராகக் கடமையாற்றினார். பண்டாரநாயக்கா எதிர்பார்த்ததுபோல அவர் மகன் அனுரா பண்டாரநாயக்கா ஆழமான அர சியல்வாதியாகவில்லை. தமிழ் நாட்டில் கருணாநிதியால் தன் வாரிசாகத் தள்ளப்பட்டுவந்த அவர் மகன் லெனின் போல ஆகிவிட்டார். அரசியல் ஞானமற்ற இவர்கள் குடும்பச் செல்வாக்கை முன்வைத்து அரசியலில் ஓடு கிறார்கள். பண்டாரநாயக்காவின் மகள் சந்திரிகாவை சிறிலங்கா அரசியல் நிலைப்பாடுகள் ஈடுபடவைத்தது. அவர் விரும்பி மணம் முடித்த நடிகர் குமாரதுங்காவைக் கொன்றனர். அவர் அரசியல் களத்தில் நீண்டகாலம் இருக்க முடியவில்லை. அவர் மனைவி அரசியலில் தீவிரமாக ஈடுபட்டு இன்று ஆட்சியைக் கைப்பற்றியுள்ளார். இவர் கொள்கைகளில் குறிப்பாகத் தமிழரைப் பொறுத்த நிலைப்பாட்டில் மாற்றம் இருப்பதாகச் சிலகாலம் சில அரசியல் தலைவர்கள் இலவு காத்த கிளிபோல் நம்பி ஏமாந்தனர். அதற்கு,

அவரது சுயசிந்தனை மட்டும் காரணமாக இல்லை. வேறு பல அரசியல் பின்னணிகளும் காரணமாக உள்ளன. இவர்கள் அனைவரும் ஒரே குட்டை யில் ஊறிய மட்டைகள். யு.என்.பி.யில் டி.எஸ்.சௌநாயக்கா, மருமகன் கொத்தலாவலை, மகன் டட்லி சேனநாயக்கா என, குடும்பத்தினுள் தலை-மைப்பீடம் சிக்கிக் கிடந்தது. 1965ம் ஆண்டிற்குப் பின் பொதுமக்களைக் கவரக்கூடிய பேச்சாளராகப் பிரேமதாசா மிளிர்ந்தார். அவரால் பல பாட்டா ளி வர்க்கத்தினரை யு.என்.பி. க்கு இழுக்க முடிந்தது. தொழிலாளர் காவ லர்கள் எனக் கருதப்பட்ட பொதுவுடமைக் கட்சிகள் சிறிமாவுடன் கூடி ஆட்சி நடத்திய காலத்தில் தாம் முதலாளிகளாக மாறினார்களே தவிர தொழி லாளர்களை மறந்தனர். பொதுவுடமைக் கட்சியைச் சேர்ந்த பிற்றர் கென மன் அமைச்சரானதும் தன் அந்தஸ்தை உயர்த்தினார். பெரும் முதலாளி யானார். பதவிப் பசியினைத் தீர்க்க அறுசுவை அதிகாரங்களைப் பெற்று அனுபவித்தார். தமிழருக்காகக் குரல் கொடுத்த காலங்களையெல்லாம் மறந்தார். டாக்டர் என்.எம். பெரேரா தொழிலாளர் நலன் கருதி இருபத் தொரு கோரிக்கைகளை முன் வைத்துப் போராடினார். தான் நிதி அமைச்ச ராவதற்காக, சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆட்சியில் வந்தபோது அக்கோ ரிக்கைகளைக் காற்றில் பறக்க விட்டார். தொழிலாளரை எவ்வாறு வேலை நிறுத்தம் செய்யாது வைத்துக் கொள்வதென்பதில் தொழிற் சங்கத் தலை வர்களைப் பின்கதவால் சந்தித்ததாகவும் கூறப்பட்டது. இந்நிலையில் தொழிலாளர்கள் மனமுடைந்திருந்தனர். 1965ம் ஆண்டு தேர்தலுக்குப் பின் பிரேமதாசா, தொழிலாளர் நலனில் அக்கறை காட்டிவர அவர் வளர்ச்சி யைப் பழுத்த யு.என்.பி. அரசியல்வாதிகளால் ஜீரணிக்க முடியவில்லை. கண்டிப் பாராளுமன்ற உறுப்பினராக நீண்டகாலம் இருந்து வந்த சேனநா யக்கா போன்றவர்கள்கூட பிரேமதாசாவின் சொற்கேட்க வேண்டியிருந்தது. பிரேமதாசா கட்சியின் தலைவரானார். சண்டித்தனம் மக்கள் மத்தியில் பீதி யை ஏற்படுத்தியது. அவர் ஆட்சி முடிந்து டி.பி. விஜயதுங்க ஆட்சிக்கு வந் தார். அவர் மற்றுமொரு இனத்துவேசி. முன்பொருமுறை கே.என்.பி.ராஜரத் தினா என ஓர் பாரகளுமன்ற உறுப்பினர் இருந்தார். இவரது பேச்சிலும் நடையிலும் ஒட்டுமொத்தமாக, தமிழினத்தை இந்து சமுத்திரத்தில் தள்ளி விட வேண்டும, தமிழ்த் தலைவர்கள் தோலை உரித்து செருப்புத் தைத்து அணியவேண்டுமெனப் பொருட்படச் செயலாற்றினார். அவரைப்போல டி.பி. விஜ யதுங்க சிங்கள மக்கள் உள்ளக்கிடக்கைகளை அப்பட்டமாக வெளிக் கொணர்ந்தார். ஒரு வகையில் டி.பி. போன்றவர்கள் வரவேற்கத்தக்கது.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனா போன்ற அரசியல்வாதிகள் ஆழமானவர்கள். திட் டம் போட்டுத் தமிழரை அழித்து வந்திருக்கிறார்கள். அவர்கள் போட்ட குடி யேற்றத் திட்டங்கள் தமிழ்ப் பிரதேசங்களைப் படிப்படியாகச் சூறையாடி வருகின்றன. தாம் ஆட்சியில் இல்லாவிட்டாலும் கூட அதே திட்டங்கள் அமுலாக்கப்பட்டு வருகின்றன. அத்தகைய கெட்டித்தனமற்ற டி.பி. வெளிப் படையாகத் தம் உள்ளக்கிடக்கைகளைத் தெரிவிக்கிறார். அமெரிக்காவை எதிர்ப்பவர்களில் லிபியாவின் கடாவியும் ஒருவர். இவரது ஸ்திரமற்ற நிலை யைப் பயன்படுத்தி அமெரிக்கர்கள் அவரது ஆட்சி நிலைத்திருப்பதை மறை முகமாக விரும்புகிறார்கள். லிபியத் தலைவர் இன்று நண்பனாகத் தழுவிய வனை நாளை எட்டி உதைக்க வல்லர். எகிப்துடன் கூடிக் குலாவி இருந்த

கடாவி, திடீரென எகிப்தைத் தாக்கினார். எகிப்தியத் தலைவர் சடாட்டைச் சாடினார். " எகிப்து ஒரு நாடு. தலைவர் அற்று இருக்கிறது. நான் ஒரு தலைவன். நாடற்று இருக்கிறேன். எனவே, இரு நாடுகளையும் இணைப்போம்" என்றார். இதில் லிபியா வெறும் பாலைவனம் என்றும், எகிப்தைச் செல்வம் கொழிக்கும் நாடு என்றும், எகிப்தின் தலைவர் சடாட்டைத் தலைவராகத் தகுதியில்லை என்றும் கூறினார். இப்படிப்பட்ட குழறுபடியானவர் கடாவி. அமெரிக்கருக்கு நன்கு தெரியும், தமக்கெதிராக இஸ்லாமியத் தீவிரவாதிகள் இருக்கத்தான் செய்வார்கள். அத்தீவிரவாதிகளுக்குப் பதில் கடாவியைத் தலைவனாக இருக்க வைத்தால் அதிக தீங்கு தமக்கு ஏற்படாது எனவும் கருதுகிறார்கள். இதனாலேயே வெளிப்படையாகக் கடாவியை எதிர்ப்பதாகக் காட்டிக் கொண்டு உள்ளார்ந்த ரீதியில் அவர் உயிருக்கு ஆபத்து வரும் நேரங்களில் காபாந்து பண்ணி வருவதாகவும் நம்பப்படுகிறது. அதேபோல இஸ்ரேலியர்கள் பலஸ்தீனிய விடுதலை இயக்கத் தலைவர் அரபாட்டையும் காபாந்து பண்ணி வருகிறார்கள். பல சந்தர்ப்பங்களில் அரபாட்டை இஸ்லாமியத் தீவிரவாதிகள் கொல்ல முயன்றபோது இஸ்ரேலிய உளவுப் படையினர் தகவல் கொடுத்து அவரைக் காப்பாற்றியதாகவும் கூறப்படுகிறது. இவ்வாறான சர்வதேச அரசியல் நிலை கொண்டு பார்க்குமிடத்து டி.பி விஜயதுங்காவின் நிலை, நன்கு புலனாகும்.

டி.பி.விஜயதுங்க தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் தொண்டமானை ஏறிட்டுக்கூடப் பார்க்கவில்லை. யு.என்.பி.க்கு மலையக வாக்குகளை ஜனாதிபதித் தேர்தலில் பெற்றுக் கொடுத்த தொண்டமானை, பிரேமதாசா மதிப்புக் கொடுத்து வைத்திருந்தார். தமிழர் பிரச்சினை பற்றிப் புலிகளுடன் கதைக்கிறேன், தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண வெளிநாடுகளில் கதைக்கப் போகிறேன் என்று தொண்டமான் கூறியபோதெல்லாம், இந்தப் பையன் ஏதோ சிறிய விளையாட்டுப் பொம்மையை முறுக்கி விளையாடுகிறான், விளையாடட்டும் என விட்டு வைத்தார் பிரேமதாசா. டி.பி.விஜயதுங்காவைக் காண, கதைக்கப் பல நாட்கள் தவம் கிடந்தார் தொண்டமான். அன்று ஐரோப்பாவில் மதத் தலைவரைக் காண, கொட்டும் பனியில் அரசன் ஒருவன் காவல் கிடந்தது போலக் காவல் கிடந்தார். டி.பி. கதைக்க மறுத்தார். தொண்டமானும் தன் பதவி பறிபோய் விடுமோ என்று பின்னால் சென்று பார்த்தும் முடியவில்லை. தொண்டமானின் நல்ல காலம் தென் மாகாண சபைத் தேர்தலில் யு.என்.பி. மண் கவ்வியது. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தொண்டாவின் உதவி தேவைப்பட்டது. பிளேட்டை மாற்றினார். டி.பி.விஜயதுங்கா தொண்டமானைக் கட்டித் தழுவினார். ஓராண்டு ஊடலுக்குப்பின் புது உறவு கொண்டாடினார். உவகையூட்டும் உன்னத உறவு. விஜயதுங்கா தரிசனத்தைக் காத்திருந்த தொண்டாவுக்குக் கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்தது மட்டுமல்ல ஞானப் பழத்தையும் அள்ளிக் கொடுத்தது போன்ற பெருமிதம். பிரேமதாசாவின் ஆட்சிக் காலத்தில் நாலு புறமும் நன்கு அடைக்கப்பட்ட வேலிக்குள் உள்ள தோட்டத்தில் துள்ளித் திரிந்த கன்றுக்குட்டிபோல இருந்தவரை, டி.பி. விஜயதுங்கா பட்டமரத்தில் கட்டி வைத்த காளை போலக் கலங்க வைத்து விட்டதை மறந்து புதிய உறவு கொண்டாடினார். ஏன்? மற்றுமொரு காரணம். கட்டுப் பாட்டிலிருந்த காளை வாலை முறுக்கிய போதும் கட்டவிழ்க்கப்படாத போது புறங்காலால்

எட்டி உதைத்துப் பார்த்தது. அயல் வீட்டு அம்மாவுடன் புது உறவு கொண்டாட மத்திய மாகாண சபையில் காமினியுடன் நடு இரவில் நடமாட்டம் செய்து பார்த்தது. காமினித் தம்பியோ காலை வாரிவிட்டு யு.என்.பி.யுடன் மீண்டும் சேர்ந்தார். ஆப்பு இழுத்த குரங்கு போலத் தத்தளிக்கும்போது தான் தென் மாகாணத்தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் எனப் பல தேர்தல் காற்றுக்கள் வீசத் தலைப்பட்டன. தொண்டமானைத் தழுவி, டி.பி.விஜய துங்க "நண்பன்" எனக் கூறினார். இது நல்லதொரு சின்ன உதாரணம். எவ்வளவு தூரம் தமிழ்த் தலைவர்கள் தலை கீழாக நின்றாலும் சிங்கள மக்கள் தயவில்தான, அவர்களால் அரசியலில் நிலைத்து நிற்க முடியும். சுயமாகத் தம் உரிமைகளைப் பெறவோ காபாந்து பண்ணவோ முடியாது. இங்கு நாம் ஓர் உண்மையை உணர மறுக்கிறோம். சிங்களத் தலைவர்களிடம் எத்தனையோ பதவிப் போட்டிகள் இருக்கின்றன. ஒருவரையொருவர் தாக்குகிறார்கள். ஆனால், தமிழனைப் பூண்டோடு அழிப்பதில் அவர்களிடம் வேறுபாடு இல்லை. இருக்கும் ஒரே வேறுபாடு எப்படி உலக நாடுகளிடம் நல்ல பிள்ளைக்கு நடித்து, கைக்கூலிகளாகச் சில தமிழ்த் தலைவர்களை வைத்துக் கொண்டு தமிழரை ஒதுக்குவதென்பதேயாகும்.

# கல்வித் துறையில் பாரபட்சம்

தமிழர் கல்வி நிலையைப் பற்றிச் சிந்திக்கும்போது மத்திய கிழக்கில் யூதர் மத்தியில் கூறப்படும் பகிடி ஒன்றுதான் ஞாபகத்திற்கு வருகிறது. இப் பகிடி மூலம் நான் எந்த வகையிலும் அரபியர்களை நையாண்டி பண்ணுவதாகக் கருதிவிட வேண்டாம். சந்தையில் அரபு மூளையும் யூத மூளையும் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன. ஒரு வெளி நாட்டவன் இரண்டின் விலையையும் கேட்டபோது யூத மூளையின் விலை 5டொலர்கள் ஒரு கிலோஎடைக்கு என்றார். அரபு மூளை என்ன விலை எனக் கேட்ட போது அது 30 டொலர்கள் கிலோ எடைக்கு என்றார். அருகில் நின்றவன் என்ன இந்தப் பாரபட்சம் எனக் கருதி விற்பவனைக் கேட்டான், ஏன் யூத மூளை இவ்வளவு மலிவாக விற்கப்படுகிறது? அதற்கு அந்த வியாபாரி யூத மூளை நன்றாகப் பாவித்துச் சக்கையாகிவிட்டது. அதனால், அதில் அதிக பலன் இல்லை. மற்ற மூளை அதிகம் பாவிக்காமல் புத்தம் புது மூளையாக இருக்கிறது என்றார். இந்தப் பகிடி அரபு மக்கள் மனதைப் புண்படுத்துவ தாக இருக்கிறது. ஆனால், யூத மூளை பற்றிக் கூறிய கருத்து எவ்வளவு தூரம் அவர்கள் மூளைப் பலத்தால் முன்னேறியிருக்கிறார்கள் என்பதை நன்கு சித்தரித்துக் காட்டுகிறது,

தமிழன் மூளைப் பலத்தில் உறுதியான நம்பிக்கை கொண்டிருக்கி றான். நான் தமிழனாகப் பிறந்ததில் என்றும் பெருமைப்படுகிறேன். என் உடன் பிறப்புக்கள் என் மூதாதையோர் பலர் என்னை விட எத்தனையோ மடங்கு மூளைப்பலத்தால் முன்னேறியிருக்கிறார்கள். மட்டுப்படுத்தப்பட்ட வசதிகள், சூழல்கள் மத்தியில் கூட அவர்கள் அளப்பரிய சாதனைகளைச் செய்திருக்கிறார்கள். தமிழனுக்குரிய சந்தர்ப்பங்கள் வாய்ப்புகள் நல்கப்பட்டி ருக்கப்படுமேயானால் தமிழன் இன்று கொடி கட்டிப் பறப்பான் என்பதில் எந்தவித கருத்து வேறுபாடும் இருக்க முடியாது.

பெற்றோர்கள் பிள்ளைகள் கல்விக்காகத் தம் வசதிகளை ஒடுக்கியிருக் கிறார்கள். வரண்ட நிலத்தில் நெற்றி வேர்வை நிலத்தில் சிந்த உழைத்துப் பெற்ற பணத்தின் ஒரு பகுதியைப் பிள்ளைகளின் கல்விக்காகச் செலவு செய்திருக்கிறார்கள். எவ்வளவு கஷ்டங்கள் ஏற்பட்டபோதும் கடன் வாங்கி யாவது தம் பிள்ளைகளைக் கல்லூரிக்கு அனுப்பிக் கற்க வைத்திருக்கிறார் கள். கற்கும் மாணாக்கரை மதித்து உற்சாகப்படுத்தியிருக்கிறார்கள். ஒரு-முறை யாழ்ப்பாணம் சென்றிருந்த கல்கி ஆசிரியர் கிருஷ்ணமூர்த்தி "யாழ்ப்பாணத்தில் நான் தடக்கி விழுந்தால் கூட ஒரு படித்தவன் மேல் தான் தடக்கிவிழ முடிகிறது" என்று குறிப்பிட்டார். தமிழன் கல்வியால் உயர்ந்தவன். அற்ப இனவாத உணர்வால் தமிழன் கல்வித் திறனை வளர்த்துத் தன் நாட்டிற்குப் பயன்படுத்துவதை, சிறிலங்கா அரசு தடை செய்து வருகிறது. மற்றவனுக்கு அபசகுனமாக வேண்டும் என்று தன் மூக்கை அறுத்த கதையாகி விட்டது.

தமிழன் கல்வியில் முன்னேறியிருப்பதைச் சிங்கள மக்கள் உள்ளார்ந்த ரீதியில் பாராட்டுகிறார்கள். என்னோடு பல்கலைக் கழகத்தில் பழகிய சில சிங்கள நண்பர்கள் தமிழன் கெட்டித் தனத்தைக் கிராமப்புற விவசாயிகள் கூட மெச்சிக் கூறியதை அறிந்திருக்கிறேன். சிங்கள மக்கள் மட்டுமென்ன

பல நாடுகளில் தமிழர்கள் திறன் பற்றி நன்கு பேசப்படுகிறது. தனிப்பட்ட ஒரு சிலரது கெட்டித்தனத்தை மையமாகக் கொள்ளாமல் பரவலாகத் தமிழர்கள் கல்வித் துறையில் முன்னேறியிருக்கிறார்கள். பொறியியல் துறையில் பலமுறை விஷேட புள்ளிகள் பெற்றவர்கள் தமிழ் மாணவர்கள். மருத்துவத் துறையில், கணிதத் துறையில் உயர் கல்வியில் சிறந்து விளங்குகிறார்கள். விஞ்ஞான ஆராட்சித்துறையில் உலக நாடுகளில் தமிழர் முன்னணியில் இருந்து வருகிறார்கள். நடுத்தரத் தொழில் நுட்பத் துறையிலும் தமிழர் தம் திறமையைக் காட்டி வருகிறார்கள். தமிழனது கல்வித் துறை முன்னேற்றம் ஆக்க வழிகளில் மட்டும் தான் பாவிக்கப்பட வேண்டுமென்பதல்ல. அநீதியை எதிர்த்துப் போராடும் வழிகளிலும் பாவிக்கப்படலாம் என்பதைத் தம்பிமார்கள், தங்கைமார்கள் உலகறியச் செய்து வருகிறார்கள். கல்வி வளர்ச்சியில் தமிழன் காட்டி வரும் ஊக்கத்தைக் கவனித்து கிறிஸ்தவ மிசன்களும், இந்து சபைகளும் பல கல்லூரிகளை அமைத்து நடத்தி வந்தனர். இவர்கள் ஊர் மக்கள் உதவியுடன் கல்லூரிகளை இயக்கி வந்தனர். ஸ்கந்தவரோதய போன்ற பெரிய கல்லூரிகள் சிறிய கட்டிடங்களில் மிகக் குறைந்த வசதியோடு பல்லாயிரக் கணக்கான மாணவர்களுக்குக் கல்வி புகட்டி வருகிறது. வேறு பல கல்லூரிகளின் வசதிகளுடன் ஒப்பிடுமிடத்து ஓர் ஆரம்பப் பாடசாலைக்குரிய வசதிகள் மட்டுமே உள்ளன எனலாம். குறைந்த முதலீட்டில், குறைந்த செலவில் பெரிய பலனைப் பெறக் கூடியதாக எங்கள் கல்லூரிகள் அமைந்துள்ளன. பெற்றோர் கல்வியில் முதலிட்டுப் படிக்க வைத்தனர். இங்கு, சீனப் பழமொழி ஒன்று ஞாபகத்திற்கு வருகிறது. பசியால் வாடுபவனுக்கு மீன் ஒன்றைக் கொடுப்பதை விடுத்து, அவனைக் கடற்கரைக்குக் கூட்டிச்சென்று மீன் பிடிக்கக் கற்றுக் கொடுத்தல் நல்லது என்கிறது. இன்று சாப்பாடு போடுபவனால் வாழ்நாள் பூராகச் சாப்பாடு போட முடியும் என்பதற்கு உத்தரவாதமில்லை. அவன் விரும்பினால் கூட எத்தனையோ தடைகள் ஏற்படக்கூடும். அவனுக்கு உழைக்க வழியைக் காட்டிவிட்டால் அவன் தன் சொந்தக் காலில் கௌரவத்துடன் நிற்பது மட்டுமல்ல கற்றுக் கொடுத்தவனுக்குக் கஷ்டம் ஏற்படுமிடத்து அவனுக்கும் உதவமுடியும். இந்த உண்மையை உணர்ந்த தமிழன் சோம்பேறியாக இல்லாமல் உற்சாகமாக உழைத்து முன்னேறி விடுவான். கல்வி கற்பது மனிதனின் அடிப்படை உரிமை. அதனை வழங்க வேண்டியது எந்த அரசின் தலையாய கடமை. வளரும் கல்விக்கு முட்டுக்கட்டையாக நின்று தடுப்பது அல்ல.

எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவின் அரசு, பாடசாலைகளில் பெரும்பாலானவற்றை தேசியமயமாக்கியது. பாடசாலைகள் அரசாங்கத்தின் நிர்வாகத்திற்கு நேரடியாகக் கொண்டுவரப்பட்டன. இதுவரை காலமும் அரசாங்கம் பாடசாலைகளை நடத்தும் நிறுவனங்களுக்கு உதவி செய்து மறைமுகமாக நிர்வாகித்து வந்தது. பாடத்திட்டங்களைத் தயாரித்து வழங்கியது. ஆசிரியர் சம்பளத்திற்கு உதவியது. பாடசாலை தனிப்பட்டவர்களாலும், சமய நிறுவனங்களாலும், ஊர் மக்களாலும் நடாத்தப்பட்டு வந்தன. மக்கள் கண்காணிப்பும், மக்கள் நேரடிப் பங்களிப்பும் கல்வி வளர்ச்சிக்குப் பெரும் உதவியாக இருந்தது. அரசு, கல்வி நிறுவனங்களைப் பொறுப்பேற்றதற்கு வெளிப்படையாகக் கூறப்பட்ட காரணம், நாட்டின் சகலருக்கும் கல்வி கற்க

சம உரிமை வழங்கப்பட வேண்டும். நாட்டிற்குப் பொருத்தமான நல்ல கல்வித் திட்டம் அமுலாக்கப்படவேண்டும் என்பனவாகும். ஆனால், உள் ளார்ந்த காரணங்கள் பல. அவற்றில் தலையானது தமிழர்கள் கல்வி வளர்ச்சிக்குத் தடை போட்டு, சிங்களப் பிரதேசங்களைக் கல்வித் துறையில் வளர்த்தெடுக்க வேண்டும். சிங்களப் பிரதேசங்களில் கல்வி பெருமளவு வளரும் வரை தமிழ்ப் பிரதேசங்களில் பெரும் செலவினங்கள் நிறுத்தி வைக்கப்படவேண்டும். தமிழர் கல்வி வளர்ச்சியின் வேகத்தைக் குறைக்கும் நோக்குடன் தேசியமயம் சிங்களமயமானது. தமிழர்கள் பாடசாலைகளில் சிங்கள ஆசிரியர்களை அமர்த்திச் சிங்களத்தை ஒரு பாடமாகக் கற்பிக்கவும் தேசியமயம் வசதியாக இருந்தது. தமிழன் வாழும் பிரதேசங்களில் மூலைக் கு மூலை பாடசாலைகள் இருப்பது அவர்கள் கண்களில் குத்தின. தமிழர சுக்கட்சி, பாடசாலைகள் தேசியமயமாக்கப்பட்டதை வன்மையாக எதிர்த்தது. இடதுசாரிக் கட்சிகள் நன்கு ஆதரித்தன. சமய நிறுவனங்கள் வன்மையாகக் கண்டித்தன. தேசியமயத்தின் விளைவாகக் கல்வியின் பொதுத் தரம் குறைந்து போனது. தனியார், தனித்தனி நிறுவனம் காட்டிய அக்கறையை அரச பணியாளரால் காட்டமுடியவில்லை. தேசியமயத்திற்குப் பின் தமிழ்ப் பிரதேசங்களில் குறிப்பாக வடமாகாணத்தில் பாரிய முதலீட்டு விழுக்கா டுகள் ஏற்பட்டன. பொது மக்கள் மத்தியில் இதன் தாக்கம் அதிகளவு புலப்படவில்லை. கல்வி நிர்வாகத் துறையில் ஈடுபட்டவர்களால் அதன் தாக்கத்தை நன்கு உணர முடிந்தது. மலையகத்தைப் பொறுத்த மட்டில் பல தமிழ்ப்பாடசாலைகள் சிங்களப்பாடசாலைகளாக்கப்பட்டன. சிங்களம், தமிழ்ப்பிள்ளைகள் மேல் ஒரு பாடமாகத் திணிக்கப்பட்டது.

## கல்வித் தரப்படுத்தல் (Standardisation)

சலுகைகளைக் கொடுத்து உரிமைகளைக் கொடுக்க மறுத்து வந்த சிறிலங்க அரசின் முகமூடி 1973ல் ஏற்படுத்தப்பட்ட கல்வித் தரப்படுத்தல் முயற்சியோடு கிழிபட்டது. "திறமைக்கேற்ப கல்வி வாய்ப்பு" என்ற திட்டம் கைவிடப்பட்டது. "கல்விக்குச் சமசந்தர்ப்பம்" வழங்கப்படவேண்டும் என்ற சர்வதேச நாடுகளின் கொள்கை மறுக்கப்பட்டது. தமிழனைப் பின் தங்கிய இனமாக மாற்றி விடும் திட்டத்தின் அத்திவாரம் இடப்பட்டது. இத்திட்டம் முற்றாக அமுலாக்கப்படுமாயின் தமிழன் அரைகுறைப் படிப்புடன் கூலி வேலை செய்யும் சமூகமாக மாற்றப்படுவான். இரு தலைமுறைக்குப் பின் னர் தமிழன் பின் தங்கிய சமூகம் தான் என்று தமிழனையே சந்தேகிக்கச் செய்துவிடுவார்கள். இறுதியில் தமிழன் சிங்கள வீடுகளில் பலாக்காய் அறுத்துக் கறி சமைத்துக் கொடுக்கத்தான் தகுதியுடையவன் என்ற நிலைக் குத் தள்ளப்பட்டுவிடுவான். கல்வியால் உலகில் பிரகாசித்த இனம் இருட் டில் தள்ளப்படுவதை எப்படித்தான் சகிக்க முடியும். ஒரு முன்னேறிய இனத்தை அழிக்கும் மிகத் தலைசிறந்த ஆயுதம் ராங்கிகளும், பீரங்கிகளு மல்ல. அந்த இனத்தின் கல்வியைத் தடைப்படுத்துவதுதான். இதனால்தான் பாகிஸ்தானிய - பங்களாதேஷ் யுத்தத்தில் பாகிஸ்தான் தோற்றபோது சுமார் 150 கல்விமான்களை வரிசைப்படுத்திக் கொன்று குவித்தார்கள். 5,000

PUBLIC LIBRARY
JAFFNA

பாமர மக்களை விட 150 கற்றவர்களால் பெறும் பயன் அதிகம். தமிழன் கல்வியில், என்று சிறிலங்கா அரசு கை வைத்ததோ, அன்றே மறைந்து மங்கிக் கிடந்த தமிழன் வீரம் வீறிட்டு எழத் தொடங்கியது. புலிப்பால் குடித் த சோழன் பரம்பரையைச் சேர்ந்த தமிழன் வீரவேங்கையானான். கிணறு தோண்டத் தொடங்கிய சிறிலங்கா அரசு பூதம் ஒன்றைக் கண்டு கொண் டது. பிரதேச ரீதியில், இன ரீதியில் கல்வி வழங்கும் திட்டத்தை வித்திட்ட வர்களில் பேராசிரியர் உடுகம முக்கியமானவர். நான் பேராதனைப் பல்க லைக் கழகத்தில் கற்கும் காலத்தில் அவரிடம் கதைத்திருக்கிறேன். அவர், பின்தங்கிய பிரதேசத்து மக்களுக்குப் போதிய கல்வி கற்கும் வாய்ப்புகள் வழங்கப்படவேண்டும் என்றார். அக்குறிக்கோளை அடையும் வரை கல்வி யில் வளர்ந்த பிரதேசங்களுக்கு இருக்கும் வாய்ப்புகள் மட்டுப்படுத்தப்பட வேண்டும் என்றார். அவரது வாதம் பொருத்தமற்றது. இலங்கைத் தீவின் இயற்கை வளம் எல்லாப் பாகங்களிலும் சிறப்பாக அமைந்திருக்கும்போது அவர் வாதம் சரியாக. இருக்கலாம். தமிழ்ப் பிரதேசங்களில் இயற்கை வளங்கள் மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் இருக்கின்றன. சிங்களப் பிரதே சங்கள் பலவற்றில் இயற்கை வளம் மிகவும் சாதகமாக உள்ளது. தமிழர் கள் மட்டுப்படுத் தப்பட்ட இயற்கை வளங்களுடன் தம் மூளை வளத்தின் உதவி கொண்டு தான் முன்னேறுகிறார்கள். அவர்கள் மூளை வளத்தை விருத்தி செய்யத் தடை செய்வதன் மூலம் தமிழினத்தைப் படுகுழியில் தள்ளிவிடுகிறார்கள்.

எமது மாணவர்கள் இரவு பகலாகப் படித்தார்கள். ரசாயனப் பாடத் திற்கு ரியூசன் ஒரு இடத்திலும் மற்றும் சில மாணவர்கள் பௌதீகப் பாடத் திற்கு இன்னொரு இடம் எனவும் இரவு பகல் கற்றுத், தொண்ணூறு புள் ளிகளைப் பெற்றும் தொழில் நுட்பக் கல்லூரிக்கோ, மருத்துவக் கல்லூரிக் கோ அனுமதி பெற முடிவதில்லை. அதே வேளை 60 புள்ளிகளோடு அக் கல்லூரிகளில் இடம் பெற்று, கற்றுப் பட்டதாரிகளாகி விடுகிறார்கள். கல் விக்குரிய வாய்ப்பு தகுதிக்கேற்ப வழங்கப்படுகிறதா அல்லது இனத்தின் அடிப்படையில் வழங்கப்படுகிறதா? என்பது தெரியவில்லை. கல்லூரிகளில் இருக்கும் இடங்களுக்கு தர அடிப்படையில் 30 வீதம் மட்டுமே ஒதுக்கப் பட்டது. மாவட்ட மக்கட் தொகை அடிப்படையில் 55 வீதம், பின் தங்கிய மாவட்டங்களுக்கான ஒதுக்கீட்டிற்கு 15 வீதமாக இருந்தது. வடமாகாணத் தில் பெருமளவு பள்ளிக் கூடங்கள் இருந்ததினால் வடமாகாணத்திலிருந்து உயர் கல்வி பெறுவோர் தொகை குறைக்கப்பட்டது. இதனால், தமிழர்கள் மிகவும் பாதிக்கப்பட்டனர். கற்றும், புள்ளிகள் பெற்றும் பயனில்லை. வேலை வாய்ப்புகள் மட்டுப்படுத்தப்பட்டன. தமிழனாகப் பிறந்தது குற்றமா என எண்ண, சிலர் தலைப்பட்டனர். இந்த நிலையில்தான் தமிழீழப் போ ராட்டத்தின் திருப்பு முனை ஏற்பட்டது. இதுஉறங்கிக் கிடந்த இனத்தைத் தட்டி எழுப்பியது.

# பொறுத்தது போதும் பொங்கியெழு தமிழா

தமிழினத்தை அழிக்கும் முயற்சியில் அடுத்தடுத்து வந்த சிறிலங்கா அரசுகள் மும்முரமாக உழைத்து வருகிறார்கள் என்பது படித்த தமிழன் தொட்டு பாமர மகன் வரை திட்டவட்டமாக 1970ம் ஆண்டுகளின் முற்பகுதியில் புலனாகிவிட்டது. சட்ட பூர்வமாகவும், சட்டத்திற்குப் புறம்பான முறையிலும் தமிழன் தாக்கப்பட்டு வருவது சர்வசாதாரண விடயங்களாகிவிட்டன. தமிழன் தனக்கெனத் தனியரசு அமைக்கவேண்டும் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டான். "கீரிமலை, திருக்கோணமலை என்ற மலைகளையும், வழுக்கையாறு, தொண்டமானாறு என்ற பெயருடைய கடல் நீரோடைகளையும் வைத்துக்கொண்டு தமிழன் எப்படிப் பொருளாதார ரீதியில் இயங்கப் போகிறான்" என்று கூறியவர்கள் கூட, தமிழனுக்குத் தனிநாடு வேண்டும் என்பதை உணர்ந்திருந்தார்கள். மேற்கொண்டு தமிழனுக்கு ஏற்பட இருக்கும் அழிவுகளைத் தடுத்து நிறுத்த வேண்டியதன் அவசியத்தை இளைஞர் சமுதாயம் நன்குணர்ந்தது. "நமக்கேன் வீண் வம்பு சிங்களவர்களுடன் ஒற்றுமையாகப் போவோம் என்று எண்ணியவர்கள் கூட, இனிமேல் அவ்வாறு வாழமுடியாது என்பதை உணர்ந்து கொள்ளத் தலைப்பட்டனர். சிங்களப் பிரதேசங்களில் வர்த்தகம் செய்தவர்கள் நிலம், வீடு வைத்திருந்தவர்கள் கூட தம்மால் தொடர்ந்து தன்மானத்துடன் வாழ முடியாது என்பதை ஏற்றுக் கொண்டனர். 1956, 1958, 1961, 1974, 1977 எனப் பல ஆண்டுகளில் ஏற்பட்ட கலவரங்களில் பலர் பாதிக்கப்பட்டதும் அவர்கள் மனநிலையில் மாற்றத்தை ஏற்படுத்தியது. தமிழன் எந்த வகையிலும் சிங்கள அரசிடமிருந்து நீதி பெற முடியாது. தன் திறமைக்கேற்ப கற்றுத் தொழில் பெற முடியாது என்பதை உணர்ந்துவிடத் தலைப்பட்டான். கோழி மேய்த்தாலும் கோரணமேந்தில் மேய்க்க வேண்டும் என்ற தமிழன் கோழிப் பண்ணை போட்டாலும் தமிழ் மண்ணில் தான் போட வேண்டும் என முடிவு செய்துவிட்டான். இந்த நிலையில் தமிழனுக்கு என ஒரு தனி நாடு வேண்டும் என்பதன் அவசியத்தை உணர்ந்தான். தமிழனுக்கு ஓர் நாடு இல்லையே என்ற குறையை ஈழத் தமிழன் உணரத் தலைப்பட்டான். உரிமைகள் பறிபோகும் வேகத்தைப் பார்க்கும் போது தமிழன் தனக்கென அரசு வேண்டும் என்பதையும் உணர்ந்தான்.

அடங்காத் தமிழன் முன்னணித் தலைவர் சி.சுந்தரலிங்கம் ஏற்கெனவே தனி நாடு ஒன்று தமிழனுக்கு வேண்டும் என்று கூறியபோது அதனை யாரும் பெரிதாகப் பொருட்படுத்தவில்லை. தந்தை எஸ்.ஜே.வி.செல்வநாயகம் தமிழரசுக் கட்சியின் சமஷ்டி ஆட்சியை வலியுறுத்தினார். அவரது கட்சி சிங்கள மக்களால் சமஸ்டிக் கட்சி என்று கூறப்பட்டாலும் "தமிழ் அரசு" என்ற பதத்தில் தமிழனுக்கு தனிநாடு வேண்டும் என்ற தொனி இருக்கத்தான் செய்தது. 1950ஆம் ஆண்டுகளில் தமிழனுக்கு சமஷ்டி ஆட்சி வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து நடத்தப்பட்ட சாத்வீகப் போராட்டங்களே மிகவும் தீவிரமானவைகளாகக் கருதப்பட்டன. 1956ஆம் ஆண்டு கொழும்பு நகரில் காலி முகத்திடலில் நடைபெற்ற சாத்வீகப் போராட்டத்தினைச் சிங்களக் காடையர்கள் சிதறடித்தனர். தமிழரசுக்கட்சி

சிங்களம் மட்டும் அரசகரும மொழிச் சட்டத்தை எதிர்த்து நடத்திய சத்தியாக்கிரகத்தை, சிங்கள மக்களால் பொறுக்கமுடியவில்லை. "சிங்களத் தீவில் கள்ளத் தோணிகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்க என்ன உரிமை இருக்கிறது?" எனக் கொதித்தெழுந்தனர். 1961ஆம் ஆண்டு யாழ்ப்பாண கச்சேரி முன்னிலையில் சத்தியாக்கிரகம் நடைபெற்றது. முதல் நாளன்று சிலநூறு மக்கள் மட்டுமே வந்திருந்தனர். இன்றைய புதிய கச்சேரி அலுவலகம் இருக்கவில்லை. வை.எம்.சி.யே கட்டிடம் கட்ட சரளைக் கற்கள் குவிக்கப் பட்டிருந்தன. முக்கிய வாசலின் முன்பு தந்தை செல்வநாயகம் பல கட்சிப் பிரமுகருடன் சத்தியாக்கிரகம் செய்தார். அதி காலை பழைய பூங்கா வாசலின் முன் டாக்டர் நாகநாதன் உட்படப் பல முக்கிய உறுப்பினர்கள் இருந்தார்கள். கல்லூரிமாணவர்களாகிய நம்மில் பலர் உறுதுணையாக, கட்சித் தொண்டர்களாக இருந்தோம். அவ்வேளை தந்தை செல்வாவைத் தாக்க முனைந்த பொலிசாரை ஏனைய பொலிசார் தடுத்து நிறுத்த, பொலிசார் பழைய பூங்கா வாசலை விரைந்தனர். பழைய பூங்காவின் உள்ளிருந்து வெளிவர இருந்த ஜீப் வண்டியை யாரும் விடாத கட்டத்தில் கண்ணீர்ப் புகை வீசி சத்தியாக் கிரகிகளைச் சாக்கடைக்குள் தூக்கிப் போட்டனர். இச் சம்பவம் நடை பெற்ற தினத்தன்று சிங்களத் தலைவர்கள் " தமிழன் எங்கள் தேசத்தைப் பிரிக்க முனைந்துவிட்டான். அவனை முளையிலேயே வெட்டி அமத்திவிட வேண்டும்" எனக் கூக்குரலிட்டனர். அன்று தமிழன் தன் மண்ணில் கூட சாத்வீக முறையில் தன் குரலை எழுப்ப முடியவில்லையே என வேதனைப்பட்டான். அன்று தன் பிரதேசம் சிங்கள ஏகாதிபத்தியத்தின் கீழ் இருப்பதை உணர்ந்தான். தமிழன் இலங்கைத் தீவில் தற்பாதுகாப்புடன் வாழ வேண்டின் தனக்கென ஒரு தேசம் வேண்டும் என்பதை வலியுறுத்தத் தலைப்பட்டான். சாத்வீகப் போராட்டங்களை அடக்கிய முறைகளைப் பாாத்த தமிழர்கள் என்ன செய்வதெனக் கலங்கி இருக்கையில் தமிழர் விடுதலைக் கூட்டணி தனது 1977ஆம் ஆண்டுத் தேர்தலில் தனி நாடு கோரிக்கையை முன் வைத்தது. தனிநாட்டுக் கொள்கையைத் தமிழர்கள் ஏற்றுக் கொண்டார்கள். 1977ஆம் ஆண்டுத் தேர்தலில் தமிழர், தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு தனித் தமிழ்நாடு பெறும் பொறுப்பை வழங்கினர். பாராளுமன்ற முறையில் விவாதித்து தமிழீழம் பெறுவதென்பது சாத்தியமற்றது. சத்தியாக்கிரகத்தினால் சிங்கள அரசியல்வாதிகள் மனத்தை மாற்றி நீதி பெறலாம் என்பது செவிடன் காதில் ஊதப்பட்ட சங்குபோல ஆகிவிட்டது. உலக நாடுகள் தலையிட்டு தமிழர் பிரச்சினை தீர்க்கப்படலாம் என யாரும் கனவு காணவில்லை. இதுவரை காலமும் தமிழரசுக்கட்சி செய்த சேவை தமிழ் மக்களிடம் தமிழ் உணர்வை ஊட்டியமையே. சிங்கள அரசின் தமிழின அழிப்புத் திட்டங்கள் செயல் முறைகளை எடுத்துரைத்து உறங்கிக் கிடந்த தமிழினத்தை விழிப்புறச் செய்தனர். ஆனால், பரினாம வளர்ச்சியில் கொள்கைத் திட்டங்களைச் செயற்படுத்தும் கட்டம் வந்ததும் ஒதுங்க மறுத்த னர். முட்டுக்கட்டையாக இருக்கச் சில சந்தர்ப்பங்களில் முனைந்தனர். "பொறுத்தது போதும் பொங்கி எழு தமிழா" என மக்களைக் குறிப்பாக, தமிழ் இளைஞர்களை விழித்தெழச் செய்துவிட்டு இறுதி ஆயுதமான போராட்டத்தினை ஆரம்பித்தபோது அனுசரித்துப் போக மறுத்தனர். புண்பட்ட சிங்கம் போல மூலையிலிருந்து கர்ச்சித்தனர். பாராளுமன்ற

முறையில் பழக்கப்பட்டவர்களுக்கு ஆயுதம் தாங்கிய போராட்டம் நடைமுறையில் சாத்தியமற்றது. சிங்கள சமூகத்தின் மத்தியில் கூட இதே சிக்கல் இருந்து வருகிறது. பொதுவுடமைவாதிகள் மத்தியில் இதேபிரச்சினை நீண்ட காலமாக இருந்து வந்தது. டாக்டர் விக்ரமசிங்க, பீட்டர் கெனமன் போன்றவர்கள் பாராளுமன்றத்தின் மூலம் பொதுவுடமை ஆட்சியை நிறுவலாம் எனக் கருதிய காலத்தில் சண்முகதாசன் போன்றவர்கள் பாராளுமன்றத்தின் மூலம் பொதுவுடமைப் புரட்சி ஒன்றை ஏற்படுத்திவிட முடியாது என்று குறிப்பிட்டார்கள். அவர்கள் பாராளுமன்ற முறையில் எள்ளளவும் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. சேகுவேரா என அழைக்கப்படும் சிங்கள இளைஞர்கள் குழு பாராளுமன்ற முறையில் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. இவ்வாறாக, இலங்கைப் பாராளுமன்ற முறையில் நம்பிக்கை இழந்து வரும் கூட்டம் கணிசமான அளவு வளர்ந்து வந்தது.

இவ்வேளை தமிழ் இளைஞர்கள், தமிழ் இனத்தைக் காக்கும் முயற்சியில் கை கொடுத்து உதவ வேண்டிய நிலைக்கு வருகிறார்கள். இவ் இளைஞர்களுக்கு இறுதி ஆயுதமான போராட்டம் தவிர வேறு எவ்வழி எதுவும் இலங்கையில் பயன்தராது என்பதைத் தீர்க்க தரிசனமாக அறிந்து கொண்டார்கள். சிறுபிள்ளை வேளாண்மை போல வீடு வந்து சேராது எனக் கருதவில்லை. இளைஞர்களுக்கு நன்கு தெரியும் கரடுமுரடான பாதைதான் போராட்டம் என்பது.. அதில் எத்தனையோ இழப்புக்களைச் சந்திக்க நேரிடும் என்பதினையும் அவர்கள் அறிந்தார்கள். ஓர் கீழைத்தேச அறிஞன் குறிப்பிட்டதுபோல "போராட்டம் என்பது இரவுப் போசன விருந்து" அல்ல.

போராட்டம் மூலம் பல உயிர்கள் இழக்கப்படும். பலர் அங்கவீனப் படுவார்கள். இளைஞர் சந்ததிக்கு மன எழுச்சிச் சிக்கல்கள் ஏற்படக்கூடும். புலம் பெயர்ந்து வாழ நேரிடும். உடமைகள் நாசமாக்கப்படும். பொருளாதாரம், கல்வி போன்ற துறைகளின் வளர்ச்சி தடைப்படும். இப்படிப் பல இழப்புக்கள் ஏற்படுவது எந்தப் போராட்டச் சூழலிலும் சகஜம். இவற்றை எல்லாம் மனதில் எடுத்துத்தான் போராட்ட திட்டம் முன் வைக்கப்படுகிறது.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி

## நெருப்பிற்கு நெருப்பு

சிறிலங்கா அரசிற்குத் தெட்டத் தெளிவாகப் புரியக்கூடிய, உணரவைக்க வல்ல மொழி, ஆயுதம் தாங்கிய போராட்டம் தான் என்பது தெட்டத் தெளிவாகத் திட்டவட்டமாகத் தமிழர் மத்தியில் பரவலாக ஏற்றுக் கொள்ளப் பட்டது. ஆயுதம் தாங்கிய போராட்டம் இறுதி வரையும் தவிர்க்கமுடியாத தொன்றாகும். போராட்டம் ஆயுதம் தாங்கிய ரூபத்தில் அமைய இருக்கிறது என்கிற உண்மையைத் தீர்க்க தரிசனமாக எமது தலைவர்களால் முன்கூட் டியே கூற இயலாமற்போய்விட்டது. தமிழர் பிரச்சினைக்குத் தமிழ் நாடொன்று அமைப்பதுதான் சரியான முடிவு என்பதை முன்கூட்டியே யூகித்து உணர்ந்த தலைவர்கள் அதனைப் பெறும் வழி வகைகள் பற்றித் திட்டவட்டமாகக் கூறிக் கொள்ள முடியாத நிலையில் இயங்கி வந்திருக்கிறார்கள்.

இக்கட்டத்தில்தான் இளைஞர்கள் தமிழர் தலைவிதியை நிர்ணயிக்கும் பணிகளில் காலடி எடுத்து வைக்கிறார்கள். இருளான எதிர்காலத்தை ஏற்க மறுத்த இளைஞர்கள் தம்மை மரபு முறை வழியில் இட்டுச் செல்ல மறுத்தனர். கல்லூரிகளுக்குப் பதிலாகக் களம்புக முடிவு செய்தனர். தமிழர் தம் தற்பாதுகாப்பிற்காகத் தம்மை அர்ப்பணிக்க முன் வந்தனர். தம்மைப் பந்த பாசம் , படிப்பு, பதவி என்ற ஆசை உணர்வுகளிலிருந்து விடுதலை செய்து, விடுதலைப் போராட்டத்தில் இறங்கினர். இளைஞர்கள் பலர் தம்மை விடுதலைக்காக அர்ப்பணிக்க முன் வந்ததினால் அவர்கள் சிந்தனை, செயல் பேச்சு மூச்சு என்பவற்றிலெல்லாம் சுதந்திர அனல் அலைகள் வீசத் தொடங்கின. வானளாவத் திட்டங்களைத் தீட்டி மேருமலை பெற்றெடுத்த எலி போல் அல்லாமல் நடைமுறைக்குச் சாத்தியமான திட்டங்களைத் தீட் டத் தலைப்பட்டனர். தமிழ் உணர்வு உடல் எங்கிலும் ஓடினாலும் உள்ளத் துணர்ச்சிகளை ஒருபுறம் வைத்துவிட்டு அறிவு பூர்வமாகச் சிந்தித்துத் திட் டங்கள் தீட்டினார்கள். வீரகாவியங்களைப் படித்துத் தாயக மண்ணை நேசிக்கக் கற்றுக் கொள்ளலாமே தவிர வெற்றிப் பாதையில் இட்டுச் செல்ல வழிவகைகள் காணமுடியாது என்பதையும் நன்கு உணர்ந்தார்கள்.

நம் விடுதலைப் போராட்டம் என்பது உலகெங்கிலும் அடக்கப்பட்ட மக் களின் போராட்டத்தினை விட்டு முரண்பட்டதாக இருக்க முடியாது என்பதையும் உணரத் தலைப்பட்டனர். அடக்கப்பட்ட இனங்கள் மாறு பட்டிருக்கலாம். ஆனால், அடக்கு முறைகள் ஒன்றுபட்டவையாக இருப்பதைக் காண முடிந்தது. 1960 ல் இருந்து பல நாடுகள் சுதந்திரப் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டு வந்ததினை உலகில் பல பாகங்களில் காண முடிகிறது. இந் நிலையில் தான் தமிழீழ மக்கள் தற்பாதுகாப்பு, அரசியல் பொருளாதாரம் கல்வி போன்ற பல அம்சங்களை மாணவர்கள் பொறுப்பேற்க வேண்டிய காலம் மலர்ந்தது.

## இயக்கங்களின் செயற்பாடுகள்

1970ல் தமிழ் இளைஞர்கள், தமிழ்த் தலைவர்கள் தமிழருக்கு விடுதலை வாங்கித்தர இயலாத நிலையில் இருப்பதை நன்கு உணரத் தலைப்

பட்டார்கள். ஏட்டிக்குப் போட்டியாக அரசியல் அறிக்கைகள் மேடைப் பிரசங் கங்கள் செய்வதை விடுத்து மறைந்திருந்து செயற்பட ஆரம்பித்தார்கள். தமிழ் மாணவர் பேரவை, தமிழ் இளைஞர் பேரவை என்கிற மன்றங்கள் அமைத்து தமிழர் விடுதலைக்காக உழைக்கத் தொடங்கினர். இப் பேரவை கள் பலமாகத் தமிழீழ விடுதலை பற்றிய கோட்பாடுகள், செயற்திட்டங் கள், போராட்ட முனைகள் எனப் பல அம்சங்களில் கவனம் செலுத்தின. சர்வதேச சுதந்திரப் போராட்ட வரலாறுகளையும் செயற்பாடுகளையும் அறிந்து கொள்ள முனைந்தார்கள். அரசியல்வாதிகளில் போராட்ட வழிக ளில் நாட்டம் கொண்டவர்களை அடையாளம் காண முற்பட்டார்கள். பதவி யைக் காக்கத் தமிழினத்தைக் காட்டிக் கொடுக்கும் காக்கை வன்னியர்க ளையும் இனம் கண்டு கொள்ளத் தொடங்கினார்கள். மக்களை வெறுமன வே திருப்பிச் செய்வதற்குப் பதில் அவர்கள் தேவைகளை உணர்ந்து செயற்பட முடிவு செய்தார்கள்.

இக்கால கட்டத்தில் இப் பேரவைகள் பல இயக்கங்களாக மாறின. புதிய இயக்கங்களும் தோன்றின. புதிய தமிழ்ப் புலிகள் இயக்கம், தமிழீழ விடுதலை இயக்கம் ஈழப் புரட்சிகர அமைப்பு, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழ் மக்கள் விடுதலை இயக்கம் எனப்பல செயற்பட ஆரம்பித்தன.

இவ்வியக்கங்களில் புதிய தமிழ்ப் புலிகள் இயக்கம் மிகக் கடுமையான கட்டுப்பாட்டுடன் மக்களோடு மக்களாக நீண்டகாலமாக இயங்கி வருகிறது. இன்று அகில உலகமெங்கிலும் தமிழீழ விடுதலைப்போராட்டம் என்றால் புலிகள் என அழைக்கப்படும் அளவிற்கு வளர்ந்திருக்கிறார்கள். 1972ஆம் ஆண்டு புதிய தமிழ்ப் புலிகள் இயக்கமாக நாமம் சூட்டப்பட்டது. 1976ஆம் ஆண்டு மே மாதம் 5ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகள் எனப் பெயர் பெற்று இயங்கி வருகிறது. இவ் இயக்கம் தீவிரமாக இயங்கி வருவதை உணர்ந்த சிறிலங்கா அரசு 1978ம் ஆண்டு மே மாதம் 19ஆம் திகதி தமி ழீழ விடுதலைப் புலிகள் தடைச்சட்டம் ஒன்றைக் கொண்டு வந்தது. இவ் இயக்கம் செயற்படுவது சட்டத்திற்கு முரணானது எனவும் குறிப்பிட்டது. அன்று ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர். ஜெயவர்த்தன 1978 செப்டம்பர் மாதம் 7ஆம் திகதி அரசியல் யாப்பு மாற்றம் ஒன்றைக் கொண்டு வந்து தமிழர் உரிமைகளை மேலும் பறித்தார். இக்கால கட்டத்தில் தமிழர் எதிர்ப்புத் தெரிவிப்பார்கள் எனக் கருதி 1979 ஜூலை 20ஆம் திகதி பயங்கர வாதத் தடைச்சட்டம் ஒன்றை அமுலாக்கினார். இச்சட்டத்தின் கீழ் எதுவித மான விசாரணையும் இன்றி எவரையும் 18 மாத காலம் சிறைக்குள் தள்ள அரசு முடிவு செய்தது. சிறிலங்கா அரசு சிறிலங்காவிலும் உலக நாடுகள் மத்தியிலும் தமிழீழ விடுதலைப் போராளிகளை பயங்கரவாதிகள் எனச் சாயம் பூசி ஏனைய நாடுகள் மத்தியில் அவர்கள் மேல் தவறான அபிப்பிரா யத்தை ஏற்படுத்தப் பெரும் தொகை பணததைச் செலவிட்டு வந்தது. அவசரகாலச்சட்டம் வருடக் கணக்கில் அமுலாக்கப்பட்டது. தமிழர்களுக்கு எந்த விதமான சட்டபூர்வமான பாதுகாப்பும் இல்லை. வெறிபிடித்த சிங்கத் தின் கூட்டில் தள்ளப்பட்ட நிலையில் தமிழர்கள் வாழ வேண்டிய கட்டத் திற்குத் தள்ளப்பட்டார்கள். பல இளைஞர்கள் ஒரே வீட்டில் இரு நாட்கள் இருந்தது கிடையாது.

சிறிலங்கா அரசினால் பொறுக்க முடியாத சம்பவம் 1983 ஜுலை மாதம் 23ம் திகதி திருநெல்வேலியில் 13 இராணுவத்தினர் புலிகளினால் சுட்டு வீழ்த்தப்பட்டனர். சிறிலங்கா அரசு விழித்தெழிந்தது, கொதிப்படைந்தது. காடையர்களைத் தூண்டித் தமிழர்களை அடித்து நொருக்கியும், கொன்றும், பெண்களைக் கற்பழித்தும், துன்புறுத்தி உடமைகளைக் கொள்ளையடித்தும் அட்டகாசம் பண்ண வைத்தது.

தமிழர்கள் பலம் பெற்று வருவதை அவதானித்து வந்த இந்தியா தலையிட ஆரம்பித்தது. இந்தியா, தமிழர் விடுதலையைத் தனக்கு ஓர் சவாலாகக் கருதியது. அதே வேளை சிறிலங்கா அரசு பலவீனம் அடையும் கட்டத்தில் பாகிஸ்தான் உதவியை மேலதிகமாக சிறிலங்கா வேண்டி நிற்கும் எனவும் கருதியது. எனவே, ஒரு கல்லில் இரு மாங்காய்களைப் பெற 1985ல் திம்பு மாநாடு ஒன்றைக் கூட்டி, தமிழ் இயக்கங்களை வரவழைத்து ஆசைவார்த்தைகளைக் கொட்டியும், மிரட்டியும் பார்த்தது. அதில் திரு. பிரபாகரன், சலுகைகள் பதவிகளை விட தமிழீழ மக்கள் விடுதலைதான் முக்கியமென வலியுறுத்தினார்.

இக்கால கட்டத்தில் கொரில்லா யுத்தமுறை வேகமாக முன்னேறிக் கொண்டு வந்தது. மக்கள் மயப்படுத்தப்பட்ட கொரில்லாமுறையின் கீழ் தான் தமிழீழ விடுதலையைப் பெறமுடியும் எனக் கருதப்பட்டது. கொரில்லா விடுதலைப் போராட்டங்கள் மக்கள் ஆதரவைப் பெற்றிருக்குமிடத்து, அதனை அழிப்பதென்பது இயலாததொன்று என்பதை ஆபிரிக்க, தென்அமெரிக்கா, தென்கிழக்காசியா நாடுகள் பல நிரூபித்திருக்கின்றன. மிக வேகமாகப் பயிற்சிகளும், ஆயுதக் கொள்வனவும், போர்ச் செயற்பாடுகளும் நடைபெற்று வந்தன.

இக்கால கட்டத்தில், இந்திய அரசின் செயற்பாடுகளில் அதிருப்தி காணப்பட்டபோதும் இந்தியத் தத்துவங்கள் நன்கு மதிக்கப்பட்டன. திரு. பிரபாகரன் அவர்கள் ஒரு முறை தமது தொடர்புச் சாதனங்களை இந்திய அரசு தமிழ் நாட்டில் பறித்தபோது சாகும் வரை உண்ணாவிரதம் இருந்தார். உரிய சாதனங்கள் திரும்பி வழங்கப்பட்டன. அப்போது ஏன் தமிழீழ விடுதலையை இலங்கையில் சாத்வீக முறையில் போராடிப் பெறக்கூடாது எனக் கேட்டபோது அவர் கூறிய விடை மிகவும் அற்புதமானது. இந்தியா சாத்வீகத்தை உணரவல்லது. சிறிலங்கா சாத்வீகத்தை உணரக்கூடியதல்ல எனப் பொருள்படக் கூறினார். இந்திய இராணுவ ஒப்படைப்புத்திட்டம் அமுலில் இருக்கும்போது திலீபன் அத்திட்டத்தின் ஐந்து அம்சங்கள் நிறைவேறும் வரை சாகும்வரை உண்ணாவிரதம் ஒன்றை 15. 09. 1987ல் ஆரம்பித்து 26. 09. 1987ல் தியாகச் சாவடைந்தார். எனவே, தமிழீழ விடுதலைப் போராட்டம் நியாயமான, நேர்மையான வழியில் நடக்கிறது என்பதைப் பல உலக நாடுகள் உணரத் தலைப்பட்டன. பயங்கரவாதம் என்ற கதையை மறுக்கத் தொடங்கின. இந்தியாவிலிருந்து வளர்ந்து செயற்பட்டு தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நடத்துவது கடினமானதென அறிந்த தமிழீழ விடுதலைப் புலிகள் 1987ல் தமிழீழத்திற்குத் திரும்பினர். சொந்த மண்ணில் இருந்து சொந்த மண்ணிற்காகப் போராட வேகமாக உழைத்தனர்.

இந்திய அமைதிப்படை 1987ல் வந்து, இருந்த அமைதியையும் கெடுத்துச் சென்றது. இந்தியா, தமிழர்கள் மத்தியில் பலமான இயக்கம் ஒன்று

இருப்பதை விரும்பவில்லை. இந்தியாவின் ஆணையை ஏற்று செயற்படக் கூடிய அமைப்புக்கள் விரும்பப்பட்டன. அவர்களின் உண்மையான வேஷம், 17 தமிழீழ விடுதலைப் போராளிகளைக் கைது செய்து சிறிலங்க அரசிடம் வழங்க முன் வந்ததிலிருந்து தெட்டத் தெளிவாகிவிட்டது. தமிழ் மக்களின் இயக்கத்திடமிருந்து ஆயுதங்களை வாங்கும்போது தமிழ் மக்கள் பாதுகாப்பை இந்திய அரசும் அதனது பாதுகாப்புப் படையும் ஏற்றுக் கொள்கிறது என்பதே அர்த்தம். வேலியே பயிரை மேய்ந்தால் வேலி எதற்கு? இந்தியா தமிழீழ மண்ணில் பெரும்ஆயுதங்களையும் பல்லாயிரக் கணக்கான இராணுவத்தினரையும் குவித்து மூக்குடைபட்ட காலத்தை இந்தியா ஊழி உள்ள வரை மறக்கப்போவதில்லை. தமிழீழ சமாதானத்திற்கு் இந்தியா உலை வைக்க முயன்றாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

மறுபுறம் கல்வி, நிதித்துறை, பொருளாதார வளர்ச்சிச் செயற்பாடுகள், கலை, பண்பாட்டு வளர்ச்சி எனப் பல துறைகளில் தமிழீழம் ஒரு தேசமாக இயங்கி வருகிறது. போரும் அன்றாட நிர்வாகமும் திறம்பட நடப்பதினைக் கண்டு சிங்களப் பொது மக்கள் மிகவும் பாராட்டுகிறார்கள்.

இக்கால கட்டத்தில் சந்திரிகா பண்டாரநாயக்கா சமாதான தேவதை எனக் கூறிக்கொண்டு பதவியைக் கைப்பற்றினார்.

## சந்திரிகாவின் தாரக மந்திரம்

சந்திரிகா, தேர்தல் என்ற பாற் குடத்தில் வாக்காளர் என்ற தயிரை, சமாதானம் என்ற மத்தால் கடைந்து ஜனாதிபதி என்ற வெண்ணெயைப் பெற்றிருக்கிறார். அவ் வெண்ணெய் உருக்கப்பட்டு நெய்யாகி வாய்க்கு எட்டுமா? என்பது பலரது கேள்வி.

சந்திரிகாவை இலங்கைத்தீவின் மக்கள் சுமார் 20 லட்சம் மேலதிக வாக்குகளை வழங்கி, சிறிலங்காவின் முதலாவது பெண் ஜனாதிபதியாகத் தெரிவு செய்திருக்கிறார்கள். மேலெழுந்த வாரியாகப் பார்க்கும்போது சமாதான தேவதை என்ற கோணத்தில் அவ் வாக்குகள் தேவர்கள் சொரிந்த பூக்களாகத் தோன்றலாம். ஆனால், ஆழமாகப் பார்க்கும்போது வேறு பல உண்மைகள் தெரிகின்றன. சிங்கள மக்கள் கடந்த 17 ஆண்டுகள் யு.என்.பி. யின் ஆட்சியின் கீழ்ப்பட்ட கஷ்ட நஷ்டங்கள் அளப்பரியன. இவ் ஆட்சி சிங்கள மக்களை, புலிகள் என்ற பூதம் வருகிறதென்று பூச்சாண்டி காட்டி, தம் இஷ்டப்படி நாட்டைச் சூறையாடி இருக்கிறார்கள். புலிகளைச் சாக்குப் போக்காக வைத்துக் கொண்டு நாட்டின் பொருளாதாரம் சூறையாடப்பட் டது. சந்திரிகா சிறிது காலத்திற்கு முன் எவ்வாறு ஆயுதங்கள் கொள்வனவு செய்யப்பட்டன, அதனால் லாபம் அடைந்த அரசியல்வாதிகள் இவ் இலா பம் வெளிநாடுகளில் எங்கே? எப்படிக் குட்டிபோடுகிறது என்ற தொனியில் கருத்துத் தெரிவித்திருக்கிறார். இந்நிலையில் முக்கிய தலைவர்கள் சிலருக் குத் தொடர்வது தமக்கு இலாபத்தைக் கொடுக்கும் முயற்சியில் பதவிகளை உயர்த்துவதாகும். போரை மையமாகக் கொண்டு அரசியற்சக்கரத்தைச் சுழற்றும் போது வேலையில்லாத் திண்டாட்டம், பொருளாதார நெருக்கடி யான நிலை, வெளிநாட்டு செலாவணித் தட்டுப்பாடு போன்ற சிந்தனையி லிருந்து பொது மக்கள் திசை திருப்பப்படுகிறார்கள்.

இதனாற்தான் சில முக்கிய இராணுவ பொறுப்பதிகாரிகளுடன் சந்திரி கா வெளிப்படையாக மோத நேர்ந்தது. ஆனால், இராணுவத்தினை வெளிப் படையாக மோதுவதினால் தனது ஆட்சிக்குச் சூழ்ச்சிகள் ஏற்படக்கூடும் என்ற உணர்வு தென்பட்டதும் சந்திரிகாவின் போக்கில் வேகம் குறைந்து வெட்பம் தணிந்து வருகிறது. மக்கள் சக்தியால் வளர்ந்தவர்கள் அரசியல் வாதிகள். ஆயுதத்தால் அதிகாரம் பெற்றிருப்பவர்கள் இராணுவத்தினர். தென்கிழக்காசிய சிறிய நாடுகளில் இராணுவ ஆட்சியும், இராணுவத்தின் செல்வாக்கு மிக்க பொம்மையாக இயங்கும் மக்களாட்சியும் ஏற்பட்டு வரு- வதை நான் பாகிஸ்தான், பங்களாதேஷ், பர்மா, போன்ற நாடுகளில் அவ தானிக்க முடிந்தது. சிறிலங்காவில், சந்திரிகா இராணுவத்தை எவ்வளவு தூரம் தனது கொள்கை நெறிவழிக்குக் கொண்டு வரப் போகிறார் என்பது மிகவும் சிக்கலான விடயம். யு.என்.பி.யின் ஆட்சியில் ஆணையிடக் கூடிய ளவுக்கு வாட்டசாட்டமாக இருந்தவர்களை மீண்டும் "சொல்வதைச் செய்" என்று ஆணையிடுமளவிற்குக் கொண்டு வருவது சுலபமான விடயமல்ல. இதற்குத் துணிவு இருந்தால் மட்டும் போதாது. சாணக்கியத் தகைமையும், அரசியல் ஞானமும் வேண்டும். இல்லையேல் பேசுவது சமாதானம் செய் வது போராட்டம் என்ற ஜெயவர்த்தன, டி.பி.விஜயதுங்கவின் பாணியை சந் திரிகாவும் தொடர்ந்துள்ளார்.

சிங்களப் பொதுமக்களைச் சேகுவரா என்ற பெயரில் பல்லாயிரக் கணக்கான இளைஞர்கள் கொல்லப்பட்டு, பெருந் தோட்டங்களில் பசளை யாக மாற்றி இருப்பதை முற்றுமுழுதாக ஏற்றுக் கொள்ளவில்லை. இவர்கள் சிங்கள மக்களுக்கு எதிராகப் போகவில்லை என்ற உணர்வு அவர்களிடம் இருந்தது. இவர்களை, ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவும், பின்னர் பிரேமதா ஸவும் கொன்று குவித்தனர். இவர்கள் எலும்புக் கூடுகள் பல இடங்களில் கிண்டி எடுக்கப்பட்டன. இவர்களை மீண்டும் வளரவிடாமல் தடுத்துக் கொள்ள இளைஞர்கள் பலரை ஆசை வார்த்தை காட்டி இராணுவத்தில் சேர்க்கிறார்கள். சிறிலங்கா இராணுத்தைக் கண்டு புலிகள் ஓடுகிறார்கள் என்ற பச்சைப் பொய்யை வாரியிறைத்து தகுந்த பயிற்சியின்றியே களத் திற்கு அனுப்பி சிலப யிற்சிகளோடு போரிட வைக்கிறார்கள். வீரமும், அறி வுத்திறனும், கொள்கை நெறியுணர்வும் கொண்ட புலிகளின் கைகளில் சிக்கி, சின்னாபின்னமாகும்போது உண்மை நிலையை உணர்கிறார்கள்.

சிறிலங்கா அரசு, விவசாயி வருடமொருமுறை பயிர் நாட்ட கலப்பை, காளை, காணியை தயார்ப்படுத்துவது போல வெளிநாட்டுக் கடன் உதவி பெற முனையும் போது சமாதானம், மனித உரிமை பேணல் என முத லைக் கண்ணீர்விட்டு நாடகமாடி வருகிறது. பணம் கிடைத்ததும் பழைய குருடி கதவைத் திறவடி என்ற கதையாகி விடுகிறது. இந்நிலை எவ்வளவு காலம் தொடர முடியும் என்பதை, சிங்கள மக்கள் உணரத் தலைப்பட்டு விட்டார்கள். அன்று இலங்கைத் தீவு சுதந்திரம் அடையும்போது இலங்கை யின் பொருளாதாரம் பற்றி கொல்வின் ஆர்.டி.சில்வா குறிப்பிடுகையில் "இலங்கைத்தீவு காகிதத்தால் கட்டப்பட்ட கோட்டை" என்றார். இன்றைய பொருளாதார நிலை காகிதத்தால் கட்டப்பட்ட குடிசையாக இருக்கிறது. சிங் கள மக்கள் பொருளாதாரத்தைப் பற்றிச் சிந்திக்கத் தலைப்பட்டு விட் டார்கள். சிறிலங்கா மற்றுமொரு போலந்து தேசமாகிவிடக்கூடாது என்பது அவர்கள் விருப்பம்.

யு.என்.பி.யின் ஆட்சிக் காலத்தில் சண்டித்தனம் தலைவிரித்தாடியது. காடையர்கள் கூட்டம் தங்கள் எண்ணப்படி அரசியலில் பழுத்த தலைவர்-களை ஏறி மிதித்தனர். கடைகளில் கப்பம் வாங்கினர். பொதுமக்கள் நிம்மதி இழந்தனர். இந்நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்கச் சந்தர்ப்பம் பார்த்துக் கொண்டிருந்தனர். இக்கட்டத்தில் தான் சந்திரிகா தனது அப்பாவின் இரா ஜதந்திரத்தையும், அம்மாவின் துணிவையும் துணையாகக் கொண்டு அரசியல் அரங்கில் அரியாசனம் ஏறியிருக்கிறார்.

சமாதானம் ஏற்பட முதலில் தமிழ் மக்கள் நிலைப்பாட்டை, உணர்வு களை அவர் நன்குணர்ந்து கொள்ள வேண்டும். இன்றைய தமிழீழத் தமிழர்கள் இத்தனை இழப்புக்கள் மத்தியில் சலுகைகளுக்காக உரிமைக ளை விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை. அடிப்படை உரிமைகளை வழங்காத பட்சத்தில் எந்தச் சமாதான முயற்சியும் போரில் பழுதான ஆயுதங்களைத் திருத்தவும், காயப்பட்ட இராணுவத்தினரைச் சுகப்படுத்த வும் வழங்கப்படும் நேரமாகக் கருதப்படுகிறது. வட-கிழக்கு மாகாணங்க ளை, தமிழர் தம் பாரம்பரிய பிரதேசங்களை ஒருங்கிணைக்க ஒத்துக் கொள்ள வேண்டும். இவ் இணைப்பை முன்னைய அரசின் குழுக்கள் எதிர்த்தன. சந்திரிகாவின் அரசில் இருக்கும் இஸ்லாமிய காங்கிரஸ் தலை-

வரும் எதிர்த்திருக்கிறார். தமிழர், மண்ணையும் மக்களையும் பேணிப் பாதுகாக்காத எந்தச் சமாதான நடவடிக்கையும் பயனளிக்கப்போவதில்லை.

அடுத்து, தமிழ் பிரதேசங்களில் திட்டமிட்டுச் செயற்படுத்தப்பட்டுவரும் குடியேற்றங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். மீண்டும் தமிழர்கள் தம் பாரம்பரிய மண்ணில் குடியமர்த்தப்படவேண்டும்.

தமிழர் தம் நிர்வாகத்தோடு தம் படைப்பலத்தையும் ஒருங்கிணைத்து வைத்திருக்காதபோது மீண்டும் தமிழன் ஏமாற்றப்படலாம். எத்தனையோ முறை கடந்த நாற்பத்தைந்து ஆண்டுகளில் ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப் பட்டன. வட்டமேசை, சதுரமேசை, நீளமேசை என எத்தனை மாநாடுகள் நடத்தப்பட்டன. யு.என்.பி.நடத்தினால் எஸ்.எல்.எவ்.பி. கட்சி அதனைக் குழப்பியது. எஸ்.எல்.எவ்.பி. நடத்தினால் யு.என்.பி.தட்டிக் கொட்டியது. புத்தபிக்குகள் பாதயாத்திரை, குண்டர்கள் அடிதடி எனப் பலகாலம் தமிழன் தாக்கப்பட்டு வந்திருக்கிறான். இன்று சந்திரிகா ஏற்படுத்தும் மாற்றங்களை எவ்வாறு அரசியல் சக்திகள் பாதுகாக்குமா? பாராளுமன்றத்தில் சந்திரிகாவுக்கு மூன்றுக்கு இரண்டு பெரும்பான்மை இல்லை. அதனைப் பெறாமல் எப்படி அரசியல் யாப்பு மாற்றங்கள் ஏற்படுத்தப்பட முடியும்? அவ்வாறு ஏற்படுத்தப்பட்டாலும்கூட சிங்கள மக்கள் தேர்தலில் வாக்களித்துவரும் முறையை நோக்கினால் திரும்பி யு.என்.பி. அல்லது மற்றுமொரு அரசியல் சக்தி மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் வருமானால் நம் கதி என்ன?

மூன்றாம் ஈழப் போரில் சந்திரிகாவின் உண்மையான அரசியல் நிலை தெளிவாகிவிட்டது. சிங்கள மக்கள் உள்ளத்தில் மாற்றம் ஏற்படும்வரை, பிக்குமார்கள் விட்டுக் கொடுக்கும் உணர்வை உருவாக்கும்வரை சமாதானப் பேச்சுக்கள் அர்த்தமுள்ளவைகளாக அமையப் போவதில்லை என்பது தெட்டத்தெளிவான உண்மையாகும்.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி

# உரிமைக்குத் தமிழீழம், உறவுக்குத் தமிழினம்.

பாரெங்கும் பரந்து பட்டிருக்கும் தமிழர்கள் தாம் அகதிகளாய் அலைவதற்கான மூலகாரணமாய் அமைவது தாயக மண்ணின் இன்றைய விடுதலைப் போராட்டமே. நாம் புலம் பெயர்ந்தோமே தவிர புகுந்தகத்தில் வேரூன்றித் தாயகத்தைத் துறந்தவர்களல்ல. தாயக மண்ணின் துயர் துடைக்க எமக்கான சில பணிகள் உள்ளன. அவற்றைச் செம்மையுறச் செய்து, தாயக மண்ணை மீண்டும் ஓர் பூத்துக் குலுங்கும் சுதந்திர பூமியாக மலர உதவ வேண்டும். எம் உரிமைக்குத் தமிழீழமே.

தரணியெங்கும் தமிழ் வளர்ப்போம். உலகளாவிய ரீதியில் தெமதுரத் தமிழோசை பரப்பும் பணியில் சக தமிழர்களோடு கைகோர்த்து வீறு நடை போடுவோம். தமிழன் என்று சொல்லித் தரணியெங்கிலும் தலைநிமிர்ந்து வாழுவோம். எமது உறவுக்குத் தமிழினம் இருக்கிறது.

எனவே, உரிமைக்குத் தமிழீழம் உறவுக்குத் தமிழினம்!

10147 CC

22528

பொதுசன நூலகம்
விசேட சேர்க்கைப் பகுதி

From

Kanthasamy Visuvalincam
106 Vellore Ave
Woodbridge, ON L4H 2W7



10147 C.C

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி

PUBLIC LIBRARY
JAFFNA

Kanthasamy Visuvalincam
106 Vellore Ave
Woodbridge, ON L4H 2W7



எந்த ஒரு படைப்பாளியை வெளிநாட்டவர் வியந்து பாராட்டி மதிப்பு அளிக்கிறாரோ, அவரே திறம்படப் புலமை பெற்றவர் என்கிறார் மகா கவி பாரதி. "திறமையான புலமையெனின் வெளி நாட்டவர் அதை வணக்கம் செய்ய வேண்டும்". இந்த அளவு கோலைக்கொண்டு கணித்தால் இந் நூலாசிரியர் சாமி அப்பாத்துரை அவர்களிடம் திறமான புலமை மண்டிக்கிடப்பது புலப்படும். வெளிநாட்டவர் மதித்த சம்பவங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். இந்தப் பின்புற அட்டை இடமளிக்காதே.

தொடர்ச்சியாக ஆபிரிக்கக் கண்டத்தில் தென்னாபிரிக்க விடுதலை பற்றி மூன் று மணி நேரம் ஆங்கிலத்தில் அழகாகப் பேசி அனைவரதும் ஏகோபித்த பாராட்டுக்களையும் பெற்றதைப் பற்றிக் கூறுவதா? Ethiopian Herald என்ற ஆங்கிலப் பத்திரிகையில் கட்டுரைகள் எழுதி வாசகர்களையும் ஆசிரியர் குழுக்களையும் தம் பக்கம் ஈர்த்த திறமையைக் குறிப்பிடலாமா? அறுபது களின் பிற்பகுதியில் எதியோப்பிய ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் கல்வி கற்பித்ததையோ, உயர்நிலைக் கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றி யதையோ இங்கு சொல்வதா? அவர்களது (அமாறிக்) மொழியைத் தெரிந்து சரளமாகப் பேசும் திறனைக் கைவரப் பெற்றதினை எழுதுவதா? நைஜீரி யாவில் கல்லூரியில் புவியியற் துறை தலைவராகப் பணி புரிந்தமையைக் கூறுவதா? நைஜீரியாவில் சமூக சேவை செய்து குறுநில மன்னரால் பாராட்டுப் பெற்றதைக் கூறுவதா?

வெளிநாட்டவர் வியந்து பாராட்டினால் மட்டும் போதாது. உள் நாட்டில் இல்லையா? அங்கும் திறமை, பொதுநல ஈடுபாட்டிற்கும் குறைவில்லை. 1961ம் ஆண்டு சத்தியாக்கிரகத்தில் கலந்துகொண்டு பொலிசாரால் தாக்கப்பட்டது முதல் எம் இன மேம்பாட்டிற்காக சாமி அப்பாத்துரை செய்த தொண்டுகள் எத்தனை! எத்தனை!! 1965ல் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் மாணவர் மன்றத்தை ஆரம்பித்து வைத்து அதன் வெளியீடான உரிமைக்குரல் என்ற ஏட்டிற்கு ஆசிரியராகப் பணி புரிந்தார். தமிழ் பரப்பிய இவரின் பேச்சுத் திறனைப் பாராட்டி இருமுறை தங்கப் பதக்கமும் வழங்கபெற்றிருக்கிறார். தன் ஊரைப்பற்றிச் "சங்கானைப் பட்டினம்" என்னும் நூலையும் எழுதியிருக்கிறார். வீரகேசரி, ஈழநாடு, கனடாவில், கனடா ஈழநாடு, செந்தாமரை போன்ற பல பத்திரிகைகளிலும் மற்றும் பல சஞ்சிகைகளிலும் பல துறைகளில் சொந்தப் பெயரிலும் புனை பெயரிலும் எழுதி வருகிறார். இவரது கட்டுரைகள் சில "சிலவாக்கிய" என்ற ஐரோப்பிய மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு பிரசுரிக்கப்பட்டதும் குறிப்பிடத் தக்கது. இலங்கைப் பல்கலைக் கழகத்தின் பட்டதாரியான சாமி அப்பாத்துரை அவர்களது தமிழர் விடுதலை, சமூக சேவைப் பணிகள் போன்றன அவரது திறமையையும் புலமையையும் விளக்கி நிற்கும்.
ஒரு சந்தேகம். சகல துறைகளிலும் சிறந்து விளங்கும் நூலாசிரியர் சாமி அப்பாத்துரை அவர்கட்கு அறிமுகம் தேவையா?

**எஸ். எஸ். அச்சுதன்**